# மஞ்சரி

ஏப்ரல், 1958

விளம்பி - சித்திரை

40 நயா பைசா

சந்திரலோக வீதியில்

சுரு மீனை ஏமாற்ற முடியுமா?

சங்கமம்

(மலையாளக் கதை)

கடலும் கிழவனும்

(நோபல் பரிசு நாவல்)

# அமர நிலை

**எ**வன் எங்கும் என்னைக் காண்கிறானோ, என்னிடத்தில் அனைத்தையும் காண்கிறானோ, அவனுக்கு நான் அழிவதில்லை; அவனும் எனக்கு அழிவதில்லை.

—கீதையில் கண்ணன்.

## மஞ்சரி

ஆசிரியர், பதிப்பாளர் :

என். ராமரத்தினம்

நிர்வாக ஆசிரியர் :

தி. ஜ. ரங்கநாதன்

பாஷை ஆசிரியர்கள்:

கி. வா. ஜகந்நாதன்
கா. ஸ்ரீ. ஸ்ரீ.
த. நா. ஸேனாபதி
வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரி
கௌரி அம்மாள்
கி. சாவித்திரி அம்மாள்
சீதா தேவி
'ஆர்வி'
மோ. ஸ்ரீ. செல்லம்
கி. தாமோதரன்

ஓவியர்கள் :

ஸாமி, மகான், சுசி, சுப்பு

மஞ்சரி, தபால் பெட்டி நெ. 604, மயிலாப்பூர், சென்னை-4. பிரதி ஆங்கில மாதமும் முதல் தேதி வெளிவரும். தனிப் பிரதி விலை 40 நயா பைசா (6½ அணா). வருஷ சந்தா ரூ. 4/75 (ரூ. 4-12-0). சந்தாத் தொகையை 'ஸர்க்குலேஷன் மானேஜர்' என்ற விலாசமிட்டு அனுப்புங்கள். விலாச மாற்றங்களைத் தங்கள் பழைய விலாசத்துடன் சந்தா எண்ணையும் குறிப்பிட்டுத் தெரிவியுங்கள். 'மஞ்சரி'யிலுள்ள எல்லாக் கட்டுரைகளும் கதைகளும் பதிப்புரிமை பெற்றவை.

ஆண்டு 11] ஸ்தாபிதம்: நவம்பர் '47 :: ஏப்ரல் 1958 [இதழ் 4

# மஞ்சரி

மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்

## ஊரும் உலகமும்

★

**சரித்திரமும் பொய்ப் பெருமையும்:** ''மக்களின் படைப்பு ஆற்றல், விதம் விதமான எத்தனையோ மக்களின் ஆத்ம சக்தி இவற்றின் வெளியீடேயாகும் ஒவ்வொரு நாகரிகமும். ஒவ்வொரு நாகரிகத்திலும் உள்ளுக்குள்ளே பல போராட்டங்களும் முரண்பாடுகளும் இருக்கின்றன. நாகரிகங்கள் ஒன்றோடொன்று மாறுபட்டிருக்கும்; ஒவ்வொன்றும் வெவ்வேறு வளர்ச்சிப் படியிலோ அழிவு நிலையிலோ இருக்கும். நாகரிகங்கள் மகோன்னத நிலைக்கு எழுகின்றன. பிறகு மெல்ல மெல்ல விழத்தொடங்கிப் பாதாளத்தை எட்டி விடுகின்றன. அப்போது மக்களின் படைப்பு ஆற்றலெல்லாம் போய் விடுகிறது. எந்த நாகரிகத்தைப்பற்றிய சரித்திரத்திலும் பொய்யான தேசீய இனப்பெருமை பேச இடமே கிடையாது. சரித்திரக்காரன், எந்த மக்களின் நாகரிகம் பற்றியும் பணிவுடனேயே ஆராயவேண்டும். அப்போதுதான், அவன் இந்த நாள் சந்ததிக்கு நலன் செய்ய முடியும்; வருங்கால சரித்திரத்தை நன்றே உருவாக்க உதவுவான்.'' - இது யூனியன் சர்க்கார் கல்வி மந்திரி டாக்டர் கே. எல். ஶ்ரீமாலி அவர்களின் வாக்கு. இந்திய சரித்திர ரெக்கார்டுகள் கமிஷனின் 33-ஆவது மகாநாட்டில் இப்படி அவர் கூறியிருப்பது சரித்திர ஆராய்ச்சியாளர் மட்டும் அல்ல, இனப்பகை கிளப்பிவிடும் அரசியல்வாதிகளும் கவனிக்க வேண்டிய நல்லுரையாகும். இனவெறி கிளப்பிய முஸொலீனி, ஹிட்லர் போன்ற எத்தனையோ பேர் மக்களுக்குக் கேடே இழைத்தார்கள். மதியிலா மனத்துக் கூனியைப் போல, யாருக்கும் நல்லன சொல்லாத போலி ஆராய்ச்சியாளருக்கும் இனப்பகை மூட்டும் அரசியல்வாதிகளுக்கும் மக்களும் செவி சாய்க்கக்கூடாது. உலகத்தில் எந்த நாகரிகமும் தாழ்ந்ததல்ல; எந்த மக்களும் இன்னொரு மக்களினத்துக்கு என்றென்றும் பகைவர் அல்ல. இந்த உண்மையை நம் மனத்தில் பதிந்து கொள்வதே அறிவுடைமை.

* * *

**கிழக்கும் மேற்கும்:** உலக ராஜாங்கங்களின் பிரதம மந்திரிகளெல்லாம் கூடிப் பேசினால் பரிகாரம் ஏற்படலாம் என்பது ஒரு யோசனை. ஆனால், இதை எப்படி நடத்துவது? இதற்கான முன்னேற்பாடுகள் என்ன? இந்த மகாநாட்டில் எந்தப் பிரச்னைகளை விஷய அட்டவணையில் சேர்ப்பது? இந்த மாதிரி கேள்விகளில், முக்கியமாக அமெரிக்காவுக்கும் ஸோவியத் யூனியனுக்கும் உடன்பாடு ஏற்படவில்லை. வெளிப்படையாகச் சொன்னால், பேரம் செய்யும் ஆற்றல் யாருக்கு அதிகமாக இருக்கிறது, மகாநாட்டில் யார் கை மேலோங்கி யிருக்கும் என்பதிலே ஒரு சந்தேகம். முன்னே அணுக்குண்டு தங்களிடந்தான் இருக்கிறது என்று அமெரிக்கர் அகம்பாவமாய்ப் பேசி வந்தார்கள். பின்னால் ஸோவியத்தும்

அணுக்குண்டு செய்துவிட்டது. இப்போது முதல்முதல் வெற்றிகரமாய்ச் செயற்கைச் சந்திரனை ஸோவியத் விட்டுவிட்டது. இன்னமுங்கூட இந்த விஷயத்தில் அமெரிக்காவுக்குப் பூர்ண வெற்றியில்லை. இதனால் உலக மக்களிடம் தன்னைப்பற்றிய மதிப்புக் குறைந்திருக்குமோ என்று அமெரிக்கா அஞ்சுகிறது. இப்படியெல்லாம் ராஜதந்திர பேரங்களில் அச்சமும் சந்தேகமும் கொள்வது பழமையான வழக்கம். இந்த அணுக்குண்டு - செயற்கைச் சந்திரன் யுகத்தில் இது சற்றும் சரி அல்ல. நவீன விஞ்ஞான முற்போக்கால் தூரமும் காலமும் சுருங்கிவிட்டன. முழு உலகமும் ஐக்கியப்பாடு கொள்ளவேண்டிய நிலை வந்துவிட்டது. உலக ராஜதந்திரிகள்மட்டுமே வேறுபட்டு நிற்கிறார்கள். இதுவே இன்று உலகின் துர்ப்பாக்கியமா யிருக்கிறது. எந்த நாட்டு ராஜதந்திரியும் மற்ற நாட்டு ராஜதந்திரியின் போக்கைப் பற்றிச் சற்றும் கவலை கொள்ளாமல், உலகத்துக்கு நன்மையான நடவடிக்கைகளைத் தம்மிச்சையாகக் கைக்கொண்டால், உலக மக்களெல்லாம் அதைப் பாராட்டிப் போற்றி ஆதரிப்பார்கள். ''அணுக்குண்டு சோதனையை நீங்களாகவே கைவிடுங்கள்; படைக் குறைப்பை நீங்களாகவே செய்யுங்கள்'' என்பது மாதிரி யோசனைகளை ருஷியா, அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு ராஜாஜி போன்ற மூதறிஞர்கள் கூறுவது இதனால்தான்.

## பத்திரிகைத் தர்மம்

நாட்டுப்புறத்தில் சிறிய பத்திரிகை ஒன்றை ஒருவர் நடத்திக்கொண் டிருந்தார். அவரே அதன் ஆசிரியர். எழுத்துக் கோப்பவரும் அவரேதான். நல்ல தீரர். அஞ்சாது அபிப்பிராயம் எழுதுவார்.

அவருடைய ஐம்பதாவது பிறந்த நாள் வந்தது. அதைக் கொண்டாடிய மும்முரத்தில் வேலை எல்லாம் நின்று போயிற்று. பத்திரிகையின் புதிய இதழ் உருவாகவில்லை. பார்த்தார். முந்திய இதழை அச்சுக் கோத்த பாரம் அப்படியே இருந்தது. அதில் தலைப்பிலே கொட்டை எழுத்தில் ஒரு வரியைக் கோத்தார். அப்படியே அச்சிட்டுச் சந்தாதாருக்கெல்லாம் அனுப்பிவிட்டார்.

முந்திய வார இதழே திரும்பவும் வந்ததைக் கண்ட சந்தாதாரெல்லாம் மலைத்துப் போய்த் தலைப்பிலிருந்த கொட்டை எழுத்து வரியைப் பார்த்தார்கள். அதில் இருந்தது இந்த வாசகந்தான்: ''வாசகர் பலர் வேண்டிக்கொண்டதன்மேல் மீண்டும் அச்சிட்டிருக்கிறோம்.''

—'ஸ்பாட்லைட்,' தென் ஆப்பிரிக்கா.

## இருட்டைக் கண்டு பயமா?

பள்ளிக்கூட விடுமுறையின்போது ஒரு சின்னப் பெண் பாட்டி வீட்டுக்குப் போனாள்.

ராத்திரி படுக்கும்போது, ''இருட்டிலே எனக்குப் பயமாயிருக்கிறது. அறைக் கதவைத் திறந்து வைத்துக்கொள்ளட்டுமா?'' என்று அவள் கேட்டாள்.

''ஏன் இப்படி? உங்கள் வீட்டிலே இருட்டைக் கண்டு நீ பயப்படுவதில்லையே?'' என்றாள் பாட்டி.

''ஆனால் அது எங்கள் சொந்த வீட்டு இருட்டு'' என்றாள் சிறுமி.

—'பாட்டுக்ஸெண்ட் ரிவர் டெஸ்டர்'

# விண்ணவரனைய மாந்தர்

ரா. ஸ்ரீ. தேசிகன்

'யுட்டோப்பியா' என்ற கற்பனை உலகத்தை முதல் முதல் மோர் என்பவர் எழுதினார். 'மாடர்ன் யுட்டோப்பியா' என்ற நவீனக் கற்பனை உலகத்தை எச். ஜி. வெல்ஸ் எழுதினார். விஞ்ஞானத்தில் கண்ட புதுக் கருத்துக்களையெல்லாம் பயன்படுத்தி மனிதர்களை அமர நிலைக்கு உயர்த்தலாம் என்பது அவர் எண்ணம்.

எச். ஜி. வெல்ஸ் பல நூல்களை எழுதியபோதிலும், அவை அனைத்துக்கும் ஆதார சுருதியாய் ஒலிப்பது உலக அமைதி என்ற ஓர் அமர கானந்தான். இந்த ஒலி எங்கும் கேட்டுக்கொண்டே இருக்கும். உலக அமைதிக்குத் தடங்கலாய் நிற்பவற்றைப்பற்றிப் பகிரங்கச் சூழ்ச்சி (The Open Conspiracy) என்ற நூலில் இவர் நீண்டதொரு சிந்தனை புரிகிறார்.

நமக்குப் பகைகள் பல உண்டு. மனக் குழப்பம், தைரியமின்மை, துருவி ஆராயும் அவா இன்மை, கற்பனை இன்மை, மடி, சுயநல இன்ப போகம் - இவை யாவும் நம்முடைய சுதந்தரத்தையும் செயல்களையும் சிறை செய்கின்றன. இத்தகைய தளைகளை அறுத்தெறிந்து, அரும் பெருஞ் செயல்களை ஆற்றுவதையே, ஒரு சிறந்த கைங்கரியமாக நாம் கொள்ளல் வேண்டும்.

'நாகரிக உத்தாரணம்' (The Salvaging of Civilization) என்ற நூலில் கோயில் கொண்ட கருத்துக்கள் நம் சிந்தனைக்கு ஒரு விருந்தளிக்கும் என்பதில் யாதோர் ஐயமுமில்லை:

1. உலகம் யாவும் ஒரு குலமாய், ஓர் அரசியலின் ஆட்சிக் கீழ் அமைய வேண்டும்.

2. இந்தக் கருத்து உருவாக உலகமெங்கும் கல்லூரிகளின் வாயிலாகப் போதிக்க வேண்டும்.

3. இந்த உலக அரசியலில் போர்களுக்குச் சற்றும் இடமில்லை.

4. தொழில், சுகாதாரம் இவற்றைக் கவனிக்க உலக இலாகா ஒன்று அமைக்க வேண்டும்.

5. பொதுவான நாணயம் எங்கும் நடமாட வேண்டும்.

6. உலகச் சட்டசபை ஒன்று நிறுவ வேண்டும். இது சர்வதேசச் சட்டத்தை அமைப்பதற்கு அல்ல; உலகச் சட்டத்தையே இது அமைக்கும். சர்வதேசம் என்ற நினைவே அப்போது மாய்ந்து, எல்லாம் ஓர் அரசியல் என்ற கருத்து மாந்தர்கள் உள்ளங்கள்மீது ஆட்சி செய்யும்.

7. மக்களிடையே போர்கள் நின்றுவிடும். ஆனால் நோய்களோடும், மரணத்தோடும் போராடி, வாழ்வின் ரகசியங்களை இவர்கள் துருவி ஆராய்வார்கள். போர்களில் வீணாகிற காலத்தை வாழ்வின் மர்மங்களை அறியச் சான்றோர் பயன்படுத்திக்கொள்வார்கள்.

'விண்ணவரனைய மாந்தர்கள்' என்ற நூலில் வெல்ஸின் முதிர்ந்த ஞானத்தைப் பார்க்கிறோம். இந்த நூலை ஒரு நாவலைப்போல் ,அவர் எழுதியிருக்கிறார்.

நாமும் 'எங்குமில்லா நாட்டை'ப் படைத்த மாரிஸைப் பின்பற்றலாம் என்ற கருத்தை வெல்ஸ் தருகிறார்.

விண்ணவரனைய மாந்தர் நாடும், நம்முடைய பூமியைப்போலவே ஒரு கோளந்தான். நவீன யுட்டோப்பியாவில் ஓர் அரசாங்கம் திகழப் பார்க்கிறோம். ஆனால் விண்ணவ

ரனைய மாந்தர் நாட்டில் அரசாங்கமே கிடையாது.

மக்களே தம் அறிவைக் கொண்டு எல்லாச் செயல்களையும் நடத்திக் கொள்ளுகிறார்கள். சட்டங்கள் இல்லை; அந்தச் சட்டங்களை நிறைவேற்ற அதிகாரமும் இல்லை. இந்த நாட்டில் சாமுரே (போர் வீரர்) வகுப்பு இல்லை. சொத்து என்பது இல்லை. எல்லாருக்கும் சமமான உரிமைகளும் கடமைகளும் உண்டு. ஓர் ஓவியப் புலவன் தனக்கு வேண்டிய கருவிகளை வைத்துக்கொள்ளலாம்; ஒரு விஞ்ஞானி தனக்கு வேண்டிய ஆயுதங்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம்; நமக்கு வேண்டிய சாமான்களை நாம் புழங்கிக் கொள்ளலாம். இத்தகைய பொருள்களை அடைய வேண்டிய விஷயத்தில் போட்டி என்பது எள்ளளவும் இல்லை.

மாந்தர்களின் உள்ளத்தில் ஒரு மாறுதல் ஏற்பட்ட காரணத்தால், இத்தகைய உயர்ந்த சூழ்நிலையை அமைக்க முடிந்தது. போட்டி உணர்ச்சி மறைந்து, எல்லோரும் சேர்ந்து உயர்ந்த பொருள்களைப் படைக்க வேண்டும் என்ற கலை உணர்ச்சி மாந்தர்களின் உள்ளங்களில் செங்கோல் செலுத்தத் தொடங்கிற்று. 'போராட்ட உணர்ச்சி, படைப்பை எழுப்பும் கலை உணர்ச்சிக்கு இடம் தந்துவிட்டது' என்று சொன்னால் அது மிகை ஆகாது.

திடீரென்று தோன்றுகிற ஒரு பெரும் புரட்சியால் ஓர் உயர்ந்த மனப் பண்பு பிறக்காது. கொஞ்சங் கொஞ்சமாகக் கருத்தொளி பரவ வேண்டும். இப்படிப் பரவுமானால், ஒரு புதிய சகாப்தத்தின் வைகறை தோன்றும்.

பார்ன்ஸ்டேபில் (Barnstaple) என்று நம் புவியிலே ஒரு மனிதன். வெல்ஸ் வரைந்த கற்பனை நாட்டுக்கு அவன் போகிறான். அல்லல் பட்ட உள்ளத்துக்கு - கவலை அலைகளால் மோதுண்டு திரிகிற மனத்துக்கு - ஒரு சாந்தி பிறக்கிறது.

உடை இல்லாத அந்த நாட்டு மக்களுடைய திருமேனியின் வனப்பு அவனுடைய மனத்தைக் கொள்ளை கொள்ளுகிறது. அவர்களோடு பேசுங்கால் அவர்களுடைய பழுத்த ஞானம் புலனாகிறது. அவர்களிடம் கள்ளங் கபடு இல்லை. பிறரைக் கண்டு அயிர்க்கும் இயல்பை அங்கே காணமுடியாது. கிண்டலாய்ப் பேசுவது, உண்மையை ஒளிப்பது, உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று கூறுவது போன்ற தீச்செயல்கள் அவர்களிடம் தோன்றவில்லை.

நவீன யுட்டோப்பியாவில் சில கட்டுப்பாடுகள் இருக்கின்றன; இங்கே மனிதன் தன்னுடைய உணர்ச்சிகளுக்கு யாதொரு தடங்கலும் இல்லாது உருக்கொடுக்கலாம். உண்டி, உடை, உறக்கம் இவற்றுக்கு எந்த நிபந்தனையும் இல்லை. இந்த யுட்டோப்பியாவில் இருக்கிற மக்கள் அனைவரும் குழந்தை உள்ளம் படைத்தவர்களாய்த் திகழ்கிறார்கள்.

இங்கே கற்பனையை வளர்க்கிறார்கள். உணர்ச்சிகளுக்குத் தக்க போக்கிடங்களை வகுக்கிறார்கள். உணர்ச்சிகளின் மாசுகளை நீக்கி அவற்றை உயர்த்துகிறார்கள் (Sublimation). குழந்தைப் பருவத்திலேயே பால் உணர்ச்சி (Sexual passion) உண்டாகிவிடுவதாக மனத்தத்துவ சாஸ்திரிகள் கூறுகிறார்கள். அந்த நாட்டில் இந்த உணர்ச்சியை அன்பாக மாற்றிச் சுயநலத்தை வெல்லச் செய்கிறார்கள். பால் உணர்ச்சியால் ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் துருவி ஆராய உண்டாகும் ஆவல், விஞ்ஞான விந்தைகளைக் கண்டு பிடிக்கும் ஆசையாக அந்த நாட்டில் மலர்கிறது. பால் உணர்ச்சியில் சண்டை பிடிக்கும் இயல்பும் உண்டு; குழப்பம் ஏற்படாது தடுத்துப் போராட இது அங்கே பயன்படுகிறது. பால் உணர்ச்சியில் இயற்கையாய் அமைந்துள்ள தருக்கும் பேராசையும், கௌரவத்தை நல்கும் பொதுச் சேவைகளில் செலுத்தப் பெறுகின்றன. பால் உணர்ச்சிகளை அழிக்க முடியாது; அவற்றை நல்ல நெறியில் ஓடவிடுவதற்குத் தூய வாய்க்கால் வகுத்துத் தரவேண்டும்.

அங்கே மணச்சட்டங்கள் இல்லை. ஆடவர்களும் பெண்களும் தங்கள் விருப்பப்படி மணக்கலாம்; கலியாணங்களை ரத்தும் செய்துகொள்ள

லாம்; குழந்தைகளைப் பெறவேண்டிய அவசியமில்லை; பெறுவதாயிருந்தால், நீண்ட சிந்தனை செய்த பிறகே பெறவேண்டும்.

இந்த யுட்டோப்பியாவில் எந்த விதமான தளைகளும் இல்லை. ஆண் பெண்களின் உடல் சம்பந்தத்தை அழகான இயற்கையான ஒரு நிகழ்ச்சியாகக் கருதுவார்கள்.

பால் (sex) சம்பந்தமான விஷயங்களைப்பற்றிக் குழந்தைகள் சகஜமாய்ப் பேசிக்கொண்டிருப்பார்கள். மறைத்து வைக்க வேண்டிய மர்மம் அதில் ஒன்றும் இல்லை என்ற அறிவு அவர்களிடத்தில் மிளிர்கிறது.

இந்த நாட்டில் அரசாங்கம் இல்லை. இதில் கல்விதான் ஆள்கிறது. சட்டசபை இல்லை; அரசியல் இல்லை; தனிச் சொத்து இல்லை; வியாபாரப் போட்டி இல்லை; போலீஸ் இலாகா இல்லை; சிறைச்சாலை இல்லை; பைத்தியம் கூன் குருடுகள் இல்லை. பள்ளிகளும் உபாத்தியாயர்களுந்தான் ஆட்சி புரிகிறார்கள்.

கல்விக்காக அமைந்த பெரிய இடங்களில் குழந்தைகள் வளர்கின்றன. அங்கே அச்சம் இல்லை; கெடுதலான எண்ணங்களையோ கற்பனையைக் குலைக்கக் கூடிய உணர்ச்சிகளையோ அங்கே காண முடியாது. சுத்தம், உண்மை, பிறருக்காக வாழ்கிற தன்மை, உலக முன்னேற்றத்தில் அசையா நம்பிக்கை, மனித இனத்தை உயர்த்தும் ஒரு லட்சியம் இவற்றைப் பாடிக் குழந்தைகளைத் தாலாட்டுகிறார்கள்.

ஒன்பது அல்லது பத்து வயசுக்கு மேல்தான் குழந்தைகள் உலகத்தில் புகுகின்றன. அதுவரையில் உபாத்தியாயர், செவிலித்தாய் இவர்களின் கைகளிலேயே அவை வளர்கின்றன. பிறகே அவற்றின் நலத்தில் பெற்றோர் கலந்து கொள்ளுகிறார்கள். பெற்றோருக்கு அவற்றின்மீது ஆணை செலுத்த அதிகாரம் இல்லை. குழந்தைகளோடு நண்பரைப் போல்தான் பெற்றோர் பழகவேண்டும்.

மேலும், இந்த யுட்டோப்பியாவில் ஐந்து சுதந்தரத் தத்துவங்கள் விளங்குகின்றன: (1) இங்கே எல்லாம் பகிரங்கந்தான்; ஆயினும், ரகசியத்துக்கு இடமுண்டு (Principle of Privacy). (2) யுட்டோப்பியாவைச் சார்ந்தவர்கள் எங்கே வேண்டுமானாலும் தடங்கலில்லாது செல்லலாம் (Free movement). (3) தனி மனிதர்களின் ரகசியங்கள் நீங்கலாக, கணக்கில்லாத எல்லாவித அறிவுக் களஞ்சியங்களையும் (Unlimited knowledge) நண்ணி ஆராய்ந்து பார்க்க ஒவ்வொருவனுக்கும் உரிமை உண்டு. (4) பொய் புகல்வதை ஒரு பெருங் குற்றமாக யுட்டோபியாவில் கருதுவார்கள். விஷயங்களைச் சரியாக மொழியாமலிருப்பது, உண்மையை மறைப்பது - இந்த இரண்டையும் பொய் கூறுவதற்குச் சமானமாய்க் கருதுவார்கள். (5) அந்த நாட்டிலே எதையும் ஆராய்ச்சி செய்யலாம். எதையும் கண்டித்துப் பேசலாம். மட்டுமரியாதை இல்லாமல் மொழியலாம். ஆனால் சொல்லுகிற விஷயங்கள்மட்டும் உண்மையாக இருக்க வேண்டும்.

நாணயங்களோ, நோட்டுக்களோ இந்த நாட்டில் நடமாடாமல் போனாலும், பாங்கிகள் மூலம் அலுவல்கள் நடைபெறும். பொது நிதியிலிருந்து ஒவ்வொரு குழந்தையும் பணம் பெறும். அந்தக் குழந்தை தனக்கு 25 வயசு வருகிற வரையில் இந்தப் பணத்தைத் தன் படிப்புக்கோ உடல் வளர்ச்சிக்கோ பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

ஓவியப் புலவர்களும், சிற்பிகளும் அதிகமான பணத்தை இந்த நாட்டிலே அடைவார்கள். படைப்புத் தொழில் செய்கிறவர்களுக்கு இங்கே தக்க மரியாதை காட்டுவார்கள். நாளடைவில் மொழிகூடத் தேவை இல்லை: மனம், மனத்தோடு மொழியும்; உளம் உளத்தோடு உரையாடும். உடல் வனப்பிலும், உள்ளத் தூய்மையிலும், கற்பனைச் செறிவிலும், கலப்பற்ற இன்பத்தைத் துய்ப்பதிலும் மாந்தர்கள் விண்ணவர்களைப் போல் திகழ்கிறார்கள். இத்தகைய கனவை வெல்ஸ் காண்கிறார். அதற்கு நாம் கைகூப்பி ஓர் அஞ்சலி செய்வோமாக.

# தேங்காய் ஓட்டில் சித்திரம்

## என். ராமகிருஷ்ணு

கொட்டாங்கச்சியைச் 'சொர்ண பாத்திரம்' என்று பெரியோர் சொல்லுவார்கள். அது மிகவும் பரிசுத்த மானது என்பது அவர்களுடைய கொள்கை. அந்தக் கொட்டாங்கச்சியில்தான் எவ்வளவு சித்திர வேலைப் பாடுகளைச் செய்ய முடிகிறது! போட்டோக்கள் கட்டுரையாளரே எடுத்தவை.

தேங்காயினுல் மனித வர்க்கத் துக்கு அநேக பலன்கள் உண்டு. அதன் ஒவ்வொரு பாகமும் தினசரி வாழ்க்கையில் ஏதாவது ஒரு விதத்தில் பயன்படு கிறது. தென்ன மரத்தினுலும் பல விதமான பயன்களை அடை கிருேம். தேங்காயிலிருந்து நாம் எண்ணெய் அடைகிருேம். நாரி லிருந்து கயிறு கிடைக்கிறது. மட்டை காய்ந்த பிறகு அதைக் கீற்ருக முடைந்து வீட்டுக்குக் கூரை வேய்வதற்கு உபயோகப் படுத்துகிருேம். பந்தல் அலங் காரத்துக்குக் கீற்று வெகுவாக உபயோகப்படுகிறது. தென்ன மரத்தையே கொட்டகைகளுக்குத் தூணுக நிறுத்துகிருர்கள். எதற் கும் உபயோகப்படாத பாகத்தை ஒன்ருக உலரவைத்து அடுப்பு எரிக்கிருேம். சாதாரணமாகத் தேங்காய் ஓட்டையும் அடுப்பில் போடுவதுண்டு; ஆனுல் அந்த ஓட்டைக் கொண்டே நேர்த்தியான அழகான சாமான்களும் செய்ய லாம்.

தஞ்சை மாவட்டத்தில் குற் ருலம் என்னும் ஊரில் ஸ்ரீ ஆர். கோதண்டபாணி நாயுடு என்னும் டிராயிங் மாஸ்டர் இந்தமாதிரி நுட்பமான வேலையில் வல்லவராக இருக்கிருர். மாணவர்களுக்குக் கைத்தொழில் கலைகளைப் போதிக் கும் க்ராஃப்ட் இன்ஸ்ட்ரக்டர் வேலையும் இவர் பார்த்து வருகிருர். இவர் சிறந்த பொம்மைகள் வரை



தேங்காயைக் கடைசல் கழியில் ஒட்டுகிருர்



கடைசல் பிடிக்கிருர்

காப்பிரைட்: மெட்ராஸ் மெயில்

யக் கூடியவர். எனவே, அவரால் சித்திர வேலைப்பாடுள்ள சாமான் செய்ய முடிகிறது. தேங்காய் ஓட்டில் இப்படிச் சில சாமான்களை இவர் செய்கிறார்.

முற்றின தேங்காயாக முதலில் இவர் பொறுக்கி எடுத்துக் கொள்ளுகிறார். ஓட்டின் மீதுள்ள நாரை நன்றாகச் சுரண்டி எடுத்து விடுகிறார். விரிசல் இல்லாமலும் பார்ப்பதற்கு அழகாகவும் ஓடு இருக்கவேண்டும். செய்யப் போகும் சாமானுக்குத் தக்கபடி வட்ட வடிவமாகவோ, கோழி முட்டை வடிவமாகவோ, தேங்காயைப் பொறுக்கி எடுப்பார்.

வீட்டில் லேத் என்ற கடைசல் கருவி ஒன்று இவர் வைத்திருக்கிறார். அதில் நீண்ட கழி ஒன்று சுற்றும்படி அமைந்திருக்கும். இதற்கு 'ஷாஃப்ட்' என்று பெயர். இந்தக் கழிக்குமேல் தேங்காயை 'ஷெல்லாக்' என்ற அவலரக்குப் பிசின் கொண்டு கெட்டியாக ஒட்டி விடுவார். காய்ந்தவுடன் இது மிகவும் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளும். லேத்தை ஓர் ஆள் சுற்றுவான். பல விதமான உளிகளைக் கொண்டு தேங்காயின் மேல் பாகத்தை இவர் அழகாகப் பாலிஷ் செய்துவிடுவார். படத்தில் கண்டபடி உளியை எவ்வளவு பக்கத்தில் பிடித்து வேலை செய்ய வேண்டுமோ அவ்வளவு பக்கத்தில் பிடித்துக்கொண்டு வேலை செய்வார்.

தேங்காய் பொருத்தியுள்ள கழியைப் பிறகு வெளியே எடுத்து, உதவி ஆள் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளுவான். கை வாளினால் இவர் தேங்காயை வெட்டி எடுத்து விடுவார். சரியாக நடுப் பாகத்தில் வெட்டி எடுக்க வேண்டும். இப்போது இரண்டு கொட்டாங்கச்சிகள் கிடைக்கின்றன. உள்ளேயுள்ள தேங்காயைப் பருப்பை எடுத்து விட்டு, கொட்டாங்கச்சிகளை இவர் உலர வைப்பார். அதன் பிறகு உப்புத்தாள் கொண்டு உள் புறத்தையும் நன்றாகத் தேய்த்துப் பதப் படுத்துவார்.

பின்பு ஓட்டின் மேல் பாகத்தில் ஒயிட் லெட் (வெள்ளை ஈயம்) தடவி உலர வைக்கவேண்டும். நன்றாகச் சூரிய வெளிச்சத்தில் காய்ந்த பிறகு, இதன்மீது கறுப்புப் பென்சில் கொண்டு பல விதமான பொம்மைகளை எழுதுவார். எந்த மாதிரி சாமான் செய்யவேண்டுமோ அதற்குத் தக்கபடி மிருகமோ, பறவையோ, பூவோ எழுதுவார். மிகவும் நுட்பமான வேலையாக இருந்தால், சித்திரத்தை முதலில் காகிதத்தில் எழுதிப் பிறகு அந்தக் காகிதத்தை ஓட்டின்மீது ஒட்டுவதும் உண்டு.



கடைசல் முடிந்ததும் அறுத்தெடுக்கிறார்



இப்படி வெள்ளை ஈயம் தடவி வெயிலில் காய வைப்பார்

(ஆங்கிலம்: 15-9-'57), சென்னை.



காய்ந்தபின் நுட்பமான சித்திர வேலைப்பாடு நடக்கிறது



கூர்மையான கருவிகொண்டு செதுக்கிய சித்திரங்களை ஓட்டுக்கு மாற்றுகிறார்



டைப்ரைட்டர் பிரஷ் கொண்டு பாலிஷ் செய்து எண்ணெய் பூசுகிறார்

இது கலைஞரின் சவுகரியத்தைப் பொறுத்த விஷயம்.

அடுத்தபடியாக 'டூல் பாக்ஸ்' (ஆயுதப் பெட்டி) கொண்டு வருவார். V - டூல், ஸ்கொயர் கிரேவர், பிளேட் கிரேவர், ஹாஃப் ரவுண்டு கிரேவர் போன்ற பலவிதமான உளிகளும் சுத்திகளும் இருக்கும். வட்ட வடிவமான தோல்பை ஒன்று செய்து அதற்குள் மெல்லிய மணலை நிரப்பிக் கெட்டியாகத் தலையணை போல் செய்து அதன் வாயைக் கலைஞர் தைத்துவிடுவார். அதன் மீது வைத்துக்கொண்டுதான் மற்ற நுட்பமான வேலைகளைச் செய்வார். பையால் என்ன உபயோகம் என்றால், எவ்வளவு அழுத்தி வேலை செய்தாலும் ஓடு விரிசல் விடாது; உடையாது. இது மெத்தென்று இருப்பதுடன் கெட்டியாகவும் இருக்கும்.

ஒழிந்த நேரத்தில் உட்கார்ந்து கொண்டு, இந்த நுட்பமான வேலையைப் பல சாமான்களால் கொஞ்சங் கொஞ்சமாகக் கலைஞர் செதுக்கி எடுக்கிறார். பென்சிலால் வரைந்த உருவத்தைக் கொஞ்சங் கொஞ்சமாக ஓட்டில் பதிக்கிறார். நம் நாட்டில் உள்ள தேங்காயின் அளவு அவ்வளவு பெரிதல்லவாதலால், ஒரு சாமான் செய்வதற்கு இரண்டு அல்லது மூன்று ஓடுகள் தேவைப்படுகின்றன; அவற்றைப் பிறகு சுலபமாகச் சேர்த்துவிடலாம். படத்தில் உள்ள மயில் உருவத்தின் கீழ்ப் பாகத்தைத் தனியாகக் கலைஞர் செய்திருக்கிறார். மேல் மூடியைத் தனியாகப் பொருத்தியிருக்கிறார். இப்படித் தனியாகச் செய்த இரண்டு பாகங்களையும் அவலரக்குப் பிசின் மூலம் பின்னால் ஒட்டி விடுவார். இது தண்ணீராலும் உஷ்ணத்தாலும் பாதகம் அடையாது. பேழையின் மீது உள்ள அற்புதமான மயில் உருவத்தைப் பாருங்கள். அதன் தோகை அழகும் நுட்பமான வேலைத் திறனும் நம்மைப் பிரமிக்க வைக்கின்றன. பேழையின் அடிப்புறமும் சிறப்பாகவே அமைந்திருக்கிறது. இவ்வளவு வேலைப்

பாடு அமைந்த பேழை ஒரு கைப் பிடியில் அடங்கிவிடும் என்றால், எவ்வளவு ஜாக்கிரதையாக இதைச் செய்திருக்க வேண்டும் என்று நாம் ஊகித்துவிடலாம்.

கடைசியாகப் 'பாலிஷ்' வேலை நடக்கும். எந்தச் சாமானும் பளப்பளப்பாக இருந்தால்தான் கண்ணைக் கவரும். அதற்கு முக்கியமாகத் தேவையானது கெட்டி மயிர் கொண்ட பிரஷ். டைப்ரைட்டர்களைச் சுத்தம் செய்யும் பிரஷ் போதும். அதைக் கொண்டு பேழையின் மேல் பாகத்தைப் பல முறை தேய்க்க வேண்டும். மேலே உள்ள தூசியையும் இந்தப் பிரஷ் குடைந்து எடுத்து நீக்கிவிடும்; பிறகு பேழையின் மேல் சாதாரணத் தேங்காய் எண்ணெயைத் தடவினால் போதும். பல முறை பாலிஷ் கொடுத்த பின்பு, பேழை நல்ல கறுப்பாக மாறிப் பளபள என்று தோற்றம் அளிக்கும்.

இந்த மாதிரியாகப் பலவிதமான சாமான்களைத் தேங்காய் ஓட்டில்



ஙீல் தைத்த தேங்காய்ப் பெட்டி; திறந்திருக்கிறது



மேல் மூடியின் மேல்புறத்தில் தோகை மயில் உருவம்



ஙீல் தைத்த தேங்காய்ப் பெட்டி: மூடியிருககிறது

செய்யலாம். நவராத்திரிக்கொலுவில் இந்தப் பொம்மைகளை வைக்கலாம். தட்டுகள், புஷ்ப ஜாடி, பேனா, பென்சில் ஸ்டாண்டு, குங்குமப் பரணி இப்படிப் பல சிறிய சாமான்களைத் தேங்காய் ஓட்டில் அற்புதமாய்ச் செய்யலாம். எவ்வளவுக் கெவ்வளவு தேங்காய் ஓடு பெரிதாகக் கிடைக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு சாமானை அழகாகவும், நுட்பமாகவும் சித்திர வேலைப்பாடு அமைந்ததாகவும் செய்யலாம். இலங்கை யாழ்ப்பாணத் தேங்காய் ஓட்டில் மிகப் பெரிய சாமான்கள் செய்ய முடியும். இந்தக் கைத்தொழிலை நம் நாட்டில் ஒரு முக்கியமான குடிசைத் தொழிலாக வளர்க்க முயற்சி எடுப்போமானால் நல்லது. இந்த மாதிரி அழகான சாமான்களுக்கு மேல் நாடுகளில் நல்ல கிராக்கி உண்டு. இதைப் போன்ற கைத்தொழில்களின் மூலம் இந்தியாவுக்கு ஓரளவு வருமானமும் கிடைக்கும். பள்ளிக் கூடங்களில் எல்லாம் இப்படிப் பட்ட நுட்பமான தொழில்களை மாணவர்களுக்குப் போதிக்கலாம்.

## அப்பா கண்டிப்பு

அம்மா ஸினிமா பார்க்கப் போனாள். "இதோ பாருங்கள்: குழந்தைகள் வெளியே வாசலில் போகாமல் பார்த்துக் கொள்ளுங்கள்" என்று அப்பாவிடம் கட்டளையிட்டாள்.

அப்பாவும் ஒப்புக்கொண்டார். "ஒரு பயல்கூட வாசலில் போகாமல் பார்த்துக் கொள்ளுகிறேன். நீ கவலைப் படாமல் போய் வா" என்றார்.

பிள்ளைகள் மாடியிலே இருந்தார்கள். மாடிக் கதவைச் சாத்திக்கொண்டு, சாய்மான நாற்காலியில் சாய்ந்து படிக்கத் தொடங்கினார் அப்பா.

சிறிது நேரத்துக் கெல்லாம் மாடிப்படியில் எவனோ இறங்கிவரும் சப்தம் கேட்டது. "போ திரும்பி; மாடியிலேயே கிட. கதவைத் திறக்க முடியாது" என்று கண்டிப்பாய்ச் சொல்லி, மீண்டும் அவர் படிப்பில் மூழ்கினார்.

இதே சமயம் அடுத்த வீட்டுக்கார அம்மாள் அங்கே வந்தாள். "ஏன், ஐயா, எங்கள் வீட்டுப் பையனைக் காணோம்; நீங்கள் எங்கேயாவது பார்த்தீர்களோ?" என்று கேட்டாள்.

இவர் உதட்டைப் பிதுக்கினார். ஆனால், இந்தக் கணத்தில் முக்கலும் முனகலுமாய் அழுகைக் குரல் ஒன்று மாடியிலிருந்து வந்தது: "இதோ இருக்கிறேன், அம்மா. இவர் என்னை வீட்டுக்கு வர விடமாட்டேன் என்கிறார்."

—'ஹ்யூமர்,' ஆஸ்டிரேலியா.

## சந்தேக மயம்

ஒரு பெண்ணுக்குத் தன் கணவனிடம் பெரிய சந்தேகம். ஒவ்வொரு நாள் மாலையிலும் அவன் வெளியிலிருந்து வந்ததும், அவனுடைய கோட்டைப் பரிசோதிப்பாள். அதிலிருந்து எப்படியோ ஒரு மயிர் அகப்பட்டுவிடும். இதைப் பற்றி இரவு முழுவதும் ஒரே அமர்க்களம் செய்வாள்.

ஒரு நாள் மாலையில் அவள் துருவித் துருவித் தேடியும் கோட்டிலிருந்து ஒரு மயிர்கூட அகப்படவில்லை. "சரிதான்; இப்போது தலை வழுக்கையான பெண்களின் சகவாசங்கூட ஏற்பட்டு விட்டதா?" என்று புலம்பத் தொடங்கினாள்.

—'கான்ஸ்டலேஷன்,' பாரிஸ்.

# என்னைக் கேளுங்கள்

காப்டன் என். சேஷாத்திரிநாதன்

**வைத்தியம், சுகாதாரம், ஆரோக்கியம் இவைபற்றி 'மஞ்சரி' வாசகர்கள் கேட்கும் கேள்விகளுக்கு இயன்றமட்டும் பதிலளிக்க இந்த டாக்டர் இசைந்திருக்கிறார். இவர் வைத்தியத் துறையில் கல்வியும் அநுபவமும் நிறைந்தவர்; ரத்த பரிசோதனை நிபுணர்; கிண்டி இன்ஸ்டிட்யூட் அதிகாரியாக இருந்தவர். நோயுள்ளவரின் தனித்தனி நிலையை நேரில் கவனித்தே டாக்டர் வைத்தியம் செய்ய வேண்டும். ஆகவே, இதில் வரும் பதில்களைப் பொதுவாகக் கொள்ளலாமே தவிர, வைத்தியமே இவற்றைக் கொண்டு செய்துகொள்ளலாம் என்று நண்பர்கள் நினைக்கக் கூடாது.**

**அப்பாதுரை, சென்னை.**

**கேள்வி-1:** புகை பிடிப்பதோ வேறு எந்த விதமான கெட்ட நடவடிக்கையோ எனக்கு இல்லை. என்றாலும் சில சமயம் சோர்வு ஏற்படுகிறது. காரணம் என்ன? சோர்வைப் போக்க என்ன செய்யலாம்?

**விடை:** பசி, கடுமையான வேலை, வெயிலில் அலைவது, வெப்பம் வீசும் அடுப்பின் அருகில் இருப்பது இப்படிப் பல காரணங்களால் இயல்பான சோர்வு ஏற்படலாம். நெருங்கிய அறையில் ஜனக் கூட்டத்தில் அகப்பட்டுக்கொண்டு காற்றோட்டம் இல்லாததால் சோர்வு ஏற்படும். மனக் கவலை, வெகுநேரம் ஓய்வு இல்லாமல் படிப்பது போன்ற காரணங்களாலும் சோர்வு உண்டாகலாம். ஒவ்வொரு காரணத்துக்கும் அதற்குத் தக்க பரிகாரம் தேடிக்கொள்ள வேண்டும். நம் நாட்டில் உப்புப் போட்டுக் கரைத்த மோர் இந்த மாதிரி சோர்வை விரைவில் மாற்றிவிடக் கூடும் என்பது என் அநுபவம்.

**கே-2:** என் வயசு 22. உயரம் 5 அடி 3 அங்குலம். எடை 105 பவுண்டு. வயசுக்குத் தக்க எடை தானா?

**வி:** தக்கதுதான்.

**அஜ்மல் கான், இளையான்குடி.**

**கே:** வயசு 13. துடையில் சதை அதிகம் வைத்துவிட்டது. உட்காரும்போதும் வேகமாக ஓடும்போதும், இது ஆடுகிறது. இதற்கு என்ன செய்வது?

**வி:** பையனுக்கு உடம்புப் பருமன் அதிகம். சர்க்கரை, பால் இரண்டும் அதிகமாய்ச் சாப்பிடு



கிறான். உழைப்பும் விளையாட்டும் குறைவு. வீட்டில் செல்வமும் சந்தோஷமும் அதிகமா யிருப்பதால் உடம்பு அதிகம் பருக்கிறது. ஊட்டம் குறையவேண்டும். உழைப்பும் விளையாட்டும் அதிகமாக வேண்டும். பையனின் எடை இயல்பான அளவுக்கு அதிகமாக இருக்கவேண்டுமே? உண்மையா இல்லையா?

**வீரப்பன், இராமாபுரம் புதூர்.**

**கே:** இரண்டு கண்களிலும் நீர் வந்துகொண் டிருக்கிறது. படித்துக்கொண் டிருக்கும்போது அதிகமாய் வருகிறது. கண் கூசுகிறது. எரிச்சல் எடுக்கிறது. இடது கண்

பார்வை சற்றுச் சாய்வாகவும், கண் சற்றுச் சிறியதாகவும் இருக்கிறது.

வி: நண்பர் வீரப்பனுக்குக் கண்களில் பார்வைக் குறை இருப்பது தெளிவு. கண்களில் ஓரளவு அழற்சியும் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் எரிச்சல் உண்டாகாது. கண் வைத்தியரை நேரில் கண்டு வைத்தியம் செய்து கொள்வது அவசியம்.

**கணேசன், செங்கோட்டை.**

கே: இரண்டு மாதமாகக் காது சிறிதுகூடக் கேட்கவில்லை. முதலில் வாந்தி யெடுத்தது. பிறகு மண்டை கனத்தது. ஒழுங்காக நடக்க முடியவில்லை. தலையை ஆட்டிக்கொண்டால் கண் சரியாகத் தெரிவதில்லை. நோய் குணமாகுமா?

வி: வாந்தி, தலைக்கனம், ஒழுங்கில்லாத நடை, காது கேட்காமல் இருப்பது எல்லாம் ஒரே காரணத்தால் ஏற்பட்டவையா யிருக்கலாம். சிறு வயசில் காதிலிருந்து சீழ் தோன்றியிருந்தால் இந்த மாதிரி நோய் ஏற்படக்கூடும்; வேறு காரணமாகவும் இருக்கலாம். தக்க வைத்திய நிபுணரிடம் சென்று பரிசீலனை செய்துகொண்டு சிகிச்சை பெற்றுக்கொள்வது அவசரமாய்ச் செய்ய வேண்டிய காரியம்.

**க. சீதாராமன், ஆசிரியர், ஓசூர்.**

கே-1: பேசும்போதும் சிரிக்கும் போதும் என் நண்பர் ஒருவருக்



குக் கண்ணீர் துளும்புகிறது. தமக்கு ஏதோ குறை இருப்பதால், இப்படி ஏற்படுகிறதென்று நினைக்கிறார்.

வி: ரொம்பச் சிரித்தால் சாதாரணமாக எல்லாருக்குமே கண்ணீர் துளும்பும். கண்ணைச் சூழ்ந்த தசைகள் இறுகுவதால், கண்ணீர் மூக்குக்குச் செல்லும் வழி அடைபட்டுவிடும். இதனால் கண்ணீர் துளும்பி வெளியாகும். நண்பருக்கு இந்த நிகழ்ச்சி எளிதில் ஏற்படுகிறது.

கே-2: பள்ளி மாணவன் ஒருவன் அடிக்கடி பீடி குடிக்கிறான். அவன் பெற்றோரும் ஊரிலுள்ள பலரும் நானும் எவ்வளவோ சொல்லியும் அவன் திருந்துவதாக இல்லை. அவனைத் திருத்த என்ன உபாயம்?

வி: இந்த மாணவன் இந்தக் கெட்ட வழியிலிருந்து திரும்ப, அவனே இது தவறென்று உணர வேண்டும். பீடி குடிப்பதனால் விளையக்கூடிய கேடுகளைப் பொதுவாக இவனுக்கு எடுத்துச் சொல்லலாம். இவர்கள் அவன் பீடி குடிப்பதைக் கவனிக்காததுபோல் இருந்துகொண்டே இப்படிச் சொல்ல வேண்டும்.

கே-3: பச்சிளங் குழந்தைக்கு உள் நாக்கிலும் உதடுகளிலும் ஏன் புண் உண்டாகிறது? அதைப் போக்க என்ன வழி?

வி: தாய்ப் பால் ஊட்டும் இளங் குழந்தையின் வாயைப் பால் ஊட்டிய பிறகு ஒவ்வொரு தடவையும் ஒரு ஸ்பூன் இளம் வெந்நீர் கொண்டு துடைக்க வேண்டும். இப்படித் துடைக்காமல் இருப்பதாலேயே புண் உண்டாகக்கூடும். செயற்கை முறையில் பால் ஊட்டுவதா யிருந்தால், அசுத்தமான பாலாடையிலிருந்தும் விரலிலிருந்தும் அழுக்கு வாய்க்குள் சென்று புண் தோற்றுவிக்கக் கூடும். ஆகவே, அப்படிப் பால் ஊட்டிய ஒவ்வொரு தடவையும் ஒரு துளி போரிக் ஆசிட் வெந்நீரில் போட்டுத் துடைக்கலாம். புண் வந்துவிட்டால், வைத்தியரிடம் காட்டித்தான் சிகிச்சை பெறவேண்டும்.

**கமலம், கொச்சி.**

**கே-1:** எனக்கு வயசு 32 ஆகிறது. சில மாத காலமாக முகத்தில் மயிர்க்கால்கள் பெரிதாகத் தோற்றம் அளிக்கின்றன. இது வயசை அதிகப்படுத்திக் காட்டுகிறது. இதற்கு மாற்ருக க்ரீம் அல்லது லோஷன் எதுவாவது உண்டா?

**வி:** இது இயற்கையாக ஏற்படும் தோற்றம். எனக்குத் தெரிந்த வரையில் பரிகாரம் இல்லை.

**கே-2:** சில பல்லை அழுத்திஞல் ரத்தமும் சீழும் வருகின்றன. ஆனல் பல் ஆடவில்லை. இந்த மாதிரி பல்லை யெல்லாம் நான் பறித்து விடலாமா?

**வி:** பறித்துவிடத் தேவையில்லை. இந்த நிலையில் சீழ் உண்டாவதை நிறுத்திப் பல்லை வலுப்படுத்தலாம். உமிக்கரிப்



பொடியைக் கொண்டு லேசாகப் பல்லைத் துலக்கவேண்டும். பிறகு ப்ரஷ் கொண்டு உமிக்கரியை நீக்க வேண்டும். முருங்கைக் காய் போன்ற கறித்தான்களைக் கடித்து நன்ருகச் சுவைக்க வேண்டும். ஒவ்வொரு தடவையும் சாப்பிட்டவுடன் வாயை நன்ருகத் தண்ணீர் கொண்டு கொப்புளிக்க வேண்டும்.

**இராமசந்திரன், சென்னை.**

**கே:** வயசு 20. ஐந்து வயசில் பெரியம்மை கண்டு முகத்தில் உண்டான தழும்பு மறையாமல் இருந்து வருகிறது. அதைப் போக்க வழி உண்டா?

**வி:** வைசூரித் தழும்பைப் போக்க வழி ஒன்றும் இல்லை. இந்தத் தழும்பு சருமத்தின் ஆழத்தில் உண்டாவது. தாஞகவே மறையும். ஆனல், அதற்குப் பல வருஷம் செல்ல வேண்டும்.

**கண்ணபிரான், நெல்லிக்குப்பம்.**

**கே:** என் வயசு 24. கண்ணுக்குக் கண்ணுடி போட்டுக்கொள்ள வேண்டு மென்று விரும்புகிறேன். அப்படிக் கண்ணுடி போட்டுக் கொள்வதால் அபாயம் உண்டா?

**வி:** கண்ணில் குற்றம் குறை இல்லாதபோது கண்ணுடி போட்டுக் கொள்வது சரி அல்ல. அது ஓர் அழகு என்று நினைத்துப் போட்டுக்கொள்ள ஆசை வந்தால், சில நாள் போட்டுக்கொண்டு இருந்து விட்டுச் சீக்கிரமே விட்டுவிடுவது நலம்.

**உமா, குடியாத்தம்.**

**கே:** 5 மாதம் கடுமையாகப் பேதியாகி வந்தது. பலம் குன்றியது. இப்போது அஜீர்ணமும் புளியேப்பமும் வயிற்றில் இரைச்சலும் உண்டாகின்றன. இது ஒரு வியாதியா?

**வி:** வியாதிதான். பேதியால் குடலில் புண் தோன்றிக் குடலின் வலிமையைக் குன்றச் செய்துவிட்டது. தொடர்ந்து சில நாள் வைட்டமின் மருந்துகள் சாப்பிட்டும் தக்க சத்துள்ள ஆகாரங்களைச் சாப்பிட்டும் குணப்படுத்திக் கொள்ளலாம்.

**எஸ். ஆர். நாதன், திண்டுக்கல்.**

**கே:** காரமான சுக்குத் தண்ணீர் சாப்பிட்டவுடன் விக்கல் ஏற்படுகிறது. சேர்ந்தாற்போல் பத்து அல்லது பதினேந்து நிமிஷம் விக்கிக் கொண்டே யிருக்கிறது. இதைத் தவிர்க்க வெறும் தண்ணீர் குடிக்கலாமா? ஜீனியை வாயில் போட்டுச் சுவைக்கலாமா? எது நல்லது?

**வி:** வெறும் தண்ணீர் குடிப்பதே நல்லது. ஜீனியும் சுக்கைப் போல்தான் இரைப்பையை உறுத்தும்.

# சூதாட்டம்

★



துரியோதனனின் கருத்துக்கு இணங்கத் திருதராஷ்டிரன் விதுரர் மூலம் பாண்டவரை அழைக்கச் செய்தான். விதுரர் கௌரவரின் சூழ்ச்சியைத் தர்மரிடம் தெளிவாகக் கூறினூர். ஆயினும் தர்மர் 'சூதாட்டத்துக்கு அழைத்தால் மறுப்பதில்லை' என்ற விரதம் கொண்டிருந்ததால் அழைப்பை ஏற்றுக்கொண்டார். எல்லா ஏற்பாடுகளும் செய்து கொண்டு தம்பிமாரோடும் பாஞ்சாலி முதலிய அந்தப்புரப் பெண்மணிகளுடனும் தேரில் ஏறிக்கொண்டு அஸ்தினுபுரம் வந்தார். துரியோதனுதியரையும் அசுவத்தாமன், பீஷ்மர், துரோணர், கர்ணன், கிருபர் முதலியோர்களையும் பார்த்துப் பேசிக்கொண்டிருந்துவிட்டுத் திருதராஷ்டிரனின் அரண்மனைக்குள் நுழைந்தார். அங்கு அரசன் பாண்டவர்களை அணைத்துக்கொண்டு உச்சி மோந்து ஆசி கூறினன். பிறகு துரியோதனுதியரிடம் வந்தார்கள் பாண்டவர்கள்; திரௌபதி அந்தப்புரத்துக்குள் நுழைந்தாள். அவளுடைய செல்வத்தையும் பெருமையையும் கண்டு திருதராஷ்டிரனின் மருமகள்மார் பொருமை கொண்டார்கள். அன்று இரவை அனைவரும் இன்பமாகக் கழித்தார்கள்.

மறு நாள் காலையில் அனைவரும் கடன்களை முடித்துக்கொண்டு சூதாடும் சபைக்கு வந்தார்கள். அங்கு முன்பே பல சூதாடிகள் சூழ்ந்திருந்தார்கள். சகுனி தர்மரைப் பார்த்து, ''அரசே, சபை நிறைந்திருக்கிறது. நாங்கள் இதோ தயாராக இருக்கிரேும். காய்களை வைத்து ஆடுவோமா?'' என்ருன். அதற்குத் தர்மர், ''சூதாட்டமே பாவம். அதில் க்ஷத்திரியருக்கேற்ற வீரத்துக்கு இடம் இல்லை; நீதிக்கும் இடம் இல்லை. ஏன் வீணுகச் சூதாட்டத்தைப் புகழ்ந்து கொண்டாடுகிறீர்

**மகாபாரதத்தில் வரும் உபாக்கியானங்களும் சரி, பாத்திரங்களும் சரி, பலவகை. ஒவ்வொரு கதையிலும் ஒரு பேருண்மையைக் கண்டறியலாம்; ஒவ்வொரு பாத்திர வர்ணனையும் தனித் தனிக் குணசித்திர மாகும்.**

கள்? சூதாடியின் ஆட்சியை நல்லோர் கொண்டாட மாட்டார்கள். சகுனி முறை தவறி நீங்கள் எங்களை ஜயிப்பது சரியல்ல; கபட முறையில் சூதாடி வெற்றி கொள்வது பாவம். போரில் வெற்றி மாலை சூடுவதுதான் க்ஷத்திரியனுக்குரிய தர்மம். உங்களுக்கு இந்த நீதி தெரியும். அதனால் நீங்கள் முறை கடந்து சூதாட வேண்டாம். பிறரை இப்படி வெல்லவும் வேண்டாம்'' என்று கூறினர்.

இதைக் கேட்டுச் சகுனி, ''வேத முறையை அறிந்தவன் குறைவாக அறிந்தவனை வெல்வதும், படித்தவன் படிப்பில் குறைந்தவனை வெல்வதும், அஸ்திர வித்தையில் தேர்ச்சி பெற்றவன் தேர்ச்சி குறைவாக இருப்பவனை வெல்வதும், பலம் குறைந்தவனை அதிக பலம் உள்ளவன் வெல்வதும் அதர்மம் என்றும் ஏமாற்றம் என்றும் பெரியோர் கூறுவதில்லை. அதனால் தாங்கள் சூதாடுவதற்காக வந்துவிட்டு என்னுடன் ஆடுவதை முறை தவறியது என்றும் அவமானம் என்றும் எண்ணினால் சூதாட வேண்டாம். தங்களுக்குச் சூதாடுவதில் பயமிருந்தால் நான் தங்களைத் துன்புறுத்தவில்லை'' என்றான்.

இதைக் கேட்டுத் தர்மர், ''சூதாட ஒருவன் அழைத்தால் வராமல் மறுப்பதில்லை என்பது என் விரதம். அரசே, யாவற்றிலும் வலியது விதி. நான் எப்பொழுதும் அதிருஷ்டத்துக்குத்தான் வசப்பட்டிருக்கிறேன். நான் இந்தச் சபையில் யாருடன் ஆட வேண்டும்? பந்தயம் என்ன வைத்திருக்கிறது? இதைத் தெரிந்து கொண்டு ஆடுகிறேன்'' என்றார்.

உடனே துரியோதனன், ''அரசே! நான் ரத்தினங்களையும் பணத்தையும் பணயமாக வைக்கிறேன். எனக்காக என் மாமா சகுனி ஆடுவார்'' என்று கூறினான். ''ஒருவனுக்காக மற்றொருவன் ஆடுவது



சரியாக எனக்குப் படவில்லை. ஆயினும், இதோ நான் ஆடுகிறேன். ஆட்டம் ஆரம்பமாகட்டும்'' என்று தர்மர் சொன்னார்.

அப்பொழுது பீஷ்மர், துரோணர், கிருபர், விதுரர் முதலியோரும் மற்ற அரசர்களும் திருதராஷ்டிரனை முன்னிட்டுக் கொண்டு சூதாடும் சபைக்கு வந்து தமக்கேற்ற ஆசனங்களில் அமர்ந்தார்கள். சூதாட்டம் தொடங்கியது.

தர்மர், ''விலை உயர்ந்ததும், சமுத்திரத்தின் சுழலுக்கு ஒப்பானதும், தங்கத்தால் அலங்கரித்ததுமான சிறந்த ரத்தின ஆரத்தைப் பணயமாக வைக்கிறேன். இந்த ஆட்டத்தில் நான் ஜயிக்கிறேன்'' என்றார்.

அப்பொழுது துரியோதனன், ''என்னிடம் ரத்தினங்களும் பலவகைச் செல்வமும் இருக்கின்றன. எனக்குப் பொருள்களில் ஆசையும் இல்லை. ஆனாலும் இந்த ஆட்டத்தில் ஜயித்துவிடுவேன்'' என்றான். உடனே சூதாட்டத்தின் ரகசியத்தை உணர்ந்த சகுனி காய்களை உருட்டினான்; ''ஜயித்துவிட்டேன்'' என்றான்.

மீண்டும் தர்மர், ''சகுனி ராஜா, ஆட்டத்தை ஜயித்துவிட்டீர்கள். மீண்டும் ஆடுவோம்'' என்று கூறி ஆயிரக்கணக்கில் தங்க நாணயங்களைப் பணயமாக வைத்தார். சகுனி அவற்றையும், ''ஜயித்தேன்'' என்றான். பிறகு தர்மர் தாம் ஏறி வந்த தேர், யானைகள், தாசிகள், தாசர்கள், குதிரைகள் அர்ஜுனனுக்குச் சித்திரரதன் அளித்த கந்தர்வர்கள், வண்டிகள், நிதிகள் முதலியவற்றை ஒவ்வொன்றாக வைத்தார். ஒவ்வொரு தடவையும் சகுனி சிரித்துக் கொண்டு காயை உருட்டி, ''ஜயித்தேன்'' என்று கூறிவந்தான்.

இதற்கிடையில் விதுரர் திருதராஷ்டிரனிடம் சென்று, ''மகாராஜா, இறக்கும் நிலையில் இருப்பவனுக்கு மருந்து பிடிக்காதது போல் உங்களுக்கு என் வார்த்தை இஷ்டமாக இராது. தீய உள்ளம் படைத்த துரியோதனன் பிறந்தவுடனேயே நரிபோல் அழுதான். இவன் பரத வம்சத்தையே அழிக்கப் பிறந்திருக்கிறான். நீங்கள் நரியை வீட்டில் வைத்துக் கொண்டு அதன் விளைவை ஏன் உணராமல் இருக்கிறீர்கள்? துரியோதனன் மகாரதர்களுடன் பகையை வளர்த்துக்கொண்டு அதன் விளைவைக் கவனியாமல் இருக்கிறான். அந்தகரும், யாதவரும், போஜரும் ஒன்று சேர்ந்து கிருஷ்ணர்மூலம், தம் வம்சத்தில் பிறந்த கொடிய கம்சனை அழித்து இன்புற்று வாழ்ந்தார்கள். அதுபோல் தாங்கள் அர்ஜுனனைக் கொண்டு துரியோதனனை அடக்குங்கள். குரு வமிசத்தினர் இன்புற்று வாழட்டும். பாண்டவர்களைப் பகைக்க வேண்டாம். மாலை தொடுப்பவன் பூக்களைச் சேர்ப்பது போல் பாண்டவர்களுக்கு நன்மையைச் செய்யுங்கள். கரிவியாபாரம் செய்பவன் மரங்களை எரிப்பது போல் நீங்கள் பாண்டவரை எரிக்க வேண்டாம். தேவராஜன் தேவருடன் வந்தாலும் பாண்டவரைப் போரில் வெல்ல முடியாது. சூதாட்டம் கலகத்துக்குக் காரணம்; கலகம் போரை மூட்டும். துரியோதனன் நன்மையை ராஜ்யத்திலிருந்து நீக்குகிறானே! அவனுடைய செயலால் தர்மன் பொறுமையை இழப்பானானால் பீமனையும், அர்ஜுனனையும், நகுல சகதேவர்களையும் யார் எதிர்த்து நிற்க முடியும்? ஆகவே, இந்தச் சூதாட்டம் வேண்டாம்'' என்றார்.

இதைக் கேட்டுக்கொண்டிருந்த துரியோதனன் விதுரரை நோக்கிச் சொல்லலானான்: ''நீ எப்பொழுதும் பகைவரின் புகழையே கொண்டாடிக் கொண்டிருக்கிறாய். மறைவாகத் திருதராஷ்டிரரின் மக்களை இகழ்ந்துகொண்டிருக்கிறாய். விதுரா, நீ எங்களைப் பகைப்பது எனக்குத் தெரியும். குழந்தைகளைப் போல் எண்ணி எங்களை இகழுகிறாய். பாம்பை மடியில் வைத்து வளர்ப்பதுபோல் அரசர் உன்னை அண்டையில் வைத்து வளர்க்கிறார். தன்னை வளர்ப்பவனுக்கும் பூனை தீங்கு நினைப்பதுபோல் எஜமானையே கெடுக்கப் பார்க்கிறாய். எஜமானுக்குத் துரோகம் செய்யும் உன்னைவிடப் பாவி யார் உண்டு.

விதுரா, உலகம் முழுவதையும் அடக்கி ஆளுபவர் கடவுள் ஒருவரே; மற்ற எவரும் இல்லை. கர்ப்பத்தில் இருக்கும் குழந்தையையும் அவர்தான் காக்கிறார். அவர் என் மனத்தில் தோற்றுவித்தபடி நீர் பள்ளத்தை நோக்கிப் பெருகுவது போல் நான் செயல் புரிகிறேன். விதுரா, மீண்டும் கூறுகிறேன்: பகைவரைச் சார்ந்தவனை வீட்டில் வைத்துக்கொள்வது சரியல்ல; கெடுதல் என்றுகூட நினைக்கிறேன். நீ எங்கு வேண்டுமானாலும் போய்க்கொள்ளலாம்.''

அப்போது விதுரர், ''அறிவற்ற துரியோதனா, நான் ஒன்றும் அறியாதவன் என்று எண்ணி அவமதிக்கிறாய். முதலில் நன்மை செய்பவனாகக் கருதிப் பழகிவிட்டுப் பிறகு இகழுபவன்தான் ஒன்றும் அறியாதவன். மனிதர்களுக்கு எப்பொழுதும் பிரியமாகப் பேசுபவர் கிடைப்பார்கள். ஆனால் பிடிக்காத போதிலும் நன்மையைக் கூறுபவனும் கேட்பவனும் உலகில் அபூர்வம். எஜமானின் விருப்பு வெறுப்புகளைக் கவனியாமல் எவன் நன்மையைக் கூறுகிறானோ அவன் தான் உண்மையாக உதவி செய்பவன். விசித்திரவீரியனின் மகனாகிய திருதராஷ்டிரரின் புகழையும் செல்வத்தையும் வம்சத்தையும் காக்க விரும்பி நான் இப்படிச் சொன்னேன். உன் மனம் எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும். பெரியோர்கள் உனக்கு நன்மையே செய்யவேண்டும்'' என்றார்.

சகுனி தர்மரைப் பார்த்து, ''யுதிஷ்டிரா, இப்போது பணயம் முழுவதையும் தோற்றுவிட்டாய்; வேறு பொருள் ஏதாவது இருந்தால் சொல்'' என்றான்.

அதற்குத் தர்மர், ''சௌபல தேச மன்னரே, எதற்காக என் சொத்தைப்பற்றிக் கேட்கிறீர்? என்னிடத்தில் பதினாயிரம், லட்சம், கோடிக்கணக்கில் ஏராளமான சொத்திருக்கிறது. எல்லாவற்றையும் வைக்கிறேன். ஆடுவோம்'' என்றார். சகுனி கபடமான முறையைப் பின்பற்றி, ''ஜயித்துவிட்டேன்'' என்றான். மீண்டும் தர்மர் யானை, குதிரை, மாட்டு மந்தை, ஆட்டு மந்தை முதலியவற்றைப் பணயமாக வைத்தார். சகுனி கபடமாகக் காயை உருட்டி, ''ஜயித்தேன்'' என்றான்.

மேலும் தர்மர், ''பட்டணம், நாடு, பூமி யாவற்றையும், அதில் இருக்கும் மக்களையும் பணயம் வைக்கிறேன்'' என்றார். அவற்றையும் சகுனி, ''ஜயித்தேன்'' என்று கூறிக்கொண்டு காயை உருட்டினான். தர்மர் மேலும் தொடர்ந்து, ''என்னைச் சுற்றியிருக்கும் ராஜகுமாரர்களைப் பணயமாக வைக்கிறேன்'' என்றார். சகுனி அவர்களையும் ஜயித்தான். தர்மர், ''யௌவனம் நிறைந்து எழிலுற்று, சிவந்த கண்களும், சிங்கம் போன்ற தோளும், ஒளிரும் அமைதியும் உடைய நகுலன் என் சொத்து. அவனை நான் வைக்கிறேன்'' என்றார்.

உடனே சகுனி, ''அரசே, உமக்குப் பிரியமான நகுலன் எங்கள் சொத்து ஆகிவிட்டான். மேலும், என்ன வைத்து ஆடப்போகிறீர்கள்?'' என்றான்.

பிறகு தர்மர், ''எனக்குத் தர்மம் உபதேசிப்பவன் சகதேவன். உலகில் பண்டிதன் என்று பெயர் பெற்றவன். பணயம் வைக்கத் தகுதியற்றவன் அவன். எனக்கு மிகவும் பிரியமானவன். ஆனாலும் அவனைப் பிரியம் இல்லாதவனைப் போல் பணயமாக வைத்து ஆடுகிறேன்'' என்றார்.

சகுனி உடனே, ''மாத்ரியின் மைந்தர்கள் உமக்குப் பிரியமானவர்கள்தான். அவர்களை ஜயித்தேன். பீமனும் அர்ஜுனனும் உமக்கு அதிகப் பிரியமானவர்கள் என்று நினைக்கிறேன்'' என்றான்.

தர்மர் அதைக் கேட்டு, ''சகுனியே, ஏன் ஒற்றுமையாக இருக்கும் எங்களைப் பிரித்துவிடப் பார்க்கிறாய்! இது அதர்மமாகும்'' என்று சொல்லி, ''எங்களுக்குப் போரில் வெற்றியைக் கொடுப்பவனும், பகைவரை வெல்பவனும் உலக வீரனுமாகிய அர்ஜுனனைப் பணயம் வைத்து ஆடுகிறேன்'' என்று கூறினார்.

அப்பொழுது சகுனி, ''பாண்டவரில் சிறந்த வில்லாளியும், இடது

கையாலும் பாணத்தைப் பிரயோகிப்பவனுமான அர்ஜுனனை ஜயித்து விட்டேன். அரசே, தங்களுடைய அன்புக்குரிய பீமனை வைத்து ஆடும். அவன்தான் தங்களுக்கு எஞ்சியிருக்கும் சொத்து'' என்றான்.

உடனே தர்மர், ''அசுரரை வெல்வதற்குத் தேவேந்திரன் ஒருவனே இணையற்றவன். அதுபோல் பகைவரை அடக்குவதில் நிகரற்றவனும் கதை தாங்கும் வீரர்களில் சிறந்தவனுமான பீமனை வைத்து நான் ஆடுகிறேன்'' என்றார். சகுனி அவனையும், ''ஜயித்தேன்'' என்று கூறிக் காய்களை உருட்டினான்.

சகுனி தர்மரைப் பார்த்து மேலும் ஏராளமான செல்வத்தைத் தோற்றுவிட்டீர்! குதிரை, யானை, உடன் பிறந்தார் அனைவரையும் தோற்றுவிட்டீர்கள். தோற்காத பொருள் ஏதாவது இருந்தால் கூறுங்கள்'' என்று கேட்டான். அதற்குத் தர்மர், ''நான் மீதியாக இருக்கிறேன். சகோதரரிடம் பாசம் உடையவன் நான். என்னையே பணயமாக வைக்கிறேன்'' என்றார்.

இதைக் கேட்டவுடன் சகுனி அலட்சியமாக, ''ஜயித்து விட்டேன்'' என்று கூறி மேலும் சொன்னான்: ''செய்த காரியம் மிகவும் பாவமானது. பொருள் மீதியிருக்கும்பொழுது உன்னையே பணயம் வைத்துத் தோற்பது முறையல்ல. உன்னுடைய அன்புக்குரிய பாஞ்சாலியை இன்னும் ஜயிக்கவில்லையே. அவளை வைத்து ஆடி நீ உன்னையும் மீட்டுக் கொள்ளலாம்'' என்றான். அப்பொழுது தர்மர், ''பாஞ்சாலி மிகவும் குட்டையும் அல்ல; உயரமும் அல்ல. கறுப்புமல்ல; சிவப்புமல்ல. சிவந்த ஆடை அணிந்தவள்; சரத்காலத்து ஆம்பல் இதழ் போன்றவை அவள் கண்கள்; அழகில் லட்சுமிக்கு நிகரானவள். குணத்திலும், அழகிலும், புத்திரப் பேற்றிலும் ஒரு பெண் எவ்வாறு இருக்க வேண்டும் என்று ஒரு புருஷன் நினைப்பானோ அப்படி இருப்பவள். இயல்பில் தாமரையை ஒத்தது அவள் வதனம்; வேர்த்தால் அதில் மல்லிகை மணம் கமழும். வேதி போன்றது அவள் இடை. நீண்ட கூந்தல்; சிவந்த கண்கள்; இந்தச் சிறப்புடைய பாஞ்சாலியை வைத்து நான் ஆடுகிறேன்'' என்றார்.

தர்மர் கூறியதைக் கேட்டதும் சபையில் இருக்கும் முதியோர், ''அடடா! ஐயோ'' என்றார்கள். சபை கலக்கமுற்றது. வேந்தர் வருந்தினார்கள். பீஷ்மர், துரோணர், கிருபர் முதலியோருடைய உடம்பு வேர்த்தது. விதுரர் தலையைப் பிடித்தபடி நினைவிழந்தவர்போல் இருந்தார். முகம் குனிந்து யோசனையில் ஆழ்ந்து பாம்பு போல் பெருமூச்சு விட்டார். சோமதத்தன், அசுவத்தாமன், யுயுத்ஸு முதலியோர் தலை குனிந்து கைகளைப் பிசைந்துகொண்டு பெருமூச்சு விட்டார்கள். திருதராஷ்டிரன் மகிழ்ச்சியுடன் மீண்டும் மீண்டும், ''ஜயித்தாகிவிட்டதா? ஜயித்தாகிவிட்டதா?'' என்று தன் மன நிலையை அடக்கிக்கொள்ளாமல் கேட்டான். கர்ணன் துச்சாசனுடியரோடு மிகவும் களிப்புற்றான். சகுனி கர்வமுற்றுச் சற்றும் தயக்கமின்றி, ''ஜயித்தேன்'' என்று கூறினான்.

## லாபக் கணக்கு

கணவர் தள்ளுவண்டியில் குழந்தையை வைத்துக் கொண்டு கடற்கரையில் சற்று உலாத்தி விட்டுத் திரும்பினார்.

மனைவி, ''என்ன இது? நம் குழந்தை இல்லையே!'' என்று திகிலுடன் கேட்டாள்.

கணவர், ''உஷ்! சப்தம் போடாதே. இதற்கு டயர் போட்டிருக்கிறது, பார்'' என்று வண்டியைச் சுட்டிக் காட்டினார்.

—'விரெக்கோ விட்'

அணுக்குண்டால் விளையும் அபாயத்தைக்கூடத்
தடுக்குமாம் இந்தச் சாதாரண எலுமிச்சம் பழம்!

# ஆயிரம் பயன் தரும் பழம்

**கீத் வார்னர்**

சாதாரண எலுமிச்சம் பழம் - பல்லைக் கூசச் செய்யும் புளிப்பான இந்தப் பழம் - எத்தனை எத்தனை காரியங்களுக்கு உபயோகப் படுகிறது என்று உங்களுக்குத் தெரியுமோ?

புற்று நோய் (கான்ஸர்) வந்தவர்களுக்கு எக்ஸ்-ரே சிகிச்சை செய்வதால் கெடுதி உண்டாகக் கூடும். அதைத் தடுக்க இந்தப் பழம் உதவுகிறது. 'லெமன் மெரிங்கு' என்ற இனிப்பான பணியாரம் செய்யப் பயன்படுகிறது: உருக்கைக் கடினமாக்க உபயோகப் படுகிறது. காயமுற்றவரின் ரத்தப் பெருக்கு அதிகமாகாமல் தடுக்கப் பயன்படுகிறது. சாதாரணக் காகிதப் பையில் இந்தப் பழச்சாற்றைத் தடவி விட்டால், அதில் கிரீஸ் (grease) புகாது; பெட்ரோலைக்கூட ஊற்றி வைக்கலாம்.



எலுமிச்சம் பழச் சாற்றுல், மசிக் கறை மறையும். இந்தச் சாற்றை மீன்மீது தெளித்து ஐஸ் பெட்டியில் வைத்தால், அது பல நாள் வரையில்கூடக் கவிச்சு வாடை வீசாதிருக்கும். வாழை, ஆப்பிள் போன்ற பழங்களைக் காற்றுப் படும்படி வைத்தால், அவை பொதுவாகக் கறுத்துப் போகும்; ஆனல், அவற்றின்மீது எலுமிச்சம் பழச் சாற்றைத் தடவி அப்படி வைத்தால், இந்த மாதிரி அவை கறுப்பதில்லை. எலுமிச்சம் பழச் சாறு சில சமயம் ரத்தத்துக்குப் பதிலாகக் கூட உபயோகப்படுகிறது.

எலுமிச்சம் பழத்துக்கும் அதிலிருந்து கிடைக்கும் உபபொருள்களுக்கும் நாம் நினைத்தே யிராத எத்தனை எத்தனையோ உபயோகங்கள் இருக்கின்றன. அவை அனைத்தையும் இங்கே சொல்லுவதென்ருல் சாத்தியமில்லை. முக்கியமான சிலவற்றை மட்டும் குறிப்பிடுகிறேன்.

உபயோகமற்றது என்று குப்பைத் தொட்டியில் எறிகிறுேமே, அந்த எலுமிச்சம் பழத் தோலில் ஒரு சத்து இருக்கிறது. அந்தச் சத்துக்கு வருங்காலத்தில் பெரிய உபயோகம் ஒன்று காத்திருக்கிறது. ஐக்கிய அமெரிக்காவில் எலிகள்மீது அந்தச் சத்தைப் பரீட்சித்துப் பார்த்ததில் இந்த விஷயம் தெரிந்தது: அணுக்குண்டு, ஹைட்ரஜன் குண்டு இவை வெடித்தால் ஏற்படும் கதிரியக்கம் (ரேடியேஷன்) நம்மைப் பாதிக்காமல் தடுக்கக்கூடியது அந்தச் சத்து. பயோஃப்ளேவின் என்று அந்தச் சத்துக்குப் பெயர். அதை எலுமிச்சம் பழத் தோலிலிருந்து இறக்கி எலிகளுக்கு உணவாகக் கொடுத்

மூலம்: ஹெரால்டு அவ் ஹெல்த் (ஆங்கிலம்: டிசம்பர் '57), புஞ.

தார்கள். பிறகு, சாதாரணமாக உயிருக்கே அபாயமான அளவு கதிரியக்கத்தை அந்த எலிகள் மீது செலுத்திப் பார்த்தார்கள். எலிகளுக்குத் தீங்கு உண்டாக வில்லை.

எலுமிச்சம் பழத்தோலில் உள்ள இந்தச் சத்துக்குக் கதிரியக்கத் தீங்குகளைத் தடுக்கும் ஆற்றல் உண்டு என்பது முதலில் டாக்டர்களுக்கு எப்போது தெரிந்தது? புற்று நோய்க்காரர்களுக்கு எக்ஸ்-ரே சிகிச்சை செய்யும் போதுதான் தெரிந்தது. பயோஃப்ளேவின் என்ற இந்தச் சத்தைக் கலவை செய்து தயாரித்த மருந்துகளை அந்த நோயாளிகளுக்குக் கொடுத்துவிட்டுப் பிறகு எக்ஸ்-ரே என்ற கதிர்களை அவர்கள்மீது எவ்வளவு அதிகமாகச் செலுத்தினுலும் நோயாளிகள் தாங்கிக் கொண்டதை டாக்டர்கள் கண்டார்கள். அணுக்குண்டு வெடிப்பதால் உண்டாகும் கதிர் இயக்கமும் எக்ஸ்-ரேயின் கதிரியக்கம் போன்றதுதான். எனவே, எலுமிச்சம் பழத்தோல் சத்தால், புற்று நோய்க்காரர்களைப் போலவே சாதாரண ஜனங்களும் அதிக அளவு கதிரியக்கத்தைத் தாங்கிக் கொள்வார்கள் என்று விஞ்ஞானிகள் நம்புகிறுர்கள்.

வெள்ளைத் துணிகளிலும் லினன் என்ற சணல் துணிகளிலும் ஏற்படும் பழக்கறைகளையும் துருக்கறைகளையும் போக்கடிக்க எலுமிச்சம் பழ ரசத்தில் உப்பைக் கரைத்துத் தேய்த்து நீரில் அலசினுல் அந்தக் கறைகள் நீங்கிவிடும் என்பது அநேகமாக எல்லாருக்குமே தெரிந்திருக்கும். அலுமினியப் பாத்திரங்களைப் பளபளப்பாய்த் தேய்க்க இந்த ரசத்துக்கு இணையான பொருள் வேறு இல்லை.

கிழக்கே பர்மா நாட்டில்தான் முதல்முதல் எலுமிச்சை பயிராயிற்று என்று ஆராய்ச்சியாளர் எண்ணுகிறுர்கள். நானூறு வருஷங்களுக்கு முன்புதான் எலுமிச்சம் பழம் இங்கிலாந்துக்குச் சென்றது. ஆயினும், இத்தாலியில் *1,600* வருஷங்களுக்கு முன்பே அதைத் தெரிந்திருந்தது. மத்தியக்கிழக்கு நாடுகளிலோ நாலாயிரம் வருஷங்களுக்கு முன்பே எலுமிச்சை புழங்கியிருக்கிறது. அங்கே புதைபொருள்களைத் தோண்டிப் பார்த்ததில் அவ்வளவு பழமையான எலுமிச்சம்பழ விதைகள் கிடைத்திருக்கின்றன.

எலுமிச்சம் பழத்தைப் புதிய உலகத்தில் - அதாவது, அமெரிக்காவில் - நுழைத்தவர் கிரிஸ்டாஃபர் கொலம்பஸ்தான் என்கிறுர்கள். அட்லாண்டிக் சமுத்திரத்தில் கப்பல் பிரயாணம் செய்து கொண்டே போகும்போது, கனரி தீவில் எலுமிச்சம் பழ விதைகள் கிடைத்தனவாம். அவற்றைக் கொண்டு போய் அமெரிக்காவில் அவர் நட்டாராம்.

எலுமிச்சம் பழத்தோலில் மிகவும் சக்தி வாய்ந்த ஓர் எண்ணெய் இருக்கிறது. ஐம்பது அல்லது அறுபது காலன் தண்ணீரில் இந்த எண்ணெயில் சில சொட்டு விட்டால் போதும்; அவ்வளவு தண்ணீரும் கம கம என்று வாசனை வீசும். இந்த எலுமிச்சை எண்ணெய் எஸ்ஸென்ஸைப் பல வாசனைத் தைலங்களுக்கும் சேர்க்கிறுர்கள்.

காய்ச்சல், தொண்டைப் புண், டான்ஸில் பருப்பது, வாதம், வீக்கம், ஜலதோஷம், வறட்டுச் சொறி, மூட்டு வலி இந்த நோய்களுக்கெல்லாம் வீட்டுச் சிகிச்சையாக எலுமிச்சம் பழத்தை அநாதி காலத்திலிருந்தே மக்கள் பயன்படுத்தி வருகிறுர்கள். ஆனுல், டாக்டர்களோ மிகச் சமீப காலத்திலேயே இதை ஆராயத்தொடங்கியிருக்கிறுர்கள்.

பழங்களில் பெக்டின் என்ற ஒரு சத்து உண்டு. குழம்பாயிருக்கும் 'ஜெல்லி'யைக் கெட்டியாக்கி 'ஜாம்' ஆக உறையச் செய்வது அது. எலுமிச்சம் பழத்தில் உள்ள 'லெமன் பெக்டின்' என்ற சத்தைக் காயத்தில் தடவினுல், ரத்தம் உறைந்து பெருக்கு வெகு சீக்கிரம் தடைப்படும் என்பதை நவீன ஆராய்ச்சியில் கண்டார்கள். சென்ற மகாயுத்தத்தில் ஜெர்மன்

ஸோல்ஜர்கள்தான் முதல்முதல் இதை உபயோகித்தார்கள். ஜெர்மன் அரசாங்கத்தார் இதை அந்த ஸோல்ஜர்களுக்கு ஸப்ளை செய்திருந்தார்கள்.

இதன் மேல் அமெரிக்க டாக்டர்கள் இன்னொரு விஷயம் கண்டு பிடித்தார்கள். இந்த 'லெமன் பெக்டின்' சத்தைக் கொண்டு தயாரித்த 'கரைசல்' (ஸொல்யூஷன்) ரத்தக் குழாய்களுக்குள்ளே சென்றால், ரத்தத்துக்குப் பதிலாகவே ஓடக்கூடிய சக்தி வாய்ந்தது என்று அவர்கள் கண்டார்கள். ஹேமோஃபிலியா என்ற நோய் உள்ள சிலர் உண்டு. அவர்களுடைய உடம்பில் மிகச் சிறுகாயம் பட்டாலும் போதும்; ஏராளமாய் ரத்தம் பெருகி அவர்கள் எளிதில் மாண்டுவிடுவார்கள். இப்படிப்பட்டவர்களைக் காப்பாற்றலாம் என்ற நம்பிக்கை இப்போது ஏற்பட்டிருக்கிறது. ரத்த பேதி (டிஸண்ட்ரி), கிராணி (டயரியா) போன்ற நோய்களுக்குச் சிகிச்சை செய்யவும், எலுமிச்சம் பழத்திலிருந்து மருந்துகள் தயாரித்திருக்கிறார்கள்.

எலுமிச்சம் பழத்திலிருந்து இறக்கிய 'ஸிட்ரிக் ஆஸிட்' என்ற புளிச்சத்து, லெமனேட் போன்ற பானங்கள் செய்யப் பயன்படுகிறது; பேதி மருந்தாக உதவுகிறது: சமையலுக்கும் வறுவலுக்கும் உபயோகமாகிறது. 'லெமன் - பெக்டேட்' என்ற எலுமிச்சம் பழ உப்பை, பூமியிலிருந்து எண்ணெய் எடுப்பவர்கூட உபயோகப்படுத்துகிறார்கள். எண்ணெய்க்காகப் பூமியில் தொளை போடும்போது, அதில் இந்த உப்பைப் போட்டால், இது கால்ஸியம் என்ற சுண்ணும்புச் சத்துடன் மோதுவதால், எண்ணெய் சரளமாக வர வழி ஏற்படுகிறது.

கையை மிருதுவாக்கிக்கொள்ள எலுமிச்சம் பழச் சாற்றைக் கையிலே தடவிக் கொள்பவர் உண்டு; தலை மயிரில் அதைத் தடவிப் பதம் செய்துகொள்வோரும் உண்டு. ஆனால், இதே எலுமிச்சம் பழத்திலிருந்து எடுக்கும் உபபொருள் ஒன்று, இரும்பைக் கடினப்படுத்தவும் உபயோகமாகிறது என்று அவர்களில் எத்தனை பேருக்குத் தெரியுமோ!

## முழு உண்மை

பல வருஷங்களுக்கு முன்னே மேற்குக் கெண்டக்கி ராஜ்யத்தில் ஒரு வழக்கு வந்தது. ஒருவன் காதை இன்னொருவன் கடித்துவிட்டதாகக் குற்றம் சாட்டினார்கள்.

வழக்கில் மிகவும் முக்கியமான சாட்சி ஒரு பணக்காரக் குடியானவக் கிழவர்.

கிழவரைப் பிராஸிக்யூஷன் தரப்பு வக்கீல், ''என்ன தாத்தா, வாதி காதை எதிரி கடித்ததை நீர் பார்த்தீரா?'' என்று கேட்டார்.

''இல்லை, ஸார்'' என்றார் கிழவர்.

**வக்கீல்:** இதோ பாரும்; நீரோ பிரமாணம் செய்து சாட்சி சொல்லுகிறீர். வாதி காதை எதிரி கடித்தார் என்று நம்ப ஆதாரமான எதையாவது பார்த்தீரா? யோசித்துச் சொல்லும்.

**கிழவர்:** இல்லை, ஸார்; இல்லை. ஆனால், நீங்கள் இவ்வளவு தூரம் சொல்லும்போது, ஒன்று எனக்கு நினைவு வருகிறது. வாதியோடு எதிரி சண்டையிட்டாரா; அப்புறம் எதிரி வாயிலிருந்து துப்பினார். ஒரு பெரிய காது வெளியே வந்து விழுந்தது. அது யார் காதோ? அதெல்லாம் எனக்குத் தெரியாது.

—ஜோ க்ரீஸன், 'லூயிஸ்வில் கூரியர்.'

தொழிலால் ஜாதி வேற்றுமை சிறிதும் பாராட்டாத மலைமக்கள் இவர்கள்.

# பெட்டா குறும்பர்

## பிலோ இருதயநாத்

ஊதகையிலிருந்து சுமார் நாற்பதாவது மைலில் உள்ள கூடலூர் சென்று, அங்கிருந்து தொரப்பள்ளி வரையில் போய், பிறகு மூங்கில் காட்டில் பயந்து பயந்து சுமார் இரண்டு மூன்று பர்லாங்கு தூரம் நடந்தால், பெட்டா குரும்பர்களைக் காணலாம். கூடலூரைச் சுற்றிலும் இவர்கள் சிதறுண்டு கூட்டங்களாகக் காட்டிலும் மலையுச்சியிலும் வாழ்கிறார்கள். இவர்களைக் காண மார்கழி, தை, மாசி மாதங்களே சிறந்தவை. இவர்களுடைய ஊருக்கு ரெயில் மார்க்கமே கிடையாது. மக்கள் இவர்களைப் 'பெட்டா' என்றும், 'குரும்பர்' என்றும் குறிப்பிடுகிறார்கள்.

இவர்களுடைய குடிசைகளைத் தனித் தனியாகவும், ஒன்றுக்கொன்று தூரத்திலும் கட்டியிருக்கிறார்கள். எல்லாக் குடிசைகளுக்கும் மத்தியில், பெரிய பந்தல்போல் ஒரு குடிசை கட்டியிருக்கிறார்கள். அதன் நான்கு பக்கங்களிலும் திறந்த வழி இருக்கிறது. அதில் சுமார் முப்பது முதல் நாற்பது பேர் வரையில் இரவில் படுத்து உறங்குகிறார்கள். அதைச் சுற்றிலும் இரவும் பகலும் கட்டைகள் எரிந்துகொண்டே இருக்கின்றன. மற்ற எல்லாரும் பந்தலில் தூங்கும் போது, இரண்டு பேர் மட்டும் காவல் காப்பதுண்டு. இவர்களுடைய குடிசைகள் முழுவதும் மூங்கிலால் அமைந்தவை.

பானைகள், மூங்கில் சாமான்கள், மண்வெட்டி, கடப்பாரை, அரிவாள், கிழிந்த ஆடைகள், தோணிகள், மூங்கில் பாய்கள் இவைதான் இவர்களுடைய முக்கியமான பொருள்கள்.

ஆண்கள் துண்டுடன் வேலை செய்கிறார்கள். சிறு கொண்டை போடுகிறார்கள். கரிய உடலுடன், உயரமாகவும் இருக்கிறார்கள். சிலர் மட்டும் கையில் பித்தளைக் காப்பு அணிந்து, காது குத்திக்கொண்டிருக்கிறார்கள்.

எல்லாப் பெண்களும் நெற்றியிலும் உடலிலும் பச்சை குத்திக்கொண்டிருக்கிறார்கள். முரடான துப்பட்டியை வேட்டி கட்டுவதைப்போல், வயிற்றுக்கு மேல் நெஞ்சில் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். மூங்கில் சீப்பால் தலையில் நடுக்கோடு எடுத்துத் தலை சீவிக்கொள்கிறார்கள். ரவிக்கை போடுவதில்லை.

ஆண்களும் சரி பெண்களும் சரி, வெளியில் சென்றாலும் சந்தைக்குச் சென்றாலும், இந்த ஆடைகளுடனேயே செல்வார்கள். பித்தளை நகைகளைப் பெண்கள் அதிகமாக அணிந்துகொள்கிறார்கள். கழுத்தில் கறுப்பு மணிச் சரமும், காதில் ஓலைச் சுருளும் அணிந்திருக்கிறார்கள்.



குடும்பமும் குடிசையும்

காப்பிரைட்: சுதேசமித்திரன் (தமிழ்: 14-9-'57), சென்னை.

பெண்கள் தலை சீவி ஒழுங்காக இருந்தாலும், தலையில் பூ வைக்கக் கூடாதாம்.

குழந்தைகளை வயிற்றில் அணைத்தாற்போல் தூக்கிச் செல்கிறார்கள். குழந்தை பிறந்ததும் பெரிய வடக் கயிற்றின் துண்டை எடுத்துக் கோழிமுட்டை வடிவமாக வைத்து, அதன் மத்தியில் துணியைப் போட்டு, அதில் குழந்தையைப் படுக்க வைக்கிறார்கள். குழந்தைக்கு ஏணையோ தொட்டிலோ போடுவதில்லை. குழந்தைகளைத் தூங்க வைப்பதாக இருந்தால், மடியிலும் காலிலும் தரையிலும் தோளிலுந்தான் தூங்கவைக்கிறார்கள். குழந்தைக்கு ஆறும் மாதம் பெயர் சூட்டும் நாளில், அதற்கு நீராட்டுவித்து, குல தெய்வத்துக்குப் பூஜை செய்து, தங்களுக்குப் பிரியமான பெயரை இடுவார்கள்.



நடனம் ஆடுகிறார்கள்

தனித்தனியாகவும் ஆண்களும் பெண்களும் கலந்தும் விசேஷ நாட்களில் நடனம் ஆடுவது உண்டு. நடனம் ஆடும்போது ஆண்கள், வாத்தியங்கள் வாசிப்பார்கள். இரவில் விளக்கு ஏற்றுவதில்லை; நெருப்புக் கட்டைகளின் வெளிச்சத்தில்தான் எல்லாக் காரியங்களையும் செய்துகொள்ள வேண்டும்.

இவர்களுக்குள் யார் எந்தத் தொழில் செய்தாலும் ஒருவருக்கொருவர் பெண் கொடுக்கல் வாங்கல் உண்டு. விவசாயியின் மகளைக் கூலி வேலை செய்கிற பெட்டாவோ, செருப்புத் தைக்கும் பெட்டாவோ திருமணம் செய்துகொள்ளுவான். பெண் ருதுவான பிறகுதான் திருமணம் நடைபெறும்.

பால்ய விவாகம் கிடையாது. காதல் திருமணம் பழங்கால முதல் நடைபெறுகிறதாம். தமக்கு வேண்டிய கணவனைப் பெண்களே தேர்ந்தெடுத்துக் கொள்ளுகிறார்கள். காதல் கொண்டதும், இருவரும் தங்கள் பெற்றோரின் காட்டைவிட்டு வேறு காட்டுக்குப் போய்விடுவார்கள்.

திருமணத்துக்கென்று, தம்பதிகளுக்குள் ஆடை ஒன்றும் தனியாக இல்லை; என்றும் அணியும் ஆடையைத்தான் திருமணத்துக்கும் அணிந்துகொள்வார்கள். திருமணத்துக்குத் தனி மண்டபம் கட்டுவது உண்டு. பெண் உள்ளூரில் இருந்தால், காலையில் பந்தலுக்கு அழைத்து வருவார்களாம். இல்லாவிட்டால், முன் நாள் இரவு அழைத்து வருவார்களாம். திருமணத்தில் தாலி கட்டுவதில்லை. பெண்களைப் பார்த்துச் சுமங்கலியா அமங்கலியா என்று தெரிந்துகொள்வது மிகவும் கஷ்டம்.

பிரியப்பட்டவனை விதவை மறுமணம் செய்துகொள்ளலாம். விதவைக்கு நடக்கும் மணச் சடங்கில் யாதொரு வித்தியாசமும் இல்லை. கணவன் இறந்து சில மாதங்களுக்குள்ளேகூட விதவை மறுமணம் செய்துகொள்ளுவாளாம்.

தம்பதிகளுக்குள் மனத்தாங்கல் ஏற்பட்டால், பஞ்சாயத்தாரின் மூலம் விவாக விலக்குச் செய்துகொள்ளுவார்கள். அவர்களுடைய குழந்தைகள், பஞ்சாயத்து முடிவின்படி தாயிடத்திலாவது, தந்தை இடத்திலாவது வளரும். விவாக விலக்குச் செய்த தம்பதிகள் மறுபடியும் மற்றவர்களை மணம் செய்துகொள்ளலாம்.

மயானச் சடங்கில் ஆணுக்கும் பெண்ணுக்கும் வித்தியாசம் கிடையாது. காட்டுக் கொம்பையோ, மூங்கிலையோ கட்டில்போல் பாடை கட்டுவதுண்டு. கணவன் இறந்தால் மனைவி தன் காதில் இருக்கும் நகையையும், தன் தலையின் வலது பக்கமிருந்து சில மயிரையும் எடுத்து முடி போட்டு, கணவனின் நெஞ்சில் வைக்க வேண்டும். இது தான் 'தாலி நீக்கும் சடங்கு'. மனைவி இறந்தால் கணவனும் அப்படியே செய்தபின், தலை மொட்டை அடித்துக்கொள்ளுவான். நல்லவர்கள் இறந்தபின் நூலேணியில் மோட்சத்துக்குப் போகிறார்கள் என்று இவர்கள் நம்புகிறார்கள்.

ஆணையோ பெண்ணையோ புதைக்கும்போது, அவர்கள் வாழ்க்கையில் உபயோகப்படுத்திய பொருள்களையும் பிணத்துடன் வைத்துப் புதைக்கும் பழக்கம் பல்லாண்டுகளாகவே இவர்களிடம் இருந்து வருகிறதாம்.

இவர்கள் கூலி வேலை செய்தோ, வயல் வேலை புரிந்தோ வேட்டையாடியோ பிழைக்கிறார்கள். எல்லா வித இறைச்சிகளையும் தானிய வகைகளையும் சாப்பிடுகிறார்கள்.

மூங்கில் வீடு கட்டுவது, மூங்கிலால் சாமான்கள் செய்து விற்பது, வாழைத் தோட்டத்தில் விளையும் பொருள்களை விற்பது, சுரைக் குடுக்கையில் தேன் சேகரித்து விற்பனை செய்வது - இப்படிப் பல வேலைகள் செய்கிறார்கள். எந்த வேலை செய்தாலும் பணம் போதாக் குறையால், அரை வயிற்றுக் கஞ்சிக்கும் வழியில்லாமல் பலர் இருக்கிறார்கள்.

ஒவ்வோர் ஊரிலும் ஒரு தலைவனும், கோவில் பூசாரி ஒருவனும் உண்டு. கிராமங்களில் குற்றங் குறைகள் நடந்தால், பஞ்சாயத்துக் கூடி, தலைவன், பூசாரி இவர்களின் முன்னிலையில் விசாரணை நடைபெறும். குற்றம் செய்தவர்களுக்குச் சிறிய தொகையை அபராதமாக விதிப்பது உண்டு. அந்தத் தொகையைக் கிராம நலனுக்காக வைப்பார்கள். சில சமயம் கோவில் செலவுக்காகவும் வைத்துக்கொள்வார்கள்.

'பொம்மன்', 'மாரி' என்ற இரண்டு குல தெய்வங்களை வணங்குகிறார்கள். அவற்றுக்குப் பொங்கல் இடுவார்கள். பெண்கள் கோவிலுக்குள் போகலாம்; பூஜை செய்து வணங்கலாம்.

பெட்டா குறும்பர் பேசுவது பழந்தமிழ். கொச்சையாகப் பேசுகிறார்கள். தமிழகத்தில் தமிழும், மலையாளத்தில் மலையாளமும் இவர்கள் பேசினாலும், தமிழனுக்கோ மலையாளிக்கோ புரியாதபடி வேகமாகப் பேசுகிறார்கள்.

கூடலூர் மலைப் பகுதிகளே தங்களுடைய பூர்விக இடம் என்று இவர்கள் கூறுகிறார்கள். இவர்களுடைய பழக்க வழக்கங்களையும், உடையின் தோற்றத்தையும், சாமான்களையும், உயரத்தையும், முகச்சாயலையும் கவனித்த எனக்கு, இவர்களைப்போல் உடையிலும் தோற்றத்திலும் ஜாவா, சுமத்திராவிலுள்ள சில ஆதிவாசிகள் இருப்பதைப்பற்றிப் படித்தது நினைவுக்கு வருகிறது. அவர்களும் தோள் வரையில் துப்பட்டிபோன்ற ஒரே துணியைச் சுற்றிக் கட்டுகிறார்களாம். மேலும், பர்மாவின் வடக்கிலுள்ள 'பதாங்' ஜாதியினரும் தங்கள் குழந்தைகளை இவர்களைப்போலவே தூக்கி வயிற்றில் அணைத்துக் கொள்ளுகிறார்களாம்.

'குவே நோடு, ஏன் நோடு,
குவே நோடு, ஏன் நோடு,
இக்கேல் நோடு,
மன மேலே, மன மேலே,
லா, லா, லா, லா;
லா, லா, லா, லா.
லிங்கே நோடு, தும்ப
சுரமயிலே—சுரமயிலே!
தேவிக்கி கமேட்டிக்கே
தேவிக்கி கமேட்டிக்கிகே'
(குவே)

என்று வட்டமாக நடனமாடி ஏதோ ராகத்தில் இவர்கள் பாடுகிறார்கள்.

மொத்தத்தில் புத்திக் கூர்மையும் தைரியமும் உள்ள மக்கள் இவர்கள்.

# அறிஞர் வ. ரா.

ஜமேதார் டி. எஸ். ராஜு

**பலரைத் தமிழில் எழுதத் தூண்டி ஆதரித்த எழுத்தாளர் தலைவர் வ. ரா. காலமாகி ஆறேழு வருஷங்கள் ஆகின்றன. அவருடைய பெயரால் நுங்கம்பாக்கத்தில் நண்பர்கள் 'வ. ரா. தமிழ்ச்சங்கம்' நிறுவிச் சில நாளைக்கு முன் ஆரம்ப விழாவும் நடத்தினார்கள். தமிழிலே ஒரு மறுமலர்ச்சி இயக்கத்தைத் தூண்டி விட்ட அவரைக் குறித்த ஒரு குணசித்திரம் இது.**

வ. ரா. அவர்களை முதியவர் என்று கூறுவது பொருந்தாது. வயசான இளைஞர் என்று வேண்டுமானால் கூறலாம். அவருடைய நடையிலும் பேச்சிலும் கடைசி நாள் வரையில் இளமையின் மிடுக்கு இருந்தது. தலை நரைத்துத் தும்பை மலராகியிருந்தும், அவருடைய உணர்வு 'நரைக்க'வில்லை. சதா விழிப்புடனிருந்து பொய்மையையும் அழுக்கையும் நையப் புடைத்தார், எழுத்தினால்.

மெலிந்த கோதுமை நிற உடல்; நடையிலே ஒரு வாலிபத் துடிதுடிப்பு; வெள்ளிய உடையும் தலைமுடியும்; ஆளை ஊடுருவி எடைபோடும் தராசுப் பார்வை; வெண்கல மணியின் நாதம் போன்ற பேச்சு; கபடமற்ற நகைப்பு - இந்த வர்ணனையின் மூலம் ஒருவாறு அவரைக் கற்பனை செய்து கொள்ளுவது சாத்தியம்.

பக்த லட்சணங்களில் முக்கியமானது எளிமை-தோற்றத்திலும் பழக்க வழக்கத்திலும் எளிமை. பரமனைக் குறித்துப் பாடியவர்கள் அவனை எளியவன் - கருத்துக்கும் காட்சிக்கும் இனியவன் - என்று கூறுகிறார்கள். ஒருவரைக் கண்டவுடன் நம் மனத்தில் அவரை வணங்க வேண்டும் என்ற எண்ணம் எழுகிறது. அத்தகைய எண்ணத்தைத் தோற்றுவிப்பது எது? தூய்மை பொருந்திய எளிமை. அந்த எளிமை ஒழுக்கத்தினால் ஒளிர்கிறது. இது வ. ரா. அவர்களிடம் மிகுந்திருந்தது. அங்காடிக்காரி அம்மாக்கண்ணுவிலிருந்து மாகாண முதலமைச்சர் வரையில் அவரை அனைவரும் நச்சினார்கள். அனைவரிடமும் ஒரே மாதிரியான பழக்கம்; அன்பொழுகும் வார்த்தைகள். என்றும் எவருக்காகவும் அவர் நடுவு நிலைமை பிறழ்ந்ததே கிடையாது.

வ. ரா. மகாகவி பாரதியாருடன் வாழ்ந்தவர். மகாகவி புதுவையில் அஞ்ஞாத வாசம் புரிந்து சாம்பிய போது கனகசுப்புரத்தினம் (பாரதிதாசன்), வ. ரா. ஆகியவர்கள் அவருக்கு உற்ற துணைவராக இருந்தார்கள். மகாகவியின் ஒவ்வோர் உளநிலையிலும் அவருக்குத் தோன்றிய காட்சிகள், அவர் வாழ்ந்த ஆதர்ச வாழ்க்கை ஆகியவை குறித்துத் தமது 'மகாகவி பாரதியார்' என்ற நூலில் வ. ரா. குறிப்பிட்டிருக்கிறார். பாரதியாரின் சரித்திரத்தைக் குறித்த ஆதாரபூர்வமான நூல் இது.

தமிழ் நாட்டில் எத்தனையோ மகாகவிகள் தோன்றியிருக்கிறார்கள்; வசன கர்த்தாக்களும் வாழ்ந்திருக்கிறார்கள். என்றாலும் 'பார

மூலம்: சைனிக் சமாசார் (தமிழ்: 5-1-'58), புது டில்லி;

திக்குப் பிறகு வ. ரா.' என்ற அடைமொழி பெற்று, வசன நடையில் வல்ல வ. ரா. ஒருவரே விளங்கினார். வேறுபட்ட பல வகைக் கருத்துடைய எழுத்தாளர் களும் வ. ரா. அவர்களைத் தடை யில்லாது தங்கள் முதல்வராக ஏற்றுக்கொண்டார்கள். அந்த ரகசியத்தின் காரணம் என்ன?

எனக்கு மூன்று காரணங்கள் தோன்றுகின்றன: முதலாவது, அவ ருடைய நடுவு நிலைமை; இரண்டா வது, அவருடைய தார்மிக ஆவே சம்; மூன்றாவது, போலிச் சம்பிர தாயங்களில் அவருக்கு இருந்த வெறுப்பு. இந்தக் காரணங்களி னால் அவர் யார்க்கும் எளியனாய் இனியனாய் வாழ்ந்தார்; இன்றும் நம் நினைவில் வாழ்கிறார்.

'சமன்செய்து சீர்தூக்கும் கோல் போல் அமைந் தொருபால் - கோடாமை சான்றோர்க் கணி' என்றும், 'சொற்கோட்டம் இல் லது செப்பம் ஒரு தலையா - உட் கோட்டம் இன்மை பெறின்' என்றும் நடுவு நிலைமை குறித்து இறையனார் அருளினார். இத்தகைய நடுநிலைமையைத் தனி வாழ்விலும் எழுத்துலகிலும் வ. ரா. பின்பற்றி னார். சமூக வாழ்வில் ஒருவர் எத்தகைய உயர்வு பெற்றிருந்த போதிலும், அவர் வெளியிட்ட கருத்துக்களில் ஏதாவது தவறு இருக்குமானால், அதைத் துணிச் சலுடன் வன்மையாக - ஆனால் கண்ணியமாக - வ. ரா. கண்டித் தார். பல பிரமுகர்கள் இவருடைய பேனாவால் மொத்துண்டதுண்டு. பின் நாளில் அதே மனிதர் தம் கருத்துக்களை மாற்றிக்கொண்டு விடும்போது, அவரை வ. ரா. போற்றிப் புகழ்வார்.

எத்தகைய ஆரம்ப எழுத்தாள னாக இருந்தாலும், அவனுடைய எழுத்தில் நல்ல கருத்துக்களின் கரு தென்படுமானால் அதைப் பாராட்ட வ.ரா. தயங்கமாட்டார். கொஞ்சம் மிகைப்படுத்தியேகூடப் புகழ்ந்து தூக்கிவிட்டு விடுவார். அதனால் இலக்கிய உலகில் இவருக்குக் 'கலிஸ்தீனஸ்' என்று பெயர். ''போனால் போகிறானே; உண்மையி லேயே அவன் உழைக்கத் தொடங் கினால், சரக்கு நயமுள்ளதாக இருந்தால், தன்னால் விலை போகி றது; இல்லையானால், தானே விழுந்து விடுகிறது'' என்று நண்பர் களுக்கு வ. ரா. சமாதானம் கூறு வார். இவர் மூலம் ஆதரவு பெற்று முன்னுக்கு வந்த எழுத்தாளர் மிகப் பலர். பாரதியாரைக் குறித்து யாரும் குறைவாக ஒன்றும் கூறி விடக் கூடாது. வ. ரா. உடனே வக் காலத்து வாங்கிக்கொண்டு சண் டைக்குக் கிளம்பிவிடுவார். 'பாரதி யார் மகாகவியா அல்லவா?' என் றோர் அர்த்தமற்ற சர்ச்சை தமி ழிலக்கிய உலகில் தோன்றியது. அப்போது இவருடைய பேனாவி லிருந்து பிறந்த சொல்லம்புகள் மின்னும் திறனுடையனவாக இருந்தன.

வ. ரா. அவர்கள் வியக்கத்தக்க தார்மிக ஆவேசம் உடையவர். தனி வாழ்விலும் சமுதாயத்திலும் உள்ள மாசுகளைக் களைந்தெடுத் தார். எழுத்துலகில் இவருடைய தார்மிக ஆவேசத்தின் விளைவாகப் பிறந்த நூல் 'சுந்தரி'. நாற்பது வருஷங்களுக்கு முன்பு இவர் அதை எழுதினார் என்பதை நினை வில் வைத்துக்கொண்டோமானால், 'வ. ரா. எத்தகைய அற்புதமான முன்னோக்கு உடையவர்!' என்று வியக்கத் தோன்றும். 'சுந்தரி விதவை சகுனத்தடை' என்ற பல் லவியுடன் அவர் ஓர் அத்தியாயத் தையே தொடங்குகிறார். ஒவ் வொரு சரணத்துக்குப் பிறகும் இந்தப் பல்லவி எழும். அப்போ தெல்லாம் நம் நெஞ்சு எழும்பி மூச்சை அடைக்கும். ஒரே ஓர் உதாரணம்:

'படைப்பிலே இதுவரையில் ஜாதி ஆணும் பெண்ணும். அவர் கள்கூட வந்த நீயும் நானும், மலை யும் மடுவுமோ? அல்லது கனலும் காற்றுமோ? நீ என்னைக் கொல்லு; அதை உன் சக்தியென்று சொல்லு. என்னை ஏமாற்று; அதற்கு உன் புத்தி என்று பெயர் கொடு. எனக்குச் சோறில்லாமலடி; அதை உன் சம்பாத்தியம் என்று கூறு. நான் பேசுவது நாஸ்தி கம்; தாங்கள் உபதேசிப்பது வேதத்தின் உட்கருத்து. என்

னுடையது மனிதப் பேச்சு. தங்களுடையது அருள் நிறைந்து அழகு பொருந்திய தெய்வ வாக்கு. நான் சொல்லுவது கட்டுக்கடங்காத வார்த்தை; தாங்கள் உரைப்பது தர்ம சாஸ்திரம். இது தங்களுடைய அதிருஷ்டம்; என்னுடைய தலை விதி. சுந்தரி விதவை சகுனத் தடை.'

போதுமா?

வ. ரா. வின் நடையில் அவருடைய தர்மாவேசக் கருத்துக்கள் வெடித்துச் சிதறின. பின்னும் இவர் எழுதிய 'விஜயா,' 'கற்றது குற்றமா?' 'புண்ணியமும் பலவீனமும்', 'நடைச் சித்திரம்' ஆகிய அனைத்திலும் தோன்றிய உட்கருத்து ஒன்றேதான். அதுதான் சமூக மாசைத் துடைப்பது. அவர் எழுதிய சிறுகதைகள், எனக்கு மகாகவி தாகூரின் சொல்லோவியங்களை நினைவூட்டும். சிந்தனையின் தெளிவான பாதை எல்லாருக்கும் ஒன்றல்லவா? அவருடைய கணபதிராயன் அதியற்புதமான கற்பனை. விரும்பினால் நாம் அனைவரும் அந்தக் கணபதிராயனை நம் முன்பு அழைத்துப் பேச வைக்கலாம்.

வ. ரா. ஒரு பூணூலில்லாத பிராமணர். தம் சொந்த வாழ்வில் பொய்மைச் சாதி வகுப்பினைத் தகர்த்துக் கட்டு மீறியவர். என்றாலும், அவர் எந்த வகுப்பினரையும் சொல்லாலோ எழுத்தாலோ பகைத்தது கிடையாது. வகுப்பில் உள்ள தீமையைப் பகைத்தார்; பெயர்த்தார்.

சமுதாயத்தில் வாழும் நாம் அனைவரும் ஒரு விதத்தில் போலி ஆசாரங்களுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் அடிமைகள். அவற்றிலிருந்து விடுபட நமக்குத் தைரியம் கிடையாது. ஆனால் வ. ரா. அந்தப் போலி எல்லையை மீறியவர். சொல்லளவில்கூடப் போலி மரியாதையை எதிர்த்தார்; வெறுத்தார். எவராவது ஒருவர், ''தங்களைப் பார்க்க வந்தேன்'' என்று கூறி அவர் வீட்டுக்குள் நுழைந்தார்களானால், ''பார்த்தாகிவிட்டதா? போகலாமே'' என்று பளீரென்று பதில் கூறுவார். அகத்திலும் புறத்திலும் ஒரே தன்மையை வளர்க்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தும் அவரையொத்த பெரியவர் இன்னொருவரை நான் இன்னமும் சந்திக்கவிருக்கிறேன்.

அவருடைய அநாயாச மரணத்துக்குப் பின் நிகழ்ந்த ஒரே ஒரு சம்பவம் என் மனத்தில் நிற்கிறது. ருத்திர பூமிக்கு அவருடைய பூத உடலைச் சுமந்து செல்ல எழுத்தாளர்களும் நாடகக் கலைஞர்களும் அரசியல்வாதிகளும் பத்திரிகையாளர்களும் முன் வந்தார்கள். ஒவ்வொருவரும் அவரிடம் உரிமை கொண்டாடினர். கபீர்தாஸின் மரணத்துக்குப் பின் முஸ்லிம்களும் இந்துக்களும் கூறியதைப் போல், கடைசியில் நால்வகைத் துறையில் உள்ளவர்களும் அவரை அந்திம யாத்திரைக்கு இட்டேகினர்கள்.

''படிப்பதற்கென்று வாழ்நாளில் ஒரு குறிப்பிட்ட பகுதியை மிகுத்து வைத்துக்கொள்ள வேண்டும். படித்த பின்பு அதைக் குறித்து ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். பல கோணத்தில் நின்று ஒரே சம்பவத்தைக் காணப் பயில வேண்டும்'' என்று அவர் வற்புறுத்தினர். ''கௌதமர் உலகத்துக்குச் செய்த சேவை மிகப் பெரியது. ஆனால் கணவர் என்ற கடமையிலிருந்து அவர் வழுவினரல்லவா?'' என்று கேட்கும் துணிச்சல் அவருக்கு இருந்தது. ''கற்பில் சிறந்த மாசற்ற கண்ணகியிடம் காணாத எந்த உயர்ந்த தன்மையை மாதவியிடம் கோவலன் கண்டான்? அதைக் குறித்து நம்மில் எத்தனை பேர் சிந்தித்திருக்கிறோம்?'' என்று அவர் கேட்பார்.

''புதிதாக எழுத வேண்டும். சகதி மலிந்த குழிகள் நிறைந்த பாதையிலே செல்லுவது தவறு. புதிதாகச் சிந்தித்துப் புதிய பாதை ஒன்றை ஒவ்வொருவனும் தனக்காக ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்'' என்பது அவருடைய உபதேசம். இந்தக் கொள்கையின் படி அவரே நடந்தார். இலக்கணம் இலக்கியத்துக்கு ஊறு செய்யுமானால், இலக்கணத்தையே மாற்ற வேண்டும் என்ற துணிச்சலான

கருத்தை வ. ரா. பரப்பினர். அவர் கூறியதெல்லாம் அழகும் எளிமையும் மிகுந்திருந்தன.

தற்காலத் தமிழர்கள் பெரும் பாக்கியசாலிகள். 'இத்தகைய தமிழின் முழு உருவினர் எம்மிடையே வாழ்ந்தார். உயர்ந்த சிந்தனைகளைத் தூண்டும்படி பேசினர்; எழுதினர்' என்று அவர்கள் பெருமைப்படலாம். அவர்களுள் நான் மிகப் பெரும் பாக்கியசாலி. இத்தகைய பெருந்தகை ஒருவரின் அன்புக்கு நான் பாத்திரனக இருந்தேன். எழுத்துத் துறையில் உள்ள ஆனந்தத்தை அவர் எனக்கு எடுத்துக் காட்டினர். 'என் வாழ்வில் புதிய திருப்பத்தையும் மனமலர்ச்சியையும் உண்டாக்கினர்' என்று எண்ணும்போது, என் நெஞ்சு பூரிக்கிறது.

வ ரா. அவர்கள் இன்று நம்மிடையே இல்லை. ஆயினும் 'அவர் நம் நெஞ்சத்தில் நீடூழி வாழ்வாராக!' என்பதுதான் ஒவ்வொரு தமிழ் எழுத்தாளனுடைய பிரார்த்தனையும். வாழ்க வ. ரா!

## மண்டைக் கனம்!

ஸர் ஹெர்பர்ட் பீர்பாம் ட்ரீ என்பவர் ஒரு நாடகக் கொட்டகையின் மானேஜர். நல்ல திறமை வாய்ந்த நடிகர் ஒருவரை ஒரு சமயம் தம் கொட்டகையில் நடிக்க அவர் அமர்த்திக்கொண்டார். ஒவ்வொரு தடவை வெற்றி ஏற்படும்போதும், நடிகருடைய மண்டைக் கனம் ஏறிக் கொண்டே போயிற்று.

ஒரு தடவை புதிய நாடகம் ஒன்று நடந்தது. நடிகர் நடித்து விட்டு மேடையை விட்டு நகர்ந்து பக்கத்து நிலைப்படி வழியே வெகு கம்பீரமாக வெளியேறினர். அடுத்த நிமிஷம் 'படீர்' என்று ஏதோ வெடிச் சப்தம் வீதியிலே கேட்டது; கொட்டகையே அதிர்ந்தது.

மீதி நடிகர்களெல்லாம் ஏதோ என்னவோ என்று கவலை தோய்ந்த முகத்துடன் கொட்டகை மானேஜரைப் பார்த்தார்கள்.

மானேஜர், ''அப்பாடா! கடைசியாக ஆசாமியின் மண்டை வெடித்தே விட்டது!'' என்று சொல்லிப் பெருமூச்சு விட்டார்.

—'ஃபேமஸ் ஃபேபிள்ஸ்'

## நஷ்டம் இல்லை!

வெகுநாள் வரைக்கும் மணம் செய்துகொள்ளாமலே இருந்த ஒருவன், கடைசியில் ஒருத்தியை மணந்துகொண்டான். ஆனல், மணமான சில மாதத்துக் குள்ளாகவே அவள் பிரிந்துவிட்டாள்.

கேட்டவர்களுக்கு இதைப்பற்றிக் கணவன் ஒரு வேதாந்தியைப் போல இப்படிச் சமாதானம் சொன்னன்: ''அவள் போனதும் ஒரு நல்லதுக்குத்தான். நான் சமையல் செய்த போதெல்லாம் அவள் குறுக்கிட்டது பெரிய உபத்திரவமாயிருந்தது.''

—'தி எக்ஸ் - சேஞ்சு'

கிரிக்கெட், புட்பால் என்றெல்லாம் வந்த் இந்த நாளில்கூட இந்தப் பொழுது போக்கு நின்றுவிடவில்லை.



# புருப் பந்தயம்

★

ஒரு காலத்தில் மொகலாயரின் கலாசாரத்துக்குப் பெயர் போன ஆக்ராவில் கால் பந்து, கிரிக்கெட்டு, ஹாக்கி இந்த விளையாட்டுக்களைவிடப் புருக்களைப் பறக்க விடுவதுதான் இன்னுங்கூட முக்கியமான ஒரு பொழுதுபோக்காக இருந்து வருகிறது.

சிங்க வேட்டை, யானைகளைச் சண்டைக்கு விட்டு வேடிக்கை பார்ப்பது போன்ற ராஜரிகமான பொழுதுபோக்குகளெல்லாம் அடியோடு மறைந்துவிட்டன. மொகலாயர் காலத்துப் பொழுது போக்கு இப்படிப் புருப் பறக்க விடுவது. முஸ்லிம்களுக்குத்தான் வெகு காலமாக இதில் ஈடுபாடு. பாகிஸ்தான் இந்தியாவை விட்டுப் பிரிந்த பிறகு அவர்களில் பலர் அங்கே போய்விட்டார்கள். ஆனாலும், இன்னும் அநேகம் பேருக்குப் புருப் பறக்கவிடுவதில் ஆர்வம் இருந்துதான் வருகிறது.

ஆக்ராவில் புரு வளர்க்கும் இடங்கள் சுமார் 2,000-க்கு இருக்கும். மொத்தம் ஒரு லட்சம் புருக்களை இங்கே வளர்க்கிறார்கள். புருக்களுக்காக 20,000 ரூபாய்க்கு முதல் போட்டிருக்கிறார்கள். இப்படிப் புரு வளர்க்கும் இடங்களில் புருவின் தொகைக்கு ஏற்றபடி மாதம் ரூ. 25 முதல் ரூ. 125 வரையில் செலவாகும்.

பொழுதுபோக்காகப் பிராணிகளை வளர்ப்பதில் இருப்பது போலவே புரு வளர்ப்பிலும் பல தொல்லைகள் உண்டு. நோய் கண்டு புருக்கள் ஏராளமாக இறக்க நேரிடலாம். ஆகவே, தீனி போடும்போது கவனித்துப் போடவேண்டும். பந்தயத்தில் புரு ஜெயிப்பதோ தோற்பதோ அதன் தீனியைப் பொறுத்தது. சர்க்கரை போட்டு வளர்த்தால் மிகவும் உயரப் பறக்கும் என்றும், '(பால்) கோவா' போட்டு வளர்த்தால் நெடுந்தூரம் பறக்கும் என்றும், தினை வகையைச் சேர்ந்த தானியங்களைச் சாராயத்தில் ஊறவைத்துப் போட்டால் மிக முரட்டுத்தனமாக நடந்துகொள்ளு மென்றும் கேள்வி.

இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை 'குல்குலோங்-கா-மேலா' என்ற ஒரு புருச் சந்தை இந்த ஊரில் கூடுகிறது. இது எட்டு நாள் நடக்கும். புரு அபிமானிகள் ஆயிரக்கணக்கில் இங்கே கூடுவார்கள். இந்த ஆண்டு 10,000 புருக்களோடு, 300 கோஷ்டியார் வந்து இதில் கலந்துகொண்டார்கள். பாகிஸ்தான் பிரிவினைக்குப் பின் இந்தப் பந்தயத்தில் உற்சாகம் குன்றிவிட்டது; இப்போதுதான் மறுபடியும் இப்படி ஊக்கம் பிறந்திருக்கிறது.

புருச் சந்தை கூடுவதற்கு முன் இதற்கான ஏற்பாடுகளெல்லாம் மும்முரமாக நடக்கும். ஒரு பஞ்சாயத்துக் கூடி எங்கே என்ன என்ன தேதியில் அதை நடத்துவது என்று (இது ஒவ்வொரு நாளும் இடம் மாறும்) தீர்மானிப்பார்கள். புருப் பந்தயத்தில் சேருபவர் 15,20 நாட்களுக்கு முன்னதாகவே தயாராக இருக்கும்படி தகவல் கொடுத்துவிடுவார்கள்.

இந்தக் காலத்துப் பொழுது போக்கு விளையாட்டுக்களைப்போல் புத்தகத்தில் குறித்துள்ள விதிகள்

மூலம்: டைம்ஸ் அவ் இண்டியா (ஆங்கிலம்), டில்லி.

எவையும் புருப்பந்தயத்தில் இல்லை. மொகலாயர் காலத்திலிருந்து வழங்கிவரும் விதிமுறைகளைக் கடைப்பிடிக்கிருர்கள் புருப் பந்தயத்தில்.

இதற்கென்றே பழக்கிய புருக்களின் கோஷ்டிகள் ஒன்ருேடு ஒன்று மோதிக்கொள்ளும்போது பார்க்க வேண்டும்; ஒரே பரபரப்பாக இருக்கும். மேலே பறக்க விட்டதும் வர்ணக் கொடிகளைக் காட்டியும் சீட்டியடித்தும் எதிரும் புதிருமாக இரண்டு கோஷ்டிப் புருக்களையும் ஏவி விடுவார்கள். இந்த இரண்டு கோஷ்டியும் வானத்தில் மோதிக்கொள்ளும்போது அந்த அந்தக் கோஷ்டிக்கு உரியவர்கள் உரக்கக் கூவிக் குட்டிப் புருக்களையும் தானியங்களையும் மேலே வீசி எறிவார்கள். தங்களுக்குச் சொந்தமான புருக்களோடு எதிரியின் புருக்களையும் பிடிக்க வேண்டுமென்றே இப்படிச் செய்கிருர்கள்.

போட்டிகளில் இந்த மாதிரி புருக்களைப் பிடிப்பதற்கு விசேஷத் திறமை வேண்டும். இதற்குப் பலவித உபாயங்களைக் கடைப்பிடிக்கிருர்கள். புருக்களைத் தாழப் பறக்கவிட்டுத் திடீரென்று ஆகாய வெடிபோல் விர் என்று மேலே எழும்பி அங்கே பறக்கும் எதிரிக் கோஷ்டிப் புருக்களின் மேல் மோதும்படி பழக்கியிருப்பது இதில் பிரசித்தமான ஒரு முறை. மேலே உயரத்தில் செல்லும் புருக்கள் இப்படித் தங்கள்மேல் கீழிருந்து புருக்கோஷ்டி மோதியதும் திகைத்துப்போய்த் தம் கோஷ்டியை விட்டுவிட்டுக் கீழே இறங்கும்; அப்போது இன்னது செய்வதென்று புரியாமலே தங்களைத் தாக்கிய புருக் கோஷ்டியைத் தொடர்ந்து செல்லும்.

சிலவகைப் புருக்களுக்குத் தம் எஜமானர்கள் இன்னுரென்று நன்ருகத் தெரியும். அவைகளை இப்படி லேசில் ஏமாற்றிப் பிடித்துவிட முடியாது; கேரா, மஹுகா, லால்பான், ஷிராஜி, லீலா, நகப்போஷ், கால் இவை இந்த வகையைச் சேர்ந்த புருக்கள்.

இந்தப் புருக்களை மேலே பறக்க விடும்போதும் சரி, ஒன்ருேடொன்று மோத விடும்போதும் சரி, பார்க்கவேண்டும்! பிரமாதமாக இருக்கும். அந்த அந்தக் கோஷ்டிக்கு ஏற்றபடி வர்ணம் பூசிப் பெரிய கூண்டில் வைத்திருப்பார்கள். கூண்டின்மேல் ஒரு வலை போட்டு மூடித் தயாராகப் பந்தய மைதானத்துக்கு அருகில் ஓர் இடத்தில் வைத்திருப்பார்கள்.

கூண்டுக்கு எதிரே ஒரு ஜமுக்காளமோ கித்தானே வழிபோல் விரித்திருக்கும். கூண்டின் கதவைத் திறந்ததும் சற்று நேரம் இவைகளை வெயிலில் நடமாட விடுவார்கள். மேலே இவைகளை வானத்தில் மோதவிடுவதற்கு முன் தரையில் அதைப்போல் ஒத்திகை நடத்துவார்கள்.

பகல் 10 மணிக்குத் தொடங்கி மாலை 5 மணிவரைக்கும் தினந்தோறும் இந்தப் பந்தயம் நடக்கும். கடைசியாக, சீட்டியடித்ததும் 'சிறைப்பிடித்த' புருக்களை மாற்றிக்கொள்வது, விலைக்கு வாங்குவது இந்த மாதிரி பேரங்களில் சொந்தக்காரர்கள் ஈடுபடுவார்கள். நன்ருகப் பழக்கிய புருக்களை எதிரிக் கோஷ்டியார் பிடித்துவிட்டால் அவற்றின் சொந்தக்காரர்கள் ஏராளமான தொகை கொடுத்தால் தான் அவைகளைத் திரும்பக் கொடுக்க முடியும் என்பார்கள் பிடித்தவர்கள்.

## சாலை எச்சரிக்கை

ஆப்பிரிக்காவில் லாகோஸ் காலனியில் உள்ள சாலை எச்சரிக்கை இது: ''அவன் பார்த்தான்; அவள் பார்க்கவில்லை. அவன் இருக்கிருன்; அவள் இல்லை.''

—'தி டெய்லி டெலிக்ராஃப்'

# பல கலைகளின் வழிகாட்டி

## கொடுமுடி ராஜகோபாலன்

இலக்கியம், கவிதை, தத்துவம், அரசியல், தர்க்கம், கணிதம், விஞ்ஞானம் இப்படி வாழ்வின் சகல துறைகளிலும் பல நூற்றாண்டுகள் மறுக்க முடியாத பிரமாணமாக ஐரோப்பியர் கொண்டது இந்த ஞானியைத்தான். இன்றுங்கூட விஞ்ஞானம் போக மீதித் துறைகளில் இவருடைய கருத்துக்களைப் பெரிதும் போற்றுகிறார்கள். கொடுமுடி ராஜகோபாலனின் 'ஆட்சிக் கலை' வரிசையில் மூன்றாவது புஸ்தகத்திலிருந்து எடுத்தது இந்த வரலாற்றுச் சுருக்கம்.

அரிஸ்டாட்டில், அறிஞர் மட்டுமல்ல; பௌதிகம், இயற்கை இயல், தத்துவஞானம் முதலிய உயரிய சாத்திரங்களுக்கும் வழி காட்டியவர். கிரேக்க ஞானப்புதல்வர். பிளேட்டோவிடம் குருகுல வாசம் செய்தவர். ஆயினும், தம் குருநாதரின் கருத்துக்கள் அனைத்தையும் அரிஸ்டாட்டில் அப்படியே ஏற்றுக்கொள்ளவில்லை. பிளேட்டோவின் கருத்துக்களுக்கு மாறுபட்ட பல கருத்துக்களை மிகவும் துணிவுடன் தெளிவுற எடுத்துரைத்தார்.

கி. மு. 384-இல், கிரீஸ் தேசத்தில், கால்ஸிடிஸே தீபகல்பத்தின் வடகிழக்குக் கடற்கரையில் உள்ள ஸ்டாகிரா என்ற சிறிய நகரில் அரிஸ்டாட்டில் பிறந்தார். இந்த நகருக்கு இப்போது ஸ்டாவ்ரோ என்று பெயர் வழங்குகிறது. அரிஸ்டாட்டிலின் தந்தை நிகோமாக்கஸ் பிரபல வைத்தியர்; மாஸிடோனிய மன்னனான அமின்டாஸின் அருமை நண்பர். அரிஸ்டாட்டிலின் தாய்க்குப் பெயஸ்டீஸ் என்று பெயர்.

அரிஸ்டாட்டில் தம் இளம் பிராயத்திலேயே ராஜ குடும்பத்துடன் நெருக்கமான உறவுகொண்டிருந்தார். சிறு வயசில் பெற்றோர்களை இழந்துவிட்டார். பிராக்ஸெனிஸ் என்ற உறவினர் ஒருவருடைய வீட்டில் சில காலம் வளர்ந்துவர நேர்ந்தது. ஏதென்ஸ் நகரில் இருந்த பிளேட்டோவின் குருகுலத்தில் அரிஸ்டாட்டில் பதினெட்டாவது வயசில் சேர்ந்தார். அறிவுச்சுடர் வீசி நின்ற-பண்பு மிகுந்திருந்த - அந்தக் குருகுலத்தில்தான் அரிஸ்டாட்டில் ஞானக்கண் பெற்றார். அங்கே அவர் இருபது ஆண்டுகள் பயின்றார். பிளேட்டோவின் சித்தாந்தம் அவருக்கு வழிகாட்டியாக அமைந்தது.

இந்த இருபது வருஷமும் அவர் வெறும் மாணவராக மட்டும் தம் காலத்தைக் கழிக்கவில்லை. அந்த நாளில் கிரேக்க நாட்டின் கல்விச்சாலைகள், வெறும் எழுத்தறிவூட்டும் பள்ளிக்கூடங்களாக மட்டும் இல்லை; சமுதாய நல உணர்ச்சியும், அடிப்படைக் கருத்தொற்றுமையும், சீரிய லட்சிய நோக்கும் கொண்டவர்களின் ஆராய்ச்சிச்சாலைகளாகவும் அவை விளங்கின. உதாரணமாக, பிளேட்டோவின் குருகுலத்தையே எடுத்

மூலம்: ஆட்சிக் கலை-3: அரிஸ்டாட்டில் (தமிழ்ப் புஸ்தகம்), வெளியிட்டவர்: ஸ்டார் பிரசுரம், திருவல்லிக்கேணி, சென்னை-5. விலை ரூ. 2.

துக்கொள்வோம். இங்கே பலர், பிளேட்டோவின் சீடர்களாக இருந்து அவரிடம் பாடம் கேட்டறிந்தார்கள்; பல விஷயங்களை ஆராய்ச்சி செய்தார்கள். இயற்கை விஞ்ஞான அறிவியல் துறையிலே, அவர்கள் எல்லாரையும் காட்டிலும் அரிஸ்டாட்டில் வெகுதூரம் முன்னேறிவிட்டார்.

கி. மு. 387-இல், பிளேட்டோவுக்குப் பின், ஸ்பியூஸிப்பஸ் என்பவர், பிளேட்டோவின் குருகுலத்தின் அத்தியட்சகராக வந்தார். அவர் காலத்தில்தான், அரிஸ்டாட்டில் அந்தக் குருகுலத்தை விட்டு வெளியேறினார். ஸ்பியூஸிப்பஸ் காலத்தில், குருகுலத்தில் தத்துவ ஞானத்தின் முக்கியத்துவத்தைக் குறைத்துக் கணித சாஸ்திரத்துக்கு அதிக முக்கியத்துவம் தந்ததை அரிஸ்டாட்டில் வன்மையாகக் கண்டித்தார். அவருக்கு அங்கே தொடர்ந்து இருக்க மனமில்லை. தவிரவும், ஏதென்ஸ் நகரில் மாஸிடோனியர்மீது வெறுப்பு அதிகரித்தது. அரிஸ்டாட்டிலுக்கு இது அதிக வருத்தத்தைத் தந்தது. அவருடைய குருகுலத் தோழனும், மைஸியா பிரதேசத்துச் சிற்றரசனுமான ஹெர்மியஸ் என்பவன், அவரைத் தன் ஊருக்கு வந்துவிடும்படி அழைத்தான். அரிஸ்டாட்டில் அங்கே சென்றார். ஹெர்மியஸின் ஸ்வீகாரப் புதல்வியான பைதியாஸை மணந்தார். ஒரு பெண் மகவைப் பெற்றுவிட்டு அவள் சிறிது காலத்துக்குள்ளேயே இறந்துவிட்டாள். பின்பு அரிஸ்டாட்டில் ஹெர்பில்லிஸ் என்பவளைத் தம் வாழ்க்கைத் துணைவியாக ஏற்றார். ஆனால் இவர்களுடைய தாம்பத்தியம் சட்டப்படி ஏற்பட்டதல்ல. இவளிடம் அரிஸ்டாட்டிலுக்குப் பிறந்த மகன், நிக்கோமாக்கஸ் என்ற பெயருடன் விளங்கினான். அரிஸ்டாட்டில் இதன்பின் மிடிலீன் என்ற நகரில் குடியேறினார். தாம் முன்பு வசித்து வந்த அஸ்ஸாஸ் நகரிலும் சரி, இந்த மிடிலீன் நகரிலும் சரி உயிரியல் ஆராய்ச்சியில் அரிஸ்டாட்டில் தீவிரமாக ஈடுபட்டிருந்தார்.

கி. மு. 343-இல் மாஸிடோனிய மன்னன் பிலிப், தன் மகன் அலெக்ஸாந்தருக்கு ஆசிரியராக இருக்கும்படி அரிஸ்டாட்டிலை அழைத்தான். அரிஸ்டாட்டிலும் இந்தப் பதவியை மிக மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டார். அலெக்ஸாந்தருக்கோ வயசு பதின்மூன்றுதான். கிரேக்க இலக்கியத்தைப்பற்றித் தன் குமாரன் நன்ருகத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதே மன்னன் பிலிப்பின் விருப்பம். அதற்காகவே, அவன் அரிஸ்டாட்டிலைத் தன் மகனுக்கு ஆசிரியராக நியமித்தான். ஆனால், அரிஸ்டாட்டிலோ இந்த வாய்ப்பை வேறு விதமாகப் பயன்படுத்திக் கொண்டார். அலெக்ஸாந்தரை ஆட்சிக் கலையில் தேர்ந்தவன் ஆக்கிவிட வேண்டும் என்பதே அவருடைய பேரவா. எனவே, இளவரசன் அலெக்ஸாந்தருக்கு மன்னரின் கடமைகளையும் ஆட்சிக் கலை நுட்பங்களையும் போதித்தார்.

'முடியரசு', 'காலனிகள்' என்ற ஒப்பற்ற நூல்களை அலெக்ஸாந்தருக்காகவே அரிஸ்டாட்டில் இயற்றினார். தவிர, தாம் அலெக்ஸாந்தருடன் இருக்கும்போதே, அரசியல் திட்டங்களின் தொகுப்பு ஒன்றையும் தயாரித்துவிட வேண்டுமென்று அவர் திட்டமிட்டார்.

கி. மு. 340-இல் மன்னரின் பிரதிநிதியாக அலெக்ஸாந்தர் பதவி பெற்றான். அவனுடைய குருகுல வாசமும் முடிவுற்றது. ஆயினும், கிரேக்க அரசியல் வாழ்வில் அரிஸ்டாட்டிலுக்கு இருந்த செல்வாக்கு அதன் பிறகும் நீடித்தது. அவரிடம் அலெக்ஸாந்தர் மிகுந்த அன்பும் மரியாதையும் காட்டினான். மன்னன் பிலிப்போ அவருடைய ஆழ்ந்த ஞானத்தில் லயித்திருந்தான். ஆண்டிபேட்டர் என்பவன் அரிஸ்டாட்டிலின் உற்ற நண்பன்; கிரேக்க அரசியலில் உன்னத ஸ்தானத்தை வகித்து வந்தவன்; அலெக்ஸாந்தரின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவன். அவன் ஆசியாவில் ராஜப் பிரதிநிதியாகப் பதவி பெற்றான்.

கி. மு. 335-இல் பிலிப் மன்னரின் மரணத்துக்குப்பின், அரிஸ்

டாட்டில் ஏதென்ஸுக்கு வந்தார். அந்த அழகிய நகரத்துக்கு வெளியில், ஒரு குருகுலத்தைத் தொடங்கினுர். அங்கேதான் பல ஆராய்ச்சி நூல்களை இயற்றினுர். தினந்தோறும் காலை வேளையில் தம்முடைய முக்கியமான சீடர்களுடன் உலாவப் போவார். அப்போது அவர்களுக்குப் பல அரிய தத்துவங்களை எடுத்தோதுவார். மாலை வேளையிலோ, குருகுலத்தில் எளிய பாடங்களை ஏராளமான பேருக்குப் போதிப்பார். தர்க்க சாஸ்திரம், பௌதிகம், தத்துவ ஞானம், வியாகரணம், அரசியல் இவையெல்லாம் அவருடைய தின சரி போதனைத் திட்டத்தில் இடம் பெற்றிருந்தன.

அரிஸ்டாட்டில் ஏராளமான சுவடிகளையும் திரட்டினுர். பூகோளப் படங்களைச் சேகரித்தார். பின்காலத்துப் பெரிய லைப்ரரிகளுக்கு அவரே விடிவெள்ளியாக இருந்தார். அதுமட்டுமா? இயற்கையியல், விஞ்ஞானம் இவற்றைப் போதிப்பதற்கு உதவவல்ல பல பொருள்களும் கருவிகளும் அடங்கிய காட்சிச்சாலை ஒன்றையும் அவர் உருவாக்கினுர். இந்தக் காட்சிச்சாலைக்கு ஏற்ற பொருள்களைச் சேகரிக்க அவருடன் அலெக்ஸாந்தரும் ஒத்துழைத்தான். அரிய விஞ்ஞானப் பொருள்களை அப்போது அரிஸ்டாட்டிலுக்குச் சேகரித்துத் தந்துகொண்டிருக்கும்படி வேடர், மீனவர், குறவர் எல்லாருக்கும் அலெக்ஸாந்தர் கட்டளையிட்டான். அவனே எண்ணூறு அரிய பொருள்களை அவருக்குத் தேடித் தந்தான்.

விஞ்ஞான ஆராய்ச்சியோடு மட்டும் அவர் நின்றுவிடவில்லை. ஆட்சிக் கலையைப்பற்றியும் தீவிரமாக ஆராய்ச்சி செய்தார். ஒரு திட்டம் வகுத்து அதன்படி பத்து நாட்களுக்கு ஒரு மாணவன் வீதம் குருகுல நிர்வாகத்தை நடத்திவரச் செய்தார். மாதம் ஒரு விவாத அரங்குக்கு ஏற்பாடு செய்தார். இந்த விதமாக அவருடைய குருகுல அத்தியட்சகர் ஆட்சி நடைபெற்றது. இந்தக் காலத்தில் தயாரித்த குறிப்புக்களே அவருடைய பல துறை நூல்கள். மேலும், அவர் பல சாஸ்திரங்களைப் பாகுபடுத்தி ஒழுங்குபடுத்தி அமைத்தார். அவருக்கு முன்பு தர்க்க சாஸ்திரம் முறைப்படுத்திய சாஸ்திரமாக இல்லை! அவருடைய குருகுலம் ஒரு லட்சிய ஸ்தானமாக விளங்கியது. அங்கே கமழ்ந்த லட்சியவாத மணம், அது எழுப்பிய அரசியல் உணர்ச்சி, அது காட்டிய வழி - இவை யாவுமே அன்றுட இகலோக வாழ்க்கையைச் செம்மையாக உருவாக்கும் தன்மை வாய்ந்தவையாக இருந்தன.

கி. மு. 323-இல் அலெக்ஸாந்தர் காலமானுன். அவனுக்குப் பின், மாஸிடோனியரை எதிர்க்கும் கிளர்ச்சி ஏதென்ஸ் நகரில் தலை தூக்கியது. இந்தக் கிளர்ச்சி வலுக்கவே, அரிஸ்டாட்டில் தம் குருகுலத்தை தியோபிரேஸ்டஸ் வசம் ஒப்புவித்துவிட்டு, கால்ஸிடிஸே பிரதேசத்துக்குச் சென்றுவிட்டார். இங்கேதான் அவர் தமது கடைசிக் காலத்தைக் கழித்தார். கி. மு. 322-இல் அவர் உயிர் துறந்தார்.

அவர் விட்டுப்போன உயிலைப் பற்றிக் குறிப்பிட்டாக வேண்டும். அவருடைய நன்றியறிவுக்கும் அன்புக்கும் அது எடுத்துக்காட்டாகும். தம் உறவினருக்கு ஜாக்கிரதையாக வாழ்க்கை வசதிகளைச் செய்து கொடுத்திருந்தார். அடிமைகளின் விடுதலைக்கும் வழி செய்திருந்தார். அந்த உயிலில் இந்த ஏற்பாடுகளையே மிக முக்கியமாக வலியுறுத்தியிருந்தார்.

அரிஸ்டாட்டில் நகைச்சுவை படைத்தவர். பழக்க வழக்கங்களில் அவர் துறவியாக இல்லை. கிரேக்க அரசியல் ஞான வளர்ச்சிக்கு அவர் ஆற்றியுள்ள சேவை மகத்தானது. தவிர, அறிவுத் துறைகளிலும் அவர் கண்ட ஆராய்ச்சி நிறைந்த கருத்துக்களுக்குத் தனியான முக்கியத்துவம் உண்டு.

உலக சிந்தனையாளர்களில் ஒருவரான அரிஸ்டாட்டில், மிகச் சிறந்த இந்திய ராஜதந்திரியான கௌடில்யரின் காலத்தவரே ஆவார் என்பது ஒரு விசேஷம்.

# சந்திர லோக வீதியில்

என். ஏ. வார்வராவ்

செயற்கைச் சந்திரனை விட்டாலும் விட்டார்கள்; இயற்கைச் சந்திர லோகத்துக்கே பிரயாணம் செய்யும் நாளை எதிர் பார்ப்பவர்களின் ஆவலும் கற்பனையும் வலுத்துவிட்டன. இந்தக் கட்டுரையாளர் ஸோவியத் ஏரோநாட்டிக்ஸ் ஸொஸைட்டி தலைவர்.

நாம் இதோ சந்திரலோகத்தில் இருக்கிறோம். இப்போது இருபதாம் நூற்றாண்டின் இறுதிக் காலம்.

காற்றுப் புகாமல் கவசமிட்டு மூடிய (ஹெர்மிட்டிக்கல்லி-ஸீல்டு) மோட்டார்க் காரில் வெகு வேகமாக நாம் போய்க்கொண் டிருக்கிறோம். ராக்கெட் இறங்கும் நிலையத்தில் வந்து இறங்கிவிட்டு இப்படிச் சவாரி செய்துகொண்டு, நிலவு நகரத்தில் ஏறியிறங்கும் மூடி போட்ட வாயிற்படி (ஸ்லூயிஸ் கேட்) நோக்கிச் செல்கிறோம்.



'நிலவு நகரம்' என்ற பெயரைக் கேட்டு உங்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறதா என்ன? ஆச்சரியப்பட வேண்டாம். இன்னும் நாற்பதே வருஷத்துக்குள் சந்திர லோகத்தில் இப்படி ஒரு நகரத்தைப் பூலோக மக்கள் அமைக்கத்தான் போகிறார்கள். அதைப்பற்றி இன்று நாம் கனவு காண்பதில் என்ன தவறு?

நகரம் முழுவதற்குமே பிரம்மாண்டமான கண்ணாடிக் கூரை போட்டிருக்கிறது. அதற்குக் கீழே நம்முடைய மோட்டார்க் கார் நுழைகிறது. சந்திர லோகத்திலே காற்று இல்லை. எனவேதான், சந்திரனில் எரிமலை இருந்து அவிந்த வாய் ஒன்றில் இந்த நகரத்தை நிர்மாணித்து, இதற்குக் கண்ணாடிக் கதவு போட்டு மூடியும் இருக்கிறார்கள். இந்த மேல்கூரைக்குக் கீழே, செயற்கையாய் உற்பத்தி செய்த காற்றுச் சுழன்று கொண் டிருக்கிறது. அலாதியான முறையில் செய்தது இந்தக் கூரைக் கண்ணாடி. இந்தக் கண்ணாடிக்குள் சூரிய ஒளி புகும். இதுமட்டும் அல்ல; அந்த ஒளியோடு வரும் உஷ்ணத்தைத் தேக்கி வைத்துக்

மூலம்: ஸோவியத் லாண்டு (ஆங்கிலம்: 5-1-'58), புது டில்லி.



கொள்ளும். இப்படி அதில் தேக்கிச் சேமித்த உஷ்ணத்தைக் கொண்டு, ரிஃப்பிரிஜெரேட்டர்கள், ஏர்-கண்டிஷன் கருவி இவற்றை இயக்கலாம்; பாட்டரிகளுக்குச் சார்ஜ் (மின்சார ஏற்றம்) செய்யலாம்.

இதற்கெல்லாம் என்ன அவசியம் வந்தது என்று நீங்கள் கேட்கலாம். ஏனென்றால், சந்திரனில் உள்ளவர்கள் தங்கள் வேலையைத் தாங்களே செய்துகொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. பூமியிலிருந்து ஒரு துண்டு ரொட்டியைச் சந்திரலோகத்துக்கு அனுப்புவதென்றால், அந்த ரொட்டித் துண்டு நிறையுள்ள தங்கத்தின் மதிப்பு என்னவோ அந்த அளவு பணம் செலவாகும். ஆகவே, சகல விதமான உற்பத்தித் தொழில்களையும் சந்திரலோகத்திலேயே செய்துகொள்ளுவதுதான் லாபம். தவிர, பூமியின் ஆகர்ஷண சக்தியைவிடச் சந்திரனின் ஆகர்ஷண சக்தி (ஃபோர்ஸ் அவ் கிராவிட்டேஷன்), எத்தனையோ மடங்கு குறைவு. இதனால் அங்கே ஒரு வெண்டைக்காய் ஓர் அத்தி மரம் அவ்வளவு பருமனாக வளரும்; ஒரு வெங்காயத்தின் தாள் ஒவ்வொன்றும் சுமார் 11 கஜ உயரம் நீண்டிருக்கும்.

வெயில் சக்தி, அணு சக்தி இவற்றைப் பயன்படுத்தும் யந்திரங்களைக் கொண்டு சந்திரனில் அலுமினியம் எடுக்கலாம்; கண்ணாடி உருக்கலாம். சந்திர லோகத்தில்





கிடைக்கும் தாதுப்பொருள்களைக் (மினரல்ஸ்) கொண்டு, அந்த யந்திரங்களால் பிராணவாயு, நைட்ரஜன் இரண்டு வாயுக்களையும் தயாரிக்கலாம். சந்திரலோகத்தின் ஒரு பகுதியில் ஒரு மாத காலம் ஒரே பகலாகவும் ஒரு மாத காலம் ஒரே இரவாகவும் இருக்கும். அந்த ஓர் இரவு முழுவதும் அந்த யந்திரங்களைக் கொண்டு நிலவு நகரத்துக்கு வேண்டிய உஷ்ணம் கொடுக்கலாம். இங்கே ராக்கெட்டுகளுக்குச் செயற்கை எரிபொருள் (ஸிந்தெட்டிக் ஃப்யூயல்) செய்வது சாத்தியம்.

நெடுந்தொலைவில் உள்ள கிரகங்களுக்குப் போய்வரும் வானவெளிக் கப்பல் (ஸ்பேஸ் ஷிப்) இறங்கவும் ஏறவும் சரியான இடம் (லாண்டிங் ப்ளேஸ்), சந்திர லோகந்தான். ஆகவே, வானவெளிக் கப்பல்களைக் கட்டும் பெரிய தொழிற்சாலை ஒன்றைச் சந்திர லோகத்தில் அமைப்பார்கள். வானவெளிக் கப்பல்களின் முதல் கோஷ்டி 2000-ஆம் ஆண்டு வாக்கில் இங்கேயிருந்து வெளியே கிளம்பிவிடும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

நிலவு நகர வீதிகளினூடே உங்களை நான் மிகத் துணிவோடும் நம்பிக்கையுடனும் அழைத்துச் சென்றுவிட்டேன். ஏனென்றால், நம் பூலோகத்து மக்கள் அந்த நகரத்தை அமைத்து விடுவார்கள் என்பதில் எனக்கு நிச்சயம் இருக்கிறது. ஆனால், நம்மை நாமே சர்வ நாசம் செய்துகொள்ளக் கூடிய பெருந்தீயைச் சொரியும் அணுக்குண்டு யுத்தத்தில் மட்டும் நாம் சிக்கிவிடாமல் இருக்க வேண்டும். வானவெளிக் கப்பல் பிரயாண ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கும் ஸோவியத் விஞ்ஞானச் சங்கத்தினரான நாங்கள் உலகத்தில் சமாதானத்தை விரும்பும் மற்ற எல்லா மக்களையும் போலவே, யுத்தத்தைத் தவிர்ப்பதிலேதான் பெரிதும் சிரத்தை கொண்டிருக்கிறோம்.

## மரணத்துக்குப்பின் வாழ்வு

எஜமான்: மரணத்துக்குப்பின் வாழ்வு உண்டு என்று நீ நம்புகிறாயா?

ஆபீஸ் பையன்: நம்புகிறேன், ஸார்.

எஜமான்: அப்படியானால், எல்லாம் சரிதான். நேற்று மாலையில் உன் தாத்தாவைப் புதைப்பதற்காக நீ போனாய் இல்லையா? அதற்குப் பிறகு உன்னைப் பார்ப்பதற்காக அந்தத் தாத்தா இங்கே வந்துவிட்டுப் போனார்.

—'வார்ட் ஹெம்', ஸ்வீடன்.

## குரங்குத் தொழிலாளிகள்

மலேயாவில் தொழில் செய்யக் குரங்குகளைப் பழக்கி, அவற்றிடம் வேலை வாங்குகிறார்கள். இந்த வாழைப்பழம் தின்னிக் குரங்குகளுக்குக் கூலியாக மது ஊற்றுகிறார்கள்.

தொழிலாளிக் குரங்குகள் தென்னை மரத்தின்மீது ஏறித் தேங்காய் பிடுங்கிப் போடும். அதற்குக் கூலியாக ஸோடா லெமனேட் கொடுக்கவேண்டும்.

குரங்குகளின் சொந்தக்காரர்கள் சைகிளில் செல்ல, அவர்களோடுகூட அவர்களுடைய தென்னமரமேறிக் குரங்குகளும் போகும் காட்சி மலேயாவின் பல பகுதிகளில் மிகவும் சாதாரணமாய்க் காணக்கூடிய ஒன்று. ஆனால், நடுவிலே வாழைத் தோட்டத்தைக் கண்டால், அதற்குள்ளே இவை பாய்ந்து புகுந்துவிடும்; அப்புறம் வெகு நேரம் வரையில் வெளிக் கிளம்பமாட்டா. இப்படிச் செய்யாமல் இவற்றைத் தடுப்பதற்காகக் குரங்குகளைச் சங்கிலி போட்டுக் கட்டியிருப்பார்கள்.

—'நேஷனல் ஜியொகிராஃபிக்கல் ந்யூஸ் புல்லட்டின்'

ஆரத்தியில் மட்டும் அல்ல;
பல பண்டங்களிலும் மருந்துகளிலும் பயன்படும் பொருள் -

# கர்ப்பூரம்



எச். ஆர். லட்சுமீகாந்த்

கர்ப்பூரம் வெகு காலமாக நமக்கெல்லாம் பழக்கமான பொருள்தான். ஆனால் இதன் பிறப்பு வளர்ப்புப் பலருக்குத் தெரிந்திருக்காது. இதன் பிறப்பிடம் நம் நாடு அல்ல. சீனாவிலும் ஜப்பானிலும் இது பிறந்தது. நம் நாட்டுக்குள் இது புகுந்த காலம் இன்னதுதான் என்று நிச்சயமாகத் தெரியவில்லை. இதைப்பற்றி நமக்குக் கி. பி. 642 முதலாகத்தான் ஆதாரம் கிடைக்கிறது. கி. பி. 642-இல் இந்திய அரசர் ஒருவர் சீன சக்கரவர்த்திக்குக் கர்ப்பூரத்தைக் காணிக்கையாகக் கொடுத்திருக்கிறார்.

அநாதி காலமாக, உலகத்தின் பல பகுதிகளிலும் இதை மருந்தாக உபயோகிக்கும் வழக்கம் இருந்து வருகிறது. கர்ப்பூரத்தில் பக்குவம் ஆனது, ஆகாதது என்ற இரண்டு பிரிவையும் அந்தக் காலத்து வைத்தியர்கள் அறிந்திருந்தார்கள். பக்குவம் ஆன கர்ப்பூரத்தையே தீபாராதனைக்கு நாம் உபயோகிக்கிறோம். கர்ப்பூரம் செடிகளிலிருந்து உற்பத்தியாகும் பொருள். ஆரத்திக் கர்ப்பூரம் பெரும்பாலும் சீனாவிலும் ஜப்பானிலுமே உண்டாகிறது.

ஃபார்மோஸா காடுகளில் இது ஏராளமாய்ப் பயிராகிறது. ஆனால் இதில் வாசனை குறைவு. கர்ப்பூர மரங்களில் முக்கியமான ஜாதி, கிராம்பு மர ஜாதியைச் சேர்ந்தது. இது அதிக உயரம் வளர்வதில்லை. இலைகள் எப்போதும் பசுமையாகவே இருக்கும்: இலைகள் ஓரளவு மாவிலை போல் தோன்றும். ஐம்பது வருஷம் சென்ற மரங்கூட ஒரு புதரின் அளவாக இருக்கும். உஷ்ணப் பிரதேசத்திலும் சம சீதோஷ்ணப் பிரதேசங்களிலும் இது நன்றாக வளர்கிறது. சமுத்திர மட்டத்துக்கு 5,000 அடி உயரம் வரையில் உள்ள பகுதிகளில் இது வளரும். மழை வருஷத்துக்கு 40 முதல் 45 அங்குலம் வரையில் பெய்தால் போதும்.

இந்தியாவில் கர்ப்பூரம், கல்கத்தாவிலும் ஆக்ராவுக்கு அருகே உள்ள ஸஹாரன்பூர் என்ற ஊரிலும் வளர்கிறது. ஆனால் கல்கத்தாவில் வளரும் தினுசே சிறந்தது. ஆக்ராவின் தாவர ஆராய்ச்சிச் சாலையில் இதைப் பயிரிடுகிறார்கள். கடல் மட்டத்துக்கு 2,400 அடி முதல் 5,000 அடி உயரம் வரையில் இருக்கும் பிரதேசத்தில் இது செழித்து வளர்கிறது. நீலகிரிதான் இதற்குச் சரியான பூமி. பங்களூரில் லால்பாக்கிலும் கர்ப்பூர மரம் வைத்து வளர்க்கிறோம். இந்தியாவில் கர்ப்பூரத்தை விருத்தியாக்க விரும்பிய அரசாங்கத்தார், லால்பாக்கில் நாற்றுக்களைத் தயாரித்துக் குடகுக்கு அனுப்புகிறார்கள். இந்த வேலை, பன்னிரண்டு வருஷங்களுக்கு முன்பே தொடங்கிவிட்டது. அங்கே அவை நன்றாக வளர்கின்றன. பச்சைக் கர்ப்பூரம் உண்டாகும் மரம் வேறு வகையைச் சேர்ந்தது. இது அதிகமாகப் போர்னியோ, சுமாத்ரா தீவுகளில் உண்டாகிறது. இது ஒழுங்காய் வளரும் மரம். பார்க்கப் பெரிதாகவும் அழகாகவும் இருக்கும்.

கர்ப்பூரத்தைத் தயாரிக்க வேண்டுமென்றால், 50 வருஷங்கள் வாழ்ந்த மரங்களின் கட்டையை

காப்பிரைட்: பிரஜாமத (கன்னடம்: 16-2-’58), பங்களூர்.

யும் கிளைகளையும் சிறு சிறு துண்டு களாக வெட்டித் தகுந்த கொப் பறைகளில் போட்டு நீராவி மூலம் சத்தை இறக்குவார்கள். மரக்கட் டைகளிலிருந்து கர்ப்பூரம் நீராவி யாக மாறிக் குளிர்ந்தபின், சிறு பகுதி எண்ணெயாகவும் பெரும் பகுதி கர்ப்பூரமாகவும் உருவடை கிறது. இது சுத்தமானது அல்ல; கர்ப்பூரத்தை எண்ணெயிலிருந்து பிரித்து எடுத்தபின், சுத்தப்படுத் தும் ஆலைகளுக்கு அனுப்புவார்கள். பம்பாய், டில்லி போன்ற நகரங் களில் இது போன்ற ஆலைகள் இருக் கின்றன. இந்த மட்டிக் கர்ப்பூரத் தோடு, மணல், இரும்புத்தூள், கரி, சுண்ணும்பு இவற்றைச் சேர்த்துக் காய்ச்சுவதால் கிளம் பும் சுத்தமான ஆவியைக் குளிரச் செய்து நல்ல கர்ப்பூரம் தயாரிக் கிறுர்கள். ஆலை முதலாளிகள் மட் டிக் கர்ப்பூரத்தை விற்ருலும் லாபம் கிடைக்கிறது. காற்றில் இருக்கும் நீரின் அம்சத்தை அப் பட்டமான கர்ப்பூரம் அதிகமாக உறிஞ்சிக்கொள்ளுவதால், அதன் எடை அதிகரிக்கிறது.

பச்சைக் கர்ப்பூரம் என்பது கர்ப்பூர வாழைகளின் பட்டைக் குள் இயற்கையாகக் கிடைக்கிறது. மிக முதிர்ந்த மரங்களில் மட்டுந் தான் இது கிடைக்கும்; ஐம்பது வருஷத்துக்கு உட்பட்ட மரங் களில் கிடைப்பதில்லை. மட்டை கிளம்பும் மூட்டிலிருந்தும் நெருங் கிய மட்டையின் அடியைக் கிழித்த பகுதியிலிருந்தும் கிடைக் கும். பச்சைக் கர்ப்பூரத்தின் விலை சாதாரணக் கர்ப்பூரத்தின் விலையைவிட நூறு மடங்கு அதிகம்.

ஜப்பானில் கிடைக்கும் கர்ப் பூரம் எல்லாம் அரசாங்கத்துக்கே உரிமையானது. யாராக இருந் தாலும் சர்க்கார் விதித்த விலைக்கு அவர்களிடமே விற்கவேண்டும். அங்கே விளைவதுபோல் இது உல கின் வேறு எந்தப் பகுதியிலும் விளையவில்லை; கர்ப்பூரத்தைப் பெறுவதற்கு, மரங்கள் முற்றும் வரையில் பல வருஷ காலம் காத் திருக்க வேண்டியிருக்கிறது. இந்த இரண்டு காரணங்களாலும், உல கத்துக் கர்ப்பூர வியாபாரத்தின் ஏகபோக உரிமை ஜப்பானுக்கே நிலைத்துவிட்டது,

நம் நாட்டில் கர்ப்பூரத்தைத் தீபாராதனைக்குத்தான் அதிகமாக உபயோகிக்கிறேம். மேல் நாடு களில் புகையில்லாத துப்பாக்கி மருந்துக்கும் பொம்மைகள் செய்ய வும் ஸெலுலாயிடு தயாரிக்கவும் கர்ப்பூரத்தை உபயோகிக்கிறுர் கள். மருந்து, களிம்பு இரண்டி லும் கூட்டுகிறுர்கள். எனவே, அங்கே கர்ப்பூரத்துக்குத் தேவை அதிகம். இதனுல் ஜெர்மானியர் செயற்கை முறையில் கர்ப்பூரத் தைத் தயாரித்து விலையைக் குறைத்தார்கள். இதைப் பார்த்து ஜப்பானியரும் இப் பொழுது சுயமான கர்ப்பூரத்தின் விலையையே குறைத்திருக்கிறுர்கள்.

அமெரிக்கர் பல வருஷமாகக் கர்ப்பூர மரங்களை வளர்த்து, இப் பொழுது அதன் பலனைப் பெறத் தொடங்கி யிருக்கிறுர்கள். உல கத்தின் மூலை முடுக்குகளில்கூடக் கர்ப்பூரம் செலவாவதால், அவர் களுக்குக் கொள்ளை லாபம் கிடைக் கிறது. ஜப்பானியர் இலைகளி லிருந்தும் சிறு கொம்புகளிலிருந் தும் கர்ப்பூரம் எடுப்பதில்லை; அமெரிக்கரோ அவற்றையும் விடாமல் உபயோகித்துக் கர்ப் பூரம் ஆக்கி விடுகிறுர்கள். 'ஃப்ளாரிடா' என்னும் இடத்தில் 1941-ஆம் வருஷத்தில் தொடங் கிய வியாபாரம் வலுத்தது. அந்த வருஷம் பத்தாயிரம் பவுண்டு மட் டிக் கர்ப்பூரம் கிடைத்தது. 1945-இல் இதன் விளைச்சல் பத்து மடங் காய்ப் பெருகியது.

ஆரத்திக் கர்ப்பூரத்தைத் தலை நோய், பல் நோய் போன்ற பிணி களுக்கு மருந்தாகவும், சில களிம்பு களுக்கும் தாராளமாய் உபயோகிக் கிறுர்கள். சில சமயம் இதை உள் ளுக்கும் கொடுப்பது உண்டு. நரம்புகளை ஊக்குவிக்கும் சக்தி இதற்கு இருக்கிறது.

பச்சைக் கர்ப்பூரத்தை மருந்து களிலும் வாசனைப் பொருள்களி லும் சேர்க்கிறுர்கள். மனத்தை மயக்கும் இதன் மணத்தை விரும் பிச் சமையலிலும் பாக்குப் பொடி யிலும் அளவோடு சேர்க்கிறேம்.



# பாட்டிலே புடைவை

**மாலதி சந்தூர்**

சேலையிலே இன்று அயல் நாட்டாருக்குக்கூட மோகம் வந்திருக்கிறது. ஆனால், நம் பெண்கள் என்னவோ, புதிசு புதிசான நாகரிக மோஸ்தர்களை அதில் விரும்புகிறார்கள். அவர்களுக்கு இந்தப் பழம் பெயர்கள் காதிலாவது விழுந்திருக்குமோ?

போன வருஷம் நண்பர் ஒருவர் எங்கள் வீட்டுக்கு வந்திருந்தார். அவர் இந்த ஊரிலிருந்து வாங்கிச் செல்ல வேண்டிய சாமான்களுக்கு ஒரு 'ஜாபிதா' கொண்டு வந்திருந்தார். அவற்றுள் அவருடைய பெரிய பெண்ணுக்கு வேண்டிய 'புடைவை மாறியது' (சீரலு மாறாயி) என்ற தினுசுப் புடைவையின் பெயரும் ஒன்று. அது என்ன மாதிரி, எங்கே கிடைக்கும், புடைவை பட்டா, நூலா என்ற விவரம் புரியாமல் குழம்பினேன்.

அவரை அந்த விவரம் கேட்டதற்கு, ஒன்றும் புரியாமல் தலையைச் சொறிந்துகொண்டு, ''அதை யாரோ ஒரு சினிமாவில் கட்டிக்கொண்டு வந்தார்களாம். அது மாதிரி வேண்டுமாம்'' என்றார்.

என்ன சினிமா அது என்பதையும் அவரால் சொல்ல முடியவில்லை. ''ஏதோ ஒரு தெலுங்குச் சினிமாவாம். ஒரே மூச்சில் வெகு நாள் ஓடியதாம். அதை நீங்களே சற்றுப் பார்த்து வாங்கிக் கொடுங்கள்'' என்றார்.

சமீப காலத்தில் வந்த சினிமாக்களின் பெயரைச் சொல்லிப் பார்த்ததில், அது 'காலம் மாறிப் போச்சு' (ரோஜுலு மாறாயி) என்ற சினிமா என்பது புரிந்தது. அந்தப் பெயரை அவர் மாற்றிச் சொல்லி விட்டதை நினைத்துத்தான் எங்களுக்குச் சிரிப்பாய் வந்தது. நம் நாட்டில் புதிசாய் ஒரு சினிமா வந்துவிட்டால், அதன் பெயரை உபயோகித்துக்கொண்டு வளையல்காரர்களும் புடைவைக்காரர்களும் கொள்ளை லாபம் அடிப்பது வழக்கந்தான்.

முன்பு ஒரு தடவை ஒரு ஜவுளிக் கடையில், 'ஜனக் ஜனக் பாயல் பாஜே' என்ற பெயரில் ஒரு புடைவையைக் காண்பித்தார்கள். வானவில் வண்ணத்தில் மின்னும் நைலான் புடைவைக்கு இந்தச் சினிமாப் பெயரை வைத்து விட்டார்கள். புடைவைக்குப் பெயர் வைப்பதும் புதிய வழக்கம் இல்லை. சுமங்கலி, பரிபாத் போன்ற பல பெயர்கள் இப்படி ஏற்பட்டவைதான்.

பெண்களுக்கு நகைகளிலும் புடைவைகளிலும் ஆசை அதிகம். நம் முன்னோர் புடைவைகளுக்கு வைத்திருந்த பெயர்களைக் கேட்-

மூலம்: ஆந்திரப் பிரபா (தெலுங்கு: 20-11-'56), சென்னை.

டால், இந்தச் சினிமாப் பெயர் களை 'உஃப்'பென்று ஊதி விடலாம். அந்தப் பெயர்களைக் காதால் கேட்டாலே போதும்; கண்முன் பல இனிய அழகிய காட்சிகள் தோன்றும்.

ஒரு நாள் பொழுதுபோக்காக ஒரு ராமாயணப் பாட்டுப் புத்தகத்தைப் புரட்டிப் பார்த்துக்கொண்டிருந்தேன். சீதா கல்யாண சந்தர்ப்பம். தினுசு தினுசாகப் புடைவைகளின் ஜாபிதா ஒன்று தொடர்ந்தது. கவியின் பெயர் தெரியவில்லை. இத்தனை பெயர் களை எப்படித்தான் ஞாபகத்தில் வைத்துக்கொண்டிருந்தாரோ என்று ஆச்சரியம் அடைந்தேன். மேலாகப் படிக்க உட்கார்ந்த எனக்கு, அந்தப் புடைவைகளைப் பற்றியெல்லாம் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவல் உண்டாயிற்று. அப்புறம் ஒரு வாரத்துக்குள் நாட்டுப் பாடல் புத்தகம் ஒன்றைப் படித்தேன். 'காலம் மாறிப் போச்சு', 'சொர்ண சுந்தரி' எல்லாம் அந்தப் பெயர்களின் எதிரே சூரியனுக்கு முன்னே மின்மினிபோல் ஆகிவிடுகின்றன.

புடைவைகளை மூன்று பிரிவாகப் பிரிக்கலாம். செயற்கைப் பட்டு, இயற்கைப் பட்டு, நூல். நார்ப் பட்டு ஒரு தனிப்பட்ட வகை. சில்க் என்ற செயற்கைப் பட்டு அயல் நாட்டுச் சரக்கு. நூலும் பட்டும் நம் நாட்டுப் பொருள்கள். பட்டு அதிக விலை பெற்றது. பெயர் தெரியாத ஒரு கவி, நாட்டுப் பாட்டில் 'தாயைப் போன்ற உறவும் இல்லை; பட்டுப் புடைவை போன்ற புடைவையும் இல்லை' என்று பாடியிருக்கிறார். இதனால் பட்டின் மதிப்புத் தெரிகிறதில்லையா?

இந்தக் காலத்தில் தர்மாவரம், ஆரணி, கொள்ளேகாலம், பர்ஹாம்பூர், காஞ்சி, மைசூர், கொறநாடு, பனாரஸ், காச்மீர் ஆகிய இடங்களிலிருந்து வரும் பட்டுக்கள் சிறந்தவை.

பிரதாப ரெட்டி என்பவர் ஆந்திரரின் சமூக சரித்திரத்தில் தெலுங்கு தேசத்துப் பட்டைப் பற்றிப் பிரஸ்தாபித்திருக்கிறார். பதினாலு, பதினைந்தாம் நூற்றாண்டுகளில் இந்த வகைகள் இருந்தனவாம். பந்தரில் தயாரான துணிகளை 'மஸ்லின்' என்று ஆங்கிலத்தில் சொல்லுவார்கள். இது 'டிஷ்யூ', 'நைலான்' துணிகளைவிட மெல்லிசாய் அழகாய்ப் பாம்புச் சட்டைபோல் இருக்குமாம். டாக்கா மஸ்லின்களின் மதிப்பு அதிகம்.

நம் நாட்டுப் புடைவைகளின் பெயர்கள்: வெஞ்ஜாவளி, ஜயரஞ்சி, மஞ்சு புஞ்ஜம் (பனிக் கூட்டம்), மணி பட்டு, பூதிலகம், ஸ்ரீ வன்னிம, சீனி, மகா சீனி, பட்டு, பொம் பட்டு (பொன்னிறப் பட்டு), வெர பட்டு, வெலி பட்டு (வெண் பட்டு), பச்சைப் பட்டு, நேத்ரம்பு பட்டு, ஸங்கு பட்டு, பாவஜ திலகம், ராயசேகரம், ராய வல்லபம், வாயு மேகம், வல்லட தட்டி, வாரணசி, ஜீகுவா, கெந்தொகரு (செந்துவர்), கௌரி கனயம், க்ஷீரோதகம், கஜிவாளம், கண்டவரம், வீணவளி இவையெல்லாம் ஒரு காலத்தில் தெலுங்கு தேசத்தில் நெசவான துணிகள்.

சீதா கல்யாணத்தில் சீதையைக் கணவன் வீட்டில் ஒப்படைக்கும் போது, ஜனக மகாராஜா பெண்ணுக்குத் தினுசு வாரியாக நகை நட்டுக்களும் புடைவை ரவிக்கைகளும் சீரெடுக்கிறார். இதை வர்ணிக்கும் பாட்டில் பல புடைவைகளைப்பற்றி வருகிறது. தளுக்கு ரவிக்கைகள், வீணைக் கரை, ருத்திராட்சக் கரை, பொம்மைக் கரை, இந்திரநீலப் பட்டு, சந்திரகாவிப் பட்டு, ஹம்ஸ வர்ணப் பட்டு, மேகவண்ணப் பட்டு என்றெல்லாம் புலவர் அதில் அடுக்குகிறார். சொல்லுவதைத் தான் எப்படி அழகாகச் சொல்லுகிறார்! நாமா யிருந்தால், ஹம்ஸ வர்ணப் பட்டு என்பதை வெள்ளைப் பட்டு என்று ரசனை இல்லாமல் சொல்லியிருப்போம்.

மேலும், கரும்பட்டு, சரிகை வேலைத் தலைப்பு, பொன் சரிகைப் பட்டு, பொன் புடைவை, சந்திர காந்திப் பட்டு, மின்னல் பட்டு, ஹம்ஸாவளிப் பட்டு, பனாரஸ்

பட்டு முதலியவற்றை அந்தக் காலத்துப் பெண்கள் உடுப்பார்களாம். இந்தக் காலத்தில் நாம் பாசி மணிகளையும் சம்கிகளையும் கண்ணுடிகளையும் புடைவை ரவிக்கைகளில் தைத்து அணிகிருேம். அந்தக் காலத்தில் முத்து, ரத்தினம் முதலிய நவமணிகளைக் கோத்துத் தைத்த உடைகளை அணிவார்களாம்.

ஸ்ரீ ராமர் பட்டாபிஷேக சந்தர்ப்பத்தில் தேவ ரிஷிகள் ஆசீர்வதித்தபின், வசிஷ்ட மகரிஷி முத்துப் பந்தல் கோலமிட்ட சிவப்புப் பட்டுப் புடைவையையும், வால்மீகி மகரிஷி வரிசை முத்துக்கள் அமைத்த பட்டையும் சீதைக்கு ஓதியிட்டாராம். ஆணி முத்துப் பந்தல் புடைவையை அகஸ்தியர் ஆசீர்வதித்துக் கொடுத்தாராம். இவை தவிரக் கந்துகப் பாவை (பந்தாடும் பெண்) உருவமுள்ள கரைப் புடைவைகளையும் பல தினுசுப் புடைவைகளையும் முழுச் சரிகைப் புடைவைகளையும் இளஞ் சிவப்புப் புடைவைகளையும் சீனும்பரங்களையும் நகரத்து மக்களும் மகாராஜாக்களுமாகச் சீதைக்குப் பரிசளித்தார்களாம்.

ஸ்ரீ சீதாதேவி, சாந்தா தேவி போன்ற ராஜகுமாரிகள் கட்டிய புடைவைகள் இவை. கோபிகா வஸ்திராபஹரணம், சீதா கல்யாணம் இரண்டும்பற்றிய பாடல்களைப் பார்த்தால், அந்தக் காலத்துச் சாமானியப் பெண்கள் உடுத்த புடைவைகளைப்பற்றி அறிந்துகொள்ளலாம். நூல் புடைவைகளில் சாயந் தோய்த்தவை, அச்சுப் போட்டவை, பல தினுசுக் கரை போட்ட புடைவைகள், பஞ்ச வர்ணப் புடைவைகள் என்றெல்லாம் அந்தக் காலத்தில் இருந்தனவாம்.

இன்றும் நமக்கு அவை கிடைக்கின்றன. கை நெசவு நூல் புடைவைகளுக்கு, வேங்கடகிரி, உப்பாட, குண்டூர், புல்லம் பேட்டை, கட்வால், சேலம், மதுரை ஆகிய ஊர்கள் பெயர் போனவை. நூல் புடைவைகளுள் சரிகைப் பூக்களும் கொடிகளும் நெய்த விலையுயர்ந்த புடைவைகள் இருக்கின்றன. பட்டுப் புடைவைகளைவிட விலை அதிகம் உள்ள நூல் புடைவைகளும் உண்டு. கட்வால் புடைவைகள் சாயத்துக்குச் சிறந்தவை. மதுரைப் புடைவைகளுள் கட்டங்களும் பூக்களும் போட்ட வகைகள் இருக்கின்றன. கோயம்புத்தூர், புனு, மத்தியப் பிரதேசம் இங்கிருந்தெல்லாம் பல தினுசுப் புடைவைகள் வருகின்றன.

இப்படிப் பல தினுசுப் புடைவைகளும் அவற்றுக்கேற்ற ரவிக்கைகளும் அந்தக் காலத்தில் அமைந்திருப்பதைப் பார்த்தால், அவர்களுடைய கலைப் பண்பும் அதை ரசமாய்ச் சொல்லும் கவிகளின் திறமையும் ஆச்சரியத்தை உண்டாக்குகின்றன.

### தரை எவ்வளவு தூரம்?

கடும் புயலில் கப்பலின்மேல் மலை மலையாய் அலைகள் வந்து மோதிக்கொண் டிருந்தன.

பயந்து நடுங்கினுர் ஒரு பிரயாணி. மாலுமியிடம் போனுர். "காப்டன், தரைக்கு இன்னும் எவ்வளவு தூரம் இருக்கிறது?" என்று கேட்டார்.

மாலுமி, "ஓ! அதுவா? ஒரு மைல் தூரம்" என்ருர்.

"எந்தப் பக்கம்?" என்ருர் பிரயாணி.

"நேர் கீழே."

—'தி எக்ஸ்-சேஞ்சு'

### ஜீவனும்சம்

மனைவிக்கு ஜீவனும்சம் கொடுப்பது, கடனுக்கு வாங்கிய கார் உடைந்து நாசமான பின் தவணைப்பணம் கட்டுவது போலத்தான்.

—'லுக் மகஸீன்'

பயிலும்போதே வாழ்வில் மகத்தான வேலைகளைப் புரிய மாணவர்கள் தயாராகி வருகிறார்கள்.

# பிரிட்டிஷ் சர்வகலாசாலை

## ஜியாஃப்ரே ஹோர்

'ஆங்கில சர்வகலாசாலைகளில் படிக்கும் மாணவர்கள் ஆக்ஸ்ஃபோர்டு, கேம்பிரிட்ஜ் இரண்டிலும் சிறு வாய்க்கால் கரையில் சந்தடியோ கலாட்டாவோ இராத சூழ்நிலையில் வெல்வெட் போன்ற புல்தரையிலும் புராதனக் கட்டிடங்களிலும் வாழ்ந்து வருவார்கள்; அங்கே ஹோமர் போன்ற பழைய கிரேக்க கவியின் இலக்கியத்திலோ, அசல் விஞ்ஞான ஆராய்ச்சியிலோ திளைத்துக் கொண்டிருப்பார்கள்' என்றெல்லாம் கற்பனை செய்துகொண்டால் இனி நடக்காது. சுரங்க ரெயிலில் அடைபட்டுக்கொண்டு பெரிய தொழிற்சாலை அமைந்த நகரில் ரசாயன எஞ்சினீரிங், யந்திரத் தொழில் நுட்பம் இப்படி ஏதாவது ஒன்றை ஆராயவேண்டியிருக்கிறது.

வாழ்க்கையிலே பல துறையில் ஈடுபடுவதற்கு முன் அமைதியாக மாணவர்களின் மனப்போக்கையும் குணத்தையும் உருவாக்கும் பழைய முறை நீடித்திருக்கச் சர்வகலாசாலைகள் முயன்றுதான் வருகின்றன. இருந்தாலும், இப்போது பௌதிகம், ரசாயனம், ஜீவரசாயனம் (பயோகெமிஸ்ட்ரி), யந்திர, மின்சார, கட்டிடக் கலை சம்பந்தமான எஞ்சினீரிங் இவைகளில்தான் அதிக அக்கறை காட்டவேண்டுமென்று உலகம் ஆத்திரப்படுகிறது.

1946-இல் அமைத்த ஒரு விசேஷ விஞ்ஞானக் கமிட்டியின் சிபாரிசு காரணமாக மகாயுத்தத்துக்குப் பின் பிரிட்டிஷ் சர்வகலாசாலைகளில் விஞ்ஞானம், டெக்னலஜி என்ற செயல்முறை விஞ்ஞானக் கல்வி இவைகளைக் கற்கும் மாணவர்களின் தொகை இரண்டு மடங்காகிவிட்டது.

பிரிட்டிஷ் சர்வகலாசாலைகளின் வளர்ச்சியைச் சர்வகலாசாலை மானியக் கமிட்டியார் (யூனிவர்சிட்டி கிராண்ட்ஸ் கமிட்டியார்) கவனித்து வருகிறார்கள். இவர்கள் சர்வகலாசாலைகளின் சுதந்தரத்தில் தலையிடாமல் அதை மதித்தே வருகிறார்கள்; ஆனால் 'தேசியத் தேவைகளுக்குப் பொருந்த' அவை வளர்ச்சி பெறவேண்டி எவ்வளவு தொகையை அரசாங்கம் கொடுக்கலாம் என்று சிபாரிசு செய்வார்கள். 1947-முதல் சர்வகலாசாலை மாணவர்களின் தொகை 70,000-இலிருந்து 90,000 ஆகப் பெருகிவிட்டது. கல்வியில் ஆர்வமுள்ள இத்தனை பேருக்கும் ஏற்ற கல்வி முறையும் வசதியும் செய்து தரப் பெருமுயற்சி செய்ய வேண்டியிருந்தது.

இங்கிலாந்தில் ஹல், எக்ஸீடர், நாட்டிங்ஹாம், சவுதாம்டன், லீஸஸ்டர் இந்த இடங்களில் உள்ள கல்வி ஸ்தாபனங்களுக்குச் சர்வகலாசாலை அந்தஸ்து அளித்திருக்கிறார்கள். ஸ்டாஃபோர்டுஷைர் என்ற மாவட்டத்தில் உள்ள கீல் என்ற ஊரில் மண்பாண்டம் தயாரிப்போருக்கு இடையே ஒரு பரந்த வெளியில் புதிய காலேஜ் ஒன்று நிறுவியிருக்கிறார்கள்.

சர்வகலாசாலைச் செலவுக்காக அளிக்கும் மானியத் தொகை 1946-இல் 70 லட்சம் பவுனிலிருந்து 1955-இல் 2 கோடியே 50 லட்சமாக உயர்ந்துவிட்டது. சர்வகலாசாலைகளுக்கு இப்படிப்

காப்பிரைட்: 'மஞ்சரி'க்குப் பிரத்தியேகமாக உதவியவர்: பிரிட்டிஷ் இன்ஃபர்மேஷன் ஸெர்வீஸெஸ், ஈஸ்டர்ன் ஹவுஸ், மான்ஸிங் ரோடு. புது டில்லி.



லீட்ஸ் சர்வகலாசாலையில் 1956-இல் திறந்த கட்டிடம். செயற்கை 'ஃபைபர்' தொழில் பகுதியை இதில் வைத்திருக்கிறார்கள்.

பொதுவாக அளித்துவரும் தொகையைத் தவிர, கட்டிடங்களுக்கும் ஒரு கோடியே 20 லட்சம் பவுனுக்கு மேல் மானியத் தொகை வழங்குகிறார்கள்: இவைகளில் பெரும்பாலும் விஞ்ஞானம், தொழில் நுணுக்கக் கல்வி, ஆராய்ச்சி சம்பந்தமான கட்டிடங்கள் தான்; எங்கும் விஞ்ஞான ஆராய்ச்சிக் கூடங்களும், பிரசங்கக் கூடங்களும் கட்டி வருகிறார்கள். இரண்டாம் உலக யுத்தத்துக்குப் பின் கொஞ்ச காலம் காலேஜ் அதிகாரிகள், 'இருப்பது இருக்கிறபடியே இருக்கட்டும்' என்று கட்டிட அமைப்பில் மாற்றம் ஏதும் செய்யாமல் இருந்து வந்தார்கள். மாணவர்கள் இருக்கும் விடுதியில் உள்ள கூடங்களும், எஞ்சினீரிங் கல்வி நிலையங்களும் சலிப்புத் தட்டும் ரீதியில் அமைந்த பழைய (எட்வர்டு) காலத்து நகரசபைக் கூடம் போலவும், பட்டாளத்தைச் சேர்ந்தவர்களின் கருங்கல்லால் ஆன விடுதிகள் போலவும் இருந்தன. ஆனால் சில ஆண்டுகளுக்கு முன் 'பிரிட்டன் விழா' என்ற கொண்டாட்டம் நடந்த பிறகு, நாட்டில் பள்ளிக் கூடங்களை வசதியாக அமைக்கும் முறையைப் பின்பற்றிச் சர்வகலாசாலைக் கட்டிடங்களையும் அமைக்க வேண்டுமென்று ஊக்கம் ஏற்பட்டது; பழைய ரீதியை விட்டுப் புது ரீதியில் சர்வகலாசாலைக் கட்டிடங்கள் அமையலாயின.

சென்ற நாலு ஆண்டுகளாகச் சர்வகலாசாலைக் கட்டிடங்கள் விஞ்ஞான ரீதிக்குப் பொருந்த அமைந்து வருவதைக் காணலாம்; கண்ணாடி, வெளியில் இருந்தபடி திட்டம் அமைத்தல், நிறம், ஒளி, பரிசோதனை இவைகளையும் கல்விப் போதனையையும் ஒரே இடத்தில் ஒத்து நடத்துவது பொருந்தாது என்ற சூழ்நிலை மாறி விட்டது.

ஸர் ஹ்யூ காஸன், ஸர் லெஸ்லி மார்ட்டின், (கவெண்ட்ரி கதீட்ரல் கட்டிடக் கலைப் போர்டில் பரிசு பெற்ற) பேஸில் ஸ்பென்ஸ் இவர்கள் சர்வகலாசாலைக் கட்டிடங்களைக் கற்பனை வளமும் நட்புச் சூழ்நிலையும் செறியும்படி அமைத்து வருகிறார்கள்; கிளாஸ்கோவில் 150 டன் கனமுள்ள சரிவான கூரையின் கீழ் அணுக்கூறு ஆராய்ச்சி சம்பந்தமாக 30,000,000 வோல்ட் சிங்க்ரொடான் யந்திரம் வைத்திருக்கும் கட்டிடத்தில்கூட இப்படி ஒரு சூழ்நிலை தோன்ற அமைத்திருப்பதைக் காணலாம். புதிய கேம்ப்ரிட்ஜ் ரசாயன ஆராய்ச்சிச்சாலைக் கட்டிடத்தின் ஒவ்வோர் அடுக்கிலும் வெந்நீர், தண்ணீர், வடிகட்

டின நீர், நீராவி, பிராண வாயு, அழுத்தமான காற்று, வாக்குவம் இப்படிப் பல வசதிகள் உண்டு. மான்செஸ்டர் எஞ்சினீரிங் பகுதியில் தானாகவே கணக்கிடும் யந்திரம் ஒன்று இருக்கிறது. உலகிலேயே மிகச் சிறந்தது இந்த யந்திரம்; நீர், நீராவி, காற்று இவற்றின் விசையால் ஓடும் கருவிகளிலுள்ள தகடுகள் துடிப்பதையும், எஃகுக் கூரை, காங்கிரீட்டினால் அமைந்த அணை இவற்றின் அழுத்தம் இவைகளையும் இது கணக்கிட்டுத் தெரிவிக்கும். செலவுக் கணக்குப் புத்தகத்தையும் இது பரிசீலனை செய்துவிடும்.

பெரிய பெரிய உற்பத்திச்சாலை நிர்வாகிகள் மிகவும் பெருந்தன்மையோடு இந்தத் துறைக்கு வேண்டிய உதவிச் சம்பள (ஸ்காலர்ஷிப்) வசதி, யந்திரம் முதலிய கருவிகள் இவைகளை அளித்து உதவியிருக்கிறார்கள். பள்ளிக்கூடங்களில் விஞ்ஞானக் கல்வி அபிவிருத்திக்காகத் தொழிற் வளர்ச்சிச் சேமநிதி என்ற தர்ம ஸ்தாபனத்தை இவர்கள் நிறுவியிருப்பது அவசியம் குறிப்பிடவேண்டிய விஷயம். ஓர் ஆண்டுக்கெல்லாம் பிரிட்டனில் உள்ள முக்கியமான பள்ளிக்கூடங்களில் ஆராய்ச்சிக் கூடங்களை இந்தச் சேமநிதியின் உதவியினால் எழுப்பியிருக்கிறார்கள். இனி அநேகம் சிறுவர்களும் சிறுமிகளும் சர்வகலாசாலைகளில் விஞ்ஞானம், டெக்னலஜி (தொழில் நுணுக்கக் கல்வி) இந்தத் துறைகளில் ஈடுபடுவார்கள்.

விஞ்ஞானம், கலை இப்படி இரண்டும் இணைந்த கல்வி முறையினால்தான் முன்னேற்றம் கைகூடும். இப்போது சர்வகலாசாலைகளில் இந்த முறையைத்தான் அமலுக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். கீல் நகரில் உள்ள யூனிவர்சிட்டி காலேஜ் நிர்வாகிகள் தாமே இப்படி ஒரு கல்வி முறை அமைத்துப் பட்டமும் வழங்குகிறார்கள். இதில் முதல் வருஷம் எல்லாரும் நாகரிகத்தைப்பற்றிய பொது விவரத்தைப் பயில்வார்கள்; விஞ்ஞானப் பரிசோதனைகளில் ஈடுபடுவார்கள்; அதற்கு அடுத்த மூன்று வருஷமும் பிற துறைகளைப் பயில்வார்கள். பின் மூன்று ஆண்டில் கால்பகுதியாவது மனித சமூகம், சமுதாயம் இவை சம்பந்தமாகவும் அதே மாதிரி இன்னும் கால் பகுதிக் காலம் விஞ்ஞானமும் பயின்றாக வேண்டும்.

கேம்ப்ரிட்ஜிலும் 1957-இல் மூன்று வருஷக் கல்வி முறை ஒன்று வகுத்திருக்கிறார்கள். இதில் முதல் இரண்டு ஆண்டுகள் கலைகளைக் கற்பதிலும் கடைசி ஆண்டு அணுக்கூறு சம்பந்தமான விசேஷ பௌதிக ஆராய்ச்சியிலும் ஈடுபடுவார்கள் மாணவர்கள்.

## 'க்யூ' வரிசையில் பாதுகாப்பு

ஸினிமா க்யூவில் நின்றுகொண்டிருந்த ஓர் ஆசாமியின் முதுகை யாரோ தொட்டாற்போல் இருந்தது. அவன் திரும்பிப் பார்த்தான். அவனுக்குப் பின் நின்றுகொண்டிருந்த ஒரு பெண், இந்த வரிசையை விட்டு விலகியதைக் கண்டான்.

இப்படி நகர்ந்துகொண்டே, ''நான் கொஞ்சம் அந்தக் கடை வரைக்கும் சென்று ஸோடா குடித்து வரப்போகிறேன்'' என்றாள் பெண்.

''எங்கே வேண்டுமானாலும் போ, அம்மா. அதைப் பற்றி எனக்கென்ன?'' என்று எரிச்சலுடன் சொன்னான் ஆசாமி.

''அது சரி. வரிசையில் என் இடம் மறந்துவிடக்கூடாதில்லையா? அதற்காகச் சாக்கட்டியால் உங்கள் முதுகிலே ஒரு பெருக்கல் குறி போட்டு வைத்திருக்கிறேன்'' என்றாள் அவள்.

—'ரெவ்யூ'

ஆரவாரம் பயனில்லை; தந்திரக் குரல் பயன் தரும்; துணி உடுத்தால் தப்பலாம்!

# சுறுமீனை ஏமாற்ற முடியுமா?

**எமிலி ஸி. சுர்மாச்சர்**

சுறுமீனைக் கடல்புலி என்பார்கள். உண்மையிலேயே அது அவ்வளவு கொடுமையாகவா இரையைத் தாக்கிக் கொல்லும்? இல்லாவிட்டால், அது வெறும் மிரட்டு உருட்டில் வாழும் கோழைப் பிராணிதானா? கப்பல், ஆகாய விமானம் இவை கடலில் சிக்குண்ட போது சுறுமீனிடமிருந்து தப்பியதாகப் பயங்கரமான கதையெல்லாம் சொல்கிறார்களே, அவை வெறும் திகில், பரபரப்புக் காரணமாகப் பிரமாதப்படுத்திக் கூறும் வரலாறுகள்தானா?

ஐக்கிய அமெரிக்க ஆராய்ச்சி இலாகாவில் ஆர்க்டிக், பாலைவனம், உஷ்ணப்பிரதேசம் இவைகளைப் பற்றிய விவரங்களைச் சேகரிக்கும் சிறந்த விஞ்ஞானிகள் கோஷ்டியார் 'மனிதர்களைக் கொன்று தின்னும்' சுறுமீன்களைப்பற்றித் தீவிரமாக ஆராய்ந்து வருகிறார்கள்.

இந்த விஞ்ஞானிகளுக்குத் தலைமை வகிப்பவர் டாக்டர் ஜார்ஜ் ஏ. லானே. இவர் கடலில் இருந்து இதையெல்லாம் நேரில் கவனித்து அநுபவப்பட்டவர். டாக்டர் ஆலிவர் எல். ஆஸ்டின் (சின்னவர்), டாக்டர் ஃப்ரெடரிக் கே. மாரிஸ், வில்லியம் எச். ஆலன் என்ற அறிஞர்களும் இந்த விஞ்ஞானிகளின் கோஷ்டியைச் சேர்ந்தவர்களே. 1940 முதல் 1955-க்குள் சுறுமீனிடமிருந்து தப்பிய சுமார் 2500 பேரிடமிருந்து விவரங்களை இவர்கள் சேகரித்து ஆராய்ந்திருக்கிறார்கள். இப்படித் தப்பியவர்களில் அமெரிக்கா, கானடா, நியூஜீலந்து, ஆஸ்திரேலியா, ஜெர்மனி இந்த நாடுகளைச் சேர்ந்த விமானிகள் பலர் இருந்தார்கள். சமீபத்தில் ஐக்கிய அமெரிக்க விமானச் சர்வகலாசாலையில் இந்த விஞ்ஞானிகள் தங்கள் ஆராய்ச்சியை வெளியிட்டார்கள்; ''நீருக்குமேல் பறக்கும் விமானிகள் எல்லாருக்குமே இப்படிச் சுறுமீனால் ஆபத்து நேரலாம். அப்படி நீரில் சிக்கினால் சுறுமீன் சும்மா விடாது என்பதும் நிச்சயந்தான்'' என்று அந்த அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்கள். நீரில் ஒருவன் சிக்கிவிட்டால் அவன் சுறுமீனிடமிருந்து தப்புவது சிரமந்தான். சுறுமீன் ஆளை நாலா சிலையாக்கி மிகவும் பயங்கரமாகத் தாக்கித் தீர்த்துவிடும். சாதாரணமான நிலையில் இருக்கும் யாரும் அப்படி ஓர் ஆபத்தும் நேராது என்று அசிரத்தையாக இருந்து விடுவதற்கில்லை.

டாக்டர் லானே சொல்கிறார்; ''நீரில் இருப்பவனுக்குத் தன் பக்கத்தில் நீந்துவது என்ன வகைச் சுறுமீன் என்பது முக்கியமல்ல. திமிங்கிலச் சுறுமீன், பாஸ்கிங் ஷார்க் என்ற சுறுமீன் இவை போன்ற பெரிய சுறுமீன்கள் நீரின்



காப்பிரைட்: அமிர்தபஜார் பத்திரிகை (ஆங்கிலம்: 9-2-'58), கல்கத்தா.

மேல் மிதக்கும் சில சாது வான பிராணிகளையும் பாசிபோல் படரும் நீர்ப்பூண்டுகளையும் தின்று வாழ்பவை; மனிதனை உண்ணுவ தில்லை. இருந்தாலும், மூன்று அல்லது நாலு அடிக்கு மேற்பட்ட சுறுமீன் எதுவும் ஆபத்தான தென்றே கருத வேண்டும். சுறு மீனில் 325 வகைக்கு மேல் உண்டு; ஆனால் இவைகளில் சுமார் இருபது தான் மனிதனைத் தாக்கும். சில சுறுமீன்கள் மற்றவைகளைவிடப் பயங்கரமாக இருக்குமே யொழிய மற்றப்படி அப்படி ஆபத்தானவை என்பதற்கில்லை; இன்னும் ஒன்று; சில பிரதேசங்களில்தான் சுறுமீன் இப்படித் தாக்குவதாகத் தெரி கிறது.'' சுறுமீன்களை உலகத்தி லுள்ள எல்லாக் கடல்களிலும் காணலாம். பலவகைச் சுறுமீன் கள் மிகுந்த ஆழத்தில்தான் வாழ்ந்து உணவு தேடுகின்றன. மற்றவை எப்போதும் மேல் மட்டத்திலேயே இரை தேடும். இந்தமாதிரி சுறுமீன்களின் முதுகில் தான் செதிள்கள் குத்திட்டுக் கொண்டு நீரின் மேல் பகுதியில் இருப்பது தெரியும். இவைதான் மனிதர்களை அண்டித் தாக்க வருகின்றன.''

''வடக்கே அட்சரேகைக்கு 40 டிகிரி, தெற்கே அட்சரேகைக்கு 40 டிகிரி இவற்றுக்கு இடையே இருக் கும் கடல்களில்தான் இப்படிச் சுறுமீன்கள் தாக்குகின்றன'' என் கிறார்கள் விஞ்ஞானிகள். ஆகவே, கானடாவின் (அட்லாண்டிக், பசிபிக் மகாசமுத்திரம் இப்படி) இருபக்கக் கரைகளிலும் பலவகைச் சுறுமீன்கள் இருந்தும் அவைகளால் அப்படி ஆபத்து இருப்பதாகத் தெரியவில்லை.

இப்படிக் கிடைத்த விவரங்களில் ஓர் அதிசயம் என்னவென்றால், சுறுமீன் தீண்டிக் காயப்பட்டவர் கள் அது எப்படி நேர்ந்தது என்று தெரியாமல் திகைப்பதுதான். குவடால்கனல் என்ற இடத்தில் கடலில் எதிரிகள் அமெரிக்க நாச காரிக் கப்பல் ஒன்றை மூழ்கடித்து விட்டார்கள். அதில் இருந்த அமெரிக்கக் கப்பல்படை அதிகாரி ஒருவர் 12 மணி நேரம் இந்தச் சுறு மீன்களிடம் சிக்கிப் பட்ட அவதி சொல்லி முடியாது. கபோக் என்ற ஒருவகைப் பஞ்சு வைத்துத் தைத்து நீரில் மிதக்க வசதியாக இருந்த ஜாக்கெட்டைப் போட்டுக் கொண்டு, நிஜார், ஷூ, சாக்ஸ் ஏதும் இல்லாமல் நீரில் அவர் குதித்துவிட்டார். இரண்டடி நீள மும் ஐந்து அங்குலம் குறுக்களவும் உள்ள 2 அலுமினியம் டப்பாக் களைப் பிடித்துக்கொண்டு இரவு முழுவதும் நீரில் இருந்தாராம். விடிகாலையில் அவைகளை விட்டு விட்டு மிதந்துகொண் டிருந்தார். அப்போது, இடது பாதத்தில் ஏதோ கிசுகிசு மூட்டுவதுபோல் உணர்ச்சி ஏற்பட்டது.

மேலே நடந்ததை அவர் சொல் கிறார்: ''சற்றுத் திடுக்கிட்டுக் காலை மேலுக்கு இழுத்துக் கொண் டேன். ரத்தம் கசிந்துகொண் டிருந்தது காலில்! பத்தடி தூரத்தில் ஒரு பெரிய மீனின் பழுப்பு முதுகு பளபளவென்று தெரிந்தது. அது நீந்திக்கொண்டே அப்பால் போயிற்று. அது மறுபடி யும் என் பக்கம் வருவதைப் பார்த்த பிறகுதான் எனக்கு உண்மையிலேயே திகில் கண்டு விட்டது. நான் நீரில் காலை உதைத் துக் கொள்ளவே அது 20 அடி தள்ளிப்போய் மறுபடியும் என்னை நோக்கி வந்தது. மீண்டும் திரும்பி விட்டது; மறுபடியும் என்னை நோக்கி வந்தது. அது என்மேல் பாய வந்ததும் நான் அதன் மூக் கைப் பார்த்துக் குத்துமேல் குத்து விட்டேன். அந்த அதிர்ச்சியில் இரண்டடி ஆழத்துக்குப் போய் நீந்திக்கொண்டே மறுபடியும் என் மேல் பாயக் காத்திருந்தது. அது அப்போதுதான் என் இடது கைச் சதையில் கொஞ்சம் பிய்த்திருப் பது தெரிந்தது. உப்பு நீரில் இருந்த தால் ரத்தப் போக்குச் சற்றுத் தடைப்பட்டிருந்தது; அப்படி வலி யும் அதிகமாகத் தெரியவில்லை. அந்தப் பக்கமாக ஒரு கப்பல் போகவே அதை நோக்கிக் கையை ஆட்டும் அவசரத்திலும் பரபரப்பி லும் சற்று நேரம் சுறுமீனைக் கவனிக்காமல் இருந்துவிட்டேன். அந்தச் சமயம் பார்த்து என்

துடையைக் கடித்துவிட்டது சுறு மீன். எலும்புகூடத் தெரிந்தது; இருந்தும் எனக்கு அது கடித்த தாகவே உணர்ச்சி ஏற்படவில்லை. அப்போது அந்தக் கப்பலில் இருந்த பல மாலுமிகள் சுறுமீனைச் சுட்டார் கள். அவர்களுடைய குறி பிசக வில்லை. அதைக் கொன்று என்னை மீட்டார்கள்.''

''பல சுறுமீன்கள் உயிருள்ள பிராணிகளையே இரையாகக் கொள்ளுகின்றன'' என்கிறார்கள் இந்த விஞ்ஞானிகள். இன்னும் அவர்கள் சொல்லும் விவரம் இது: ''சுறுமீனுக்கு அகாதப் பசி உண்டு; பல சுறுமீன்கள் தோட்டி வேலை செய்கின்றன. தன்னந்தனியாகவோ கும்பலாகவோ இவை செல்லும்; பார்வை, மோப்பம், ஒலி இந்த மூன்றின் துணையாலும் இரையை நாடிச் செல்லும்.''

''இந்தச் சுறுமீன்கள் இப்படிக் கடிக்க ஒரு பக்கமாகத் திரும்பவோ பின்னுக்குப் போகவோ தேவை யில்லை'' என்று விஞ்ஞானிகள் தெளிவாகத் தெரிவித்திருக்கிறார் கள். ஏற்கனவே பொதுவாக எல்லா ரும் அப்படித் திரும்பும், பின்னுக் கும் போகும் என்று எண்ணி வந்தது தவறாம்.

''தலை அடிப்பாகத்தில் உள்ள சுறு மீன் மேல்மட்டத்தில் இருக்கும் இரையை நாடும்போது ஒரு பக்க மாகத் திரும்ப வேண்டியிருந்தும் ஏனோ அப்படிச் செய்வதில்லை. முன்னதாகவே வாயைப் பிளந்து கொண்டு நேராக இரையைத் தாக்க வந்துவிடும். அதன் முன் பக்கம் முழுவதும் 'ஆ' என்ற வாய் தான் பெரிதாகத் தெரியும்; ஆகவே எந்த நிலையிலிருந்து வேண்டுமானா லும் அது மனிதனைக் கடிக்கும்'' என்கிறார் டாக்டர் லானே.

ஒரே கடியில் சுறுமீன் ஒரு மனித னின் அவயவத்தைத் துண்டித்து விடும் என்று வெகு நாளாகச் சொல்வதுண்டு. ''வெள்ளைச் சுறு மீன்களுக்கும் இன்னும் சில வகைச் சுறுமீன்களுக்கும் கூரான பல்லும், வலிமையான தாடையும் உண்டு; அவற்றால் ஒரு மனிதனுடைய காலையோ கையையோ கடித்துத் துண்டாக்கிவிடும். ஆனாலும், இரை யாகும் பிராணியை எளிதில் விழுங்க வசதியாய்க் கொஞ்சங் கொஞ்சமாகச் சதையைக் கிழித் துத் தொல்லை கொடுப்பதுதான் பெரும்பாலும் அதன் வழக்கம்'' என்று டாக்டர் லானே தெரிவிக் கிறார்.

பல சந்தர்ப்பங்களில் இப்படிச் சிக்கிய ஆடை உடுத்திருப்ப வரை ஆராய்ந்தபோது, அளவைப் பொறுத்தே சுறுமீன் தாக்கும் அல் லது தாக்காது என்று தீர்மானிக்க முடிந்தது. சுறுமீன் வாழும் பகுதி யில் இரண்டு அல்லது அதற்கு மேற் பட்டவர்கள் சேர்ந்து நீந்தும் போது அவர்களில் யார் உடம்பு அதிகமாக வெளியில் தெரிகிறதோ அவர் பாடு ஆபத்துத்தான்.

அமெரிக்கக் கப்பல்படையைச் சேர்ந்த சிப்பந்தி ஒருவர் ஒரு சம யம் ஃபிலிப்பைன் தீவில் உள்ள எங்கானோ முனையில் நீரில் பாரசூட் மூலம் இறங்க வேண்டிய நிர்ப்பந் தம் ஏற்பட்டது; அவரோடுகூடத் துப்பாக்கி ஏந்திய ஒரு கூட்டாளி யும் இறங்கினார். இருவரும் உடல் முழுவதையும் மறைக்கும்படி உடுத்திருந்தார்கள். ''என் கூட் டாளி முதுகுப் பக்கம் நீரில் படும் படி விழுந்தார்; அவரை ஒரு குலுக் குக் குலுக்கிப் போட்டது; இருந் தாலும், சமாளித்துக்கொண்டு நீந்தத் தொடங்கினார். அப்போது அவருடைய சாக்ஸ் மெல்ல மெல்ல நழுவிக் கால் வெளியே தெரிந்தது. சுறு மீன்களுக்கு இது கொண் டாட்டமாயிற்றே; உடனே அவை நாலு ஒன்று சேர்ந்து அவரைத் துரத்தின. ஒவ்வொன்றும் நாலு அடி நீளத்துக்கு இருக்கும். அவர் காலை உதைத்துக்கொண் டிருந்த வரையில் அவை ஒன்றும் செய்ய வில்லை. சற்று ஓய்வு எடுத்துக் கொள்ள நீச்சலை நிறுத்தினாரோ இல்லையோ அவரைச் சீந்தத் தொடங்கிவிட்டன'' என்று தெரி வித்திருக்கிறார் அந்தக் கடல் படைச் சிப்பந்தி.

'ஆ! ஊ!' என்று கலாட்டா செய்து நீரில் அலப்பினால் சுறுமீன் கள் நம்மைத் தாக்காதபடி சமா ளிக்கலாமா, முடியாதா என்ற விஷ யம் இன்னும் தெரிந்தபாடில்லை.

ஆராய்ந்ததில், இப்படிக் கலாட்டா செய்தால் சில சமயம் சுறுமீன்கள் ஓடுவதைவிட்டுக் கிட்டவே வந்து விடும் என்று தெரிந்தது.

பஹாமாஸ் என்ற இடத்தில் நாசு என்ற ஊரில் பிரிட்டிஷ் கடற் படையைச் சேர்ந்தவர்கள் இந்த மாதிரி சுறுமீன்கள் மிகுதியாக உள்ள இடங்களில் இவை சமீபத்தில் இருந்தால், நீரில் கைகால் ஆட்டி அலப்பாமல் இருக்கும்படியும், மெதுவாகவும் நயமாகவும் நீந்தும்படியும் சொல்லியிருக்கிறார்கள்.

உரத்த சப்தங்களைவிட 'விநோதமான' ஒலிகளைக் கேட்டால்தான் சுறுமீன்கள்சற்று அஞ்சித் தொலைவிலேயே இருக்கும். கலிஃபோர்னியா கடல்கரையில் ஒரு கப்பல் முறிந்து மூழ்கிவிட்டது; அதில் இருந்த மூன்று மாலுமிகள் சுறுமீன்களிடமிருந்து தப்ப, நீரில் வாயை வைத்து உரக்கக் கூவினார்கள். அதனால் உடனே பலன் தெரிந்தது. 'கொடகொட' என்ற அந்தச் சப்தத்தைக் கேட்ட சுறுமீன்கள் அவர்களை நெருங்கவில்லை.

இந்தமாதிரி சந்தர்ப்பங்களில் அணியும் உடையும் நீரில் பாதுகாப்பாக இருக்கப் போடும் உடுப்பும் கறுப்பாக இருக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். சுறுமீன்களுக்குக் கறுப்பு நிறம் கண்ணில் படாது என்றுதான் வெகு நாளாக நம்பி வந்தார்கள். அடிமை வியாபாரம் செய்துவந்த அந்த நாளிலேகூட நீக்ரோ ஜாதியானைச் சுறுமீன் தாக்காது என்று மாலுமிகள் சொல்வது வழக்கம். மேற்கு இந்தியத் தீவுகளில் வாழும் நீக்ரோக்கள், சுறுமீன் மலிந்த இடத்தில் நீந்துவதற்குமுன் இன்றும் தங்கள் உள்ளங்கையும் உள்ளங்காலும் சற்று வெளுப்பாக இருப்பதால், அங்கே கறுப்பு வர்ணம் பூசிக்கொண்டு இறங்குவார்கள்.

ஆனால் டாக்டர் லானே என்ன சொல்கிறார் தெரியுமா? ''லேசான நிறங்களை ஆழ்ந்த நிறங்களைவிட அவ்வளவு எளிதில் கண்டுகொள்கின்றனவா அவை என்பது சந்தேகந்தான். எந்தவிதமான தூண்டில் பொருளை உபயோகித்தால் சுறுமீனைப் பிடிக்க முடியும் என்று மீன் பிடிப்பதே தொழிலாகக் கொண்ட சிலர் பரிசோதித்ததில் எண்ணெய் தோய்ந்த பண்டமும், ரத்தம் தோய்ந்த மீனும் சிறந்த தூண்டில் பொருள்கள் என்று தெரிந்தது. கறுப்போ வெளுப்போ எந்த நிறத் துணியாக இருந்தாலும் அதைச் சுறுமீன்கள் நெருங்குவதில்லை'' என்கிறார்.

விஞ்ஞானிகளுடைய ஆராய்ச்சியின் விளைவாக ஒன்று நிச்சயமாகத் தெரிந்தது. 'கடல் புலி' என்று சுறுமீனுக்குப் பெயர் வழங்குவது பொருத்தந்தான். சுறுமீனை யுக்தியினால் வென்று சமாளிக்க முடியுமா?—டாக்டர் லானே இதற்குச் சில யோசனைகள் கூறியிருக்கிறார். இவைதான் அந்த யோசனைகள்.

''நீந்துகிறவர்கள் உடம்பு முழுவதையும் மறைக்கும்படி ஆடை உடுத்திருக்க வேண்டும். அதிலும், முக்கியமாகக் காலில் ஷூ அணிந்திருக்க வேண்டும். காரணம் இல்லாமல் நீரில் 'சடால் புடால்' என்று அலப்பிக்கொண்டு போகவும் கூடாது; அப்படிச் செய்வது சுறுமீனை வலிய அழைப்பதாக முடியும். நிதானமாகவும் பொருத்தமாகவும் நீர்மட்டத்தில் படிந்த விதமாகவும் நீந்தவேண்டும். தனியாக ஒருவர் நீந்திச் செல்வதைவிடப் பலபேர் ஒன்று சேர்ந்து நீந்துவது நல்லது; அப்போது சுறுமீன்களை எல்லாருமாகச் சேர்ந்து சுற்றுமுற்றும் கண்காணித்து விரட்டியடித்துவிடலாம்.

''உடனடியாக அபாயம் நேரும் போல் இருந்தால் நீருக்குள்ளே கூவலாம். 'ஷார்க் ரிப்பெல்லண்ட்' என்ற ஒன்று உண்டு; அது கைவசம் இருந்தால் அதனால் சுறுமீனைத் தடுக்கலாம். இல்லாவிட்டால் சுறுவின் மூக்கிலோ கண்ணிலோ தொண்டையிலோ ஓர் உதை விடுங்கள். படகு, ஒரே ஆள் ஏறக்கூடிய டிங்கி என்ற பரிசல் இவைகளில் உட்கார்ந்திருந்தாலும் போதும்; சுறுமீனால் அவ்வளவாக அபாயம் இல்லை. கட்டுமரம், படகு இவைகளைச் சுற்றிச் சுறுமீன்கள் இருப்பது சகஜந்தான்; நாம் பொறுமையாகவும் எச்சரிக்

கையாகவும் இருந்து வருவதே முக்கியம்.

''நம் பக்கம் அது கவனிக்காதிருக்க நாம் அமைதியாக இருக்க வேண்டும். வெளியே உணவையோ, அப்போதுதான் கொன்ற பறவை, மீன் இவைகளின் சிறகு, தோல் குப்பைகளையோ எறியக்கூடாது. கை, கால், உடை, மற்றுமுள்ள சாமான்கள் படகுக்கு வெளியே தெரியாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும்.

''சுறுமீன் மிகவும் நெருங்கி வந்தால், கையில் எந்தச் சாமான் கிடைக்கிறதோ அதைக் கொண்டு சுறுமீனின் கண்ணிலோ மூக்கிலோ ஓங்கி அடியுங்கள். அடிக்க உபயோகிப்பது கனமான பொருளாக இருந்தால் பின்னும் நல்லது. ஆனால் வெறும் கையால் மட்டும் குத்தாதீர்கள், ஜாக்கிரதை! இப்படிச் செய்தால் சுறுமீனுக்குத் தீங்கு ஏற்படாது; குத்துகிற ஆசாமிக்கே காயப்படும்.''

## வக்கீல் கேள்வி

கார் விபத்தில் அடிபட்டவனைப் பிராஸிகியூஷன் தரப்பில் சாட்சியாக விசாரித்து முடிந்தது. எதிரி வக்கீல் குறுக்கு விசாரணை செய்யத் தொடங்கினர்.

**வக்கீல்:** விபத்து நடந்தவுடன், எதிரி உம்மை, 'உமக்கு ஒன்றும் வேதனை இல்லையே?' என்று கேட்டதற்கு, 'இல்லை' என்று நீர் பதில் சொன்னதுண்டா, இல்லையா?

**சாட்சி:** அதைக் கேட்கிறீர்களா? சொல்லுகிறேன் கேளுங்கள்; நடந்த விஷயம் இது: என் கிழக் குதிரை பூட்டிய பழைய வண்டியை ஓட்டிக்கொண்டு சாலையிலே போய்க்கொண்டிருந்தேன். எதிரே மோட்டார் காரை ஓட்டி வந்த எதிரி என் வண்டியை இடித்து ஒரு குழியிலே தள்ளினர். உங்கள் வாழ்நாளிலேயே அந்த மாதிரி அவந்தரையை நீங்கள் கண்டிருக்க மாட்டீர்கள். நான் அப்படியே மல்லாக்க விழுந்தேன்; என் கால்கள் அந்தரத்தில் தூக்கிக்கொண்டிருந்தன. என் குதிரை அப்படியே மல்லாக்க விழுந்தது; அதன் கால்கள் அந்தரத்தில் தூக்கிக்கொண்டிருந்தன. என் வண்டி மல்லாக்க விழுந்தது; அதன் கால்கள் அந்தரத்தில் தூக்கிக்கொண்டிருந்தன. இதோ இந்த மோட்டார் டிரைவர் தம் காரை விட்டு வெளியே வந்தார். வண்டியையும் குதிரையையும் என்னையும் பார்த்தார். என் குதிரையின் கால்கள் முறிந்து போயிருக்கக் கண்டார். திரும்பவும் காருக்கு அருகே போனர். உள்ளே கையை விட்டு ஒரு பிஸ்டலை எடுத்தார். குதிரையைச் சுட்டுக் கொன்றர். பிறகு என்னிடம் வந்தார். 'இனி உம் சங்கதி என்ன? உமக்கு ஒன்றும் வேதனை இல்லையே?' என்றர். 'இல்லை' என்று அழுத்தமாய்ச் சொன்னேன். —'லூயிஸ்வில் கூரியர் - ஜர்னல் மகஸீன்'

## வாயால் வந்த வினை

மீனவன் ஒரு பெரிய மீனைக் கரையிலே இழுத்துப் போட்டான். இந்தச் சமயம் அந்தப் பக்கமாகச் சென்ற ஒரு பெண் இதைப் பார்த்து, ''அடடா! பாவம், இந்த மீனைப் பார்த்தால் பரிதாபமாயிருக்கிறது'' என்றள்.

மீனவன் உடனே, ''அது சரிதான், அம்மா. இது மட்டும் தன் வாயை மூடிக்கொண்டு சும்மா இருந்திருந்தால், இந்த ஆபத்து இதற்கு நேர்ந்திராது'' என்றன்.

—'தி வொர்ல்டு டைஜெஸ்ட்'

மலையாளக் கதை:

# சங்கமம்

## எஸ். கே. பொற்றெக்காட்

எண்ணற்ற சிறுகதைகள் எழுதி, வாழ்க்கையை அற்புதமாய்ச் சித்திரித்துப் புகழ் வாய்ந்த முன்னணி எழுத்தாளர் இவர். இவருடைய சில கதைகளைத் தமிழாக்கிச் 'சங்கமம்' என்ற தலைப்புடன் 'சௌரி' தொகுத்திருக்கிறார். இந்தத் தொகுப்பில் உள்ள ஒவ்வொரு கதையும் ஒவ்வொரு சுவை பயக்கும் நேர்த்தியான சித்திரம். கதைகளில் வரும் பாத்திரங்கள் ஒன்றுபோல் மற்றொன்றில்லை; ஒவ்வொன்றும் வெவ்வேறு ரகம். சூழ்நிலையும் வெவ்வேறு. ஆசிரியரின் பரந்த அநுபவத்தையும் கூர்ந்த கவனத்தையும் தேர்ந்த திறனையும் கதைகளிலே காணலாம். மொழிபெயர்ப்பு நடை நேர்த்தியாய், இயல்பாய் அமைந்திருக்கிறது.

நீலகிரி ஜில்லாவின் ஓர் ஓரத்தில் நீல மலைகளின் நிழலில், சாய்ந்து கிடக்கும் குன்றுகளின் இடைவெளியில் ஏழெட்டுக் குடிசைகள். பெரிய பாக்குப் பட்டைக் கூடைகளைக் கவிழ்த்து வைத்தாற்போல் காட்சியளிக்கும் அந்தக் குடிசைகளில்தான் அந்த மலை நாட்டு மக்கள்-தொதவர்கள்-குடியிருப்பது. மண்கொண்டு எழுப்பிய மதில்சுவர்கள் நான்கு புறங்களிலும் சூழ்ந்திருந்தன. இது போன்ற பகுதியை 'மந்தா' என்று சொல்லுவார்கள். இந்த 'மந்தா' வுக்குப் 'பற்கூறம்' என்று பெயர்.

குகைபோல் உள்ளடங்கிய இந்த 'மந்தா'வில்தான் சின்சின் வளர்ந்து மலர்ந்து மடந்தையானாள். தன் வயசு பற்றி அவளுக்குச் சரியாகத் தெரியாது. அவளுடைய கிழத் தந்தையின் நினைவு சொல்வது இது: ''பக்கத்துப் 'படகா' கிராமத்தில் கப்ப கௌடருடைய மூத்த மகனுக்கு முதல் முறையாகப் பசு கறக்கக் கற்றுக்கொடுத்த பயிற்சி விழாவின்போதுதான் சின்சினின் தாய் அவளைப் பெற்றெடுத்தாள்.'' கப்ப கௌடரைக் கேட்டால், அவர் சற்று நேரம் யோசனை செய்துவிட்டு, ''நான் பைக்காரா மலையில் புதிதாக உருளைக் கிழங்கு பயிரிட்ட ஆண்டிலேதான் மூத்த மகனுக்குப் 'பசுக் கறவைப் பயிற்சி விழா'க் கொண்டாடினது'' என்பார். ஆகவே, சின்சின் பிறந்த நாளின் ரகசியம் பைக்காரா மலையில், ஏதோ ஓர் உருளைக் கிழங்கு வயலுக்குள் புதைந்து கிடக்கிறது! இதற்காக அவள் வளர்ச்சியடையாது நின்றுவிடவில்லை.

வாளிப்பும் வனப்பும் சின்சினின் மேனியில் பூரித்திருந்தன. மகிழ்ச்சியும் சுயேச்சையும் துள்ளியாட, அவள் கானகக் கன்னியாக இயற்கையின் அரவணைப்பில் நன்றாய் வளர்ந்திருந்தாள். தொதவ வாலிபர்களின் கண்களுக்கு மட்டும் அல்ல, ஒளிவு மறைவில்லாது ஒயில்

காப்பிரைட்: சங்கமம் (சிறுகதைத் தொகுதி). வெளியிட்டவர்: தேனருவிப் பதிப்பகம், தியாகராயநகர், சென்னை-17. விலை ரூ. 3.

மேனியைக் கண்டு களிக்க விரும்பும் மேல்நாட்டாரின் கூர்மையான பார்வைக்கும் சின்சின் மிக அற்புதமான மோகினியாகத்தான் காட்சி அளித்தாள்.

பெண் என்பதற்காக அடங்கி ஒடுங்கி இருக்கவேண்டும் என்ற கட்டுப்பாடு எதுவும் அங்கே கிடையாது. சமவெளிக்கு ஏழாயிரத்து ஐந்நூறு அடி உயரத்தில், கீழே உள்ள நாகரிக மக்கள் வகுத்துக்கொண்ட முறைகளோ கட்டுப்பாடுகளோ எவையும் அங்கே ஆட்சி புரிய வழியில்லை. ஒதுங்கி இருக்கும் அந்தத் தனி இனம் சுயேச்சையாகவே வாழ்ந்து வந்தது. சோம்பலும் அறியாமையும் கலந்திருந்தாலும், வாழ்க்கையில் பற்றுதலும் மன நிறைவும் தொதவர்களிடம் என்றுமே குறைந்ததில்லை.

பெரும்பாலும் உடல் வாட உழைக்கும் பயிற்சியே இல்லாத சோம்பேறிகள் தொதவர். அதிலும் கட்டழகி சின்சினிடம் அந்த இனவழி வந்த இயல்பு நிறையவே இருந்தது. கிழத் தந்தைக்கும் தனக்கும் சோறு ஆக்குவதே அவளுக்குப் பெருஞ் சுமை. இந்தப் பெரும் பணி தீர்ந்துவிட்டால், மீதிப் போதைக் கழிக்க அவள் வெளி முற்றத்தில் வெயில் காய்ந்துகொண் டிருப்பாள்; அப்போதெல்லாம் சில பாட்டடிகளை முணுமுணுத்துக்கொண்டே நடை போடுவாள். பக்கத்து மலைக்குச் சென்று, விறகும் சுள்ளியும் சேகரிப்பதிலும் அக்கம் பக்கத்துப் பெண்களுடன் குந்திக்கொண்டு, வம்பளப்பதிலும் சின்சினுக்குத் தனி மோகம். மழைக் காலத்தில் அடுப்படியில் தீமூட்டத்துக்கு எதிரில் உட்கார்ந்துகொண்டு கூந்தலைக் கோதிச் சிக்கு எடுப்பது அவளுக்குப் பிடித்தமான பொழுதுபோக்கு.

இயற்கையெழிலைக் காண வந்த வெள்ளைக்காரர்களின் காமிராக்களுக்கு எதிரே சின்சின் பிறந்த மேனிக்கு நின்று ஒன்றிரண்டு தடவை காட்சி தந்திருக்கிறாள், கைமேல் எட்டணுக் காசு கிடைத்து விட்டதற்காக! தன் உருவத்திலும் மேனி மினுக்கிலும் ஏதோ ஒரு தனி வசீகரம் இருக்கிறது என்பதை உணரத் தொடங்கினாள். கூடவே, அவளுடைய பெருமிதம் செருக்காக மாறியது.

ஆவணி மாதத்தில் ஒரு நாள். மாலை நேரம். கடுங்குளிர் தொடங்கவில்லை. 'பேய் மாரி' மழையும் தூற்றலும் பிசுபிசுப்பும் கொடுத்துவந்த தொல்லை விலகிக்கொண் டிருந்தது. புதிதாகத் தழைத்தெழுந்த செந்தளிர்கள் போல், கதிரவனின் பொன்கதிர்கள் பரவிக்கொண் டிருந்தன.

சின்சின் மெள்ள வெளியே வந்து சுற்றும் முற்றும் பார்த்தாள். நிலத்தை ஒட்டினாற்போல் அவள் குடிசையின் வாயிற்புறம். பள்ளத்தாக்கில் அமைந்த குடிசையாதலால் குகை போலவே இருக்கும். தெற்குப் புறத்தில், பக்கத்துக் குடிசைப் பெண்கள் வட்டமாக உட்கார்ந்து, தங்கள் தங்கள் 'புத்குலி' களில்-தொதவப் பெண்கள் சுற்றிக்கொள்ளும் ஒற்றைத் துணிகளில்-பூத்தையல் போட்டுக்கொண் டிருந்தார்கள். கூடவே நாட்டுப் பாட லொன்றையும் சேர்ந்து பாடிக்கொண் டிருந்தார்கள்.

சின்சின் சட்டென்று குடிசைக்குள் திரும்பினாள். பூத்தையல் பின்னுவதற்காக வாங்கி வைத்திருந்த தன் புதிய 'புத்குலி' யைத் தோளில் போட்டுக்கொண்டு கிளம்பினாள். அவள் நடையே அலாதிக் கவர்ச்சி வாய்ந்தது; புதிய பட்டுச் சொக்காய் அணிந்த சிறு பெண் போல் தற்பெருமை புலப்பட அவள் நடந்தாள். பச்சை குத்திய அவளுடைய பாதங்கள் ஒயிலுடன் மெள்ள அசைந்து வந்தன.

சின்சினும் கூட்டத்துப் பெண்களுடன் உட்கார்ந்து துணி தைக்கத் தொடங்கினாள். புதுப் பாட்டு ஒன்று பல குரல்களில் இழைந்து ஒலிக்கத் தொடங்கியது:

மாரிக்கார் கூடுன்னு
மானத்தே முற்றத்து,
தூரத்து எருமைக்
கிடாங்கள் போலே;
திக்குகளொக்கே
கறுக்குன்னு; பாடுன்னு

புத்குலி சுற்றிய
பெண் கிடாங்ஙள்.
பாலோள் குடிஞ்ஞிலில்
கூர்க்கம் வலிக்குன்னு
பாலோள்க்குப் பெண்ணினெத்
தொட்டுக்கூடா!
பாலோள், எழுந்நேல்க்கூ!
பாலோள், எழுநநேல்க்கூ!
வாதில் துறன்னுஅல்ப்பம்
மோரு நல்கு.
அப்புறம் வன்னென்னல்
என்தேவன் கோபிக்கும்;
அப்பப்பா! மோரின்னு
நேரம் வைகி.
காற்றும் மழயும்
தகர்க்குன்னு மேகங்கள்
பொட்டிப் பிளர்ன்னு; ஞான்
பேடிக்குன்னு;
முற்றத்து பாத்ரவும்
கையில்ப்பிடிச்சு ஞான்
சற்றெத் தணுத்த
மழ நனஞ்ஞு.
பாலோள், உறங்ஙுன்னு,
பாலோள், உறங்ஙுன்னு; . . .
பாரமிருட்டாயி,
போகட்டே ஞான்.

[குடிஞ்ஞில் - குடிசை; கூர்க்கம்- குறட்டை; வாதில் - வாசல்; பேடிக்குன்னு - பயப்படுகிறேன்; பாரமிருட்டு - கும்மிருட்டு; பாலோள் - பால் முதலியன சேமித்து வைக்கும் 'கலவறை'க்குக் காவல் இருக்கும் வாலிபன்.]

தேனீக்கூட்டம் ஒலிப்பதுபோல், தொதவப் பெண்கள் அந்தப் பாட்டைப் பாடி முடிப்பதற்குள்ளே, 'சடசட' வென்று ஒரு பாட்டம் மழை பெய்து ஓய்ந்தது. மழையைப்பற்றியும் பாட்டில் குறிப்பிட் டிருந்ததால்தானோ என்னவோ, முன்னறிவிப்பு இல்லாமலே கொட்டத் தொடங்கி விட்டது! நனைந்து போன தேனீக்களைப் போல், தொதவப் பெண்கள் நாலு புறமும் சிதறிப் பறந்தார்கள்.

சின்சின் குடிசைக்குள் வந்து சேர்ந்தாள். எப்படிப்பட்ட சூருவளியானாலும் அந்தக் குடிசை அசைந்து கொடுக்காது. அதே போல், கடுங் கோடைப் பருவத்திலும் அது ஓர் 'ஏர் கண்டிஷன்' செய்த இடந்தான். தட்டிகளையும் மரத்தூண்களையும் வைத்து, மேலே கனமாக மண் பூசிப் பத்திரப்படுத்திய சுவர்கள்; மரப் பலகைகள் தைத்த முன் பகுதி; காய்ந்த கோரைப்புல் கொண்டு வேய்ந்த வளைவான மேற் கூரை இவ்வளவு பாதுகாப்புக்களையும் கொண்ட அந்தக் குடிசையின் உள்புறம் பூமிக்கடியில் நிலவறைபோல் அமைந்திருந்தது. அதற்குள் ஓர் ஓரத்தில் உயர்த்திக் கட்டியிருந்த திண்ணையில் பெருந் தவமுனிபோல் ஒரு தாடிக்காரக் கிழவன் உறக்க மயக்கம் கலையாமல் சுருண்டு கிடந்தான்; இவன்தான் சின்சினின் தந்தை பர்க்கூர்.

அடுப்புக்கு அருகே சாய்ந்திருந்த பரணில் 'யுகலிப்டஸ்' மரத்தின் விறகுகளும் சிராய்களும் கலந்த கட்டு ஒன்று தொங்கியது. புகைக்கரி படிந்திருந்த அந்தக் கட்டிலிருந்து சின் சின் இரண்டு விறகுகளை இழுத்து அடுப்பில் திணித்தாள். ''மின்னுமினுங்ஙுகள்' (மின்மினிகள்) போல் ஏழெட்டுத் தீப்பொறிகள் பறந்தன. உடனே, தீ கொழுந்து விட்டு எரியத் தொடங்கியது.

சின்சின் தான் சுற்றியிருந்த 'புத்குலி'யை அவிழ்த்துப் பக்கத்துத் திண்ணையில் போட்டாள். அடுப்படியில் குந்திக் குளிர் காயத் தொடங்கினாள். இந்த நிலையில் அவளைக் காணும்போது, இத்தாலிய வீனஸ் தேவதையின் வெண்கலப் படிமந்தான் நினைவுக்கு வரும்.

''சின்சின்'' என்று கிழவன் கூப்பிட்டான்.

''என்ன, அப்பா?''

''என்ன செய்துகொண்டிருக்கிறாய்?''

''குளிர் காய்கிறேன்.''

''சோறு உண்டாக்கணும் என்கிற எண்ணம் உண்டா, இல்லையா?''

''ஊம்.''

அவள் குரலில் அலுப்புப் புலப்பட்டது. வெளியிலே மழை இரைச்சல்; இந்தச் சுணக்கமான வேளையில், அடுப்படியில் இருந்து



கொண்டு குளிர் காயத்தான் அவளுக்கு விருப்பமாக இருந்தது.

''சின்சின், கறி வைக்கக் கொஞ்சம் கிழங்கு கொண்டு வந்திருக்கிறேன். அதோ, மூலையிலே இருக்கிறது, பார்!'' என்று கிழவன் இருமிக்கொண்டே சொன்னான்.

கொள்ளிக்கட்டை ஒன்று தீனமாக ஒலித்தது. ஈர விறகிலே நீர் வற்றும்போது எழும் ஓசை அது. தொடர்ந்து ஓரத்தில் நீர்க் கொப்புளங்கள் முத்து முத்தாக எழும்பிக்கொண்டிருந்தன. அவற்றை விரலால் அழித்து, விறகை அடுப்புக்குள் சின்சின் தள்ளிவிட்டாள்.

''கொஞ்சம் மூங்கில் குருத்தும் கிடைத்தது. நீ பார்த்தாயோ?'' என்று கிழவன் கேட்டான்.

அவள் கழுத்தைத் திருப்பி அரைப் பார்வையாக மூலையை நோக்கினாள். சில காட்டுக் கிழங்குகள் மண்ணோடு கிடந்தன. மலைவாழை இலையில் கொஞ்சம் மூங்கில் குருத்தும் இருந்தது. கிழவனும் பெரிய சோம்பேறிதான்; இருந்தாலும், வகையாக உண்ண வேண்டும் என்ற ஆசையால், அவன் கொஞ்சம் ஓடியாடிச் சம்பாதிப்பது வழக்கம்.

சின்சின் எழுந்திருக்கும் வழியாக இல்லை. கிழவனுக்குப் பசி கிளம்பிவிட்டது, ''மகளே, அரிசி எடுத்துக் கழுவாமல் உட்கார்ந்திருக்கிறாயே!'' என்றான்.

''என்ன அப்பா இது! இன்னும் நேரம் ஆகவில்லை. எருமை மந்தை வந்தாகவில்லை. மழைக் காலமானதனாலே இருண்டு தெரிகிறது. கொஞ்சநேரம் போகட்டுமே.''

சில நிமிஷம் அவள் ஏதோ யோசித்துக் கொண்டிருந்தாள். பிறகு கனவு கண்டு விழித்தவள்போல், ''அப்பா, ஒத்த (உதகை) யாருக்குச் சொந்தம்?'' என்று கேட்டாள்.

கிழவன் ஏக்கத்துடன் சொன்னான்: ''மகளே, ஒத்த ஒரு காலத்தில் நம் சொத்தாகத்தான் இருந்தது. ஒரு வெள்ளைக்காரன் வந்து, நம்ம முப்பாட்டனாரை ஏமாற்றி அதைத் தனக்குச் சொந்தம் ஆக்கிக்கொண்டு விட்டான்.''

சின்சின் அந்தக் கதையைச் சொல்லச் சொன்னாள்.

கிழவன் தொடங்கினான்: ''பல வருஷங்களுக்கு முன்னால் நம்ம முப்பாட்டனாரிடம் ஒரு வெள்ளைக்காரன் வந்தான். அவன் கையில் ஒரு மான் தோல் இருந்தது. அதைக் காட்டி, 'இந்த அளவுக்கு நிலம் வேண்டும்' என்று வேண்டிக் கொண்டான். முப்பாட்டனார் ரொம்ப வெகுளி; பெருந்தன்மை உள்ளவர். ஏதோ ஏழை கேட்கிறான் என்று நினைத்து, 'நீயே அளந்து எடுத்துக்கொள்' என்றார். வெள்ளைக்காரன் பெரிய மந்திரவாதி; உடனே மான் தோல்

சுருளைக் கீழே போட்டுச் சரசர என்று பிரிக்கத் தொடங்கினான். தோல் நீண்டு விரிந்துகொண்டே போயிற்று. நம்முடைய இந்த ஒத்த நாடு முழுவதுக்குமாக அந்தத் தோல் பரவிப் பெரிசாகி விட்டது. முப்பாட்டனார் என்ன செய்வார்? கொடுத்த வாக்கை மீறலாமா? சொன்னபடியே, அவ்வளவு நிலத்தையும் வெள்ளைக் காரனுக்குக் கொடுத்துவிட்டார்.''

''அப்படியானால் அந்த வெள்ளைக்காரன் பெரிய மோசக்காரன் தான், இல்லையா?'' என்று சின்சின் கேட்டாள்.

''ஆமாம். மகா தந்திரசாலி; மாயம் மந்திரவாதமெல்லாம் கற்றவன். அவன் ஒரு பெண்ணைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு, அடிக்கடி ஏதோ மந்திரப்பாட்டுப் பாடச் சொல்லுவான். நானே பல தடவை பார்த்திருக்கிறேன்'' என்று கிழவன் முடித்தான்.

தொதவர் இனத்தின் பழம் பெருமை வளமைகளைக் குறித்து, சின்சின் சிந்திக்கத் தொடங்கினாள். கூடவே தன் குடும்ப நினைவும் அவளுக்கு ஏற்பட்டது.

சின்சினுக்கு ஓர் அண்ணன் இருந்தான். ஒரு நாள் யாருக்கும் தெரியாமல், பக்கத்துக் குடிசைக் காரனின் மனைவியுடன் அந்த அண்ணன் ஓடிவிட்டான். அடுத்த காட்டில் எங்கேயோ குடிசை கட்டிக்கொண்டு அவளுடன் குடித்தனம் நடத்துவதாகக் கேள்வி. சின்சினின் தாயையும் இப்படித் தான் வேறொரு தொதவன் ரகசியமாகக் கடத்திக்கொண்டு போய்விட்டான்; நாலு வருஷங்கள் ஆகிவிட்டன. சிறு பிராயத்திலேயே சின்சினுக்கு விவாகம் நடந்துவிட்டது. கணவனாக வாய்த்தவன் நடு வயசுக்காரன். நல்ல வலுவான காளை. கண்டதுமே வியப்புத் தட்டும்; அவ்வளவு அழகு! அவனுக்குச் சின்சினின் பருவ மலர்ச்சி வரைக்கும் காத்திருக்கப் பொறுமை இல்லை. பக்கத்துக் கிராமத்திலிருந்து எவளோ ஒருத்தியை வசப்படுத்திக்கொண்டு, வேறொரு கிராமத்தில் போய்க் குடியேறி விட்டான். தான் கணவனாக வரித்த அந்த ஆணழகனைப் பிறகு சின்சின் காணவே முடியவில்லை.

இப்போது சின்சின் மலர்ந்து நிற்கும் புது மலர். தன்னை நாடியும் ஒரு வண்டு வந்து சேரும் என்ற திட நம்பிக்கை அவளுக்கு உண்டு. ஆனால் இந்த நம்பிக்கை என்று நிறைவேறுமோ? சிறுமியாக இருந்தபோதே அவளுக்குக் கணவனிடம் தனி ஆசை. ஆனால் அவன் தான் அவளுடைய ஆசை வேட்கையாக முதிர்வதற்கு முன்பே, வேறொருத்தியுடன் கூடி வாழ ஊரை விட்டே ஓடி விட்டானே! கணவன் உவகை பொங்க அணைத்து அளிக்கும் இன்பத்தைச் சின்சின் ஒரு முறைகூடப் பெறக் கொடுத்து வைக்காதவள். வேடிக்கையான இல்லற வாழ்க்கை! விவாகம் என்றாலே வெறும் கண்ணாமூச்சி விளையாட்டுத்தானா?

தன்னைப் புறக்கணித்துப் பிரிந்து சென்ற கணவனின் உருவத்தைச் சின்சின் மறுமுறையும் நினைவு படுத்திக் கொண்டாள். சுருள் மயிர் அடர்ந்த பெரிய தலை முடி; கட்டுத் தளராத உடல்; எழும்பிய தோள்கள்; பச்சை குத்திய கரும் பொட்டுக்கள் நிறைந்த கன்னங்கள்; மயிரடர்ந்து விரிந்த மார்பு; களையான முகம் - எல்லாம் எதிரில் தோன்றி அவள் உள்ளத்தைக் கிளறிவிட்டன. கஷ்டம்! அன்று அவள் பருவ மலர்ச்சி பெறாத பேதையாக இருந்துவிட்டாள்.

சின்சின் அலுத்துக்கொண்டே எழுந்து சென்று 'புத்குலி'த் துணியை இடுப்பில் சுற்றிக்கொண்டாள். வெளியே வந்து எட்டிப் பார்த்தாள். மழை விட்டிருந்தது. இளம் வெயில் படர்ந்திருந்தது. தொலைவில் மலைச்சிகரங்களில் அப்போதும் கனத்த மழை பொழிந்து கொண்டிருப்பது தெரிந்தது. பாத்திரத்தை எடுத்துக் கொண்டு 'மஜ்வாடித்துக் கல்வோள்' - பால் கடைக்குச் செல்லும் பெண்களுக்கு மட்டுமான தனிப்பாதை - வழியாகப் 'பால் கலவறை'க்கு அவள் சென்று மோர் வாங்கி வந்தாள். சட்டியை அடுப்

பில் ஏற்றினாள்; நீர் பொங்கி வந்ததும் அரிசியைக் கழுவிப் போட்டாள். சோறு வடித்தானதும், குருத்தையும் கிழங்கையும் கூட்டி நல்லதொரு கூட்டும் சமைத்தாள். எல்லாம் தயாரான பிறகு, தகப்பனும் மகளும் உட்கார்ந்துகொண்டு திருப்தியாகச் சாப்பிட்டு எழுந்தார்கள்.

அன்று செவ்வாய்க்கிழமை. உதகையில் சந்தை கூடும் நாள். அந்தப் 'பற்கூறம்' கிராமத்திலிருந்து ஆண்களும் பெண்களும் கும்பலாகச் சந்தைக்குப் புறப்பட்டார்கள். ஒரு 'புத்குலி'க்கு வேண்டிய துணியும், 'சர்க்கரைச் சோறு' ஆக்கக் கொஞ்சம் சர்க்கரையும் வாங்கி வரும்படி தந்தையைச் சின்சின் நச்சரித்தாள். கிழவன் கூட்டத்தாரோடு புறப்பட்டான். பள்ளத்தாக்கில் அவர்கள் மறையும் வரைக்கும் சின்சின் வெளியே நின்று பார்த்துக்கொண்டிருந்தாள்.

சின்சின் குடிசைக்கு வெளியே உட்கார்ந்துகொண்டு பூத்தையல் போடத் தொடங்கினாள். மஞ்சள் வெயிலின் வெதுவெதுப்பு அவளுக்கு இதமாக இருந்தது. 'யூகலிப்டஸ்' மரங்களினூடே இழைந்து வந்து மணம் வீசிய இளங்காற்று, அவளுடைய வேதனையைச் சற்றுக் குறைத்தது. பச்சைக் கிளிகள் மாறி மாறிக் கத்திக்கொண்டிருந்தன. உள்ளத்தில் எழும்பிய பல இன்பக் கனவுகளில் அவள் லயித்திருந்தாள். குன்றின் மறைவிலிருந்து ஒரு கருமேகம் மெள்ள வெளிவந்து அவளைக் கடந்து போயிற்று. சின்சின் சட்டென்று எழுந்து குடிசைக்குள் சென்றாள். ரசமழியாத ஒரு கண்ணாடித் துண்டை எடுத்துக்கொண்டு வெளியே வந்தாள். கண்ணாடியை வெயிலுக்கு நேரே காட்டி, அதன் வட்டமான எதிரொளியை நாலு திசையிலும் பாயவிட்டாள். 'ஸர்ச் லைட்' போன்ற அந்த ஒளிவட்டம், பல குடிசைச் சுவர்களையும் குன்றுகளையும் தாண்டிச் சென்றுகொண்டிருந்தது.

தேன் கூடுகளைத் தேடிக்கொண்டு திரியும் ஒரு தொதவனின் முகத்தில் பளிச்சென்று பட்டது. உடனே அவன் நின்றான். ஒளி வீச்சு அவனையே வட்டமிட்டது. அது வந்த இடத்தை உற்று நோக்கினான்; கொஞ்சநஞ்சம் இருந்த சந்தேகமும் தீர்ந்தது. காதலின் பிரதிபலிப்பான தண்ணொளிதான் அது; சந்தேகமில்லை. தலைவி தன் காதலை அறிவித்துத் தலைவனைக் குறிப்பாக அழைக்கும் முறைகளில் ஒன்று இது; 'என் காம நோய் தீர்க்க, என் அழைப்பை ஏற்பவர் யாராவது இருக்கிறாரா?' என்ற குறிப்பைத் தெரிவிக்க, தனிமையில் வாடும் தொதவ மங்கை கையாளும் முறை இது.

தொதவன் பெருமையோடு லேசாகச் சிரித்துக்கொண்டான். தேன் சேகரிப்பதை நிறுத்திவிட்டு, ஒளி வந்த பக்கம் திரும்பினான். குன்றுகளைக் கடந்து, வெகு விரைவிலேயே சின் சினுக்கு எதிரே வந்து நின்றான். அவள் அப்போதும் கண்ணாடித் துண்டை வெயிலில் காட்டி அசைத்துக்கொண்டிருந்தாள்.

''போதும்!''

இளைஞன் அவள் கையைப் பற்றினான். இருவரும் குடிசைக்குள் புகுந்தார்கள். வாயில்படியைக் கடந்ததும், தொதவன் தன் கைத்தடியை வெளியே அடையாளமாக நிறுத்தினான். 'உள்ளே ஆள் இருக்கிறான்' என்பதை அறிவிக்கும் பொது வழக்கான குறிப்பு இது.

சின்சின் புதுக் கிளர்ச்சியோடு அன்பனை வரவேற்றாள். பேசிப் பழகுவதற்கு அவசியம் ஏற்படவில்லை. வந்தவன் குறிப்பறிந்து திருப்திகரமாகவே நடந்துகொண்டான். யுகத்தைக் கணமாக்கும் இன்ப மயக்கத்தில் நேரம் போனதே தெரியவில்லை.

சின்சினுக்கு அளவற்ற மகிழ்ச்சி; மனநிறைவோடு அந்த வாலிபனையே வரிப்பதாகத் தீர்மானித்தாள். 'அன்று நடு இரவில் அவன் திரும்பியும் அங்கே வரவேண்டும்; வந்ததும் அவனுடன் கூடவே அவள் கிளம்பிவிட வேண்டும்' என்று முடிவாயிற்று. இரவு கட்டாயம் வருவதாக அந்தத்

தொதவனைக் கையடிக்கச் செய்து சத்தியம் வாங்கிக் கொண்டாள் சின்சின். வாலிபத் தொதவன் வந்த வழியே திரும்பிச் சென்றான்.

உச்சிப் போது ஆனபின்தான், சந்தைக்குப் போனவர்கள் திரும்பி வந்தார்கள். குடிசைகளை நோக்கி மூட்டைகளும் முடிச்சுகளும் கூடைகளுமாகச் சந்தைச் சரக்குகள் வந்தன. சின்சின் சிட்டுப் போல் துடிப்பும் பரபரப்புமாக வெளியே ஓடி வந்தாள். புதுத் துணி, சர்க்கரை, பச்சைக் கறி எல்லாம் அவள் தகப்பன் வாங்கி வந்திருந்தான். கூடவே கொஞ்சம் சாராயமும் இருந்தது.

சின்சின் புதுப் 'புத்குலி'த் துணியை விரித்து, அதன் மேல் வெண்ணெயை லேசாகத் தடவி மடித்து வைத்தாள். பிறகு, 'சர்க்கரைச் சோறு' சமைப்பதில் மும்முரமாக ஈடுபட்டாள். கிழவன் தனியாக வாங்கிப் பத்திரப்படுத்தியிருந்த காம்புப் புகையிலையைப் பிய்த்துப் பரப்பி, அதன்மேல் பிசிர்களை வைத்துப் பதமாகச் சுருட்டி எடுத்தான். நல்ல வசமான சுருட்டு ஒன்று உருவாகி விட்டது. அதைப் பற்றவைத்துக் கொண்டு, திண்ணையில் சாய்ந்த வண்ணம் நிம்மதியாகக் குடிக்கத் தொடங்கினான்.

இருட்டுவதற்குள்ளேயே சமையலைச் சின்சின் முடித்துவிட்டாள். 'சர்க்கரைச் சோறு' என்ற பெயரைக் கேட்டாலே போதும், கிழவனுக்கு நாக்கில் ஜலம் ஊறும். அவளும் தாராளமாகவே பரிமாறினாள். மூக்கைப் பிடிக்கத் தின்றான் கிழவன். கூடவே சோற்றில் சாராயத்தையும் விட்டுக் குழைத்துக்கொண்டு சாப்பிட்டான். கை கழுவிவிட்டுப் படுத்தவன்தான்; சிறிது நேரத்துக்கெல்லாம் காட்டுப் பன்றிபோல் உரத்த முனகல் குறட்டையுடன் அயர்ந்த உறக்கத்தில் ஆழ்ந்துவிட்டான்.

இரவு பத்து நாழிகை இருக்கும். சின்சினின் காதலன் சொன்னபடியே, குறித்த நேரத்தில் குடிசைக்கு வெளியே காத்திருந்தான்.

''உள்ளே வரலாம்; பயமில்லை'' என்று அபயமளித்துக் குடிசைக்குள் அழைத்துச் சென்றாள் சின்சின். மண்சட்டியில் அன்றைய விருந்துப் பதார்த்தங்களை எல்லாம் தன் புது மணவாளனுக்காக எடுத்துப் பத்திரப்படுத்தியிருந்தாள். கழுத்தொடிந்த குப்பியில் கொஞ்சம் சாராயமும் மிச்சப்படுத்தி வைத்திருந்தாள். தொதவன் கால் மடக்கி அமர்ந்துகொண்டு, காதலி அளித்த இனிய விருந்தைச் சுவைத்துப் புசித்தான். மது உள்ளே சென்றதும், இன்பக் கிறுக்குக் கிளர்ந்தது; அவனுடைய கைகள் தாமே விரிந்து காதலியைத் தழுவத் துழாவின. சின்சின் பிரயாண ஏற்பாடுகள் செய்ததோடு, இடையிலே காதலனின் போதையைத் தணிக்கவும் தவறவில்லை. பழைய 'புத்குலி' ஒன்றில் தேவையான பொருள்களை முடிந்துகொண்டு கிளம்பத் தயாரானாள். அரை மணி நேரத்துக்குள்ளேயே அவர்கள் புது மணமக்களாகி, தனி வாழ்க்கை தொடங்கப் புறப்பட்டுவிட்டார்கள்!

அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்த கிழத் தந்தைக்கு அருகில் சின்சின் சென்றாள். விரல்களால் அவனுடைய பாதங்களைத் தொட்டுத் தன் நெற்றியில் ஒற்றிக்கொண்டாள். பல பழைய நினைவுகள் கார்மேகங்கள்போல் அவளுடைய மனக்கண் முன்னே படர்ந்தன. கண்ணீர்த் துளிகள் உதிர்ந்தன. புது உறவின் கவர்ச்சியும் பழைய பிணைப்பின் பிரிவுத் துயரும் அவளை அலைத்தன. பருவம் பாழாகச் சின்சின் இனி வாழ முடியாது; அப்படி வாழ அவள் விரும்பவுமில்லை.

இரவு, தன் அமைதியைப் பரப்பி, மறைவும் மூட்டமும் நிரம்பிய காட்டுப் பாதையைக் காவல் காத்தது. உயரமான காட்டு மரங்களுக்கிடையில் தண்மதியின் பொன் மேனி, மறைவும் தெளிவுமாகத் தென்பட்டுக்கொண்டிருந்தது. கிழக்கே வானத்தில் பரவிக் கிடக்கும் கார்முகில்களுக்கும் கீழே தாழ்வரைகளுக்கிடையில் தலைநிமிர்ந்து நிற்கும் மலைச் சிகரங்களுக்கும் பேதம் காண முடியவில்லை; வானமும் நிலமும்

கூடிக் கலந்துவிட்டாற்போல் இருந்தது!

காட்டுமரங்களுக்கிடையே நெளிந்து செல்லும் ஒற்றையடிப் பாதையில் சின்சினும் வாலிபத் தொதவனும் சென்றுகொண்டிருந்தார்கள். பாறைக் குப்பல்களையும் குன்றுகளையும் புதர்க்காடுகளையும் கடந்து, குறுக்குவழியிலே நடந்து, இருவரும் விரைவாக முன்னேறிக் கொண்டிருந்தார்கள். வெண்ணிலவு பளிச்சென்று காய்ந்து கொண்டிருந்தது. குளிர்ந்த இளங்காற்று வீசி, வழிக்களைப்பை மேலோங்க விடாமல் தடுத்து உதவியது நடுவில் எங்கும் இளைப்பாறுவதற்குத் தங்காமல் இருவரும் தொடர்ந்து நடந்தார்கள். கனிந்த தக்காளிப் பழம் போன்ற காலைக் கதிரவனைக் கண்டபின் தான் தொதவனுக்கு நிம்மதி ஏற்பட்டது. சொந்தப் பகுதிக்கு - 'கோகிரி' என்று பெயர் கொண்ட தன் 'மந்தா'வுக்கு - வாலிபன் துணைவியுடன் வந்து சேர்ந்து விட்டான்.

பல குடிசைகளிலிருந்து தொதவர்கள் வெளியே வந்து புது மணமக்களை உவகையோடு வரவேற்றார்கள். சின்சின் தன் புக்ககக் குடிசைக்குள் நுழைந்தாள். அங்கே காதலனின் இரு சகோதரர்கள் அவளை எதிர்கொண்டு அழைத்தார்கள். சின்சின் நாணத்துடன் அவர்களைப் பார்த்தாள். ஒருவனுடைய முகத்தை நோக்கியதும், அவள் திகைத்துப் போனாள். நிமிர்ந்து மறுமுறையும் அந்த ஆளை உற்றுப் பார்த்தாள். கை நழுவிப்போன செல்வக்கிழி எதிர்பாராமல் வலுவிலேயே கிடைத்துவிட்டால் எப்படி இருக்கும்? பெருமிதத்தைப் புலப்படுத்திக்கொண்டு அவள் முகத்தில் புன்முறுவல் மலர்ந்தது. சின்சினின் முதல் கணவன்தான் அங்கே எதிரே முறுவல் செய்துகொண்டு நின்றான்!

பிரிந்து, ஏங்கி நின்று, பிறகு திசை மாறிப் புறப்பட்டு விட்ட காட்டருவி, கடைசியில் தனக்குரிய சங்கமத் தலத்துக்கே-கூடிக் கலக்கும் கழிமுகத்துக்கே-வந்து சேர்ந்து விட்டது!

மகிழ்ச்சி வெள்ளத்தில் சின்சினின் இதயம் திளைத்துக் கொண்டிருந்தது. பெருமையும் நிறைவும் பளிச்சிட, நிமிர்ந்து நின்று, எதிரே நிற்கும் இளங்காளையர் மூவரையும் நன்றியோடு பார்த்தாள். காரணம், தொதவர் இன வழக்கப்படி, இனிமேல் சின்சின் அந்த மூன்று சகோதரர்களுக்குமே உரிமையுள்ள தர்மபத்தினிதான்!

## எதிரி பயந்தான்

எதிரி குற்றவாளி என்று தீர்மானித்து முறைப்படி அவனை நியாயாதிபதி தண்டித்துவிட்டார். பிறகுதான் ஒரு விஷயம் வெளியாயிற்று. குற்றம் நடந்ததாகச் சொன்ன சமயத்தில் எதிரி சிறைக்குள் இருந்தான் என்று நிச்சயமாய்த் தெரிந்தது.

''நீ ஏன் முன்னமே இதைச் சொல்லவில்லை?'' என்று ஜட்ஜி கேட்டார்.

தண்டனை அடைந்த கைதி மென்று விழுங்கிக்கொண்டே, ''ஜூரர்களுக்குத் தப்பபிப்பிராயம் உண்டாகி விடக்கூடாதே என்று பயந்தேன், எஜமான்'' என்றான்.

—'யுனைடெட் மைன் வொர்க்கர்ஸ் ஜர்னல்'

## அபாய எச்சரிக்கை

யாத்திரிகருக்கு மலையிலே வழி காட்டிவந்த ஆள், அவருக்கு ஓரிடத்தில் இப்படி எச்சரிக்கை செய்தான்: ''ஜாக்கிரதை! தவறி விழுந்து விடாதீர்கள். விழுந்தால், மகா அபாயம். அப்படித் தவறி விழுந்தால், சட்டென்று இடது பக்கம் திரும்பிப் பாருங்கள். அங்கேதான் அற்புதமான காட்சி காணலாம்.''

—'க்விப்ஸ் அண்ட் க்விஸஸ்'

# பி. பி. ஸி. ஒலிப்பதிவு

**மால்கோம் ஃப்ராஸ்ட்**

ரேடியோவில் எந்த ஊரைத் திருப்பினாலும் பல சமயம் இங்கிலீஷ் பேசுகிறதே, ஏன் தெரியுமா? இந்த ஒலிப்பதிவுப் பணிதான் முக்கியமான காரணங்களில் ஒன்று. இதைபற்றி இங்கே எழுதியிருப்பவர் பி. பி. ஸி. ட்ரான்ஸ்க்ரிப்ஷன் ஸெர்வீஸ் தலைவர்.

பிரிட்டிஷ் பிராட்காஸ்டிங் கார்ப்பொரேஷன் புரோகிராம்களைச் சிற்றலைகளில் அநேக பாஷைகளில் ஒலிபரப்புகிறார்கள். உலகின் பல பகுதியில் உள்ள மக்களும் அவற்றை நேரே கேட்கிறார்கள். இதைத் தவிர, அந்தப் புரோகிராம்களில் பலவற்றை அங்கங்கே பல நாடுகளில் உள்ள ரேடியோ ஸ்டேஷன்களில் பதிவு செய்துகொண்டு திரும்பவும் ஒலிபரப்புகிறார்கள்.

பி. பி. ஸி. நிர்வாகிகள் இப்படிப் பல புரோகிராம்களைச் சிற்றலையில் ஒலிபரப்புவது மட்டும் அல்ல; மிக முக்கியமான சில புரோகிராம்களைத் தாங்களே ஒலிப்பதிவு செய்து, அந்த ஒலிப்பதிவுகளைப் பல நாடுகளுக்கும் அனுப்புகிறார்கள். இந்த ஒலிப்பதிவுகளுக்கு 'ட்ரான்ஸ்க்ரிப்ஷன்ஸ்' என்று பெயர். இவற்றில் ஒரு நன்மை இருக்கிறது. இவற்றை அந்த அந்த நாடுகளில் உள்ள ரேடியோ ஸ்டேஷன்களில் எத்தனை தடவை வேண்டுமானாலும் ஒலிபரப்பலாம். சிற்றலையில் பி. பி. ஸி. நேரே ஒலிபரப்பும்போது, சில சமயம் நன்றாய்க் கேட்கும்; சில சமயம் நன்றாய்க் கேட்காது - இது சகஜம். ஆனால், அங்கங்கே மத்திய அலையில் ஒலிபரப்பும்போதோ இந்தப் புரோகிராம்கள் எப்போதுமே நன்றாய்க் கேட்கும்.

பி. பி. ஸி. புரோகிராம்களில் சிரத்தையுள்ள பல நாட்டு ரேடியோ நிலையங்களுக்கும் வாரத்துக்கு ஒரு தடவை அச்சடித்த பட்டியல் ஒன்று விமானத் தபாலில் செல்லுகிறது. பி. பி. ஸி. ஒலிப்பதிவு செய்த ரெக்கார்டுகளைப்பற்றிய விவரம் அதில் அடங்கியிருக்கும். இந்தப் புரோகிராம் பட்டியல்களையெல்லாம் அந்த அந்த நிலையங்களில் உள்ளவர்கள் நிரந்தரமாகச் சேர்த்து வைத்துக்கொள்ளலாம். இப்படிப் பட்டியலைப் பெறும் எந்த நிலையமும் பி. பி. ஸி. புரோகிராமை ஒலிபரப்பியாக வேண்டும் என்ற கட்டாயம் எதுவும் இல்லை.



வாரத்துக்கு வாரம் அதிகாரிகள் கூடி நிகழ்ச்சித் திட்டம் தயாரிக்கிறார்கள்.

மூலம்: காமன்வெல்த் டுடே (ஆங்கிலம்: நம்பர் 55), லண்டன்.

என்னை அடிக்கடி ஒரு கேள்வி கேட்கிறார்கள். ''பி. பி. ஸி. ஒலிப்பதிவுக்கு எப்படிப்பட்ட புரோகிராம்களைப் பொறுக்குகிறீர்கள்?'' என்பது அவர்களுடைய கேள்வி. எங்கள் பட்டியலைத் தருவிக்கும் நிலையத்தார் எந்த எந்தப் பி. பி. ஸி. புரோகிராமை உபயோகித்துக்கொள்ளுகிறார்கள் என்பதை அறிந்துகொள்கிறோம். இதுதான் நாங்கள் முதலாவது செய்யும் காரியம். அடுத்தபடியாக, அவர்களுடன் தொடர்ந்து கடிதப் போக்கு வரத்து நடத்துகிறோம். அவர்களில் பலருக்கு எங்கள் 'ரேடியோ டைம்ஸ்' பத்திரிகையின் அட்வான்ஸ் காப்பியை விமானத் தபாலில் அனுப்புகிறோம். பி.பி.ஸி. ஹோம் ஸெர்வீஸில் ஒலிபரப்பும் புரோகிராம்களில் தங்களுக்கு விசேஷமாய்ப் பிடித்தவை இன்னவை என்று அவர்கள் தந்தியடிக்கிறார்கள். இதனால் அந்தப் புரோகிராம்களை நாங்கள் ஒலிப்பதிவு செய்ய வசதியாகிறது. மூன்றாவதாக, உலகின் சகல பகுதிகளிலிருந்துப் ஒலிபரப்பும் அதிகாரிகள் ஒவ்வொரு வருஷமும் லண்டனில் எங்கள் தலைமைக் காரியாலயமான மைடா வேல் என்ற இடத்துக்கு வந்து எங்களைச் சந்திக்கிறார்கள். எங்கள் புரோகிராம்களைத் திட்டமிடும்போது, அவர்களிடமிருந்து உபயோகமான பல விஷயங்களைத் தெரிந்துகொள்ளுகிறோம்.

உயர்ந்த சங்கீதம், லேசான சங்கீதம் இரண்டு புரோகிராம் ஒலிப்பதிவுகளையும் வெளி நிலையங்களில் உள்ளவர் விரும்புகிறார்கள். பிரிட்டிஷ் நகைச்சுவைப் புரோகிராம்கள் சில நாடுகளுக்குப் பிடிக்கின்றன; வேறு சில நாடுகளுக்குப் பிடிக்கவில்லை. கதம்ப நிகழ்ச்சி (வெரைட்டி புரோகிராம்) சிங்களவருக்குப் பிடிக்கிறது; இந்தியருக்குப் பிடிக்கவில்லை. பிரிட்டிஷ் நாடகப் புரோகிராம்களை இங்கிலீஷ் பேசும் நாடுகளிலெல்லாம் ஒலிபரப்புகிறார்கள்.



ஒலிப்பதிவு செய்த டேப்புகளைத் தொழில் நுணுக்க அதிகாரி சோதித்துப் பார்க்கிறார்.

இங்கிலீஷ் பேசாத நாடுகளிலும் - மொழித் தடை இருந்தும் - அவற்றில் முக்கியமான சில நாடகங்களை ஒலிபரப்புகிறார்கள்.

பி. பி. ஸி. ஒலிப்பதிவு இலாக்காதார் ஒவ்வொரு வருஷமும் வெவ்வேறு விதமான சுமார் 800 புரோகிராம்களின் ஒலிப்பதிவுகளைப் பல நாடுகளுக்கும் வழங்குகிறார்கள். எண்ணற்ற புரோகிராம்களைக் கேட்டுச் சோதித்த பிறகே, இப்படி இவற்றை அந்த இலாக்காதார் தேர்ந்தெடுக்கிறார்கள். புரோகிராம் நன்றாயிருக்கிறதா, நன்றாயிருந்தாலும் ரேடியோவில் எடுக்குமா என்று பார்த்தே அப்படித் தேர்ந்தெடுக்கிறார்கள். ஒரு புரோகிராம் தொழில் நுணுக்க (டெக்னிக்கல்) ரீதியில் மிக உயர்ந்த தரமாக இருந்தால்தான், அவர்கள் அதை அங்கீகரிப்பார்கள்.

முதலில் 'டேப்' ஒன்றில் புரோகிராமைப் பதிவு செய்கிறார்கள். பிறகு 'எடிட்' செய்து, இடையிடையே பொருத்தமான அறிவிப்புகள் (அன்னவுன்ஸ்மென்ட்) சேர்த்து, பிறகு தட்டு (டிஸ்க்) ஒலிப்பதிவை மாற்றுவார்கள்.

பெரும்பாலானவை இங்கிலீஷ் ஒலிப்பதிவுகள்தான். ஜெர்மன்,

அரபு, இத்தாலியன், ஸ்பேனிஷ், போர்ச்சுகீஸ் உள்பட வேறு பல பாஷைகளிலும் முக்கியமான சில புரோகிராம்களை ஒலிப்பதிவு செய்கிறார்கள். ரேடியோ மூலம் இங்கிலீஷ் பாஷை போதிக்கும் பாடங்களையும், பள்ளிக்கூடங்களுக்கான புரோகிராம்களையும் ஒலித்தட்டுகளாக எடுத்து, காமன்வெல்த்தின் பல பகுதிகளுக்கும் அனுப்புகிறார்கள்.

தங்களை இந்த ஒலிப்பதிவுகளில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று பல கலைஞர்கள் மிக்க ஆவலாய்ப் போட்டி போட்டுக்கொண்டு முன்வருகிறார்கள். இந்த ஒலிப்பதிவினால் அவர்களுக்கு ஏதோ கொஞ்சம் பணம் கிடைக்கும். ஆனால், இதைவிட மேலாக அவர்களுக்கு இன்னொரு லாபம் உண்டு. அவர்களுக்கு அயல் நாடுகளிலும் புகழ் ஏற்படுகிறது; நேரே வருமாறு அவர்களை அயல்நாட்டார் அழைக்கவும் தொடங்கிவிடுகிறார்கள். கலைஞரின் ஒலிப்பதிவை பி. பி. ஸி. ஒலிபரப்பியதால், வியாபாரக் கம்பெனிகளில் அவர்களுடைய கிராமபோன் பிளேட்டுகள் ஏராளமாய் விற்கத் தொடங்கிவிட்டன.

கானடா, ஆஸ்திரேலியா, நியூஜீலந்து, தென் ஆப்பிரிக்கா, இந்தியா, பாகிஸ்தான், சிலோன், கன, மலாயா இந்த நாடுகளின் ரேடியோ நிலையங்களெல்லாம் பி. பி. ஸி. ஒலிப்பதிவுகளை ஒழுங்காக ஒலிபரப்பி வருகின்றன. பஹாமாஸ், பார்படோஸ், பெர்முடா, பிரிட்டிஷ் கயானா, பிரிட்டிஷ் ஹொண்டுராஸ், ஸைப்ரஸ், ஃபாக்லண்ட் தீவு, பிஜி, கில்பெர்ட்-எல்லிஸ் தீவு, ஹாங்காங், ஜமைக்கா, கென்யா, லீவார்ட் தீவு, மால்ட்டா, மோரீஸ், நைகீரியா, ரொடீசியா, ஸரவாக், ஸேய்செல்ஸ், ஸீரா லியோன், ஸாலமன் தீவு, ஸோமாலிலாண்ட், தெற்கு ரொடீசியா, தங்கனீகா, உகண்டா, விண்ட்வர்டு தீவு இப்படி வேறு பல நாடுகளின் நிலையங்களுக்கும் பி. பி. ஸி. ஒலிப்பதிவுகளை ஸப்ளை செய்கிறார்கள்.

ஐக்கிய அமெரிக்காவில் கீழ்கரையிலிருந்து மேல்கரை வரைக்கும் எல்லா நிலையங்களும் பி. பி. ஸி ஒலிப்பதிவுகளை ஒவ்வொரு வருஷமும் ஒலிபரப்புகின்றன இன்னும் ஆஸ்ட்ரியா, பர்மா, எதியோப்பியா, ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான், நார்வே, ஸ்விட்ஜர்லாண்ட் போன்ற நாடுகளுக்குப் பி. பி. ஸி. ஒலிப்பதிவுகள் ஸப்ளையாகின்றன.

கடைசியாக ஒரு விஷயம்: இந்த ஒலிப்பதிவு ஸெர்வீஸ் முற்றும் ஒரு திசைப் பிரயாணமாகவே நடந்துகொண்டிருக்கவில்லை. பல வெளிநாட்டு நிலையங்களும் தங்கள் புரோகிராம்களை ஒலிப்பதிவு செய்து பி. பி. ஸி-க்கு அளிக்கின்றன. அவற்றை பி. பி. ஸி. உள்நாட்டு ஒலிபரப்பு, வெளிநாட்டு ஒலிபரப்பு இரண்டிலும் பயன்படுத்துகிறார்கள்.

## வியாபாரம்

கார் வாங்க எண்ணினார் ஒரு பணக்காரர். கார்கள் வைத்திருக்கும் ஒரு கம்பெனியின் ஷோ-ரூம் பக்கம் சென்றார். அங்கிருந்த விற்பனைச் சிப்பந்தியிடம் சரமாரியாகப் பல கேள்விகள் கேட்டு, அவன் சலிப்படையும்படி செய்துவிட்டார். கடைசியில் ஒரு மாடலைக் காட்டி, ''இது ஓடப் பெட்ரோல் ரொம்பப் பிடிக்குமோ? அப்படி எவ்வளவு செலவழியும்?'' என்று கேட்டார்.

சிப்பந்தி எரிச்சலுடன், ''ஒரு ஸ்பூன் அளவு'' என்றான்.

கருமி, மிக்க நிதானமாகவே, ''சரி. எந்த ஸ்பூன்? டீஸ்பூனா? டேபிள் ஸ்பூனா?'' என்று கேட்டார்.

—'கான்ஸ்டலேஷன்', பாரிஸ்.

புத்தகச் சுருக்கம்:

# கடலும் கிழவனும்

மூலம்: எர்னஸ்ட் ஹெமிங்வே

தமிழ்: ச. து. சு. யோகியார்

அற்புதமாய்ச் சிறு கதைகளும் நாவல்களும் எழுதிப் புகழ் பெற்றவர் இந்த ஆசிரியர். இங்கே சுருக்கித் தந்திருக்கும் இந்த நாவலுக்காக நோபல் பரிசும் புலிட்சர் பரிசும் பெற்றவர். இப்படிப் பல நோபல் பரிசு நாவல்களை, பப்ளிஷர் ஏ. கே. கோபாலன் வெளியிட்டு வருவது தமிழுக்கே பெரும் பணியாகும். இதைக் கவிஞர் ச. து. சு. யோகியார் தமக்கே உரித்தான தெளிந்த கவிதை நடையில் மொழி பெயர்த்திருக்கிறார்.



காப்பிரைட்: கடலும் கிழவனும். வெளியிட்டவர்: ஏ. கே. கோபாலன், திருவல்லிக்கேணி, சென்னை-5, விலை ரூ. 3.

# கடலும் கிழவனும்

★

தான் சின்னஞ் சிறிய படகில் தன்னந்தனியாக அந்த வளை குடாவில் மீன் பிடிக்கும் அவன் கிழவன்; சென்ற எண்பத்து நான்கு நாளாக அவனுக்கு ஒரு மீன்கூடக் கிடைக்கவில்லை. முதல் நாற்பது நாள் வரையில் அவனுடன் ஒரு பையனும் இருந்தான். அதன் பின், சிறுவனின் பெற்றோர்கள், 'கிழவனின் நல்ல காலம் அடியோடு தீர்ந்துவிட்டது' என்று கூறி, சிறுவனை வேறொரு படகுக்கு அனுப்பி விட்டார்கள். சிறுவன் சேர்ந்த முதல் வாரத்திலேயே தினம் மூன்று நல்ல மீன்களை அவன் சேர்ந்த படகு பிடித்து வந்தது. ஆனால் அப்புறமும் தினந்தினம் காலிப் படகோடு கிழவன் திரும்பி வருவதைக் கண்டு பையன் துயரப் பட்டான்; ஒவ்வொரு நாளும் பையன் கிழவனுக்கு உதவியாய் அவனுடைய மீன் வலைச் சுருணை யையும் மீன் குத்தீட்டியையும் கயிற்றுப் புரிகளையும் பாய்மரப் படுதாவையும் சுமந்து செல்வான்.

ஒரு நாள் படகைக் கரையில் வலித்துவிட்டுக் கரை மேட்டில் ஏறும்போது, கிழவனிடம் பையன் சொன்னான்: ''ஸாந்தயகா, நான் மறுபடியும் உன்னுடன் வந்து விடுகிறேன்; கொஞ்சம் பணம் சேர்ந்திருக்கிறது.''

பையனுக்குக் கிழவனிடம் அலாதியான பிரியம்; அவனுக்கு மீன் பிடிக்கக் கற்றுக் கொடுத்தவனே அந்தக் கிழவன்தானே!

''வேண்டாம்; நீ இப்போதுள்ள அதிருஷ்டப் படகிலேயே இரு'' என்றான் கிழவன்.

இருவரும் படகிலிருந்து சாமான்களை எடுத்துக் கொண்டார்கள். பாய்மரத்தைக் கிழவன் தன் தோளில் சுமந்து சென்றான்; முறுக்கேறிய பழுப்பு நிற வலைவரிச் சுருணையையும் குத்தீட்டியையும் பையன் தூக்கிச் சென்றான். தூண்டில்புழுப் பெட்டியும் பிடித்த பெரிய மீன்களை அடித்துக் கொல்ல உதவும் தடியும் படகில் கீழ்த் தளத்தில் மறைவாகக் கிடந்தன. பாய்த் துணியும் வலைச் சுருளும் பனியால் கெட்டுவிடும்; எனவே, அவற்றை விட்டுச் செல்வது சரியல்ல. அக்கம் பக்கத்தில் உள்ள எவரும் திருடமாட்டார்கள் என்றாலும், 'முள்ளீட்டியையும் குத்தீட்டியையும் பிறருடைய ஆசையைத் தூண்டும்படி அநாவசியமாகப் படகில் போட்டு வைப்பானேன்' என்று கிழவன் நினைத்தான்.

இருவரும் கிழவனின் குடிசையை அடைந்தார்கள். படுதாச் சுற்றிய பாய்மரத்தை ஒருபுறம் கிழவன் சாய்த்தான்; தூண்டில் புழுப் பெட்டியையும், மற்றச் சாமான்களையும் அதன் பக்கத்தில் பையன் வைத்தான். பாய்மரம் அந்த வீட்டின் ஒரே ஓர் அறையின் நீளத்துக்குச் சரியா யிருந்தது. குடிசை வலிவான கூந்தல் பனை மடல்களால் கட்டியது. அதில் ஒரே ஒரு படுக்கையும் மேஜையும் நாற்காலியும் தூசி படிந்த தரையின் ஓர் ஓரத்தில் சமையலுக்காக ஒரு கரி அடுப்பும் இருந்தன. பழுப்பேறிய பனைமடல் சுவரில் வண்ணம் தீட்டிய ஏசுவின் புனித இதயப் படமும் கன்னி மேரியின் படம் ஒன்றும் தொங்கின.

''சாப்பிட என்ன இருக்கிறது?'' என்று விசாரித்தான் பையன்.

''புழுங்கலரிசிச் சோறும் மீனும் இருக்கின்றன. நீயும் கொஞ்சம் தின்னலாம்.''

''வேண்டாம்; நான் வீட்டில் சாப்பிடுகிறேன். அடுப்பு மூட்டட்டுமா?''

''வேண்டாம். பின்னால் நானே மூட்டிக்கொள்ளுகிறேன். இல்லை, இல்லை; ஆறிய சோற்றையேதான் சாப்பிடுகிறேனே.''

''தாத்தா, குளிரும் நேரத்தில் வெளியே வராதே. இது செப்டம்பர் மாதம் என்பது நினைவிருக்கட்டும்'' என்று பையன் எச்சரித்தான்.

''பெரிய மீன்களுக்கு உரிய மாதம் இதுவே; மே மாதத்தில் எவன் வேண்டுமானாலும் மீன் பிடிக்கலாம்'' என்றான் கிழவன்.

''சரி, நான் சுநீர மீன் (ஸார்டைன்) பிடிக்கப் போகிறேன்'' என்று சொல்லி, எறிவலையை மட்டும் எடுத்துக் கொண்டு பையன் புறப்பட்டான்.

மாலையில் அவன் திரும்பி வந்த போது, கிழவன் தன் நாற்காலியில் சாய்ந்தபடியே நல்ல தூக்கத்தில் ஆழ்ந்திருந்தான். சூரியன் மறைய ஆரம்பித்து விட்டது. பழைய கம்பளியைப் படுக்கையிலிருந்து எடுத்துக் கிழவன்மேல் போர்த்தினான் பையன். நாற்காலியின் பின்புறத்தையும் கிழவனின் தோள்களையும் அந்தப் போர்வை சூழ்ந்து மூடியது. அந்தத் தோள்கள், மிக மூப்படைந்தும் வலிமை குன்றாது அதிசய சக்தி வாய்ந்திருந்தன. தூங்கும் நிலையில், அவன் கழுத்து மடிப்புகள் அவ்வளவு கோரமாகத் தோன்றவில்லை. அவன் முகம் மார்பின்மேல் படிந்திருந்தது. பாய்த் துணியைப் போலவே, அவனுடைய மேல் சட்டையும் பல கிழிசல்களோடு பரிதாபமாயிருந்தது; வெயிலில் அதன் நிறம் மங்கி மட்கிப் போய்ப் பழுப்பேறியிருந்தது. முகம் கிழடு தட்டிய பழைய முகம். கண்களும் மூடிக் கொள்ளவே, அந்த முகத்தில் உயிர் இருப்பதாகவே தோன்றவில்லை. அவனுடைய மடியில் ஒரு பத்திரிகை கிடந்தது. மாலைக் காற்றில் அது பறந்து விடாதபடி, கைகளின் பாரம் அதை அழுத்திக் கொண்டிருந்தது. பாதங்கள் செருப்பில்லாத வெறும் பாதங்கள்.

பையன் அப்படியே அவனை விட்டுவிட்டுச் சென்றான்; திரும்பி வந்தபோதும், கிழவன் தூங்கிக் கொண்டுதான் இருந்தான். ''எழுந்திரு, தாத்தா'' என்று, கிழவனின் முழங்காலைப் பையன் தட்டினான்.

கிழவன் கண் விழித்தான்; எங்கேயோ நெடுந்தொலைவிலிருந்து அப்போதுதான் வருபவன் போல் ஒரு கணம் வெறித்துப் பார்த்தான்; அப்பால் ஒரு புன்முறுவல் பூத்தான்.

''கையில் என்ன?'' என்று கிழவன் கேட்டான்.

''சாப்பாடு; நாம் இருவரும் சாப்பிடத்தான்'' என்று சிறுவன் பதிலளித்தான்.

''அப்படி ஒன்றும் எனக்கு அதிகமாகப் பசியில்லை.''

''சரி, சரி; சாப்பிட வா! பட்டினியாய் மீன் பிடிக்க முடியாது.''

''நான் பிடித்திருக்கிறேனே'' என்று சொல்லிக்கொண்டே, பத்திரிகையைக் கிழவன் மடிக்கலானான். பின்பு, அவன் போர்வையை எடுத்து மடிக்கத் தொடங்கிய போது, பையன் சொன்னான்:

''போர்வையை எடுக்காதே. நான் உயிருடன் இருக்கும் வரையில் நீ பட்டினியோடு மீன் பிடிக்கப் போக விடமாட்டேன்.''

''நீ நெடுநாள் வாழ்வாயப்பா. சரி, என்ன சாப்பாடு?'' என்றான் கிழவன்.

''கரு மொச்சை, சோறு, வாழைப்பழ வறுவல், காய்கறி, அவியல் எல்லாம் இருக்கின்றன.''

''சரி, நான் தயார்'' என்றான் கிழவன்.

'கிழவனுக்கு ஒரு தண்ணீர்ப் பானையும் சோப்பும் துவாலையும் வாங்கித் தர வேண்டும். இது ஏன் எனக்கு முன்பே ஞாபகம் வரவில்லை? இன்னும் ஒரு மேல் சட்டையும் கம்பளிச் சொக்காயும் காலணியும் புதுப் போர்வையும் வாங்கித் தரவேண்டும்' என்றெல்லாம் பையன் யோசனையில் ஆழ்ந்தான்.

''இந்த அவியல் ரொம்ப நன்றாயிருக்கிறது!'' என்று கிழவன் பாராட்டினான்.

''சரி, பேஸ் பந்து விளையாட்டைப்பற்றிச் சொல்லு'' என்று பையன் கேட்டான்.

''அமெரிக்கச் சங்கத்தைப் பொறுத்த வரையில் யாங்கிகளுக்குத்தான் முதல் இடம்'' என்று

சொல்லிக் கிழவன் தனக்குள் மகிழ்ந்தான்.

''இன்று அவர்கள் தோற்று விட்டார்களே!'' என்றான் பையன்.

''அதனால் என்ன? மகா ஆட்டக்காரனான டிமேக்கியோ இருக்கும் வரையில் கவலையில்லை.''

''அந்த ஸிஸ்லர் இருக்கிறானே, அவன் அப்பாகூட ஏழை யில்லையாம்; என் வயசிலேயே பல பெரிய பந்தாட்டங்களில் அவன் கலந்து கொண்டானாம்'' என்றான் பையன்.

''உன் வயசில் நான் ஆப்பிரிக்கக் கப்பல் ஒன்றில் பாய்மரத்துக்கு முன்னே நின்றேன்; ஆப்பிரிக்காவில் மாலை நேரத்தில் கடல்கரையில் உலாவும் பெரிய சிங்கங்களை நான் பார்த்திருக்கிறேன்.''

''தெரியும்; நீ முன்பே சொல்லியிருக்கிறாய், தாத்தா. நன்றாகத் தூங்கு. நான் வருகிறேன்.''

பையன் வெளியே போனான். அவர்கள் சாப்பிடும்போதே விளக்கில்லை; எனவே, இருட்டில் தன் கால் சராயை நீக்கிவிட்டுக் கிழவன் படுக்கப் போனான். கால் சராய்க்குள் பத்திரிகையை வைத்து மடித்துத் தலையணைபோல் தலைக்கு உயரமாய் வைத்துக்கொண்டான். போர்வையை இழுத்துப் போர்த்துக்கொண்டான். பழைய பத்திரிகைகள் பரப்பிய படுக்கையில் படுத்துப் புரண்டான்.

அவன் வெகு சீக்கிரத்தில் தூங்கி விட்டான்; சிறு வயசில் தான் ஆப்பிரிக்கா சென்றதைப்பற்றிக் கனவு கண்டான்; நீண்ட பொன் மணல் கரைகளையும், கண்ணைப் பறிக்கும் வெண்மணல் கரைகளையும், கூராகி உயர்ந்து நிமிர்ந்த பழுப்புநிற மலைகளையும் அவன் கனவில் கண்டான். இப்போதெல்லாம் ஒவ்வோர் இரவிலும் கனவில் ஆப்பிரிக்காவின் கடல் கரைகளிலேயே அவன் வாழ்ந்தான். கனவுகளில் அந்தக் கரைகளின் அலையடித்து நுரைக்கும் சப்தம் கேட்டது. அந்த அலை வரிகளின்மேல் ஊர்ந்து வரும் நாட்டுப் படகுகளைக் கண்டான்; படகுத் தளத்தின் கீலெண்ணெயும், கயிற்றுச் சிலாம்பு வாசனையும் வீசியதை மோந்தான்; ஆப்பிரிக்காவின் நிலவளம் காலையில் வீசிய காற்றோடு கலந்து வருவதையும் அறிந்தான்.

வழக்கமாகக் கனவில் ஆப்பிரிக்காவின் நிலக் காற்று வீசும் போது அவன் விழித்துக் கொள்வான்; உடையணிந்துகொண்டு பையனை எழுப்பப் போவான். ஆனால், இன்றிரவு அவன் கனவில் நிலக்காற்றுச் சீக்கிரமே வந்து விட்டது; கனவிலேயே அவன் அதை உணர்ந்தான். எனவே, மேலும் மேலும் கடலாழத்திலிருந்து கிளம்பும் வெண் சிகர மலைத் தீவுகளையும், கனேரித் தீவின் பலதரப்பட்ட துறைமுகங்களையும் பாதைகளையும் கனவில் கண்டான்.

பெரிய புயல்களையும், பெண்களையும், பெரிய பெரிய சம்பவங்களையும், மீன்களையும், குஸ்திகளையும், தன் மனைவியையும் அவன் கனவில் காணவில்லை. பல இடங்களை அதில் கண்டான். கடல்கரைச் சிங்கங்களைக் கண்டான். அவை மாலைக்கால மசமசப்பில் பெரிய பூனைகளைப்போல் கரையில் விளையாடும். பையனைப்பற்றிக் கனவு காணவில்லை; என்றாலும், எழுந்ததும் எழாததுமாய் அவனைப்பற்றிய நினைப்புத்தான். படுக்கையிலிருந்து எழுந்ததும், வாயில் வழியே நிலவொளியைப் பார்த்தான். கால்சட்டையை விரித்து மாட்டிக் கொண்டான். பையனை எழுப்புவதற்காகப் பாதையிலே சென்றான். காலைக் குளிரில் அவன் உடல் நடுங்கியது. இந்தமாதிரி நடுக்கங்களாலே உடலில் உஷ்ணம் ஏறும்; அந்தச் சுகத்தோடு அவன் படகைச் செலுத்திக்கொண்டு கடல்மேலே போவான்.

பையனின் குடிசைக் கதவைத் திறந்துகொண்டு சப்தம் செய்யாமல் மெதுவாய் வெறுங் காலோடு கிழவன் உள்ளே நுழைந்தான். வாயில்புறத்து முதலறையிலேயே பையன் படுத்திருந்தான்; மங்கி மறையும் நிலவொளியில் அவனை நன்றாகப் பார்க்க முடிந்தது. கிழவன் மெல்லப் பையனின் ஒரு பாதத்தைப் பற்றினான்; பையனும் கண் விழித்துக் கிழ

வலையைப் பார்த்தான். கிழவன் தலை அசைத்தான்; பையன் கால் சட்டையை மாட்டிக்கொண்டான்.

கிழவனும் பையனும் முன் பின்னாக வெளிப்பட்டார்கள்.

கிழவனின் குடிசையை அடைந்தார்கள். அங்கே கூடையில் இருந்த வலைக் கயிறுகளையும் ஈட்டிகளையும் பையன் எடுத்துக்கொண்டான்; பாய்மரத்தைக் கிழவன் எடுத்துக்கொண்டான்.

பக்கத்தில் இருந்த கடையில் இருவரும் புகுந்தார்கள்; கட்டிப் பால் காபி அருந்தினார்கள்.

பவளநிறப் பாறைகளின்மேல் பையன் வெறுங்காலோடு நடந்து, பனிமனைக்குத் தூண்டில் உணவு வாங்கச் சென்றான்.

கிழவன் இன்னமும் மெதுவாகக் காபியைக் குடித்துக்கொண் டிருந்தான்: நாள் முழுவதும் அந்தக் காபிதான் அவனுக்கு ஆகாரம். வெகு நாளாகவே அவனுக்குச் சாப்பாடு பிடிப்பதில்லை. எனவே, வேலைமேல் போகும்போது அவன் சிற்றுண்டி கொண்டு போவதில்லை. படகின் முன் வளைவில் அடித் தளத்தில் ஒரு புட்டியில் குடி தண்ணீர் இருக்கும். இதற்கு மேல் எதுவும் அவனுக்குத் தேவை யில்லை.

பையன் சுநீர மீன்களையும் தூண்டில் புழுக்களையும், தனித் தனியாகப் பத்திரிகைத் தாள்களில் மடித்துக் கொண்டு வந்தான். கூழாங்கல் மணல் பரப்பின்மீது நடந்து இருவரும் படகுக்குச் சென்றார்கள்; படகை மெதுவாய்த் தூக்கித் தண்ணீரில் விட்டார்கள்.

''தாத்தா, அதிருஷ்டம் வரட்டும்.''

''அதிருஷ்டம் வரும்'' என்றான் கிழவன். துடுப்புக்களின் கயிற்றுச் சாட்டிகளைத் துளைக் கண்ணிகளில் கட்டிவிட்டு, முன்னால் சாய்ந்து கொண்டான். துடுப்பலகுகள் நீரைப் பிளந்துகொண்டு செல்ல, அந்த இருட்டிலே துறைமுகத்துக்கு அப்பால் படகைச் செலுத்தினான். வேறு துறைகளிலிருந்து வேறு பல படகுகளும் கடல்மீது சென்றன. மலையின் பின் நிலவு மறைந்து விட்டதால், அந்தப் படகுகள் கண்ணுக்குத் தெரியவில்லை. என்றாலும், அவற்றில் துடுப்புத் தள்ளும் சப்தம் கிழவன் காதில் விழுந்தது. எப்போதாவது, ஏதாவது ஒரு படகில், யாராவது ஒருவர் பேசுவது உண்டு. ஆனால், அநேகமாக எல்லாப் படகுகளிலும் துடுப்பொலியைத் தவிர வேறு எந்தச் சப்தமும் இருக்காது. படகுகள் எல்லாம் துறைமுக வாயிலைத் தாண்டியதும், தனித்தனியாகப் பிரிந்து, பல இடங்களை நோக்கிச் செல்லும். கிழவன் வெகு தொலைவுக்கு அப்பால் செல்ல விரும்பியதால், உதயத்துக்கு முன்பே நில வாசனை நீங்கிய கடல்நீரின் காலை வாசம் மட்டும் வீசும் இடத்துக்குப் போய்விட்டான். கடலாழத்தின் சுழலுக்கு அஞ்சி மீன்களெல்லாம் மேலே வந்து கூடிப் பின்பு எழுநூற்ருள் ஆழத்துக்குத் திடீரென்று சரியும் பெரு வெள்ளமான பகுதியில், மின்னும் நாணல்களின் சாயை தண்ணீரில் பளபளப்பதைக் கிழவன் பார்த்தான். இங்கே இறால் மீன்களும் தூண்டில் மீன்களும் ஆழத்திலிருந்து வரிசையாக வரும். கணவாய் மீன்கள் இரவு நேரங்களில் நீர் மட்டத்துக்குமேல் எழுந்து துள்ளி விளையாடும். திரியும் பெரிய மீன்கள் அவற்றை உணவாகக் கொள்ளும்.

காரிருளிலேயே காலையின் வரவைக் கிழவன் உணர்ந்தான்; பறக்கும் வரால் மீன்கள் பாயும்போது நீர் நலுங்கும் சப்தமும், அந்த மீன்களின் நீண்ட செதில்கள் நிமைக்கும் ஒலியும் நன்றாகக் கேட்டன. கடல் நடுவில் வரால் மீன்களே அவன் தோழர்கள்; எனவே, அவற்றிடம் அவனுக்குப் பிரியம் அதிகம். பறவைகளிடம் அவனுக்கு மிகுந்த அநுதாபம். அதிலும் அந்தச் சிறிய, மென்மையான, கரிய, வால் நீண்ட கடல் குருவி (டெர்ன்), பாவம், எப்போதும் சுற்றிச் சுற்றிப் பார்த்துக்கொண்டே இருக்கும். என்றாலும், அதற்கு அநேகமாய் ஒரு மீனும் கிடைப்பதில்லை. 'பலமுள்ள சில திருட்டுப் பறவைகளைத் தவிர, மற்றப் பறவைகளின் வாழ்க்கை நாம்

நினைப்பதைவிடக் கஷ்டமானது. கடலின் கொடுமையை அறிந்தும் கடவுள் இந்த லலிதமான தலையில்லாக் குருவிகளை (ஸ்வாலோ) உற்பத்தி செய்வானேன்? பொதுவாகக் கடல் கருணை உடையதுதான், அழகானதுதான்; ஆயினும், திடீரென்று சில சமயம் வெறி கொண்டு பயங்கரமாய்க் குமுறும். பாவம், அப்போது அது சுற்றிச் சுற்றிப் பாய்ந்து பாய்ந்து உறுமலுடன் மீன் வேட்டையாடுவது எவ்வளவு பரிதாபம்! கடலின் கடுமைக்கும் இந்தச் சிறு குருவிகளின் மென்மைக்கும் எவ்வளவு தூரம்!' என்றெல்லாம் கிழவன் எண்ணினான்.

அவனுக்குக் கடல் ஒரு கன்னிகை; ஸ்பானியர் கடலை இப்படித்தான் செல்லமாகக் குறிப்பிடுவார்கள். இளஞ் செம்படவர்களில் சிலர் கடலை ஆணாக உருவகப்படுத்துவது உண்டு. அவர்கள் 'கடல் ஒரு விரோதி' என்று கருதுகிறவர்கள். ஆனால், கிழவனுக்கோ கடல் எப்போதுமே ஒரு கன்னிகைதான். தன்னைக் காதலிப்பவர்களுக்கு அவள் பெரிய வரங்களைத் தருவாள். அவள் கொடுமையாகக் கொந்தளித்தால், அது அவளுடைய இயற்கை. பெண்களை மயக்குவது போலவே கடலையும் நிலவொளி மயக்குகிறது.

கடல் பரப்புத் தட்டையாய்ச் சலனமற்று இருந்தது. அப்போதப்போது தோன்றும் நீரோட்டச் சுழல்களைத் தவிர, யாதோர் அசைவுமில்லை. எனவே, அளவான வேகத்துடன் கிழவன் அதிசுலபமாகப் படகைச் செலுத்தினான். தான் எதிர்பார்த்ததைவிட அதிக தூரம் வந்துவிட்டதை, வளரும் வெளிச்சத்தில் அவன் உணர்ந்தான்.

நன்றாக விடியுந் தருணம். நீரோட்டத்துக்கு ஏற்றபடி படகு தானாக மிதந்து சென்றது. நாற்பது, எழுபத்தைந்து, நூறு, நூற்றிருபது ஆள் ஆழங்களில் நாலு தூண்டில்களை அவன் வீசினான்.

படகு விளிம்பில் தூண்டில்கள் ஆழத்தில் அமுங்கி இருப்பதைக் கவனித்தபடி, அவை சாயாது, கோணாது, மேலெழாது, நேராக நிற்கும்படி படகைக் கிழவன் மிதக்க விட்டான். வெளிச்சம் பரவுகிறது; எந்தக் கணத்திலும் சூரியன் உதிக்கலாம்.

மெதுவாய்க் கடலிலிருந்து சூரியன் கிளம்பினான்; நீரோட்டத்துக்கு ஏற்றபடி மற்றப் படகுகள் கரையை அடுத்த கடல்பரப்பில் மிதப்பதைக் கிழவன் கண்டான். வர வர அதிகரித்த சூரியனொளி, கடல்நீர்ப் பரப்பில் பட்டுத் தெறித்து அவனுடைய கண்களைக் குத்தீட்டிபோல் தாக்கி வருத்தியது. எனவே, அதைப் பார்க்காமல் வேறு புறம் திரும்பி மெதுவாய்ப் படகைச் செலுத்தினான். தன் தூண்டில்கள் செங்குத்தாய்க் கடலாழத்தில் பாய்ந்து நிற்கின்றனவா என்ற ஒரே கவலையுடன், கடலாழத்தையே கண் கொட்டாது பார்த்துக்கொண்டிருந்தான்.

சூரியன் உதித்து இரண்டு மணி நேரம் ஆகிவிட்டது. இப்போது அவனால் கீழ்வானத்தைக் கண் சுளிக்காமல் காண முடிந்தது; மூன்றே மூன்று படகுகள் கரை ஓரத்தில் மிதந்துகொண்டிருந்தன. 'என்றுமே காலை வெயில் என் கண்களை உறுத்துகிறது. என்றாலும், என் கண்கள் மங்கவில்லை. கண் இருளாது மாலைக் கதிரவனை என்னால் காண முடியும்; இருந்தாலும் காலை நேரத்தில் கண் கொஞ்சம் கூசத்தான் கூசுகிறது' என்று கிழவன் எண்ணினான்.

அந்தச் சமயத்தில் பெரிய போர்க் கலப் பறவை ஒன்று, கறுத்து நீண்ட சிறகுகளுடன் தன் முன் பறப்பதைக் கண்டான். திடீரென்று அது இறக்கைகளைப் பின்புறம் சாய்த்தபடி கீழ் நோக்கிப் பாய்ந்தது. மறு கணமே வானில் எழும்பி வட்டமிட்டது. 'அதற்கு ஏதோ தென்பட்டிருக்கிறது; சும்மா அது வட்டமிடவில்லை' என்று கிழவன் உரக்கக் கூவினான். அந்தப் பறவை வட்டமிடும் இடத்துக்கு நேராக நிர்ணயமாக, நிதானமாகப் படகைச் செலுத்தினான். அவசரப்படாமல்-

தூண்டில் நுனிகளை ஆடாது அசையாது பிடித்தபடி - ஊர்ந்து சென்றான்.

உயரப் பறந்து, சலனமற்ற இறக்கைகளோடு வானில் பறவை வட்டமிட்டது. மறுபடியும் திடீரென்று கீழே பாய்ந்தது; பறக்கும் வரால் மீன்கள் நீர்ப்பரப்பின் மேல் சிதறிப் பரபரப்போடு நீந்தின.

''கடல் பன்றி! பெரிய கடல் பன்றி!'' என்று கத்தினான் கிழவன்.

தன் துடுப்புக்களை அயரவிட்டுப் படகின் முன் பலகைக்கு அடியிலிருந்து சிறிய தூண்டில் வரி ஒன்றை எடுத்தான். அது கம்பி வரி; அதில் ஒரு சுநீரத்தை மாட்டிப் படகின் பின் விளிம்பின் மேல் தவழப் பக்கத்தில் தொங்க விட்டான்.

கடல் பன்றிக் கும்பலால் கடல் நீர் குமிழியிட்டுக் குமுறுவதைக் கண்டான். பறக்கும் வரால் மீன்களுக்கு அடியில் நீர்மட்டத்தின் கீழ்க் கடல் பன்றிகள் நீந்தின. வரால்கள் விழும்போது அவற்றின் வேகம் அதிகரிக்கும். அணி அணியாகக் கடல் பன்றிகள் வருவதாகக் கிழவன் நினைத்தான். 'எனக்கு வேண்டிய பெரிய மீன் அவற்றுக்கு இடையே இருக்கலாம் - இருக்கத்தான் வேண்டும்' என்று கிழவன் நம்பினான்.

கரையை அடுத்து மலைபோல மேகங்கள் கவிந்தன. பழுப்பு நீல மலைகள் வரியிட்ட ஒரு பச்சைக் கோடுபோல் கரை தோன்றியது. கடல் நீர் பசிய கருநிறத்தை அடைந்தது. தண்ணீரின் ஆழத்தில் அவன் உற்று நோக்கினான். சூரியனின் அபூர்வ ஒளியில் நீரடியில் சிவப்பு வரிகள் ஓடிய உதிரி மீன் படலங்கள் மின்னுவதைக் கண்டான். தன் தூண்டில் வரிகள் நேராக ஆழப் பாய்ந்து செல்வதை அக்கறையோடு கவனித்தான். உதிரிப் படலத்தைக் கண்டு மகிழ்ந்தான். ஏனென்றால், அங்கே பெரிய மீன்கள் இருக்கின்றன என்பதற்கு இது அறிகுறியாகும். உச்சிச் சூரியனின் ஒளியும் மேகங்களும் இதுவே மீன் பிடிக்கச் சரியான சமயம் என்பதை அறிவுறுத்தின.

இப்போது அந்தப் பறவை மறுபடியும் வானத்தில் வட்டமிட்டது.

''ஏதோ மீனைக் கண்டுவிட்டது'' என்று கிழவன் உரக்கக் கூறிக்கொண்டான். வரால்களோ தூண்டில்களோ நீர்ப் பரப்பைக் கலக்கவில்லை. ஆனால், அவன் பார்த்துக்கொண் டிருக்கும்போதே சிறிய தூணி மீன் ஒன்று துள்ளித் தலை கீழாய்த் தண்ணீரில் முழுகியது. அப்பாலும் அடுத்தடுத்தும் பல தூணிகள் அப்படியே எழுந்தெழுந்து விழுந்தன. சூரிய ஔியில் அவை வெள்ளிக் கிளிஞ் சில்களைப்போல் தோன்றின; நீரைக் குடைந்து கொண்டு, பாய்ந்து பாய்ந்து, தூண்டில்களைச் சுற்றி வட்டமிட்டன. தான் அவற்றைப் பிடிக்கலாம் என்று கிழவன் எண்ணினான். வெண்ணுரை கக்கித் தண்ணீர் தளும்பியது; பயத்தால் வெளிவந்த தூணி மீன்களை பறவை பாய்ந்து கொத்தித் தின்றது.

அப்போது, படகின் பின்புறம் அவன் காலடியில் கிடந்த தூண்டில் கயிறு இறுகி நெட்டு நிமிர்ந்தது. துடுப்புக்களை விட்டுவிட்டு அதை மெதுவாய்ப் படகுக்குள் இழுக்கலானான். தெளிந்த நீருக்குள் ஒரு மீனின் நீல முதுகும் பின்பு பொன்மயமான பக்கங்களும் நன்றாய்த் தெரிந்தன. அவன் அதை இழுத்துப் படகில் போட்டான். இந்த நேரம் அதன் குண்டு உடலும் அசட்டுக் கண்களும் ஓய்ந்திருந்தன. அடுத்தபடி, படகின் பின்பக்கப் பலகைகளில் நீண்டு நிமைக்கும் வலிய வாலை அடித்துத் துள்ளித் துடித்து உயிரை விட முயலும் அதன் உக்கிரத்தைக் கண்டு கருணை கொண்ட கிழவன், அதைத் தலையில் தாக்கிக் கொன்றான். அப்போதும் சாவின் துடிப்பு நீங்கவில்லை.

''அவலை மீன்! நல்ல தூண்டில் உணவாகும். பத்துப் பவுண்டு எடை இருக்கும்'' என்று கிழவன் சந்தோஷக் கூச்சலிட்டான்.

தனியாக இருக்கும்போது தானாகப் பேசிக்கொள்ளும் வழக்கம்

அவனுக்கு எப்போது ஏற்பட்டதோ ஞாபகமில்லை.

'இப்படி எனக்கு நானே உரக்கப் பேசிக்கொள்வதை யாராவது கேட்டால், என்னைப் பைத்தியம் என்பார்கள். அதைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. பணக்காரரின் படகுகளிலே ரேடியோ உண்டு; பேஸ் பந்து விளையாட்டைப்பற்றி அவர்களுக்கு அது கூறும்'' என்று சொல்லிக் கொண்டான்.

இப்போது பசுமையான கரை கண்ணுக்குத் தெரியவில்லை. தூரத்திலே பனி மூடியது போல் வெண்மையாயிருந்த நீலமலைச் சிகரங்களும், அவற்றை அடுத்து மலைமேல் மலைபோல் வெண்மேகங்களுமே தெரிந்தன. கருங்கடல் பரப்பில் கதிரொளி பல வர்ணக் கண்ணாடித் துண்டுகளைப்போல் பிரகாசித்தது. உதிரி மீன் புள்ளிகள் மறைந்துவிட்டன; நீலக் கடலடியில் நிமைக்கும் மணித் துகள்களையே கிழவன் கண்டான். அவன் கவனம் முழுவதும் ஒரு மைல் ஆழமுள்ள அந்தக் கடலில் நேராக நெட்டுச் செல்லும் தன் தூண்டில் வரிகளின் மேலேயே நிலைத்திருந்தது.

வெயில் கடுமையாய்க் கிழவனின் முதுகில் தாக்கியது; வியர்வைத் துளிகள் வழிந்தோடின. 'படகை வலிக்காமல் மிதக்க விட்டுக் கால் கட்டை விரலில் தூண்டிலைக் கட்டிவிட்டுத் தூங்கலாம்' என்று கிழவன் நினைத்தான்; ஆனால், இன்று எண்பத்தைந்தாம் நாள் - அதிருஷ்ட நாள்! எப்படியாவது நல்ல வகையில் மீன் பிடிப்பது மிக அவசியம்.

இந்தச் சமயம், தூண்டில் கோல் ஒன்று தழைந்து தாழ்வதைக் கண்டான். படகு அசையாதபடி துடுப்புகளை மெதுவாக விட்டுவிட்டு அந்தத் தூண்டியின் அடியை மிக லேசாகத் தன் வலக்கை விரல் இடுக்கில் பற்றினான். நெளிவோ நெகிழ்ச்சியோ ஒன்றும் தெரியவில்லை; மறுபடியும் தூண்டில்கோல் சாய்ந்தது. அறுநூறு அடி ஆழத்தில் ஏதோ ஒரு சுருணை மீன், தூண்டில் நுனியில் உள்ள சுநீரங்களை ருசி பார்க்கிறது; தூணி மீனையோ, அதைக் குத்தியுள்ள கொக்கியையோ அது இன்னும் தொடவில்லை. லேசாகத் தூண்டில் கோலை இடது கையில் பற்றிக்கொண்டு வலது கையால் தூண்டில் கயிற்றை மெதுவாகத் தழையவிட்டான்.

இவ்வளவு ஆழத்தில் இருக்கும் மீன் பெரிதாகத்தான் இருக்க வேண்டும் என்று எண்ணினான். ''தின்னு, மீனே! தின்னு! அறுநூறு அடி ஆழத்தில், இருட்டில், குளிரில் அவஸ்தைப்படும் உனக்கு அற்புதமான உணவு வைத்திருக்கிறேன்; ஒரு முறை சுற்றிவிட்டுத் திரும்பவும் வந்து தின்னு'' என்றெல்லாம் முணுமுணுத்தான்.

முதலில் லேசான ஓர் இழுப்பு; பின்பு கடினமான ஒரு வெட்டு. கொக்கியில் மாட்டி இருந்த சுநீரத்தின் வலிய தலையைக் கடிப்பதால் இவை ஏற்பட்டிருக்கலாம். அப்புறம் ஒன்றையுமே காணவில்லை.

''வா! வா! மற்றொரு முறை திரும்பி வா! அதன் வாசனையை மோந்து பார்! அந்தச் சுநீரம் எவ்வளவு சுகமான உணவு! தின்னு, நன்றாகத் தின்னு! அப்புறம் அந்தத் தூணி மீன் இருக்கிறதே! எவ்வளவு மொறுமொறுப்பானது, குளுகுளுப்பானது, சுவையானது! வெட்கப்படாதே, கூச்சப்படாதே; தின்னு!'' என்றான் கிழவன்.

அப்போது மறுபடியும் கயிற்றில் அதே லேசான இழுப்புக் கனத்தது. ''அது சிக்கி விடும், கடவுள் கருணையால் அந்த மீன் கிடைக்கும்'' என்று கிழவன் உரக்கக் கூறினான். இல்லை, அந்த மீன் நழுவிவிட்டது; கிழவனின் உணர்ச்சியும் மரத்துவிட்டது.

''போயிருக்காது; ஏசுவுக்குத் தெரியும், அது போயிருக்காது. எங்கேயாவது சுற்றிவிட்டுத் திரும்பும். ஒருவேளை முன்பே தூண்டிலில் சிக்கித் தப்பிய மீனாக இருக்கலாம். அதுதான் இவ்வளவு சாகஸம் பண்ணுகிறதோ, என்னவோ!'' என்றான்.

மறுபடியும் லேசான இழுப்பை உணர்ந்தான்; களித்தான்.

‘‘சமயம் வந்துவிட்டது! இனி அகப்பட்டுக்கொள்ளும்’ என்றான். இப்போது கயிற்றை மெதுவாக அது இழுப்பது தெரிந்தது; திடீரென்று இழுப்பின் வேகமும் கனமும் நம்ப முடியாதபடி அதிகரித்தன. அந்த மீனின் கனமே அது. தூண்டில் கயிற்றை நழுவவிட்டான். இருப்பில் இருந்த இரண்டு கயிற்றுச் சுருணைகளையும் மாட்டிக் கீழே கீழே பின்னும் கீழே கயிறு விட்டான். கிழவனின் விரல் இடுக்கு வழியாய்க் கயிறு நழுவ நழுவ மீனின் கனமும் அதிகரிப்பது போல் தோன்றியது. எவ்வளவு பெரிய மீன்! தூண்டில் நுனி அதன் வாயின் குறுக்கே சிக்கிவிட்டது; அதோடு அது நீந்துகிறது!

‘அடுத்தபடி அது தூண்டிலை விழுங்கிவிடும் என்று எண்ணினான் கிழவன். அது எவ்வளவு பெரிய மீனென்று அவனுக்குத் தெரியும்; தூண்டிலின் தூணி மீனைக் கடித்தபடி நீந்திச் செல்கிறது. இந்தச் சமயத்தில் அது நீந்தாமல் நிலைத்து நிற்பதுபோல் தோன்றியது. என்றாலும் பளுவு குறையவில்லை; அதிகரித்தது. அதிகமாகக் கயிறுகளை ஆழ விட்டான் கிழவன். கயிற்றை அழுத்திப் பிடித்தான்; கனம் நிரம்பிய தூண்டில் நுனி நேராகக் கீழே நெடுந் தொலைவுக்குச் சென்றது.

‘‘சிக்கி விட்டது! இனித் தூண்டில் உணவை நன்றாக உண்ணட்டும்’’ என்றான். கயிற்றைப் பின்னும் நெகிழவிட்டு அதை வேறு இரண்டு கயிறுகளுடன் பிணைத்து வைத்தான். இப்போது அவன் தயார்; தான் உபயோகிக்கும் கயிற்றுடன் வேறு இருநூற்று நாற்பதடிக் கயிறுகளும் தயார்.

‘இன்னும் கொஞ்சம் சாப்பிடு; நன்றாக மென்று தின்னு; கொக்கி நுனி உன் இதயத்தைக் குத்திக் கொல்லும்படி சாப்பிடு-வா! மேலே வா! சுலபமாக வா! என் குத்தீட்டியை உன் உடலுக்குள் செலுத்துகிறேன், வா! ரொம்பச் சரி! தயார்தானே! திருப்தியாகச் சாப்பிட்டாயா’ என்றெல்லாம் கிழவன் எண்ணமிட்டான். ‘இதோ’ என்று இரு கையாலும் கயிற்றை இழுத்தான். ஒரு கஜம் இழுத்து விட்டான். பின்னும் பின்னும் மாற்றி மாற்றிக் கைகளை வீசி வீசி இழுத்தான். உடலைச் சாய்த்துக் கைகளில் வலிவுள்ள வரையில் கயிற்றைச் சேந்தினான்.

ஆனால், பயனில்லை. மீன் மிக மெதுவாக நகர்ந்தது. ஓர் அங்குலங்கூட அதைக் கிளப்ப முடியவில்லை. கயிற்றைத் தோள்பட்டை மேல் போட்டுக்கொண்டான். விண்ணென்று விடைத்த கயிற்றிலிருந்து நீர்த் துளிகள் விசிறித் தெறித்தன. படகுப் பெஞ்சியில் காலூன்றி முதுகைச் சாய்த்துக் கனத்தைக் கிழவன் தாங்கினான். படகு மெதுவாய் வடமேற்கு நோக்கி நகரத் தொடங்கியது. மீனும் நிதானமாக நகர்ந்தது; படகும் நகர்ந்தது; தூண்டில் வரிகளும் நகர்ந்தன.

‘பையன் இருந்தால்’ என்று எண்ணினான் கிழவன். ‘என்னை இழுத்துக்கொண்டு மீன் ஓடுகிறது; அதை இழுத்துக்கொண்டு நான் அவஸ்தைப்படுகிறேன். கயிற்றைக் கம்பத்தில் கட்டி விடலாம்; ஆனால், அது கயிற்றைச் சுலபமாக அறுத்துக்கொண்டு தப்பிப் போனாலும் போய்விடுமே. வேண்டுமளவு கயிற்றை விட்டு விட்டுத்தான் பிடிக்க வேண்டும். கடவுள் தயவால் அது இன்னும் ஆழத்துக்கு இழுக்காமல் ஒரே மட்டத்தில் நீந்திச் செல்கிறது அது நேராகக் கடலடிக்குச் செல்லத் தொடங்கி விட்டால் என்ன செய்வது? ஏதாவது செய்துதான் தீர வேண்டும்; செய்வேன்.’

படகையும் இழுத்துக்கொண்டு மீன் வடமேற்கு நோக்கி ஓடுகிறது; கிழவனின் முதுகுக் கயிறு சரிந்து கடல் நீரில் சாய்கிறது. இப்படியே போனால் அது செத்துவிடும். எவ்வளவு நேரந்தான் இப்படியே இழுத்துக்கொண்டு போக முடியும்? நான்கு மணி நேரமாகியும் இழுப்பு நிற்கவில்லை; அதைத் தாங்கும் கிழவனின் வலிமையும் குறையவில்லை.

‘நட்ட நடுப் பகலில் சிக்கிய மீனை நான் இன்னமும் பார்க்க

வில்லையே?' மீன் சிக்குமுன் அவன் தலையில் தாழ அணிந்திருந்த அந்த வைக்கோல் தொப்பியின் விளிம்பு, நெற்றியை அறுப்பது போல் உறுத்தியது தாக மெடுத்தது. தூண்டில் கயிற்றை உலுக்காமல் மெதுவாய் மண்டியிட்டுப் படகின் முன் பக்கம் நகர்ந்து சென்று தண்ணீர்ப் புட்டியை ஒரு கையால் எடுத்துத் திறந்து கொஞ்சம் நீர் பருகினுன். முன் பக்கப் பலகையில் சாய்ந்து சிறிது இளைப்பாறினுன். விரிக்காத படுதாச் சுற்றிய பாய் மரத்தின் மேல் அமர்ந்தபடி சிந்தனைக்கிடங்கொடாமல் பொறுமையாகக் காத்திருந்தான்.

திரும்பிப் பார்த்தான். நிலப் பரப்பே கண்ணுக்குத் தெரியவில்லை. அதனுல் பாதகம் இல்லை. மாலையின் மங்கிய ஒளியில் கரைக்குத் திரும்பிவிடலாம். அஸ்தமிக்க இன்னும் இரண்டு மணி நேரம் இருக்கிறது. அதற்குள் அது வந்துவிடலாம். இல்லை, சந்திரோதயத்தில் கிடைக்கலாம். அதுவும் தவறினுல், சூரியோதயத்தில் கிடைத்துவிடும்.

மீனின் போக்கும் திசையும் இரவு முழுவதும் மாறவே இல்லை. நட்சத்திரங்களைக் கொண்டு அவன் கணித்தது சரியா யிருந்தால், இரவு அநேகமாய் முடியுந் தருணம் ஆகிவிட்டது பகலில் வழிந்த வேர்வை, அஸ்தமனத்துக்குப் பின் அவன் முதுகிலும் அங்கங்களிலும் உறைந்து போயிற்று. பகலின் தூண்டிலுணவுப் பெட்டியை மூடி இருந்த சாக்கைக் காய வைத்திருந்தான். அஸ்தமன சமயத்தில் அந்தச் சாக்கைக் கழுத்தில் கட்டிக்கொண்டு மெதுவாய் முதுகில் விரித்து, ஆடாது அசையாது தூண்டில் கயிற்றுக்கு அடியில் இழுத்துவிட்டுக் கொண்டான். கயிறு அவன் தோளை அறுக்காமல் இந்தச் சாக்குப் புரிமணை பாதுகாத்தது.

'இப்படியே போனுல் என்னுல் அதை ஒன்றும் செய்ய முடியாது; அதனுலும் என்னை ஒன்றும் செய்ய முடியாது.'

நட்சத்திரங்களைப் பார்த்துத் திசையறிய முயன்றுன். அவன் தோளிலிருந்து இடுப்பு வரையில் நெளியும் மின்னலைப் போல் தூண்டில் கம்பி பளபளத்தது. இப்போது படகு மெதுவாக நகர்ந்தது. ஹவானு ஏரியில் பளபளப்பு அதிகமில்லை. எனவே, நீரோட்டத்தில் படகு கிழக்கு நோக்கித் தான் போகவேண்டும். பேஸ் பந்துப் பந்தயம் என்னுயிற்றே? ஒரு ரேடியோ இருந்தால்... அதைப்பற்றி எல்லாம் நினைக்க இதுவா நேரம்?

''பையன் இருந்திருந்தால், எனக்கும் உதவுவான்; இதைப் பார்த்துச் சந்தோஷமும் அடைவான்'' என்று கிழவன் உரக்கக் கூறிக் கொண்டான்.

இரவில் படகருகில் இரண்டு கடல் முள்ளிகள் வந்தன. நீரில் அவை புரளும் சப்தமும் மூச்சு விடும் சப்தமும் அவனுக்கு நன்ருகக் கேட்டன. ஆண் முள்ளியின் ஊதுலைக் குரலையும் பெண் முள்ளியின் உயிர்ப்புறு விம்மலையும் அவன் கேட்டான்.

''இவை நல்லவை; விளையாடுகின்றன, வேடிக்கை செய்கின்றன, காதல் புரிகின்றன! வராக் மீன்களைப்போல் இவையும் மனிதனின் தோழர்களே'' என்றுன்.

தன் தூண்டிலில் சிக்கிய பெரிய மீனைப்பற்றிப் பரிதாபப்பட்டான்: 'இந்த மீனின் வயசு என்னவோ? இதுவரைக்கும் இவ்வளவு வலிமையான மீன் எனக்குக் கிடைத்ததில்லை; எந்த மீனும் இப்படி அபூர்வமாக நடந்துகொண்டதும் இல்லை. ஒருவேளை இதற்குத் துள்ளிக் குதிக்க இஷ்ட மில்லையோ? அப்படி வெறிகொண்டு துள்ளினுல் என் பாடு ஆபத்து. இது பல முறை தூண்டிலில் சிக்கித் தப்பிப் பழக்கப்பட்ட மீனுே என்னவோ? தப்பித்துக்கொள்ள இதுதான் சரியான வழி என்று எண்ணுகிறதோ என்னவோ? தன் எதிரி ஒண்டி மனிதன், அதிலும் கிழவன் என்று பாவம் இதற்குத் தெரியாது. ஆஹா! எவ்வளவு பெரிய மீன்! இதன் இறைச்சி மட்டும் நன்ரு யிருந்தால், நல்ல பணம்

கிடைக்கும். தூண்டிலைக் கவ்விய விதத்தையும் இழுத்துச் செல்லும் விதத்தையும் பார்த்தால், இது ஓர் ஆண் மீன் என்றுதான் தோன்றுகிறது. இதன் போராட்டத்தில் பரபரப்போ பயமோ, எதுவுமில்லை. ஒருவேளை தப்பித்துக்கொள்ள ஏதாவது திட்டம் போடுகிறதோ? அல்லது என்னைப் போலவே வேறு வகை இல்லாது தவிக்கிறதோ?'

'பையன் இப்போது இங்கே இல்லையே' என்று வருத்தத்துடன் படகின் வளைந்த பலகையில் சாய்ந்தான். இழுத்துச் செல்லும் மீனின் கனம் தூண்டில் கயிறு மூலம் அவன் தோளில் உறுத்தியது.

தன் சதிக்குப் பதிலாக, எதிராக ஏதாவது செய்யவேண்டும் என்று அந்த மீன் கருதியிருக்கலாம்.

'எவருடைய சதிகளுக்கும், தூண்டில் பொறிகளுக்கும் அப்பால் பட்ட ஆழத்தின் இருளில் சௌகரியமாக வாழ நினைத்திருக்கும்; யாராலும் - உலகத்தில் எவராலும் - நுழைய முடியாத அந்த ஆழத்தில் உள்ள அதைப் பிடிக்க நான் தீர்மானித்துவிட்டேன். இப்போது எனக்கும் அதற்கும் பிணைப்பு ஏற்பட்டு விட்டது. என்றாலும், எனக்கோ அதற்கோ உதவி செய்ய யாரும் இல்லை!'

அவன் பின்புறமுள்ள தூண்டிலை ஏதோ கவ்வியிருக்க வேண்டும்; தூண்டில் கழி படகின் பக்கப் பலகைமேல் முறிந்த சப்தம் கேட்டது. அந்த இருட்டில் அந்தப் பெரிய மீனின் பாரம் முழுவதையும் இடது தோளில் தாங்கியவனாய்த் தன் இடையில் செருகியிருந்த கத்தியைப் பிரித்துப் பின்புறத் தூண்டில் கயிற்றை அறுத்துவிட்டான். அடுத்தாற்போல் இருந்த மற்றொரு கயிற்றையும் அறுத்து இரண்டின் நுனிகளையும் ஒரே கையால் சாமர்த்தியமாக முடிபோட்டான்; ஒன்றைக் காலடியில் அழுத்திக்கொண்டு முடிச்சை இறுக்கிவிட்டான். இப்போது அவனிடம் முடியிட்டுப் பிணைத்த ஆறு கயிறுகள் தயாராய் இருக்கின்றன; எப்போது வேண்டுமானாலும் உபயோகிக்கலாம்.

வெளிச்சம் ஆனதும் எண்பது கஜக் கயிறுகளையும் அறுத்துப் பிணைக்கவேண்டும். இதனால் நானூறு கஜ நூலும் பல தூண்டில் முளைளும் நஷ்டமாகும். நஷ்டமானாலும் அவற்றை மறுபடியும் சம்பாதித்துக் கொள்ள முடியும்; இதைப் போன்ற இன்னொரு மீன் கிடைக்குமா? சிறு மீன்களுக்கு ஆசைப்பட்டு இந்தப் பெரிய மீனை இழப்பதா? இப்போது தூண்டிலைக் கவ்வியது என்ன மீனோ? தெரியவில்லை. சுருணையோ, அகல் வாயனோ, சுருவோ? யாருக்குத் தெரியும்? தெரிய நேரம் ஏது? அவசரமாக அதைத்தான் அறுத்துவிட வேண்டி இருந்ததே.

'அந்தப் பையனும் கூட இருந்தால்–'

மீன் ஒரு முறை சுண்டி இழுத்த இழுப்பில் கிழவன் குப்புற விழுந்துவிட்டான். கண்ணுக்கு அடியில் ஒரு கீற்றுக் காயம். கன்னத்தில் ரத்தம் வழிந்தது; மோவாய்க்கு வருமுன்பே அது உலர்ந்து உறைந்தது. தன் தோளில் இருந்த சாக்கை மெதுவாக நகர்த்திக் கயிற்றின் உறுத்தலை வேறு பகுதிக்கு மாற்றியபடி, படகின் பின் பலகையில் சாய்ந்து, கயிற்றின் சுண்டுதல்களையும் படகின் ஓட்டத்தையும் கவனமாய்க் கண்காணித்தான்.

அந்த மீன் ஏன் அப்படிக் குதித்தது? ஒருவேளை மலைபோன்ற அதன் முதுகில் கம்பி நூல் கிழித்துச் சறுக்கியதோ? எப்படி இருந்தாலும் சரி அது எவ்வளவு பெரிய மீனானாலும் சரி, முடிவில்லாமல் இந்தப் படகையும் இழுத்துக்கொண்டு அதனால் ஓடமுடியாது.

''மீனே, நான் சாகும்வரையில் உன்னை விடவே மாட்டேன்'' என்று கிழவன் சொல்லிக்கொண்டான்.

'அது சமாளிக்கும் வரையில் என்னாலும் சமாளிக்க முடியும்.'

படகு மெதுவாய் நகர்ந்துகொண்டிருந்தது. சூரியனின் விளிம்பு வெளிப்பட்டதும், வெளிச்சம் கிழவனின் வலத் தோள்மேல் அலைந்து விளையாடியது

'மீன் வடக்கு நோக்கிப் போகிறது. நீரோட்டம் கிழக்கு நோக்

கிச் செல்லவேண்டும். அந்த மீன் நீரோட்டத்தோடு போனால் நல்லது. மீன் களைத்துவிட்டதற்கு இது அடையாளமா யிருக்கும்.'

சூரியன் உதித்த பிறகும் மீன் களைத்ததாகத் தெரியவில்லை. இன்னும் நீரோட்டத்தின் குறுக்கே தான் நீந்தியது. ஒரே ஒரு நல்ல குறி: கயிறு சாய்ந்திருந்தது. எனவே, ஆழத்தை விட்டு மேலே மீன் வந்திருக்கவேண்டும்.

ஒருவேளை கயிற்றைக் கொஞ்சம் சுண்டி இழுத்தால், வலி எடுத்து அது துள்ளினாலும் துள்ளலாம். இப்போது - இந்தப் பகல் வெளிச்சத்தில்-அது துள்ளிக் குதிக்கட்டும்; அதன் முதுகுப்புறம் உள்ள செதில் பைகளில் காற்று நிரம்பட்டும். அப்புறம், அது சாவதற்காகக்கூட ஆழத்துக்குப் போக முடியாது.

கயிற்றை இழுக்க முயன்றான். ஆனால் தன் முதுகில் கயிற்று முறுக்கு நெறித்திருந்ததை உணர்ந்தான்; இதற்குமேல் இழுக்கலாகாது; தூண்டிலை அசைய விடக்கூடாது. அது அசைந்தால் தூண்டில் கயிறு அறுந்து போகும்; மீன் தப்பினாலும் தப்பி விடலாம். சூரியன் ஒளி சுகமா யிருக்கிறது. தூண்டில் கயிற்றில் கடலின் மஞ்சி நாணல் சுற்றிக்கொண் டிருக்கிறது. நல்லதுதான். நாணலால் கயிற்றின் கனம் அதிகமாகி யிருக்கிறது. இரவில் மின்னி மினுக்கியது இந்த நாணலே.

இப்போது வடக்கேயிருந்து சிறு பறவை ஒன்று படகை நோக்கிப் பறந்து வந்து, தூண்டில் கயிற்றின்மேல் உட்கார்ந்தது.

'கயிறு அசங்கவில்லை; கொஞ்சங்கூட அலுங்கவில்லை. காற்றில்லாத இரவுக்குப் பின் இந்தப் பறவை இவ்வளவு களைத்துப் போகலாமா? ஆனால் பருந்துதான் இதைத் துரத்துகிறதே!' என்று நினைத்தான்.

''சின்னச் சிட்டே, வேண்டுமானால் என் வீட்டில் வந்து தங்கு. ஆனால், பாய் விரித்து லேசான காற்றில் உன்னை அழைத்துச் செல்ல இந்த நேரம் வசதி இல்லையே!'' என்றான்.

அப்போது திடீரென்று அந்த மீன் விலுக்கென்று ஓர் இழுப்பு இழுத்தது. படகின் பலகை மேல் கிழவன் சாய்ந்தான்; சமாளித்துக் கொண்டு கயிறு விடாவிட்டால் கடலில் விழுந்தே இருப்பான்.

கயிறு அசைந்ததும் பறவை ஓடி விட்டது; கிழவன் அதைக் கவனிக்கவில்லை. வலது கையால் கயிற்றைத் தடவினான்; கையில் ரத்தம் வழிவதைக் கண்டான்.

''ஏதோ அதன் வலி அதிகமாகி இருக்கும்'' என்றான். முறுக்கு நெக்குவிடும் அளவுக்குக் கயிற்றை இழுத்தான். இனி இழுத்தால் கயிறு அறுந்துவிடும். இதே நிலையில் நிதானமாகச் சாய்ந்து காத்துக்கொண் டிருந்தான்.

'இப்போது உனக்கும் கஷ்டம்; கடவுள் சாட்சியாக எனக்கும் கஷ்டமாய்த்தான் இருக்கிறது'' என்றான்.

சுற்றுமுற்றும் பார்த்தான். பறவையைக் காணவில்லை. அதுவும் துணைக்குக் கூட இருந்தால் எவ்வளவு நன்றா யிருக்கும்?

தூண்டில் பாரத்தை இடது தோளுக்கு மாற்றிவிட்டு, அதி ஜாக்கிரதையாக மண்டியிட்டுப் பலகை மேல் சாய்ந்தான். காயம் பட்ட கையைத் தண்ணீரில் முழுக்கினான். ரத்தம் வழிந்தோடி உறைந்தது. படகு நகர நகர, தண்ணீரின் சலசலப்பு இதமாக இருந்தது.

''மீனின் வேகம் குறைந்து விட்டது.''

இன்னும் சிறிது நேரம் உப்பு நீரில் தன் கையை அமுக்கிக்கொண் டிருக்க அவனுக்கு ஆசைதான். ஆனால், அந்த மீன் மறுபடியும் விசும்பினால் என்ன செய்வது? எனவே எழுந்தான்; கையைச் சூரியனொளியில் உலர்த்தினான்.

கடல் பரப்பைக் கண்ணால் அளந்தான்; தன் தனிமையை உணர்ந்தான் கடலின் கரிய ஆழத்தில் கண்ணாடித் துண்டுகள்போல் ஒளி பளபளப்பதைக் கண்டான்; அசைவற்ற கடலின் அதிசயமான ஊஞ்சலாட்டத்தையும் உணர்ந்தான். மேகங்கள் கவிந்து பருவக்காற்றுத் தயாராகிறது; வான விளிம்பில்

மறைந்தும் வெளிப்பட்டும் காட்டு வாத்துக்கள் பறக்கின்றன.

கடல் நடுவில் கரைகாணுத சமயத்தில் சிலர் பயப்படுவது அவனுக்குத் தெரியும்; புயலடிக்கும் மாதங்களில் அந்தப் பயம் நியாயமே. ஆனுல், புயல் மாதங்களிலே வரும் புயலில்லாத நாள்தான் செம்படவர்களுக்கு ரொம்ப ரொம்ப நல்ல நாள்.

பல நாளைக்கு முன்பாகவே புயல் தன் வருகையை, வானப் பரப்பில் பல குறிப்புகளைக் காட்டி, அறிவித்துவிடும்; கடலில் இது சகஜம். கரையில் இருப்பவர்களுக்கு இது தெரிவதில்லை. 'அங்கேயும் மேகக் கூட்டங்களில் ஏதாவது மாறுதல் இருக்கத்தான் இருக்க வேண்டும். எப்படியாஞலும், இது புயல் வரும் நேர மல்ல' என்று எண்ணினுன்.

வானத்தில் வெண் மேகங்கள், உறை பனிப் படலங்களை அடுக்கியது போல் பரந்திருந்தன; அவற்றின் மேல் இழை முகில்கள் சிதறிச் சிலிர்த்தன.

''மென்மையான மேகப் பஞ்சிகள்! இந்தப் பருவ நிலை உன்னைக் காட்டிலும் எனக்கே அதிக உதவியானது'' என்று மீனிடம் கூறினுன்.

அவனுடைய இடது கை மரத்துப் போயிற்று. அவனை அறியாமலே மெதுவாய் விரல்களை விரித்துக்கொண் டிருந்தான். கைகால் மரத்துப் போவது அவனுக்குப் பிடிக்கவே பிடிக்காது. தன் உடலே தனக்குத் துரோகம் செய்வதாக நினைப்பான். அஜீர்ணத்தால் வாந்தி எடுப்பது மற்றவர்களுக்கு அருவருப்பா யிருக்கும்; தனிமையில் கைகால் பிடித்துக் கொள்ளுவதோ தன்னைத்தானே அருவருக்கச் செய்தது. பையன் இருந்தால் கையைப் பிடித்துவிட்டுச் சரிப்படுத்தி விடுவான்; இல்லை, அது தானுகச் சரியாகிவிடும்.

அப்போது தன் வலது கை கயிற்றை இழுப்பதையும், நீரில் அதன் சரிவு மாறுவதையும் உணர்ந்தான். முன் பக்கம் கயிற்றின்மேல் சாய்ந்தபடி இடது கையைத் துடையில் ஓங்கித் தட்டிக்கொண்டான். தூண்டில் வரி மேல்நோக்கி எழுந்தது.

'அது மேலே வருகிறது. கையே, சரியாகி விடு; தயாராக இரு.'

தூண்டில்வரி மெதுவாய் நிதானமாய் மேல் நோக்கி வந்தது. கடல் பரப்புப் பிதுங்கியது. மீன் வெளிப்பட்டது; இல்லை, வெளிப்பட்டுக் கொண்டே இருந்தது! அதன் முதுகிலிருந்து ஜலம் வழிந்தது. காலை ஒளியில் அதன் ஊதா நிற உடலும் தலையும் ஒளிவிட்டுப் பிரகாசித்தன. அகன்ற செம்மஞ்சள் செதில்கள் மினுமினுத்தன; பந்தடிக்கும் துடுப்புப் போல் பெரிதாய் நீண்டு க்ஷவரக் கத்தி அலகு போல் கூரான அதன் வாலும் வெளிப்பட்டது. இப்படி உடல் முழுவதையும் நீர் மட்டத்துக்கு மேல் தூக்கிய அது, நீர்மூழ்கி நிபுணர்களைப்போல் தலைகீழாகக் கவிழ்ந்து தண்ணீரில் மறுபடியும் ஆழ்ந்தது; தூண்டில் கயிறும் துண்ணென்று தோய்ந்து சரிந்தது.

'படகைக் காட்டிலும் இரண்டடி நீளமான மீன்!' என்று கிழவன் தனக்குள் கூறிக்கொண்டான். கயிறு வேகமாய்ச் சரிந்தாலும் நிதானம் தவறவில்லை; அந்த மீனும் பயப்படுவதாகத் தெரியவில்லை. கயிற்றை இரு கையாலும் பற்றி இறுக்கிப் பிடித்தான். இல்லாவிட்டால் கயிற்றை இழுத்துக்கொண்டு அது அறுத்தாலும் அறுத்துவிடும்.

'மிகமிகப் பெரிய மீன்; என் பலத்தை அது உணரும்படி செய்ய வேண்டும். அது தன் வலிமையை அறியக்கூடாது. நான் அந்த மீனுக இருந்தால் இப்போது என்ன செய்வேன்? கயிறு அறுந்தோ படகு உடைந்தோ போகும் வரையில் ஓடிக்கொண்டே இருப்பேன். ஆனுல், கடவுள் புண்ணியத்தால், அதைக் கொல்லும் மனிதனுக்கு உள்ள மூளை அதற்குக் கிடையாதே! என்ருலும் அது மேன்மையானதுதான்; பலவான்தான்.'

கிழவன் எத்தனையோ பெரிய மீன்களைப் பார்த்திருக்கிருன். ஆயிரம் பவுண்டு எடையுள்ள மீன்களையும் கண்டிருக்கிருன்; இரண்டைப்

பிடித்து மிருக்கிறான். ஆனால், தனியாக அல்ல. இப்போதோ கரை காணாத கடல் நடுவில், கண்டும் கேட்டு மிராத மிகப் பெரிய மீன் ஒன்றோடு தன்னந்தனியாய்ப் போராடுவ தென்றால் - அதுவும் அவனுடைய இடதுகை கழுகுக் கால்போல் மடங்கி முடங்கியிருக் கும்போது?

படகுப் பலகைமேல் சௌகரியமாய்ச் சாய்ந்து கொண்டான்; உடம்பு வலியைச் சமாளித்துக் கொண்டான். மீன் நிதானமாக நீந்தியது. கீழ் காற்றில் கடல்மேல் கடலாய்ச் சிறிது நுரை கக்கிக் கடல் கொந்தளித்தது. நடுப் பகலில் இடது கையின் மரப்பு நீங்கியது.

'மீனே, உனக்குக் கேடுகாலந் தான்!' என்று சொல்லித் தோளில் இருந்த சாக்குகளைச் சரிப்படுத்திக் கொண்டான்.

சௌகரியமா யிருந்தது; ஆனால் வலியும் குறையவில்லை.

'நான் பெரிய பக்திமான் அல்ல. என்றாலும் என் ஆண்டவரையும் கன்னி மேரியையும் பத்து முறை கூப்பிடத் தயார். இந்த மீனைப் பிடித்தே யாகவேண்டும். பிடித்தால் கோப்ரே கன்னியம்மன் கோவிலுக்கு யாத்திரை செய்வேன். இது சத்தியம்' என்று கூறிக்கொண்டான்.

மெதுவாகத் தோத்திரங்களை முணுமுணுத்தான் சோர்வினால் மறதி ஏற்படும்போது மந்திரங்களை வேகமாகத் தட்டிக்கொண்டு போவது அவனுடைய வழக்கம். கடவுளைக் காட்டிலும் கன்னி மேரியைக் கூப்பிடுவது சுலபமாக அவனுக்குத் தோன்றியது.

'கருணை நிறைந்த கன்னியம்மனே, வாழ்க! கடவுள் உன்னுடனே இருக்கிறார். பெண்களில் முதல்வியான பெண் தெய்வம் நீயே! உன் கருவில் உதித்த கனியான ஏசுவே, மனிதர்களில் புனிதமானவர். புண்ணிய மரியாத் தேவியே, கடவுளின் தாயே, பாவிகளாகிய எங்களுக்காக வாழ்விலும் மரணத்திலும் பிரார்த்தனை செய். ஆமென்!' என்றான். பின்னும், 'புனித கன்னியே, இந்த மீன் சாக வரம் கொடு - அதிசயமான மீனானாலும் இது சாகத்தான் வேண்டும்' என்று வணங்கினான்.

பிரார்த்தனையினால் துன்பம் தீரவில்லை; ஆனால் உடலுக்கும் மனசுக்கும் தெம்பு உண்டாயிற்று. படகுப் பலகையில் பதிவாகச் சாய்ந்தபடி இடது கை விரல்களை மடக்கிச் சொடுக்கினான். இளங்காற்று வீசினாலும் வெயிலும் அதிகமாயிருந்தது.

''படகின் முன்புறத்தில் அந்தச் சிறிய தூண்டிலைக் கண்ணி வைத்துக் கடலில் இடுவது நல்லது. இன்னும் ஓர் இரவு முழுவதும் இந்த மீன் என்னை ஏழாட்டங் காட்ட நினைத்துவிட்டால், உணவுக்கு என்ன செய்வது? புட்டியில் தண்ணீரும் குறைந்துவிட்டது! இங்கே கடல் பன்றியைத் தவிர வேறொன்றும் கிடைக்காது; அதைப் பிடித்த புதிசில் தின்றால் பரவாயில்லை. பறக்கும் வரால் கிடைத்தால் நல்லதுதான். அதைத் தருவிக்க என்னிடம் விளக்கில்லையே. அதைப் பச்சையாகவே தின்னலாம்; கூறு போட வேண்டிய அவசியங்கூட இல்லை. இப்போது என் பலத்தை யெல்லாம் சேமித்து வைக்கவேண்டும். ஏசுவே, இது இவ்வளவு பெரிய மீன் என்று நான் நினைக்கவேயில்லை. எவ்வளவு பெரிசானாலும் சரி, இதை நான் கொன்றே தீர்வேன்'' என்று தனக்குத்தானே கூறிக்கொண்டான்.

நியாயமோ, நியாய மில்லையோ? ஒரு தனி மனிதனால் என்ன செய்ய முடியும், எவ்வளவு தூரம் சமாளிக்க முடியும் என்பதை அந்த மீனுக்கு அறிவுறுத்தியே யாக வேண்டும்.

மாலை நேரமாகியும் படகு மெதுவாய், நிதானமாய் நகர்ந்து கொண்டே யிருக்கிறது. கீழ் காற்றில், படகின் அசைவில், அலையாட்ட மென்மையில், முதுகு வலிகூட லேசாவதுபோல் அவனுக்குத் தோன்றியது.

ஒரு தரம் தூண்டில் வரி மேலே கிளம்பியது; மீனும் கொஞ்சம் மேல் மட்டத்தில் நீந்தியது. மாலை வெயில் கிழவனின் இடது கையி

லும் தோளிலும் முதுகிலும் விளையாடியது. எனவே, மீன் வடகிழக்கே திரும்புகிறது என்று உணர்ந்து கொண்டான். ஒரு தரம் அந்த மீனைப் பார்த்துவிட்டான் அல்லவா? ஆகவே, கருங்கடலின் ஆழத்தில் இருட்டில் அகன்ற சிறகுகள்போல் விரிந்த ஊதாச் செதில்களோடும் நெட்டு நேரான வெட்டரிவாள் வாலோடும் நீரைக் கிழித்துக்கொண்டு அந்த மீன் செல்வதை, அவனால் கற்பனை செய்துகொள்ள முடிந்தது. அந்த ஆழத்தில் அதற்கு எவ்வளவு தூரம் கண் தெரிகிறது! அதைவிடச் சிறிய கண் உடைய குதிரைக்குக்கூட இருட்டில் நன்றாகக் கண் தெரியும். நான்கூட ஒரு காலத்தில் இருட்டில் நன்றாகப் பார்ப்பேன். ஆனால் கும்மிருட்டில் அல்ல; இள இருட்டில் பூனையைப்போல் என் கண்களுக்கு எல்லாம் தெரிந்தன.

சூரியனொளியாலும் சொடுக்கு விட்டதாலும் அவனுடைய இடது கையின் மரமரப்பு நேர் ஆயிற்று. கயிற்றுப் பாரத்தை மெதுவாய் அந்தக் கைமேல் போட்டுத் தோளைக் குலுக்கி முதுகு வலியை வேறிடத்துக்கு மாற்றிச் சரி செய்துகொண்டான்.

'மீனே, இன்னும் உனக்கு ஆயாசம் ஏற்படவில்லை என்றால், நீ விசித்திரமான மீன்தான்'' என்று உரக்கக் கூறினான்.

அவனுக்குச் சோர்வு மிகுந்துவிட்டது. சீக்கிரம் இரவு வந்துவிடும்; எனவே, வேறு விஷயங்களில் அவனுடைய நினைவு ஓடியது. பேஸ்பந்துப் பந்தயத்தை பற்றி எண்ணலானான். அப்போது நியூயார்க் 'யாங்கி'களும் டெட்ராயிட் 'டைகர்'களும் போட்டியிட்டு விளையாடுகிறார்கள் என்பது அவனுக்குத் தெரியும்.

'பந்தய முடிவுகளைக்கூடத் தெரிந்து கொள்ளாமல் நான் காலங் கழிப்பது இதுதான் முதல் தடவை. இரண்டு நாள் பொழுது போய்விட்டது. போனால் என்ன? நம்பிக்கை வேண்டும். குதி முள்ளின் குத்துவலியையும் பொறுத்துக்கொண்டு பந்தாட்டக்கார டிமேக்கியோ தன் கடமையைச் சிறப்பாகச் செய்யவில்லையா? குதிமுள், என்ன, சண்டைக் கோழியின் தலையில் கட்டியுள்ள குத்துமுள் போன்றதா? கோழியைப்போல் குத்துமுள்ளுடன் ஒரு கண்ணிழந்து - சில சமயத்தில் இரு கண் பார்வையையும் இழந்து - என்னால் சமாளித்துச் சண்டையிட முடியுமா? பெரிய பறவைகளையும் விலங்குகளையும் ஒப்பிடும்போது, மனிதன் அல்பமானவன். ஆழத்தில் உள்ள அந்த மீனாக நான் இருக்கக் கூடாதா?'

''சுறா மீன் வந்தால், கடவுள்தான் என்னையும் என் தூண்டில் மீனையும் காப்பாற்ற வேண்டும்'' என்றான் உரக்க.

மியாமி செல்லும் ஆகாய விமானம் ஒன்று மேலே பறந்தது; அதன் நிழல் விழுந்து வரால் மீன்களை விரட்டியது.

'ஆகாய விமானம் விசித்திரமாய்த்தான் இருக்கும். அதில் இருந்து பார்த்தால் கடல் என்னமாய்த் தோன்றுமோ? அதிக உயரத்தில் பறக்கவிட்டால் இந்த மீன்கூட நன்றாய்த் தெரியலாம்.'

இருட்டுமுன் தீவு போன்ற ஒரு நாணல்பரப்பைப் படகு கடந்தது. கதிரொளியில் கடல் ஆடி அசைந்து பெருமூச்சு விட்டது; மஞ்சள் நிறப் போர்வை அணிந்த எதனோடோ அது காதல் செய்வது போல் தோன்றியது. அப்போது கிழவனின் சிறிய தூண்டிலில் ஒரு கடல் பன்றி மீன் சிக்கியது. ஆகாயத்தில் எறித் துள்ளிக் குதித்தபோதுதான், அதைக் கிழவன் முதல் முதலாகக் கண்டான். கதிரவனின் கடைசி ஒளியில் கனக மயமாய் அது பளபளத்தது. பயத்தால் துள்ளித் துடித்துக் கரணம் போட்ட அதன் கரடி வித்தைகள் பரிதாபமாயிருந்தன. வலது கையால் பெரிய மீன் கயிற்றைத் தாங்கியபடி மெதுவாய்ப் படகின் முன் பக்கம் சென்று, இடது கையால் சிறிய தூண்டில் கயிற்றை இழுத்துச் சேந்தினான் கிழவன்; இழுத்த கயிற்றைத் தன் இடது வெற்றுக் காலால் அமுக்கிக் கொண்டான். படகுப் பலகை விளிம்புக்கு அந்த

மீன் வந்தது; துடிதுடித்துத் துள்ளியது; அப்படியும் இப்படியுமாக அலேந்தது. கிழவன் முன்புறம் சிறிது சாய்ந்தான். கருநீலப் புள்ளிகள் கூடிய தங்க மயமான அதை எடுத்துப் படகில் போட்டான். அது தூண்டில் கொக்கியைக் கடித்துக் கடித்துப் படகுப் பலகையைத் தன் தட்டையான உடலால் தட்டித் தட்டிக் குதித்துக் குதித்துப் பதைத்தது. தடியால் அதன் தலேயில் அடித்து அவன் அதைக் கொன்ருன். உலுக்கி நடுங்கி ஓய்ந்தது மீன்.

கிழவன் கொக்கியிலிருந்து மீனே விடுவித்து விட்டு அதில் மற்ருெரு சுநீரத்தை மாட்டிக் கடலில் விட்டான். பிறகு, மெதுவாகப் படகின் பின்புறம் தன் பழைய இடத்துக்கு நகர்ந்தான். இடது கையை அலம்பிக் கால்சட்டையில் துடைத்துக் கொண்டான். பெரிய மீன் தூண்டிலே இடது கைக்கு மாற்றி விட்டு வலது கையையும் கடல் நீரில் அலம்பினுன். அப்போது சூரியன் கடல் வாயில் முழுகியது; தூண்டில் வரியும் மேலாகச் சரிந்தது.

''அது சிறிதும் மாறவில்லே'' என்ருன். நீரோட்ட வேகம் குறைந்திருப்பதைத் தன் கையலேப் பால் உணர்ந்தான்.

''துடுப்புக்களேத் தண்ணீரில் விட்டுக் கட்டிவிட்டால், படகின் வேகமும் மீனின் வேகமும் குறையும். இந்த இரவைக் கழிக்க நானும் தயார்'' என்று கூறிக் கொண்டான்.

'கடல் பன்றியைச் சிறிது நேரங் கழித்துக் கூறுபோடலாம். ரத்தம் அதன் தசைகளில் ஊறி உறையட்டும். கொஞ்ச நேரத்துக்கு அப்புறம் அதைக் கூறு போடும்போதே துடுப்புக்களேயும் அசைய விடலாம். இப்போது பெரிய மீனேத் தொந்தரவு செய்யக் கூடாது; அஸ்தமன சமயம் மீன்களுக் கெல்லாம் அவஸ்தையான நேரமே.'

தன் கைகளேக் காற்றில் உலர்த்திஞன்; தூண்டிலேப் பற்றியபடி படகுப் பலகையின் வளேவில் முன் நோக்கச் சௌகரியமாகச் சாய்ந்து கொண்டான். இந்த நிலேயில் தூண்டிலின் பாரத்தில் பெரும் பகுதியைப் படகே தாங்கியது.

'எனக்குத் தெரிந்துவிட்டது; எப்படித் தூண்டிலின் சுமையைக் குறைப்பதென்று கண்டு பிடித்து விட்டேன். தவிர, மற்ருெரு விஷயம்: சிக்கினது முதல் அந்த மீன் ஒன்றும் சாப்பிட வில்லே. அதுவோ பெரிய மீன்; அதற்கு நிறைய ஆகாரம் வேண்டும். நான் நாளே இந்தக் கடல் பன்றியைச் சாப்பிடுவேன். அதைச் சுத்தம் செய்யும்போது கொஞ்சம் ருசி பார்க்க வேண்டும்; அது கடிப்பதற்குச் சிறிது கடினமானதே; ஊம்! . . உலகத்தில் எதுவும் சுலபம் அல்ல.'

இப்போது இருட்டிவிட்டது. ஸெப்டம்பர் மாதம் மாலே நேரத்தில் இப்படித்தான் சீக்கிரமாக இருட்டிவிடும். படகுப் பலகையில் சாய்ந்தபடி ஓய்வெடுத்துக்கொண்டான். முதல் முதலாக வானில் வரும் நட்சத்திரங்கள் தெரியத் தொடங்கின. பெயர் தெரியாவிட்டாலும் 'ம்ருக' நட்சத்திரத்தைக் கண்டுகொண்டான்; சீக்கிரமே தன் தூரத்து நண்பர்களான மற்ற நட்சத்திரங்களும் வெளிப்பட்டு விடும் என்று அவனுக்குத் தெரிந்துவிட்டது,

'இந்த மீனும் என் நண்பனே. இதைப் போன்ற பெரிய மீனே நான் பார்த்தது மில்லே. இதைப் பற்றிக் கேட்டது மில்லே. ஆனுல், இதை நான் கொன்றே தீர வேண்டும்.'

மீன் பட்டினியாக இருப்பதை நினேக்க அவனுக்கு வருத்தமாய்த் தான் இருந்தது; ஆனுல், இந்த வருத்தத்துக்கும் அவன் இதைக் கொல்லப் போவதற்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது. இந்த மீனின் இறைச்சி எத்தனே பேருக்கு உணவாகும்? இதைத் தின்பவர் தின்னத் தகுதியுள்ளவரா? இல்லே, நிச்சயமாக இல்லே; இதன் நடவடிக்கையையும் பெருந் தன்மையையும் பார்க்கும்போது, இதைத் தின்ன லாயக்கானவர் யாருமே இல்லே.

இனித் துடுப்புக்களே இணைத்து விட்டுப் படகின் வேகத்தைக்

குறைக்க வேண்டும். அதனால் நன்மையும் உண்டு, கெடுதலும் உண்டு. கயிற்றின் நீளம் அதிகமானால் மீன் தப்பிவிடலாம்; படகின் கனம் அதிகரித்தால் கயிறு அறுந்து விடலாம். படகு கனமில்லாததாலேயே அது வேகமாகப் போகிறது - அதனால் என் துன்பமும், அதன் துன்பமும் அதிகமாய் நீடிக்கிறது.

''கிழவா, நீ தூங்கவே இல்லையே! பாதி நாள் - முழு இரவு - மற்றொரு நாளும் வந்து விட்டது; இன்னும் நீ சரியாகத் தூங்கவில்லையே! மீன் நிதானமாக ஓடும்போது நீ கொஞ்சம் உறங்கத்தான் வேண்டும்; தூக்கம் இல்லாவிட்டால் மூளை தெளிவாக இராது'' என்று தனக்குத்தானே கூறிக் கொண்டான்.

வலது கையால் தூண்டிலைப் பிடித்து வலது துடையில் படிய விட்டுக் கயிற்றைத் தோளில் தாழச் சரிய வைத்து இடது கை விரல்களால் மூடிக்கொண்டான்.

'இடது கை மூடிய கயிறு நழுவாமல் என் வலது கை பார்த்துக் கொள்ளும்; தூக்கத்தில் இடதுகை அயர்ந்துவிட்டால், வலது கை வழியே நழுவும் கயிறு என்னை எழுப்பிவிடும். அரை மணி அல்லது இருபது நிமிஷ நேரம் தூங்கினாலும் போதும்.

உடனே ஒருக்களித்துப் பலகையில் சாய்ந்து படுத்துப் பாரம் முழுவதையும் வலது கைமேல் போட்டுவிட்டுக் கிழவன் உறங்கலானான்.

அவன் சிங்கங்களைப் பற்றிக் கனவு காணவில்லை; எட்டு அல்லது பத்து மைல் நீளம் பரவிய ஒரு கடல் முள்ளிக் கும்பல் தீவைப் பற்றிக் கனவு கண்டான். அவை காதல் புரியும் காலம் அது; எனவே, காற்றில் எகிறிக் குதிக்கும் கடலில் கிளம்பிய சுழியிலேயே மறுபடியும் அவை வந்துவிடும்.

அடுத்தபடியாகக் கனவில் நீண்ட மஞ்சள் நிறக் கடல் கரையைக் கண்டான். கரை வந்துவிட்டது அல்லவா? தவிர, இருள் எட்டிப் பார்க்கும் சமயம். எனவே, வரி வரியாகச் சிங்கங்கள் வெளிப்பட்டன. கப்பல் பலகையில் கன்னத்தை வைத்துக் கிழவன் படுத்துக் கொண் டிருந்தான். கரைக் காற்று ஜில்லென்று வீசியது; இன்னும் வரும் சிங்கங்களை எதிர்பார்த்து அவன் மனம் இன்பமுற்றது.

சந்திரன் உதித்து வெகு நேரமாயிற்று; மீனும் நிதானம் தவறவில்லை; படகும் ஒழுங்காக ஓடி ஒரு மேகமுழைவில் புகுந்தது. அவனுடைய தூக்கம் இன்னமும் கலையவில்லை.

வலது கை அவன் முகத்தைத் தொட்டது; ஏதோ இழுப்பாட்டம்! அவன் விலுக்கென்று விழித்துக் கொண்டான். வலது கையில் ஒரே எரிச்சல். அப்போது இடது கையின் ஞாபகமே அவனுக்குக் கிடையாது; வலது கையாலேயே கயிற்றை இழுத்துப் பிடித்தான். கடைசியாக இடது கை உதவிக்கு வந்தது. இப்போது தூண்டிலுக்கு எதிர்ப்புறம் சாய்ந்தான். முதுகிலும் இடது கையிலும் ஒரே எரிச்சலா யிருந்தது. பாரம் முழுவதும் இடது கையில் இருந்ததால், அது கிழிபட்டுக் கீற்றுக் காயம் ஏற்பட்டது. கயிற்றைக் கவனித்தான்; அது ஒரே சீராக நழுவியது. இந்தச் சமயம் கடலைப் பிளந்துகொண்டு மீன் எப்படியோ குதித்தது, மறுபடியும் கடலில் ஆழ்ந்தது. மறுபடியும் மறுபடியும் இப்படியே குதித்தது. அவனும் திரும்பத் திரும்பக் கயிற்றை இழுத்திழுத்து வலித்தான். படகு வேகமாகவே போயிற்று. கயிற்றின் கனம் கிழவனைக் கீழே தள்ளிவிட்டது. அவன் குப்புற விழுந்தான்; அவனால் அசையக்கூட முடியவில்லை.

''இதற்காகத்தானே காத்திருந்தோம்; எப்படியாவது இப்போது சமாளித்தாக வேண்டும். கயிற்றின் விலையை அதுதான் தரவேண்டும்; தரட்டும்'' என்று முணுமுணுத்தான்.

கயிறு நழுவிக்கொண்டுதான் இருந்தது; ஆனால், அதன் வேகம் குறைந்துவிட்டது; கயிற்றை வலித்து ஒவ்வோர் அங்குல நீள நெகிழ்வுக்கும் அந்த மீன் தன் முழுப் பலத்தையும் உபயோகிக்

கும்படி கஷ்டப்படுத்தினுன். படகுப் பலகையில் இருந்த தலையை மெதுவாகத் தூக்கினுன். மண்டியிட்டு உட்கார்ந்தான். மெதுவாய் எழுந்தான். கொஞ்சங் கொஞ்சமாகக் கயிறு விட்டான்.

''ஆம். அது ஒரு டஜன் தடவை யாவது எம்பிக் குதித்திருக்கும்; அதன் செதில் பைகளில் பெரிதும் காற்றுப் புகுந்திருக்கும். எனவே, எனக்கு எட்டாத ஆழத்துக்குச் சென்று அது சாக முடியாது. சீக்கிரமே அது சுற்ற ஆரம்பித்து விடும். அதற்கு நான் தயாராக இருக்க வேண்டும். ஏன் அது திடீரென்று துள்ளிக் குதித்தது? பசியாலா? இருட்டில் எதையோ கண்ட பயத்தாலா? பயமாய்த் தான் இருக்கும். மிகவும் திறமையான, வலிவான, தைரியமான மீனுயிற்றே - அதற்கும் பயம் உண்டாவது ஆச்சரியந்தான். கிழவனே, தைரியத்தையும் நம்பிக்கையையும் இழக்காதே. நீ அதைப் பிடித்துக்கொண்டு விட்டாய். இன்னும் கொஞ்சம் கயிறு தேவைதான்; என்றுலும், அது சீக்கிரம் சுற்ற ஆரம்பித்து விடும்'' என்று தனக்குத் தானே கூறிக்கொண்டான்.

அருணேதயத்துக்கு முந்திய அசட்டு வெளிச்சம் பரவியது. மீன் கிழக்கு நோக்கிச் செல்லுகிறது. எனவே, அது ஓய்ந்து விட்டது; நீரோட்டத்துக்கு ஏற்ற படி மிதக்கிறது.

இதோ சூரியன் உதித்து விட்டது; மீனும் சுற்ற ஆரம்பித்துவிட்டது. மீன் சுற்றுவதால் கயிறு சரிவதை அவனல் காண முடியவில்லை; அது தெரிய இன்னும் சற்று நேரம் ஆகலாம். ஏதோ கயிறு தளர்வதைப்போல் இருந்தது. வலது கையால் வலித்திழுத்தான். கயிறு விறைத்தது. அறுந்து விடுமோ என்று தோன்றிய தருணத்தில் நல்ல வேளையாகத் தளர்ந்து சுருண்டு சுருணையில் படிந்தது. கயிற்றை முதுகிலிருந்து கழற்றி மெதுவாய் இழுத்தான். இரு கைகளையும் ஆட்டி ஆட்டி உடலாலும் காலாலும் இந்த வேலையைச் சமாளிக்க முயன்றுன். அவனுடைய பழங்கால்களும் உடலும் கயிற்றூஞ்சலின் கனத்தைத் தாங்கின.

''பெரிய வட்டமே! என்றுலும் வட்டாட ஆரம்பித்து விட்டதே; அதுவே போதும்'' என்றுன் கிழவன்.

கயிறு இறுகி மேலே வர மறுத்தது; அதன் முறுக்கிலிருந்து சிதறிய நீர்த்துளிகள் வெயிலில் மினுமினுத்தன. கொஞ்ச நேரத்தில் கயிறு நழுவ லாயிற்று; அவனும் மனமில்லாமல் சிறிது சிறிதாக விட்டுக் கொடுத்தான்.

இரண்டு மணி நேரம் கழிந்தது; மீன் மெதுவாகச் சுற்றிக்கொண்டேயிருந்தது. கிழவனின் உடலெல்லாம் வியர்த்து விறுவிறுத்தது; உள்ளூற எலும்பு முதலாய் வலி எடுத்தது. ஆனல், வட்டம் சிறுத்துக்கொண்டு வருகிறது; மீனும் மேலாக மிதக்கிறது; கயிற்றிலும் சாய்வு அதிகமாகிறது.

அவன் கண்ணுக்கெதிரில் கரும்புள்ளி செம்புள்ளி தோன்றின. அவன் கண்ணையும், கண்மேலும் நெற்றியிலும் உள்ள காயங்களையும், வியர்வை உறைந்து உப்பாகி உறுத்தியது கரும்புள்ளிகளைப்பற்றி அவன் கவலைப்படவில்லை; பெரிய கனத்தை இழுக்கும்போது அது சகஜமே. ஆனல், இருமுறை தலை சுற்றி மயங்கியது; அதுதான் அவனைக் கஷ்டப்படுத்தியது.

'தோல்வியுற்று, ஒரு மீனுக்காக நான் சாவதா? அதுவும் மெதுவாக அது மேலேவரும்போது! கடவுளே, காப்பாற்று. நூறு முறை ஆண்டவனின் நாமத்தை ஜபிப்பேன், ஆனல், இப்போது முடியாது' என்றுன்.

'நினைவிருக்கட்டும், அப்புறம் ஜபம் செய்யவேண்டும்.'

மீன் பல முறை கம்பிக் கயிற்றை உலுக்கித் துள்ளியது; ஒவ்வொரு முறையும் அவனும் கொஞ்சங் கொஞ்சம் கயிற்றைத் தளரவிட்டான்.

சிறிது நேரத்துக்கு அப்பால் மறுபடியும் மீன் வட்டமிட லாயிற்று; அவனும் கயிற்றை இழுத்துப் பிடிக்கலானன். தலை கிறுங்கியது. கடல் நீரைத் தலையிலும் கழுத்திலு

மாகத் தெளித்துத் தேய்த்துக் கொண்டான்.

ஒருபோதும் இல்லாத களைப்பு ஏற்பட்டது; பருவக்காற்று வீசியது. இது நல்லதுதான்; காரியம் முடிந்து கரை திரும்பத் தேவையானதே.

அவனுடைய வைக்கோல் தொப்பி பின்புறம் சரிந்திருந்தது. அதனுடன் படகுப் பலகைமேல் சாய்ந்தான்.

'சுற்று; மீனே, சுற்று. திருப்பத்தில் உன்னைப் பிடிப்பேன்' என்று நினைத்தான். கடல் எழும்பியது; அலையலைத்தது. கரைப் பக்கமாய்க் காற்றடித்தது. 'தெற்கும் மேற்குமாய்ப் படகைச் செலுத்துவேன். கடலில் பயமே கிடையாது. அது ஒரு தண்ணீர்த் தீவு - அவ்வளவே' என்றான்.

மூன்றாவது சுற்றில் வெகு நேரத்துக்குப்பின் முதல்முதலாக மீனைக் கண்டான்; அது ஒரு சுரு நிழல் போலப் படகைத் தாண்டியது; தாண்ட நீண்ட நேரமாயிற்று; அதன் நீளத்தை அவனால் நம்ப முடியவில்லை.

''இல்லை, அது இவ்வளவு பெரிசாய் இருக்க முடியாது!''

ஆனாலும், மிகப் பெரிய மீனேதான்; அந்தச் சுற்று முடிந்ததும் அது வெளிப்பட்டது. முப்பது கஜ தூரத்தில் வெட்டரிவாள் போன்ற அதன் கூரான வாலைக் கண்டான். கடலின் கருநீலப் பரப்பின்மீது செம்மஞ்சள் கீறலான அதை அவன் கண்டான். நீர் மட்டத்துக்கு அடியில் மீனின் பருத்த உடலின் ஊதா வரிகள் நன்றாகத் தெரிந்தன. முதுகுச் செதில்கள் அடங்கிக் கிடந்தன; பக்கச் செதில்கள் சிறகுகளைப்போல் விரிந்திருந்தன.

அடுத்த சுற்றில் அதன் கண்கள் தெரிந்தன; உறிஞ்சு மீன் குஞ்சுகள் இரண்டு அதைச் சுற்றி நீந்தின. ஒட்டியும் ஒட்டாமலும் அதன் உடல் நிழலில் அவை சஞ்சரித்தன. ஒவ்வொரு மீன் குஞ்சும் மூன்றடி நீளமுள்ள விலாங்கைப் போல் தோன்றியது.

அவன் உடல் வேர்த்தது - வெப்பத்தால் அல்ல, மீன் வட்டமிட வட்டமிடக் கயிற்றை வலித்ததால்தான். இரண்டொரு சுற்றில் அதன் உடலில் ஈட்டியைப் பாய்ச்சி விடலாம்.

அது நெருங்கி நெருங்கிப் பின்னும் நெருங்கி வரவேண்டும்; ஈட்டிக்கு அதன் தலை சிக்கினால் போதாது, இதயம் சிக்கவேண்டும்.

மற்றொரு சுற்றில் அதன் முதுகு வெளிப்பட்டது. ஆனால், தூரத்தில்தான் இருந்தது. என்றாலும் நீர் மட்டத்துக்கு மேலேயே வந்துவிட்டது. கயிற்றைச் சுருக்கச் சுருக்க அது படகின் பக்கத்தில் வந்துவிடும்.

முன்பே ஈட்டி தயாராயிருந்தது. ஈட்டிக் கயிற்றை ஒரு வட்டக் கூடையில் வளையமிட்டு, நுனியைப் படகுக் கொக்கியில் மாட்டியிருந்தான்.

மீன் வட்டாடிய வட்டம் குறுகியது; அழகான அதன் வால் மட்டும் அமைதியாய் நெளிந்தது. கிழவன் தன்னாலான மட்டும் கயிற்றைச் சுருக்கி இழுத்துப் பிடித்தான். ஒரே ஒரு கணம் மீன் கொஞ்சம் புரண்டது. அடுத்த கணம் சமாளித்துக்கொண்டு மறுபடியும் வட்டமிட ஆரம்பித்தது.

'நான் அதை அசைத்துவிட்டேன் - அசைத்தே விட்டேன்' என்று தனக்குத்தானே கிழவன் கூறிக்கொண்டான்.

ஆனால், எவ்வளவு இழுத்தும் பயனில்லை. மீன் சிறிது கவிழ்ந்தது; என்றாலும், சமாளித்துக்கொண்டு அப்பால் நீந்தியது.

''மீனே, நீ சாவதென்னவோ நிச்சயம்; நானும் சாக வேண்டுமா?'' என்றான் கிழவன்.

இப்படியே போனால் எதுவும் நடக்காது. நாவுலர்ந்து அவனால் பேசக்கூட முடியவில்லை; தண்ணீர்ப் புட்டியை எட்டி எடுக்கவும் வசதியில்லை. இந்த முறை அதை எப்படியும் படகின் பக்கத்துக்கு இழுத்தாக வேண்டும். 'இன்னும் என்னால் தாங்க முடியாதா? நானா? எப்போதும், எதையும் தாங்குவேன்.'

அடுத்த சுற்றில் அநேகமாக வெற்றியேதான். ஆயினும் மீன் என்னவோ தப்பிவிட்டது.

பழையபடியே இரண்டு சுற்றுக்கள் கழிந்தன.

'எனக்குத் தெரியவில்லை! ஒவ்வொரு தடவையும் இனிமேல் தாளாது என்று தோன்றுகிறது - ஊம்...இன்னும் பார்ப்போம்.'

அடுத்து முயன்றான். மீனும் புரண்டது; ஆனால் ஒரு விலுக்கில் மறுபடியும் தப்பித்துக் கொண்டு, வாலாட்டி நகர்ந்தது. 'திரும்பவும் பார்ப்போம்' என்று உறுதி செய்து கொண்டான். அவன் கைகள் ரத்தக் களறியா யிருந்தன; பார்வையும் விட்டுவிட்டு மினுக்கியது.

மறுபடியும் முயன்றான்; மறுபடியும் மீன் தப்பியது. மறுபடி, மறுபடி, வலியை முற்றும் மறந்து, தன் பலத்தையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து, தற்பெருமையையும் தன்னம்பிக்கையையும் கலந்து ஒரே மூச்சில் மீனை இழுத்தான். மீனும் படகின் பக்கத்தில் மெதுவாக நீந்தலாயிற்று; அதன் அலகு படகில் பட அதைத் தாண்டிச் செல்ல முயன்றது. பெரிதாய், நீளமாய், அகலமாய், ஊதாப் பட்டைகளிட்ட வெண் குன்று போல், மெதுவாய், முடிவில்லாமல் நகர்ந்து சென்றது.

தூண்டில் கயிற்றைக் கீழே போட்டு, காலால் மிதித்துக் கொண்டு, ஈட்டியைத் தூக்கி, மீன் செதிலின் கீழ்ப் பலங் கொண்ட மட்டும் ஆழமாகப் பாய்ச்சினான். ஈட்டியின் இரும்பு முனை அதன் உடலில் புகுந்ததை உணர்ந்தான். ஈட்டிமேல் சாய்ந்து, தன் வலிமையை யெல்லாம் சேர்த்து, அதைப் பின்னும் பின்னும் உள்ளே செல்ல அழுத்தினான்.

உடனே மீன் உயிரோடு கிளம்பியது; அதன் கண்களிலே சாவின் வெறி இருந்தது. அது கடலை விட்டுக் காற்றில் மிதந்தது; அகலமும் நீளமும் பருமனும் நன்றாய்த் தெரியக் கிழவனின் தலைக்குமேல் சுழன்றது; அடுத்த கணம் ஒரே ஆரவாரத்தோடு ஆழத்தில் அமுங்கியது. வெண்ணுரை வெள்ளம் கிழவனையும் படகையும் மூடிக் கொண்டது.

கிழவனுக்குத் தலை சுற்றியது; கண் மங்கியது. எப்படியோ ஈட்டிக் கயிற்றை விரல் இடுக்கால் மெதுவாய் நீளவிட்டான். மீனும் மல்லாந்து மிதந்தது. அதன் வெள்ளி வயிறு மின்னி மினுக்கியது. மீனின் மார்பிலிருந்து ஈட்டிமுனை வெளிப்பட்டது; அதன் இதய ரத்தம் கடலையே சிவப்பாக்கியது. முதலில் ஒரு மைல் ஆழத்துக்கு ஒரே கறுப்பாயிருந்து, பிறகு மேகங்கள் போல் சிவந்து பரவியது.

கண்ணால் கண்டதைக் கிழவன் உன்னிப்பாய்க் கவனிக்கலானான்; ஈட்டிக் கயிற்றைச் சுற்றிப் படகில் மாட்டினான்; கைகளில் தலையைக் கவிழ்த்தான்.

'தலையே, தெளிவோடு இரு' என்று படகுப் பலகையை நோக்கியபடி சொன்னான்: 'நானோ ஓய்ந்து போன ஒரு கிழவன்; இருந்தாலும் என் சகோதரனான இந்தப் பெரிய மீனைக் கொன்றுவிட்டேன். இனி அடுத்த வேலையைச் செய்தாக வேண்டும்.'

இப்போது அதைப் படகுக்கு இழுக்கக் கயிறுகளையும் கண்ணிகளையும் தயார் செய்ய வேண்டும். இரண்டு பேர் சேர்ந்து இழுத்துப் போட்டாலும், இந்த மீனுக்கு இந்தப் படகில் இடம் போதாது. ஆம், எல்லாவற்றையும் தயார் செய்து கொண்டு, மீனைப் படகிலே பிணைத்து இழுத்துக் கட்டிவிட்டு, வீடு திரும்பப் பாய்மரம் விரிக்க வேண்டும்.

மீனை அருகில் இழுத்தான். அதன் வாயிலும் மூக்கிலும் கயிறுகளைக் கோத்துப் படகோடு வலிந்து கட்டினான். அதைக் கண்ணால் காண வேண்டும், தொட்டுப் பார்க்க வேண்டும் என்றெல்லாம் விரும்பினான். ''இதுவே என் அதிருஷ்ட மீன்; என் கை பட்டால் என் அதிருஷ்டம் மாறினாலும் மாறிவிடலாம். ஈட்டியால் குத்தும் போதே இதன் இதயத் துடிப்பை நான் உணர்ந்துவிட்டேன். அது போதும். இப்போது இதன் வாலையும் தலையையும் உடலையும் படகோடு படகாய்ச் சேர்த்துக் கட்டுவதுதான் முக்கியம். வேலை செய், கிழவனே! வேலை செய்! போர்

தீர்ந்தது; புழுக்கை வேலைதான் பாக்கி'' என்று சொல்லிக் கொண்டே, ஒரு வாய் தண்ணீரைக் குடித்தான்.

வானையும் பார்த்தான், மீனையும் பார்த்தான். நடுப்பகல் கழிந்து விட்டது; காற்று அதிகரித்தது. கயிறுகள் போனால் கவலையில்லை. வீட்டுக்குச் சென்றதும் பையனும் கிழவனுமாக இதைக் கூறுபோடலாம்.

'வா, மீனே!'

மீன் வரவில்லை; சும்மா மிதந்தது. எனவே, படகை அதனிடம் செலுத்தினன்.

பக்கத்தில் வந்ததும் அதன் பருமனைப் பார்த்துத் திகைத்தான். ஈட்டிக் கயிற்றை அவிழ்த்து ஒரு மூக்கிலும் வாயிலும் கோத்துத் தாவாய்க் கட்டை வழியாய் இழுத்து வாலைச் சுற்றி இணைத்து மறுமூக்கில் கோத்துப் படகோடு கட்டினன். பின்பு கயிற்றை அறுத்து அதன் வாலைக் கட்ட அப்புறஞ் சென்றான். மீனின் ஊதா நிறம் இப்போது வெளுத்த ஊதா நிறமாய்த் தெரிந்தது; உடல் வரிகள் வாலின் மங்கிய கரு நீலம் போலவே வெளிறித் தோன்றின. விரல் விரிந்த கையகலத்துக்கு அந்த வரிகள் மின்னின. மீனின் கண்கள் கண்ணாடிபோல் பளபளத்தன.

''இப்படித்தான் அதைப் பிடித்திருக்க முடியும்? வேறு வழியில்லை'' என்றான். தண்ணீர் குடித்தபின் தலைச் சுற்று நின்றுவிட்டது. இது ஆயிரத்தைந்நூறு பவுண்டு எடை இருக்கும் - அதற்கு மேலும் இருக்கலாம். பவுண்டுக்கு முப்பது சதமாக - ?

வாலையும் தலையையும் கட்டிய பின் இப்போது உடலையும் சேர்த்து இறுகக் கட்டினன். அது ஒரு பெரிய படகை ஒரு சிறிய படகோடு கட்டுவதுபோல் இருந்தது. ஜலம் புகாதபடி அதன் வாயை மூடித் தைத்தான். பாய் மரத்தை நிறுத்தி விரித்தான். கரை நோக்கிப் படகு மெதுவாய்ச் சென்றது; கிழவன் சற்றுச் சாய்ந்து படுத்தான்.

தென் மேற்கு எது என்று அறிய அவனுக்குக் காந்த ஊசி தேவையில்லை; பாய் விரிய மோதும் காற்றும் படகின் போக்கும் போதும்.

ஒரு கடல் நாணல் புதரை ஈட்டியால் எடுத்துக் குத்திப் படகில் போட்டு உலுக்கினன்; அதில் ஒட்டியிருந்த சின்னஞ்சிறு மீன்கள் பத்துப் பன்னிரண்டு கீழே உதிர்ந்தன. ஈக்களைப்போல் அவை தத்திக் குதித்தன. விரலால் அவற்றின் தலையைக் கிள்ளி எறிந்துவிட்டு உடலை உண்டான்.

புட்டியில் இன்னும் இரண்டு வாய் தண்ணீர் இருந்தது; அயிரையைத் தின்றதும் அரை வாய் ஜலம் குடித்தான். பாரம் மிகுந்திருந்தாலும் படகு சரியாகப் போய்க்கொண் டிருந்தது; அவனும் சுலபமாகவே துடுப்பு வலித்தான்.

படகும் மீனும் பாங்காக நீந்தின. கிழவன் கைகளை உப்பு நீரில் துவளவிட்டான். அவன் மனம் தெளிவா யிருந்தது. வானில் மேகங்கள் புரண்டு திரண்டு வெண் பூச் சிதறியதுபோல் தோன்றின. எனவே, இரவு முழுவதும் நல்ல காற்று வீசும். அவன் அடிக்கடி மீனைப் பார்த்தான்; காண்பது கனவல்ல என்று நிச்சயம் செய்து கொண்டான். இதெல்லாம் அந்தச் சுறு மீன் வருவதற்கு ஒரு மணி நேரத்துக்கு முன்னலே.

அது தெய்வாதீனமாய் வந்ததல்ல; ஒரு மைல் ஆழத்துக்குக் கரு ரத்தம் தோய்ந்து பரவியதைக் கண்டு, அந்த ரத்தக் கவிச்சை மோந்துகொண்டே படகைத் தொடர்ந்து வந்தது. வெகு வேகமாக எதிர்பாராத வகையில் மினுமினுத்துப் பிறகு மறுபடியும் மூழ்கி மீனையும் படகையும் தொடர்ந்தது.

மிகப் பெரிய சுறு! வேகத்தில் எந்த மீனும் அதனுடன் போட்டியிட முடியாது. அதன் வாய் ஒன்றைத் தவிர மற்ற அங்கமெல்லாம் அழகானவையே. அது முதுகடல் கொம்பன் போல் நீல நிறமுடையது; அடிவயிறு முத்து வெள்ளை நிறம்; அதன் தோல் மழமழப்

பானது. அதன் பெரிய வாய் இப்போது இறுக மூடியிருந்தது. அது சாயாமல் சலிக்காமல் வாள் போன்ற தன் செதில் சிறகுகளால் கடலைக் கிழித்துக்கொண்டு மின் வேகத்தில் பாய்ந்தது. மூடிய அதன் உதடுகளுக்கு இடையில் எட்டு வரிசையான உள் வளைந்த பற்கள் நன்றாகத் தெரிந்தன. அவை சாதாரணமான சதுரப் பற்கள் அல்ல. நீண்டு கூராகி வளைந்து கவ்விய மனித விரல்கள் போன்றவை. கிழவனின் விரல்களைக் காட்டிலும் நீளமானவை; இரு புறமும் க்ஷவரக் கத்தியின் முனை போலக் கூரானவை. கடல் மீன்களையெல்லாம் தின்னப் பழகிய மீன் அது. எதற்கும் அஞ்சாத பெரிய பெரிய மீன்களும் அதை எதிர்க்க முடியாது. மோப்பமிட்டபடியே நீரைக் கீறிக்கொண்டு மிக மிக வேகமாக வந்தது.

அதைப் பார்த்ததும் கிழவன், 'இது எதற்கும் அஞ்சாத மீனுயிற்றே!' என்று எண்ணினுன். ஈட்டியைத் தயாராய் வைத்துக் கொண்டான்; சிக்கிய மீனைக் கட்டியது போகக் கயிறு கொஞ்சமாய்த்தான் இருந்தது. என்றாலும் என்ன செய்வது?

சுறு பக்கத்தில் வந்துவிட்டது; அதன் அகன்ற வாய் திறந்தது; அதன் அதிசயக் கண்கள் விரிந்தன. படகில் கட்டுண்ட பெரிய மீனின் வாலை அடுத்த தசையைச் சுறு கவ்வியபோது அதன் பற்கள் நெறியும் சப்தம் கேட்டது; தலையும் முதுகும் சலசலத்தபடி வெளிப்பட்டன. சுறுவின் நெற்றியில், கண்களுக்கிடையில், மூக்கெலும்புகள் கூடும் முனையில் கிழவன் தன் ஈட்டியைப் பாய்ச்சினுன். அதுதான் மூளை இருக்கும் இடம்; அதைத் தீர்மானமாக, ஆனல் நம்பிக்கையில்லாமல், மகா வெறுப்போடு குத்தினுன்.

சுறு மல்லாந்து புரண்டது. அதன் கண்களில் உயிர்ப்பில்லை. மறுபடியும் துள்ளிப் புரண்டு ஈட்டிக் கயிற்றின் இரு சுழல்களில் சிக்கிக் கொண்டது. அது செத்ததுதான்; என்றாலும், தன் சாவை ஒப்புக்கொள்ள அது தயாராயில்லை. மல்லாந்தபடியே வால் அடித்து வாய் நெறித்து விசைப் படகைப்போல் நீரலைத்து மிதந்தது. அதன் பின்புறம் வால் வீச்சால் கடல் நுரைத்து வெளுத்தது. சுறுவின் முக்கால் பாகம் நீருக்குமேலே தெரிந்தது; கயிறு இறுகி அறுந்தது. சிறிது நேரம் அசைவே இல்லை. அப்பால் சுறு மெதுவாய்க் கடலில் ஆழ்ந்தது.

''நாற்பது பவுண்டு இறைச்சி நஷ்டம்'' என்றான் கிழவன்.

தவிர, அவன் ஈட்டியும் கயிறுகளும் பறிபோயின. இதெல்லாம் போகட்டும். படகில் கட்டிய அவனுடைய மீனின் பெரிய புண்ணிலிருந்து ரத்தம் வடிகிறது; அதன் மோப்பத்தில் அதை அபகரிக்க வேறு மீன்களும் வரலாம்.

சிதைவுண்ட தன் மீனைப் பார்க்க அவனுக்கு இஷ்டமில்லை. சுறு தாக்கியது மீனையல்ல, தன்னையே என்று எண்ணினுன்.

'என்றாலும் அதைக் கொன்றுவிட்டேன்; இவ்வளவு பெரிய சுறு மீனை நான் பார்த்ததே யில்லை. என்னைக் காத்துக்கொள்ளவே அதைக் கொன்றேன். தவிர, ஒன்று மற்றொன்றைக் கொன்றுதான் வாழ்கிறது; எல்லாமே அப்படித்தான். மீன் பிடிப்பதால் நான் உயிர் வாழ்கிறேன்; கடைசியில் இதனுலேயே சாவேன். பையனே என்னைக் காப்பாற்றுகிறுன். என்னைப்பற்றிப் பெருமை அடித்துக்கொண்டு ஏமாறுவதில் பயனில்லை.'

படகு விளிம்பில் சாய்ந்தான்; தன் மீனைச் சுறு கடித்த இடத்திலிருந்து சிறிது இறைச்சியை எடுத்து ருசி பார்த்தான்; மென்று மென்று அதன் சுவையையும் குணத்தையும் அநுபவித்தான். அது உறுதியாய் இருந்தது; ரசம் நிறைந்திருந்தது. ஆனல், மிருக மாம்சம்போல் சிவப்பாயிருந்தது. மிகவும் நன்றாயிருந்தது; நல்ல விலைக்குப் போகும் என்பதில் சந்தேகமில்லை.

காற்று நிதானமாய் வீசியது; கொஞ்சம் வடகிழக்குப் பக்க

மாகச் சாய்ந்தது. இனிக் கரை அதிக தூரமில்லை. ஆனால், கண்ணுக் கெட்டிய வரையில் யாதொரு பாய்மரமோ, கப்பலோ, நீராவிப் புகையோ எதுவும் தென்படவில்லை. பறக்கும் வரால் மீன்களையும் கடல் நாணல் மஞ்சள் நிறப் பாசிகளையும் தவிர வேறொன்றும் இல்லை; ஒரு சின்னஞ் சிறிய சிட்டைக்கூடக் காணவில்லை.

இரண்டு மணி நேரம்; சுநீரங்களை மென்று ஓய்வெடுத்துக் கொண்டு பலம் பெற முயன்றான். அப்போதுதான் கலானோ என்னும் புயல்சுறு மீன்கள் இரண்டில் ஒன்றைக் கண்டான்.

''எய்!'' என்றான். இது வார்த்தையல்ல; ஒலி; பலகையோடு பலகையாய்க் கையை ஆணி அறைந்து அடிக்கும்போது உண்டாகும் துன்பத்தின் தொனி; வார்த்தைக்கு அகப்படாத-மொழி பெயர்க்க முடியாத-வருத்தம்.

''பேய்ச் சுறுவே!'' என்றான். ஒன்றுக்குப் பின் ஒன்றாக இப்போது இரண்டு சுறுக்களையும் கண்டான். அவை அகப்பை மூக்கும், பழுப்பு நிற முக்கோணச் செதில்களும், வீச்சிட்டலையும் வாலும் கொண்ட பேய்ச் சுறுக்களே. மீன் கவிச்சின் மோப்பத்தால் அவை பரபரத்தன; அருகே, அருகே வந்தன.

கிழவன் பாய்மரப் படுதாவை இழுத்துக் கட்டினான். உழுவையை உறுதியாய்ப் பொருத்தினான். கத்தி கட்டிய துடுப்பை எடுத்துக் கொண்டான்.

''ஆ! வாருங்கள், பேய்ச் சுறுக்களே! வாருங்கள்!'' என்று கத்தினான்.

அவை வந்தன, முந்திய மாச் சுறுவைப் போல் வரவில்லை. ஒன்று கண் மறைவாய்ப் படகடியில் சென்றது-மீனின் அடிப் பாகத்தைக் கவ்விக் கடித்தது. அது கவ்விய ஒவ்வொரு கவ்வலின் ஆரவாரத்திலும் படகே அல்லாடியது. மற்றொன்று மஞ்சளான தன் கீற்றுக் கண்களுடனும் அரை வட்டமாய்த் திறந்த அகப்பை வாயோடும் முன்னேறி வந்தது. அதன் பழுப்புத் தலையில் மூளையின் மூட்டெலும்பு முதுகுத் தண்டைக் கூடும் கோணம் நன்றாய்த் தெரிந்தது. அதில் அவன் தன் துடுப்புக் கத்தியைப் பாய்ச்சினான்; மறுபடியும் இழுத்தெடுத்து அதன் பூனைக் கண் போன்ற மஞ்சள் விழிக்குள் செலுத்தினான். அது மீன் பிடியை விட்டுவிட்டு, கவ்விய இறைச்சியை மென்றபடியே காலனுக்கு இரையாயிற்று.

மீனின் அடிப்பாகத்தைப் பாழ் செய்யும் மற்றொரு சுறுவால் படகு அல்லாடிக் கொண்டுதான் இருந்தது. படகு நகர்ந்து சுறு வெளிப் படுவதற்காகப் பாய் விரிப்பைக் கிழவன் தளர்த்திவிட்டான். சுறு வெளிப்பட்டதும், அவன் அதைத் தாக்கிக் குத்தினான். அதனால் ஏற்பட்டது வெறும் ஊமைக் காயமே; கத்தி அதன் கடினமான தோலில் பட்டுத் திரும்பியது. அந்தக் குத்தால் கிழவனின் தோளும் கையும் சுரீரென்று வலி எடுத்தன. ஆனால், சுறு தன் தலையைத் தூக்கியபடி வேகமாக வந்தது. தட்டையான அதன் தலை முகட்டில் கிழவனின் கத்தி பாய்ந்தது. அதன் மூக்கு, மீன் மேல் இருந்தது. மறுபடியும் அதே இடத்தில் தாக்கினான் கிழவன். அப்போதும் அது மீனைக் கவ்வியபடியே நீந்தியது. அதன் இடது கண்ணில் கத்தியைச் செலுத்தினான்; பயனில்லை.

அதன் மூளை மூட்டில் கத்தியைச் செலுத்தினான். கத்தி சுலபமாய் உள்ளே சென்றது. குருத்தெலும்புகள் நெறிவது தெரிந்தது. உடனே கத்தியை உருவினான்; மீன் தசை மேல் இறுக மூடியிருந்த அதன் வாய் திறக்கும்படியாய் இரு தாடைகளுக்கிடையிலும் செலுத்தி முறுக்கிக் குடைந்தான். அதன் பிடி தளர்ந்து நழுவியது. ''போ! பேய்ச் சுறுவே, போ! ஒரு மைல் ஆழத்துக்கு அடியில் போ! அங்கே போய் உன் நண்பனை - இல்லை, உன் தாயோ என்னவோ அதைப் போய்ப் பார்'' என்றான்.

உடனே கத்தியைத் துடைத்து விட்டுத் துடுப்பைக் கீழே வைத்தான். பாய் விரித்துக் கட்டினான். படகு தன் வழியே சென்றது.

'மீனில் எவ்வளவு போய் விட்டதோ, கடவுளுக்குத்தான்

வெளிச்சம்! படகு இப்போது லேசாகி விட்டது' என்ருன் கிழவன். மீனின் பாழான அடிப் பாகத்தைப்பற்றி அவன் நினைக்கவும் விரும்பவில்லை. சுருவின் ஒவ்வொரு துள்ளலும் மீன் தசையின் ஒவ்வொரு துண்டின் நஷ்டத்தையே குறித்தது. அதன் அடிப்பாகம் இப்போது கடலிலுள்ள சுருக்கள் அத்தனையும் புகக்கூடிய ராஜ பாட்டை யாகிவிட்டது.

''மாரிக்கால முழுமைக்கும் ஒரு மனிதனுக்கு உணவாகக்கூடிய அவ்வளவு பெரிய மீன் அது. அதைப் பற்றியெல்லாம் நினைக்காதே. இப்போது ஓய்வெடுத்துக் கொண்டு மீதமுள்ள மீனைக் காப்பாற்றத் தயாராயிரு.''

அடுத்தபடி வந்த சுருவும் அகப்பை வாய்ச் சுருவே. ஒரு மனிதனின் தலை நுழையத்தக்க அகன்ற வாயை உடைய பன்றி போல் அது வந்தது. மீனை ஒரு கடி கடிக்க விட்டுவிட்டுக் கிழவன் கத்தியை அதன் மூளையில் பாய்ச்சினுன். மீன் பின் பக்கம் நகர்ந்து புரண்டது. கத்தியின் அலகும் முறிந்தது.

கிழவன் ஓய்ந்து போய்ப் படகு வலிக்கலானுன். அந்தப் பெரிய சுரு கடலில் முழுகுவதைக்கூட அவன் கவனிக்கவில்லை. பெரிய மீன் ஒன்று முழுக முழுகப் பெரிதாய், சிறிதாய், துண்டாய், துணுக்காய், துளியாய் மறைவதைக் காண்பதில் அவனுக்கு ஆசை அதிகமே. ஆனுல், இப்போது அவன் கவனிக்கவில்லை. 'இப்போது என்னிடம் தடியும் கதையும் துடுப்புக்களுமே இருக்கின்றன. இவற்ருல் அதிகம் பயனில்லை' என்ருன்.

மாலை வெகு நேரம் ஆகிவிட்டது. கடலையும் வானையும் தவிர வேறென்றும் காணவில்லை. வானில் காற்று நிரம்பியது. சீக்கிரமே கரை காணலாம் என்று கருதினுன் கிழவன்.

அஸ்தமன சமயத்தில் பழுப்பு நிறச் செதில்களை விரித்தபடி இரு சுரு மீன்கள் நேராகப் படகை நோக்கி வேகமாய் வந்தன.

பாயிழுத்து விரித்துச் சரி செய்து விட்டுக் கிழவன் கதையை எடுத்துக் கொண்டான். அதன் கைப்பிடிக் கொக்கிக்குள் ஒரு கைதான் நுழைய முடியும். எனவே, வலது கையால் அதை வன்மையாகப் பற்றிக்கொண்டு அந்த இரண்டு பேய்ச் சுருக்களையும் தாக்கத் தயாராஞன்.

இரு சுருக்களும் நெருங்கின. ஒன்று மீனின் வெண் தசையைக் கவ்வியது. கதையால் அதன் அகன்ற தலையில் அடித்தான். இறுகிய ரப்பர் போல் இருந்தது அதன் தலை; கடினமான அதன் எலும்புகளும் தடை செய்தன. மறுபடியும் அதே இடத்தில் அடித்தான். மீனை விட்டுவிட்டு அந்தச் சுரு கடலில் ஆழ்ந்தது.

மற்ருெரு சுரு முன்னும் பின்னுமாக ஊசலாடியது; இப்போது திறந்த வாயோடு பாய்ந்தது. அதன் கடைவாயில் மீனின் வெண் தசை நார்கள் தொங்கின. கதையால் அடித்து அதன் வாயை மூடினுன் கிழவன். மறுபடியும் கதையை அதன் தலைமேல் வீசினுன். அதுவும் இவனைப் பார்த்தது. அதன் வாயிலிருந்த இறைச்சி நழுவியது. திரும்பவும் தலையில் அடித்தான் - அது நகர்ந்தது.

''வா, பேய் மீனே! வா!'' என்ருன்.

அதுவும் பாய்ந்து வந்தது - தாவாய்க் கட்டையை மூடும் சமயம் கிழவன் அதன் தலையில் தாக்கினுன். விசை கொண்டு தாக்கினுன். மூளை மூட்டு நொறுங்கத் தாக்கினுன். பின்னும் தாக்கினுன். தசையைப் பிய்த்துக் கொண்டு அது தண்ணீருக்குள் நழுவியது.

'அவை திரும்பவும் வருமோ? அவற்றைக் கொல்ல முடியுமென்று எனக்கு நம்பிக்கையில்லை?'

தன் மீனைப் பார்க்க அவன் விரும்பவில்லை; அதன் உடல் பாதிக்குமேல் போய்விட்டதென்று அவனுக்குத் தெரியும். இந்தப் போராட்டத்தின்போது சூரியன் மறையலாயிற்று. இனி இருட்டிவிடும். கரையின் விளக்குகள் தெரியும்.

''பாதி மீன்! மீனாய் இருந்தாய் நீ! நான் அவ்வளவு தூரம் போன தற்காக வருந்துகிறேன். அதனால் இருவரும் கெட்டு விட்டோம். இருந்தாலும் பல சுறுக்களை நீயும் நானுமாய்க் கொன்றுவிட்டோம். மற்றவற்றைப் பயனற்றவை ஆக்கி விட்டோம். நீயாக எத்தனை சுறு மீன்களைக் கொன்றிருக்கிறாய்? கொண்டையில் கத்தி கட்டி யிருக்கிறாயே, அது சும்மாவா?'' என்றான்.

கிழவனின் மீன் மட்டும் உயிருடன் இருந்தால் ஒரு சுறு மீனைக்கூடச் சும்மா விட்டிராது. அதன் கொண்டையை அறுத்து அதன் கூர் நுனியால் சுறுக்களைக் குத்தி இருக்கவேண்டும்; ஆனால், அறுக்கவோ பிளக்கவோ, கத்தியோ கோடாலியோ எதுவுந்தான் அவனிடமில்லையே?

படகின் முன் புறம் படுத்த படியே வானம் வெளுப்பதை எதிர்பார்த்தான். மீனில் பாதி இருக்கிறது. இந்தப் பாதியை யாவது காப்பாற்ற அவனுக்கு அதிருஷ்டமுண்டா?

இரவு பத்து மணி இருக்கலாம்; அவன் ஊர் விளக்குகள் தண்ணீரில் பிரதிபலிப்பது தெரிந்தது. சந்திரோதயத்துக்கு முன்னுள்ள மங்கலான ஒளி போல் அவை முதலில் தோன்றின. பின்பு நேரான நிலையான வெளிச்சம் தெரிந்தது. அந்த ஒளி வட்டத்தில் புகுந்தால் சீக்கிரம் கரை சேரலாம். எல்லாம் தீர்ந்தது. இனியும் சுறுக்கள் வரலாம்; வந்தால் இருட்டில் ஆயுதமில்லாமல் ஒருவன் என்ன செய்ய முடியும்?

குளிரால் உடல் விறைத்தது, வலித்தது; காயம் பட்ட இடமெல்லாம் கடுத்தது. மறுபடியும் போராட வேண்டி வராது என்று நம்பினான்.

நடு நிசியில் அவை வந்தன. அவனும் போராடினான். போராடுவதில் பயனில்லை என்பது அவனுக்குத் தெரியும். அவை கூட்டமாக வந்தன. நீரில் அவற்றின் செதில் வரிகளையும், மீன் மேல் அவை பாய்ந்தபோது தெரிந்த தீ முருகல் மினுக்கையுமே அவனால் காண முடிந்தது. தெரிந்த தலைகளையெல்லாம் அவன் கதையால் தாக்கினான். அவற்றின் வாய்கள் நெறிவதைக் கேட்டான்; படகு அல்லாடியது. தன் உணர்ச்சியையும் ஒலியையுமே துணையாகக் கொண்டு தாறுமாறாய்க் கதையை வீசினான். கதையை ஏதோ கவ்வியது. கதையும் கை நழுவிப் போய்விட்டது.

உடனே துடுப்பு உழுவையைச் சுக்கானிலிருந்து பிடுங்கி இரு கையாலும் பற்றிக்கொண்டு, திரும்பத் திரும்பத் தாக்கினான். என்றாலும், சுறுக்கள் கூட்டமாகப் படகையே தாக்கலாயின; மீனின் பெரும் பகுதியைத் தின்றுவிட்டன. அந்த இறைச்சியின் மினு மினுப்புக் கடலாழத்தில் வெகு தூரம் வரையில் தெரிந்தது. அவை மேலும் மேலும் வந்தன.

ஒன்று மீனின் தலையையே கடிக்க வந்தது; அதுவும் தீர்ந்தது என்று எண்ணினான் அவன். தலையைக் கவ்வித் தடுமாறிய அதன் தலைமேல் பல முறை அடித்தான். உழுவை உடைந்தது; உடனே அதன் அடிக் கட்டையோடு மீன்மேல் பாய்ந்தான். அதன் குத்து உள்ளே சென்றதை உணர்ந்தான்; மறுபடியும் அதைச் சுறுவின் வாய்க்குள் செலுத்தினான். மீனை விட்டுவிட்டுச் சுறு அப்பால் புரண்டது. சுறுக்கள் உண்ண, மீனில் இனி இறைச்சி கிடையாது.

கிழவனுக்கு மூச்சுத் திணறியது; வாயில் செப்புக் களிம்பு போன்ற அருசி தட்டியது. மேனி வெடவெடத்து வேர்வை கொட்டியது. அவன் பயந்தே போனான். ஆனால், வெடவெடப்பும் வேர்வையும் அதிகம் இல்லாமல் அடங்கிவிட்டன.

கடலில் காறி உமிழ்ந்தான். ''பேய் மீன்களே, அதைத் தின்றுவிட்டு ஒரு மனிதனைக் கொன்றுவிட்டதாகக் கனவு காணுங்கள்'' என்றான்.

இப்போது தன் தோல்வி முழுமையானது என்று அவனுக்குத் தெரியும்; தன் தோல்விக்கு மாற்றுக் கிடையா தென்பதும் தெரியும். ஒடிந்த உழுவையைச்

சுங்கான் துளையில் பொருத்தினான். சாக்கைத் தோளில் போட்டுக் கொண்டு படகைச் சரியான பாதையில் போக விட்டான். படகு மெது வாய்ப் போயிற்று. இப்போது கரை ஏறுவதுதான் முக்கியம். அதைச் சரியானபடி செய்வதில் மட்டுமே தன் அறிவைச் செலுத்தினான். இரவில் சுறுக்கள் கிழவனின் மீன் கூட்டைத் தாக்கி எஞ்சிய எச்சில் துணுக்குகளைத் தின்பதுபோல், ஒட்டியிருந்த தசைகளைத் தின்றன. அவற்றை அவன் கவனிக்கவில்லை; படகோட்டுவதிலேயே கண்ணுங் கருத்துமா யிருந்தான். பக்கத்தில் கனமில்லாததால் படகும் சுலப மாய் மிதந்து நகர்ந்தது.

''என் படகு நல்ல படகு. துடுப்பு உடைந்ததைத் தவிர யாதொரு சேதமும் ஏற்படவில்லை; வேறொரு துடுப்பு வாங்குவது கஷ்டமில்லை.''

இப்போது நீரோட்டத்துக்குள் வந்துவிட்டதை அவன் உணர்ந் தான்; கரை ஓர ஊர்களின் விளக்குகள் நன்றாய்த் தெரிந்தன. இனிப் பயமில்லை. சீக்கிரம் வீட்டுக் குத் திரும்பலாம்.

'ஒன்றுமில்லை. நான் கடலில் அவ்வளவு தூரம் சென்றது தவறு.'

அந்தச் சிறிய துறைக்குள் அவன் நுழைந்தபோது மாடி ஹோட்டல் விளக்குகள்கூட அணைந்திருந்தன. துறைமுகம் அமைதியாயிருந்தது. உதவி செய்ய ஒருவரும் இல்லாததால், தானே படகை இழுத்து ஒரு பாறைக் கல்லில் கட்டினான்.

பாய் மரத்தை எடுத்துப் பாயைச் சுருட்டித் தோளில் தாங் கியவனாய்க் கரை மேட்டின்மேல் ஏறிச் சென்றான். அப்போதுதான் தன் சோர்வின் முழுமையை அவனால் உணர முடிந்தது. இடை யில் கொஞ்சம் நின்று பின்நோக்கி னான் படகின் முன்புறம் தூக்கிய வாலோடு அந்த மீன்கூடு வீதி விளக்கின் வெளிச்சத்தில் நன்றாய்த் தெரிந்தது; வெளுத்து நீண்ட அதன் முதுகெலும்பையும், குத் தீட்டிக் கொண்டைத் தலையையும், இடையிலுள்ள வெறுமையையும் கண்டான்.

மறுபடியும் மேலேறி நடந்தான். கரை உச்சியில் தள்ளாடி விழுந் தான்; அவன் தோளின் குறுக்கே பாய் மரம் கிடந்தது. எழுந்திருக்க முயன்றான்; முடியவில்லை. அங்கே அமர்ந்தபடி அடுத்துள்ள சாலை யைப் பார்த்தான். பூனை ஒன்று அந்த வழியாக ஓடியது. அதைக் கவனித்தான். நெடுநேரம் பாதை யையே பார்த்துக்கொண் டிருந் தான்.

கடைசியில் பாய்மரத்தைக் கீழே போட்டுவிட்டு எழுந்து நின்றான்; மறுபடியும் பாய்மரத்தை எடுத் துத் தோளில் சார்த்திக்கொண்டு பாதை வழியே நடந்தான். அவன் தன் குடிசையை அடையுமுன், ஐந்து முறை தங்கித் தங்கி இளைப்பாறவேண்டி யிருந்தது.

உள்ளே சென்றதும், பாய்க் கம்பத்தைச் சுவரில் சார்த்தினான். அந்த இருட்டிலே தண்ணீர்ப் புட்டியைக் கண்டுபிடித்துக் குடித் தான். அப்புறம் படுக்கையில் படுத்தான்; போர்வையை இழுத் துத் தோளையும் முதுகையும் காலையும் சுற்றிப் போர்த்துக் கொண்டு தூங்கினான். பத்திரி கைத் தலையணையில் முகம் புதைத்து உள்ளங்கை மேலே தெரியக் கைகளை நீட்டியபடி உறங்கினான்.

மறுநாள் காலையில் பையன் வந்த போதும் அவன் தூங்கிக்கொண்டு தான் இருந்தான். பையன் ஒவ்வொரு நாளும் போலவே குடிசைக்குள் வந்தான். கிழவன் மூச்சு விடுகிறானா என்று பார்த் தான்; அப்புறம் கையில் உள்ள காயங்களைக் கண்டான். அவனுக்கு அழுகை வந்துவிட்டது; மௌன மாய் வெளிப்பட்டான். கிழவனுக் குக் காபி கொண்டுவர, பாவம், வழியெல்லாம் அழுதுகொண்டே போனான்.

கிழவனின் படகைச் சுற்றிப் பல செம்படவர்கள் கூடி நின்றார்கள். ஒருவன் தன் கால்சட்டையை மடித்துத் தூக்கி விட்டுக்கொண்டு, நீரில் இறங்கி அந்த மீன் கூட்டை அளந்து பார்த்தான்.

பையன் கீழே போகவில்லை. அவன் முன்பே படகைப் பார்த்து விட்டான்; அதைக் கவனித்துக் கொள்ள ஓர் ஆளையும் வைத் திருந்தான்.

''எப்படி இருக்கிறான்?'' என் றான் ஒரு செம்படவன்.

''தூங்குகிறான்; யாரும் அவனைத் தொந்தரவு செய்ய வேண்டாம்'' என்றான் பையன். தான் அழுவதை மற்றவர் கவனிப்பதைப்பற்றி அவன் கவலைப்படவில்லை.

''தலைமுதல் வால்வரைக்கும் பதினெட்டடி'' என்றான் மீனை அளந்தவன்.

''இருக்கும்'' என்றான் பையன்.

மாடி ஹோட்டலுக்குச் சென்று பையன் காபி கேட்டான்: ''பாலும் சர்க்கரையும் நிறையப் போட்டுச் சூடாகத் தா.''

''வேறு ஏதாவது வேண்டுமா?''

''வேண்டாம். பிறகு என்ன சாப்பிடுவானென்று பார்க்கலாம்.''

''அடேயப்பா! எவ்வளவு பெரிய மீன்! இதைப்போல் பார்த்ததே இல்லை. நேற்று நீ பிடித்து வந்த மீன்களும் பெரியவையே'' என் றான் ஹோட்டல் முதலாளி.

''என் மீன் கிடக்கட்டும்'' என்று, பையன் அழ ஆரம்பித்து விட்டான்.

''உனக்குக் குடிக்க ஏதா வது.. ?''

''வேண்டாம். சாந்தயகனை யாரும் தொந்தரவு செய்யக் கூடாது. நான் மறுபடியும் வரு கிறேன்'' என்றான் பையன்.

சூடான காபியுடன் குடிசைக்குச் சென்றான். கிழவன் விழிக்கும் வரையில் பக்கத்தில் உட்கார்ந்து பையன் காத்துக்கொண் டிருந் தான்.

கடைசியில் கிழவன் விழித்தான்.

''எழுந்திருக்காதே; முதலில் இதைக் குடி'' என்று பையன் காபியை ஒரு கண்ணாடி டம்ளரில் ஊற்றிக் கிழவனிடம் கொடுத் தான்.

கிழவனும் வாங்கிக் குடித்தான்.

''மனோலனே, அவை என்னை முறியடித்து விட்டன; உண்மை யாகவே நான் தோற்றுப் போனேன்'' என்றான் கிழவன்.

''அது - அந்த மீன் - உன்னைத் தோற்கடிக்க வில்லை.''

''இல்லை; தோல்வி அப்புறந் தான் ஏற்பட்டது.''

''நாம் இருவரும் நம் எதிர்காலத் தைப்பற்றித் திட்டங்கள் போட வேண்டும்'' என்றான் பையன்.

''என்னைத் தேடினார்களா?''

''தேடாமல்! கரைக் காவலர் களும் ஆகாய விமானிகளும் உன் னைத் தேடத்தான் தேடினார்கள்.''

''கடலோ பெரிது, படகோ சிறிது; அதைக் காண்பது கஷ்டந் தான்'' என்றான் கிழவன்.

''இனி நாம் சேர்ந்தே மீன் பிடிப்போம்.''

''வேண்டாம். நான் அதிருஷ்டம் இல்லாதவன்; இனியும் எனக்கு அதிருஷ்டம் வராது.''

''அதிருஷ்டம் நாசமாய்ப் போகட்டும். என்னுடன் நான் அதிருஷ்டத்தையும் கொண்டு வரு வேன்.''

''உன் அப்பா ஒப்புக்கொள் வாரா?'

''அதைப்பற்றி எனக்கு அக் கறையில்லை. நேற்று நான் இரண்டு மீன்களைப் பிடித்தேன். இன்னும் எத்தனையோ நான் கற்றுக்கொள்ள வேண்டி இருக்கிறது. எனவே, இனி நாம் இருவரும் சேர்ந்தே மீன் பிடிக்க வேண்டும். நான் எல்லாவற்றையும் தயார் செய்து வைக்கிறேன். நீ உன் கையைக் கவனித்துக்கொள்'' என்றான் பையன்.

''அவற்றைக் கவனித்துக் கொள்ள எனக்குத் தெரியும்; நேற்றிரவு ரத்தம் கக்கினேன். என் மார்பகத்தில் ஏதோ உடைந்து விட்டது போல் தோன்றியது.''

''அதையும் சரி செய்துகொள். படுத்துத் தூங்கு. சலவை யான உன் சட்டையையும் சாப் பாட்டையும் கொண்டு வருகி றேன். நன்றாய்த் தூங்கு'' என் றான் பையன்.

''நான் போயிருந்த சமயத்தில் வந்த பத்திரிகைகளைக் கொண்டு வருகிறாயா?'' என்றான் கிழவன்.

''நீ சீக்கிரம் சுகமடைய வேண் டும். நான் தெரிந்துகொள்ள

வேண்டியது அதிகம்; நீயும் எல்லாம் சொல்லித் தருவாய். நேற்று ரொம்பவும் கஷ்டப்பட்டாயோ?''

''ரொம்ப ரொம்ப'' என்றான் கிழவன்.

''நன்றாகத் தூங்கி இளைப்பாறு. உணவும், பத்திரிகைகளும் கைக் காயத்துக்கு மருந்தும் வாங்கி வருகிறேன்.''

கதவைத் திறந்துகொண்டு பையன் வெளியே சென்றான். பவளக்கல் பாறைப் பாங்கான பாதை வழியே போகும்போது, அவனுக்கு மறுபடியும் அழுகை வந்துவிட்டது; அழுதான்.

அன்று மாலை, மாடி ஹோட்டலில், பல யாத்திரிகர்கள் கூடி இருந்தார்கள். அவர்களில் ஒருவன் துறைமுகத்தில் வீசும் காற்றில் எழும்பி விழும் கடலின் ஏற்றத்தில் அலைகளின் ஆட்டத்தில் நீண்டதொரு முதுகெலும்பும் நெட்டு நிமிர்ந்த ஒரு வாலும் நிமைப்பதைக் கண்டான்.

''அது என்ன?'' என்று பக்கத்தில் இருந்த ஒரு பணியாளைக் கேட்டான், முதுகெலும்பைக் காட்டியபடி, அது அப்போது கடலோடு கலக்கக் காத்திருக்கும் வெறும் எலும்புக் கூடு-ஒரு பெரிய மீனின் வெற்றெலும்புக் கூடுதான்!

பாதைக்கப்பால், தன் குடிசையில் கிழவன் மீண்டும் தூக்கத்தில் ஆழ்ந்திருந்தான். பக்கத்தில் பையன் அவனைக் கண்காணித்தபடியே உட்கார்ந்திருந்தான்; கிழவனின் தூக்கம் ஆப்பிரிக்கச் சிங்கங்களைப்பற்றிய கனவுகளால் நிரம்பி இருந்தது.

## தெற்கே ஹிந்தி அந்நிய மொழியே

இந்தியாவின் முக்கிய மொழிகள் இந்துஸ்தானி (இந்தியும் உருதுவும்), வங்காளி, குஜராத்தி, மராட்டி, தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், அஸ்ஸாமி, ஒரியா, சிந்தி, புஷ்டு, பஞ்சாபி என்பன. இந்த மொழிகளில் வட, மத்திய, மேற்கு இந்தியாவில் வழங்கும் இந்திய - ஆரிய மொழிகள் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புள்ளவை.

தென்னிந்தியத் திராவிட மொழிகள் வேறானவையென்றாலும் அவற்றில் சம்ஸ்கிருதச் சொற்கள் மிகுந்துள்ளன. இந்த எட்டு முக்கிய மொழிகளும் தொன்மையானவை; சீரிய இலக்கியங்களுள்ளவை. ஒவ்வொன்றும் ஒவ்வொரு குறிப்பிட்ட, திட்டமான எல்லைக்குள் பேசப்பட்டு வருகிறது. பேசுகிறவர்களின் எண்ணிக்கையைக் கொண்டு பார்த்தால், இவை உலகத்தின் பெரிய மொழிகளில் சேர்ந்தவை. ஐந்து கோடி பேர் வங்காளி பேசுகிறார்கள். இந்துஸ்தானியின் சிதைவுகளையெல்லாம் சேர்த்தால் அதைப் பேசுகிறவர்கள் பதினைந்து கோடி பேர். மற்றும் நாடெங்கும் அதை அரைகுறையாக அறிந்து கொள்ளக்கூடியவர் ஏராளமான பேர் இருக்கிறார்கள். இத்தகைய மொழி வளர எல்லையற்ற வாய்ப்பு இருக்கிறது. சம்ஸ்கிருதம் அதற்கு உறுதியான அடிப்படை. அது பாரசீகத்துடனும் நெருங்கிய உறவு கொண்டது. ஆகவே, அது வளமிக்க இரு ஊற்றுக்களிலிருந்து வேண்டியதை எடுத்துக்கொள்ள முடியும். அண்மைக் காலத்தில் ஆங்கிலத்தையும் அது பயன்படுத்தி வருகிறது.

தெற்கே திராவிட நாட்டுக்கு மட்டும் இந்துஸ்தானி அந்நிய மொழி என்றே சொல்லலாம். ஆனல் அங்குள்ளவர்களும் அதைக் கற்றுக்கொள்ளப் பெரிதும் முயன்று வருகிறார்கள்.

—ஜவாஹர்லால் நேரு, 'சுய சரிதை.'

EDITED PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
FOR MANJARI AT THE M. L. J. PRESS PRIVATE LTD., MADRAS-4.
MANAGING EDITOR: T. J. RANGANATHAN.

# கையும் கவியும்

**கா**ரைக்குடி திரு முருகப்பா நடத்திவந்த 'குமரன்' பத்திரிகைக்குக் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அடிக்கடி பாடல்கள் எழுதி அனுப்புவதுண்டு. ஒரு நாள் 'குமரன்' காரியாலயத்துக்குக் 'கைத்திறன்' என்று தலைப்பிட்ட ஒரு பாடல் கவிமணியிடமிருந்து வந்தது. மனிதர் கையின் திறனையெல்லாம் ஆராய்ந்து அழகாக அமைந்த பாடல்.

'குமரன்' அடுத்த இதழில் அந்தப் பாடலை வெளியிட முடிவு செய்தார்கள். கையின் எத்தனையோ சிறப்புக்களைப் பற்றிக் கூறவந்த அந்தப் பாடலில் இன்னும் ஓர் அம்சத்தையும் கூறியிருந்தால் நன்ருக இருக்கும் என்று ஆசிரியர் குழுவினர் கருதினர்கள். தேச விடுதலைப் போரில் ஈடுபட்டிருந்த அந்த நாளில் அதைக் குறிக்கும் செய்தி ஒன்றும் அந்தப் பாடலில் இல்லை. 'காந்தி, பாரதி முதலியவரின் பெயர்களோ அவர்களை நினைவூட்டும் ஏதாவது செய்தியோ அடங்கிய சில அடிகளை அந்தப் பாடலில் சேர்த்தால் எவ்வளவு நன்ருயிருக்கும்!' என்ற தங்கள் கருத்தைத் தேசிக விநாயகம் பிள்ளைக்குக் கடித மூலம் தெரிவித்தார்கள். 'காந்திஜியையும் கையையும் இணைக்க ராட்டையைப் பற்றிப் பாடலாம்; ஆனல் பாரதியையும் கையையும் எப்படி இணைப்பாரோ கவிஞர், பார்க்கலாம்!'' என்று ஆசிரியர்கள் வியந்துகொண் டிருந்தபோது, கவிமணியிடமிருந்து ஒரு பாடல் வந்தது. அந்த ஒரே செய்யுளில் பாரதியையும் காந்திஜியையும் கையையும் வெகு அற்புதமாகக் கவிஞர் இணைத்திருந்தார்:

நாடிய சீர் நாடடைய ராட்டுருட்டும் கையே!
நல்லகதர் நெய்யமிகு வல்லமைகொள் கையே!
பாடிய வாய் தேனூறும் பாரதியார் பாடல்
பண்ணமையப் பாடுதற்குப் பாணிகொட்டும் கையே!

ஒரே செய்யுள்! தேவையான கருத்து எல்லாம் இதில் அமைந்திருக்கிறது. தேசநலனில் உள்ள அக்கறையும் தெரிகிறது. இலக்கிய ரசனையில் உள்ள ஆர்வமும் தெரிகிறது. பாடிய வாய் தேனூற வைக்கும் பாடல் அல்லவா இது!

—பி. ஸ்ரீ.

---

குறிப்பு : எழுத்தாளர் சங்கத்தில் பி. ஸ்ரீ. பேசிய ஒரு பேச்சிலிருந்து இந்தக் குறிப்பை எடுத்து எழுதி அனுப்பியிருக்கிருர் தம்பி சீனிவாசன். இது மாதிரி ரசமான இந்திய நிகழ்ச்சித் துணுக்குகளைப் பிற நண்பர்களும் எழுதி அனுப்பினல், 'மஞ்சரி'யில் வெளியிடலாம். இங்கே இன்னெரு விஷயம்: இந்தக் குறிப்பில் கண்ட காலத்தில், 'குமரன்' ஆசிரியர் குழுவில் அநேகமாக முழுப் பொறுப்பும் வகித்தவர் பி. ஸ்ரீ. எனவே, அவருடைய சொந்த அநுபவத்தில் அறிந்த நிகழ்ச்சி இது.

—ஆசிரியர், 'மஞ்சரி.'

**Manjari - April '58** **Regd. No. M. 4975**
(Regd. as a Newspaper in Ceylon)

# மஞ்சரி

## பொருளடக்கம்

**விளம்பி - சித்திரை** **ஏப்ரல் 1958**


| | | |
|---|---|---|
| ஊரும் உலகமும் .. .. .. | | 1 |
| விண்ணவரனைய மாந்தர் .. | ரா. ஸ்ரீ. தேசிகன் | 3 |
| தேங்காய் ஓட்டில் சித்திரம் .. | மெட்ராஸ் மெயில் | 6 |
| என்னைக் கேளுங்கள் | காப்டன் என். சேஷாத்திரிநாதன் | 11 |
| சூதாட்டம் .. .. .. | | 14 |
| ஆயிரம் பயன் தரும் பழம் .. | ஹெரால்டு அவ் ஹெல்த் | 19 |
| பெட்டா குறும்பர் .. | சுதேசமித்திரன் | 22 |
| அறிஞர் வ. ரா. .. | சைனிக் சமாசார் | 25 |
| புரூப் பந்தயம் .. .. .. | | 29 |
| பல கலைகளின் வழிகாட்டி .. .. .. | | 31 |
| சந்திரலோக வீதியில் .. | ஸோவியத் லாண்டு | 34 |
| கர்ப்பூரம் .. .. | பிரஜாமத | 37 |
| பாட்டிலே புடைவை .. | ஆந்திரப் பிரபா | 39 |
| பிரிட்டிஷ் சர்வகலாசாலை .. | பிரிட்டிஷ் இன்ஃபர்மேஷன் | 42 |
| சுறு மீனை ஏமாற்ற முடியுமா? .. | அமிர்த பஜார் பத்திரிகை | 45 |
| சங்கமம் (மலையாளக் கதை) .. | பொற்றெக்காட் - சௌரி | 50 |
| பி. பி. ஸி. ஒலிப் பதிவு .. | காமன்வெல்த் டுடே | 58 |
| கடலும் கிழவனும் (நாவல் சுருக்கம்) | ஹெமிங்வே-யோகியார் | 61 |
| கையும் கவியும் .. | பி. ஸ்ரீ. | (3-ஆம் அட்டை) |